அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்ஜோதி

# அகவல் உணர்வுரை

ஆசிரியர் : **K.N. உமாபதி**

**எல்கேஎம் பப்ளிகேஷன்**
10, ராமச்சந்திரா தெரு, தி. நகர்
சென்னை – 600 017.
தொலைபேசி : 28142241

# நூல் விவரம்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | அகவல் உணர்வுரை |
| ஆசிரியர் | : | **K.N.** உமாபதி |
| வெளியீடு | : | எல்கேஎம் பப்ளிகேஷன், சென்னை |
| அச்சிட்டோர் | : | எல்கேஎம் கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ்,<br>தி. நகர், சென்னை – 17 |
| முதற் பதிப்பு | : | அக்டோபர், 2020 |
| பிரதிகள் | : | 1000 |
| விலை | : | ₹ 100/– |


---

Books also available at authors address:


**K.N. Umapathy**
**AP 20, 6th Street**
**K.K. Nagar,**
**Chennai - 600 078**
**Phone : 95518 49757**

## அருட்பெருஞ்ஜோதி
## அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை
## அருட்பெருஞ்ஜோதி

எல்லாம் வல்ல திருவருட் பிரகாச வள்ளலார் என்னும் சிதம்பரம் இராமலிங்கப் பெருமானார் 5817 பாடல்கள் கொண்ட திருவருட்பா, உரைநடை, உபதேசக்குறிப்புகள், மூலிகை குண அட்டவணை மற்றும் பலவற்றை மனிதகுலம் மேன்மையுற வேண்டி அருளினார். அதன் அருமை, பெருமைகளை உலகர் அறிந்து இன்புறுவதுடன், வள்ளலார் விரும்பிய வகையில் எல்லா உயிர்களும் இன்புற்று வாழ சன்மார்க்கம் தழைக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் பல அறிஞர் பெருமக்கள் எழுத்தாலும் பேச்சாலும் செயலாலும் தொடர்ந்து பங்காற்றி வருகின்றனர். அதில் ஒரு அங்கமாக "அகவல் உணர்வுரை" என்ற இந்த நூல் சன்மார்க்கத்தின் முதற்படியில் இருக்கும் அடியேனைப் போன்றவர்கட்காக வெளியிடப்படுகிறது.

திருவருட்பிரகாச வள்ளல் பெருமானார் அவர்கள் அருட்பெருஞ்ஜோதி அகவலை 18.4.1872 அன்று ஒரே இரவில் எழுதியிருக்கிறார். மூல ஏடு இன்றைக்கும் வடலூர் தருமச்சாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. இது 1596 வரிகளைக் கொண்ட "நிலை மண்டில ஆசிரியப்பா". இதில் எந்த வரியைத் தொட்டாலும் அது 1-எனும் இறைவனையோ, 5-எனும் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களையோ, 96-தத்துவங் களையோ விவரிக்கிறது.

இந்த அரிய பெட்டகமாம் அருட்பெருஞ்ஜோதி அகவலுக்கு "அகவல் உணர்வுரை" என்று இந்த நூலுக்கு தலைப்பிட்டது எப்படியெனில், அடியேனுக்கு ஏற்பட்ட உணர்வின்படி இந்த அகவலில் முதல் 336 வரிகளில் ஆண்டவன் உலகினையும், உயிர்களையும், மனிதர்

*களையும் படைத்து, அவைகள் அனைத்துமே படிப்படியாக இறைவனை அறிவால் அறிந்து ஒளிநெறி பெற வேண்டும் என்பதற்காக அதில் ஒருவரை அணுபட்சத்தில் தோற்று வித்து, உயரவைத்து அவருக்கு அருள் எனும் "ஒளி"யை மணம் புரிவித்து, அதன் மூலம் உயிர்கள் அனைத்தையும் கருணையின் வாயிலாக "ஒளி" நிலைக்கு உயர்த்த வேண்டும் என்ற எண்ணம் வெளிப்படுவதாகத் தெரிகிறது. அதை அகவல் 333 / 334-ஆம் வரிகளில் "அருட் பேர் தரித்து உலகு அனைத்தும் மலர்ந்திட ..." (அருள் என்னும் பெயரைப் பூண்டு கொண்டு உலகனைத்தும் பிரகாசிக்க) "அருட்பிரகாசர்" என்ற பெயர் தந்து அருட் சீர் அளித்தவர் ஆண்டவன். அதன் பிறகு அகவல் 335 / 336-ஆம் வரிகளில் "உலகெலாம் பரவ என் உள்ளத்திருந்தே அலகிலா ஒளி செய் ..." (தடையேதுமின்றி அருட்பெருஞ் ஜோதியை மிளிரச் செய்) என்பது. ஆண்டவனின் சித்தப்படிதான் "அருட்பிரகாசர்" அருட்பெருஞ்ஜோதி இறைவனை உலகெலாம் பரவச்செய்கிறார். அதன்பிறகு 337-ஆம் வரி முதல் அந்தத் திருமண ஏற்பாடுகளைச் செய்கிறார் என்பதும் தெரிகிறது. அப்படியானால் அந்தத் திருமணம் நடந்ததா எனில் ஆமாம் நடந்தது என்பதைப் 'பேறடைவு' என்ற பத்துப் பாடல்களில் இப்படிக் காண முடிகிறது.*

*"மணம் புரிதல் என்பது இரண்டரை கடிகையில் (ஒரு மணி நேரத்தில்) நடைபெற வேண்டுமென்பது வரையறை (உடல் அருளாவதற்கு வரையறை ஒரு மணி நேரம் தான்). மங்கலம் புனைந்து எனது மகன் எனும் குறிப்பைக் கோலத்தால் காட்டுக. அம்புலி, வானம் அறிய (முழுமதி நாள் இரவில்) மெய்யருளாம் அணங்கு (விரும்பிய) அதனை மணம் புரிவித்து, உம்பரும் (தேவரும்) வியப்ப உயர்நிலை தருதும் உண்மையாதலால் உலகில் வெம்புறு துயர் (மாயை) தீர்ந்து மெய்யருள் அணிந்து கொள் என்றார். அன்புடை மகனே திருவை (மணமகளாம் பெருஞ்செல்வமான ஒளியை) அண்டர்கள் (தேவர்கள்) வியப்ப நினக்கே இன்புடை உரிமை மணம் புரிவிப்பாம். துன்பங்கள்*

முழுதுமாகத் தவிர்ந்தே தூய்மைசேர் (ஓருருவாகும்) நல் மணக்கோலம் விளங்கப் புணர்ந்து கொள் என்றார். ஈது கேள் என் மகனே மெய்யருள் திருவை (ஒளியை) இரண்டரை கடிகையில் நினக்கே ஊதியம் (ஆன்ம லாபம்) பெறவே மணம் புரிவிப்பாம். விரைந்து கேள் மகனே உலகெலாம் களிக்க மெய்யருள் திருவினை நினக்கே வரைந்து நன்மணம் செய்து ஒரு பெரு நிலையில் வைத்து வாழ்விக்கின்றாம். களிப்பொடு மகனே அருள் ஒளித்திருவை கடிகை ஓர் இரண்டரை அதனால் ஒளிப்பிலாது உலகம் முழுவதும் அறிய நன் மணம் புரிவிப்பாம். மங்கலக்கோலம் அணிபெறப் புனைக நீ விரைந்தே என்று வெளிப்படையாக உரைத்தோம் என்றார்.

மகனே அருள் ஒளித்திருவை களிப்பொடு மணம் புரிவிப்பாம். இவ்வுலகர் நவிலும் அவ்வுலகவர் பிறரும் இலங்க நின் மணமே ஏத்துவார் என்றார் இயலுறு சிற்சபையவரே. இது நம் ஆணை. தூங்கலை மகனே எழுக! நீ விரைந்தே தூய நீராடுக. மங்கலக்கோலம் பண்பொடு புனைக. அருள் ஒளித்திருவை எழிலொடு மணம் புரிவிப்பாம். இது நம் ஆணை. மயங்கிடேல் மகனே. இதுவே வயங்கு நல்ல தருணக் காலை(ப் பொழுது) காண். நீ நன் மங்கலக்கோலம் விளங்க இரண்டரை கடிகை எல்லையுள் (என்பது உயிர் சிவமாவதற்கு ஆகும் கால அளவும் அவ்வளவே) என்று வாய் மலர்ந்து அருளினார். சயங்கொள (வெற்றிகொள) எனக்கே தண்ணிய அமுதளித்த தந்தையார் சிற்சபையவரே!”

(திவள் ஒளிப்பருவம் சேர்ந்த நல் அவளே அவளொடும் கூடி அடைந்தது ஓர் சுகமே அகவல் : 1425)

அகவல் என்பது மயிலின் குரல். தமிழில் பல அருளாளர்கள் அகவல் பாடியிருக்கின்றனர். அதாவது இவைகள் இறைவனை நோக்கிப் பாடிய விண்ணப்பங்களே. ஆனால் அருட் பெருஞ்ஜோதி அகவலில் - பல இடங்களில் இறைவனே அவ்வப்போது விடையிறுத்தியிருப்பதைக் காண முடிகிறது.

அடியேனிடமிருக்கும் சில அகராதிகளில் சில சொற்கள் இடம் பெறாததால், திண்டுக்கல் சுவாமி சரவணானந்தரின் அருட்பெருஞ்ஜோதி அகவல் அனுபவப் பொருள் விளக்கவுரையிலிருந்து அவைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதைப்போல அமரர் திண்டுக்கல் மேடா நித்தியானந்தம் அவர்களுடன் உரையாடியபோது பெற்ற சில சொற்கள் இடம் பெற்றுள்ளன. இந்த வெளி யீட்டினைச் செவ்வனே செய்த LKM பிரிண்டர்ஸுக்கும் அச்சுப்பிழை திருத்தத்திற்கு உதவிய சாத்தூர் திரு. S. கருணாகர ஈஸ்வரன், SBI அவர்கட்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சாதாரணமாக உரையென்பது மூலப் பாடல் வரிகள் எழுதப்பட்டு அதனடியில் உரை எழுதப்படும். ஆனால் இந்த உணர்வுரையில் அகவல் வரியின் தொடக்க வார்த்தையும், வரிசை எண்ணும் மட்டுமே தரப்பட்டு உரை மட்டுமே உரைநடைத் தொடராக ஆக்கப்பட்டிருக்கிறது. பரவாக்காகிய பெருமானாரின் அகவல் வரிகட்கு இடையே அடியேன் தரத்திலான அபரவாக்கு தடையாக இருக்க இசையாமல் இப்படியொரு முயற்சி செய்யப் பட்டிருக்கிறது. (அகவலின் 1596 வரிகளும் தொடராகவும் இணைக்கப்பட்டுள்ளது). சிரமத்திற்கு மன்னிக்க வேண்டி அடியேன் சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.

## ஜோதி வழிபாட்டுப் பாடல் :

ஆன்ற சன்மார்க்க நிகழ்வுகளை ஜோதிப்பாடல் பாடித்தான் நிறைவு செய்கின்றோம். இதில் சொல்லப்பட்ட முதல் ஆறு "ஜோதி" என்பது. நமக்குத் தோன்றிய, தோன்றும் துணையாயிருக்கும் அருட்பெருஞ் ஜோதியின் புறக்கூறுகளே. ஆதலால் விஞ்ஞான அடிப்படையில் அவைகளை நினைவு கூறும் வகையிலும், அதைப் படைத்தவனுக்கு நன்றி கூறும் வகையிலும், இவற்றில் எது பொய்த்தாலும் எல்லா உயிர்களும் இன்புற்று வாழும் நிலை தொய்வு பெறும் என்பதாலும், பின்னால் சொல்லப்பட்ட

*ஆறு "ஜோதி" என்பது மனிதன் படைக்கப் பட்டதின் நோக்கம் நிறைவேறுவதற்காக நமது உடலில் அமைக்கப் பட்டிருக்கும் கருவிகளாயும் இருப்பதுடன் இதில் அண்டமும் பிண்டமும் ஜோதியால் மட்டுமே முழுவது மாக இணைக்கப்பட்டுள்ளன என்பதற்கு அறிவுபூர்வமான நன்றி அறிவிப்புமே இந்த ஜோதிப்பாடல் என்பதாகத் தெரிகிறது.*

**5.10.2020** **அடியேன்**

**சென்னை – 600 078** **K.N. உமாபதி**

அக்டோபர் ஐந்து–என்பது ஆன்ம நேய ஒருமைப்பாடு தினம்

**UNIVERSAL BROTHERHOOD AND COMPASSION DAY**

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

**அருட்பெருஞ்ஜோதி**

**அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை**

**அருட்பெருஞ்ஜோதி**

## காப்பு

**அருட்சபை நடம்புரி அருட்பெருஞ்ஜோதி**
**தெருட்பெருஞ்சீர் சொலத்திகழ்வ சித்தியே**

*சிர நடு சிற்றம்பலத்தில் சதாகாலமும் நடம் புரிந்து கொண்டே இருக்கும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருளாற்றலைத் தெளிவாகப் புரிந்து கொண்டு மற்றவர்கட்கும் அதன் சீரையும் சிறப்பையும் தெரிந்து கொள்ளும் வகையில் உரைத்தால் சொல்பவருக்கும் கேட்பவருக்கும் எல்லா சித்திகளும் கைகூடும்.*

# அருட்பெருஞ்ஜோதி அகவல் உணர்வுரை

## திருச்சிற்றம்பலம்

*பெருவெளியிலுள்ள எல்லா அண்டங்கட்கும் அதிலடங்கிய சடபூத அணுக்களாலான பண்டங்கட்கும் ஆதாரமாகி அதனுள் நிற்பது அருட்பெருஞ்ஜோதி! எல்லா ஜீவராசிகட்கும் வெப்பமாக உள்ளே நிற்கும் உடலின் உஷ்ணமும் ஜீவ ஒளி என்பதும் அருட்பெருஞ்ஜோதி!! பூமியில் வாழும் எல்லா உயிர்களும், வெளியில் உள்ள நரகர்கள், விண்ணவர்கள், ஐந்தொழில் செய் கடவுளர்களு மாகிய நான்கு நிலைகளில் வாழும் ஆன்மாக்களின் உள்ளிருப்பதும் அருட்பெருஞ்ஜோதி!! எல்லாம் வல்ல இறைவனாம் பேரொளியும் அருட்பெருஞ்ஜோதி!!!!*

**(அருட்சிவ)** *சிவநெறி எனப்படுவது இரக்க நெறியே. அதைச் சார்ந்து வாழும் அருளாளர்க்கு பெருநிலை வாழ்வாகிய இறவாமையை அருள்வதுடன், அருளே வடிவான இறைவனின் உள்ளேயும் பதி(த்தலும்) ஆம் (ஆகும் முடியும்) எனத் தெளிவித்த அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(ஆகம முடி)** *சமயங்களில் உள்ள ஆகமங்கள் கூறும் பற்பல விதிகளாலும் வேதங்களில் விரிந்து காணப்படும் ஞான பாகைகளான கலைகள், தோத்திரம், பிரார்த்தனை, சாத்திரம், உபநிடதம், சூத்திரம், பேதம், யாகம், யோகம் போன்ற எவற்றாலும் ஒரு சிறிதும் விளங்கிக் கொள்ள முடியாத ஒரு பொருளாய் மிகமிக உயர்ந்து ஓங்கி நிலைத்து நிற்கும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(இகநிலை)** *இகத்தில் வாழ்பவனானாலும், பரத்தில் வாழ்பவ னானாலும், இடையில் வாழ்பவனானாலும் அவனுக்கு எனது பொருள் என்னை விட்டு எப்போதும் நீங்காத பொருள் என்பது எது எனில் அந்த ஆணவம் என்னும் ஒரு பொருள் மட்டுமே. அகந்தை என்னும் ஆணவத்தை அற(வே) ஒழித்து எனது அகத்தில் பொருந்திய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(ஈனமின்றி)** *தயவு என்பதை இகத்திலும் பரத்திலும் ஈன மில்லாமல் (சற்றும் குறையாமல்) உள்ள பொருளாக்கி பரமாகாச நிலையில் நீக்கமற நிறைந்து நின்று ஓங்கும் அருட்பெருஞ்ஜோதியே வா! (உயிர்கள் தோன்ற, வாழ, கோள்கள் சுற்றி வரும் பாதையில் முட்டாமல் மோதாமல் அவையெல்லாம் அதனதன் பாதையில் பயணித்தல் இறைவனின் குறையற்ற தயவு எங்கும் இருப்பதால்தான் சூரியன், சந்திரன் உதிப்பதும் மறைவதும் அவன் தயவே)* **(10)**

**(உரைமனம்)** *பேச்சும் மனமும் அடங்கிய பிறகு, அந்த நிலை கடந்து உயர்ந்தவருக்கு சுத்தஞான நிலை தந்து அவருள் அமர்ந்து ஆட்சி செய்யும் அருட்பெருஞ்ஜோதியே வா! (உரைப்பது - சத்விசாரம் - மனத்தில் வெளிப்படுவது ஜீவகாருண்யம் இவைகளின் செயல்பாட்டின் முடிவே உரைமனம் கடத்தல்)*

**(ஊக்கமும்)** *முயற்சி செய்து உடம்பின் தரத்தை உயர்த்து என்று ஊக்கம் தந்து, உற்சாகப்படுத்தி அதற்கான அறிவைப் பற்றும் உணர்வை உருவாக்கி அதன்மூலம் ஒளிவிட்டு பிரகாசிக்கும் யாக்கை (உடம்பை)யும் பெற்றதை உணர்த்தி நித்திய வாழ்வில் வாழ்பவனாகிட அருளிய அருட்பெருஞ்ஜோதியே வா!*
*(உடம்பை இழுக்கு என்று சொல்லி அதை விட்டுவிட வேண்டும் என்பதை மாற்றி அதை பொன்னுடம்பாக்கு தலே சன்மார்க்கம் - இதுவே சன்மார்க்கத்தின் முதற்படியாகும் என்கிறார்)*

**(எல்லையில்)** *எண்ணிலடங்காத பிறவிகளை ஏன் எடுக் கிறேன் என்பது கூடத் தெரியாமல் இருள் அறிவுடன் இருந்த என்னைத் தேற்றி பிறவிக் கடலில் இருந்து மீட்டு என் துயரங்களை நீக்கிய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(ஏறாநிலை)** *இதுவரை எவரும் ஏற முடியாத உயரமான இடத்திற்கு என்னை ஏற்றி அமரவைத்து, இந்த மக்கள் கொண்டாடும் ஆறாறு* (6 x 6) *என்னும் முப்பத்தாறு*

*தத்துவங்கள் உனக்குக்கீழே எவ்வளவு ஆழத்தில் தெரிகிறது பார் எனக்காட்டிய அருட்பெருஞ்ஜோதியே வா!*

*(தத்துவங்களில் அழுந்துவதோ, அவைகள் கொண்டாடப்படவோ வேண்டாம். அவற்றை அறிந்து கடத்தல் வேண்டும்)*

**(ஐயமும்)** *எனது சந்தேகங்களையும், மருள் நிலையையும், மாறுபட்ட கருத்துக்களையும் என் மன அறிவிலிருந்து நீக்கி, உடலிலுள்ள சளி (சிலேத்துமம், கபம்) போன்ற வற்றையும் நீக்கிய அருட்பெருஞ்ஜோதியே வா!*
*(அறிவு தந்து, ஐயம் நீக்கி, பிணி தடுத்தல்)* **(20)**

**(ஒன்றென)** *அது ஒன்று என்றும், இரண்டு என்றும், ஒன்றிரண்டு என்றும் சொல்வதை தெளிவாக மறுத்து இப்படி எதுவுமில்லை என்று விளக்கிய அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(ஓதாதுணர்)** *வேத, புராண இதிகாச, சாத்திர, ஆகமங்கள் எதுவும் நான் ஓதவில்லை. எனினும், அவைகள் எதைச் சொல்கின்றன என்பதை ஒளிவடிவிலான இறைவன் எனக்கு காட்டியதுடன் சன்மார்க்கத்திற்கும் ஒளியே ஆதாரம் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(ஔவியம்)** *பொறாமை குணத்துடன் கூடிய காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் எனும் ஆறு வகையான தீய குணங்களைத் தவிர்த்தவர்களை உலகர் வாழ்த்துவர் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(திருநிலை)** *திருநிலை என்னும் தெய்வநிலை என்பது உடலுக்கு புறத்திலுள்ள சிவ வெளிக்கும், அகத்தில் அருள் சத்தி மயமாயிருக்கும் அருள் வெளிக்கும் இடைப் பட்ட நித்தியானந்தப் பெருநிலையான புருவமத்தி எனும் தனி வெளியில் வாழ வழி செய்து வளரும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(சுத்தசன்)** *இந்தத் தனி வெளியேதான் இங்கு சுத்த சன்மார்க்க வெளியாகப் பேசப்படுகிறது. இந்த*

*வெளிநிலை என்பது அருட்பெருஞ்ஜோதியை அகத்தே கொண்டது ஆன்ம சிற்சபை. அதைத் திறந்து வெளி வந்ததே "சுத்த சன்மார்க்க நெறி". அத்தகையதான பெருமை பெற்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*
*(மற்ற சமயங்கள் இந்திரிய, கரண, ஜீவ, ஆன்ம வெளிகளில் தோன்றியவைகளே)* **(30)**

**(சுத்தமெய்)** *பிரபஞ்சப் பெருவெளியின் உண்மை விளக்கத்தை நமது அகமாகிய சுத்த சன்மார்க்கத் தனிவெளியில் இருந்துதான் காணமுடியும். எனவே பெருவெளியெலாம் நிரம்பி நித்தியமாய் விளங்கும் கடவுளை அதன் உண்மை விளக்கம் அறியப்படுகின்ற இந்த அகவெளியில் நின்று அனுபவப்பூர்வமாக அடைக என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(தூயகலா)** *மனித உயிருடம்பின் தலைப்பகுதியிலமைந்த அகவெளியால்தான் சுத்த சன்மார்க்க அனுபவம் விளங்கும். கலை என்பது புறத்தில் பார்த்தும், கேட்டும் களிப்புறும் காரணி. ஆனால் தூய கலாந்தம் என்பது பெருஞ்சுகானந்த வாழ்வு பெறக் காரணமாகும். நமது சத்விசார மெய் ஞானத்தால் ஆய்ந்து ஏற்கப்படும் அக அனுபவத்தை வழங்கும் தூய கலாந்த சிற்சபை எனும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(ஞானயோகா)** *ஞானயோகம் என்பது பதினைந்தாம் நிலை. முடிவு நிலைக்கு முந்தைய சத்விசார நன்னிலையிது. இங்குதான் எந்தவித அழிவுமின்றி அருட்பெருஞ்ஜோதி இறைவன் அசைந்து கொண்டே இருக்கிறான். இதைப் புறத்திலிருந்து சென்று அடைய முடியாது. அகத்தினுள் இருந்து தான் ஒன்ற முடியும் என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(விமலமா)** *போதாந்தம் என்பது மெய்யுணர்வின் முடிவு நிலை. விமலனாகிய (மலமே இல்லாத) இறைவனை மலமுள்ள மனிதன் தனது மலத்தை நீக்கி அமலனாகி இறைநிலையை அடைய வேண்டும். ஆனால் அமல*

*னாக வேண்டி இவ்வுலகில் இவ்வுடம்பை விட்டுவிட்டு நான் அமலனாகி விட்டேன் என்று வீணாகிப்போவோரின் பேதமை ஒழித்து சன்மார்க்க சிற்சபையமர்ந்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(பெரியநாதா)** *நாதம், ஓசை, ஒலி, சப்தம், ஸ்வரம் எனப் பலவாகப் பேசப்பட்டு அனுபவமுறும் மனிதர்கள் இவை அநித்யம் என்று அறியார். பெரிய நாதாந்தப் பெருவெளியென்பது பரநாதத்தே தோன்றியதாங்கு அதன் நடுவே தோன்றியது ஒன்று "அதுதான் மாற்றறியாப் பொன்னொளியோ அவ்வொளிக்குள் ஆடும் வள்ளல் அருள் ஒளியோ" என்பதற்கிணங்க சிற்றம்பல வாழ்வு கண்டவர்களின் சிற்சபை தோன்றிய அருட்பெருஞ்ஜோதியே வா!* **(40)**

**(சுத்தவேதா)** *எங்கும் நிறைந்த கடவுள் ஜோதி சுத்த அருள் ஞானத்திற்கு அல்லாது வேறு எதிலும் வெளிப்படாது. இந்த அருள் ஞான நிலையே சுத்த வேதாந்தம். சத்விசார அனுபவம் சாக்கிரத்தில் தொடங்கி, சொப்பனத்தில் தொடர்ந்து, சுழுத்தியில் அசைவற்று நின்று மேல் துரியத்தில் சொல்லறிய மெய்யருள் உணர்வு மயமாய் திகழ்ந்து விளங்கும் பேரனுபவம் தரும் அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(சுத்தசித்)** *ஆறந்தங்களின் முடிபான போற்றி துதிப்பாடல் களை சன்மார்க்கத்தில் விளம்பரப்படுத்தாமல் அருள் உண்மை வெளிப்பட வந்த சுத்த சித்தாந்தம் எனக் காட்டிய சிற்சபையில் விளங்கும் அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(தகரமெய்)** *உடம்பை ஒன்பதாம் நிலைக்கு கொண்டு செல்லும் மெய்ஞானம் அந்த உடலை காயசித்தி, வாதசித்தி, சுவர்ண சித்தி பெறுவதைத் தவிர்த்து முத்தேக சித்தியும் கடவுள் அருளால் தயவு என்பதைக் கொண்டு பெற வழி வகுத்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(தத்துவா)** *புறத்தில் 96 தத்துவங்களைக் கொண்டு இலங்கும் மனிதன் அகநிலையில் தத்துவ அதீதனாகி பதிமயமாய் அனுபவம் கொண்டு சத்விசாரம் செய்து அகநிலை சிற்றம்பலத்தே உற்று வாழ்வளித்த அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(சச்சிதா)** *கடவுளுக்குரிய சத்திய நித்திய சிற்றம்பலம் என்பது ஆன்மாவின் கருவாகும். அதாவது ஆன்மாவை ஆலய மாகக் கொண்டுள்ளதால் வேறு எங்கும் சச்சிதானந்தம் நிலைத்து விளங்காமல் உள்ளதால் தனிப்பரவெளியாய் நிற்கும் அருட்பெருஞ்ஜோதியே வா!* **(50)**

**(சாகாக்கலை)** *சாகாக்கலை என்பதை சாகாக் கல்வியைப் போதிக்கும் சுத்த சன்மார்க்கத்தில் கற்கலாம். இது தயவுடன் கூடிய சத்விசாரத்தில் பொதிந்திருப்பதால் அந்த சத்விசாரத்தால் ஆகாச அருள் வெளியில் இருந்தே பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(காரண)** *புறக் காரியப்பாடான வேதங்கள் அகத்திலுள்ள மெய்ப்பொருளைத் தேடாமல் 'பரன்' அடியை தேடிக் கொண்டு தேக போக இச்சையை விட்டிடாப் புற வேதியர் அருட்ஜோதி என்னும் உண்மை வேதியரைக் கண்டபாடில்லை. நம்மை வேதித்து பொன்னுருவம் தரும் பரிச வேதியனாம் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(ஏகம்)** *வேதம்-பதிநூல், ஆகமம்-பசுநூல், இதிகாச புராணம்-பாசநூல். பசுநூல் விளக்கம் குறிப்பது ஆணவம் கன்மம், மாயை. இவைகளின் முதல் எழுத்துக்களே ஆகமம். எனவே இவைகளின் முடிவு என்பது ஏற்கனவே சொல்லப்பட்டு, ஆகம முடி மேல், ஆரண முடி மேலாக உள்ள சிற்சபையில் விளங்கும் தெய்வமாம் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(வேதாகம)** *வேத ஆகமங்களின் விளைவு என்ன? ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று எல்லா மதங்களும் சொல்கிறது. ஆனால் அதில் பல பிரிவுகள் உருவாகி,*

*பேதப்பட்டு, சமரசம் கெட்டு, ஆன்மநேயம் அற்றுப் போனது. சன்மார்க்கம் என்ற ஒன்று தோன்றி ஆன்ம நேயம், சமரசம், சமத்துவம், ஒன்றேகுலம் ஒருவனே தேவன் என்பதை ஆதாரமாக்கி சத்திய ஞான சபையில் குடிகொண்ட அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(என்றாதி)** *என்றூழ் என்பது சூரியன். முதல் தோற்றமாம் பேரொளியினின்று பல அண்டங்களும் கோள்களும் தோன்றின. அதில் ஒன்றுதான் சூரியன். அதைச் சுற்றி இப்பூமி வாழ்கிறது. இதற்கெல்லாம் மூல காரணமான பேரொளியின் ஒரு கூறுதான் நமது தலைப்பகுதியி லுள்ள ஒளி. இங்குதான் கடவுள் நிலை வெளிப்படும் திருச்சபையாயுள்ளது. இதுவே மூலம். எனவே சூரியனும் முதலானவன் அன்று என்று அறிவித்த அருட்பெருஞ்ஜோதியே வா!* **(60)**

**(சமயம்)** *அந்த அருட்பெருஞ்ஜோதி சத்திய ஞான மெய்ப் பொருளால் அனுபவப்படும். புலன்கட்கும், மனதிற்கும் எட்டாது. எனவே சமயங்களும் புலன், மனதிற்கு உட்பட்டு உருவகப்படுத்தி வாழ்வதால் பெருவாழ்வு எவருக்கும் கிட்டவில்லை. சமயங்கடந்த தனிப்பெரு வெளி என்பது முற்றிலும் அக அனுபவமே என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(முச்சுடர்)** *வரி எண் 60-ல் சொல்லப்பட்டது முற்றிலும் புற ஜோதிகள். இந்த வரியில் சொல்லப்படும் முச்சுடர் என்பது நமது பிண்ட தேக உயிர்நிலை விளக்கம். கடவுட் ஜோதியின் சிற்றணு ஆன்ம சிற்சபையிலிருந்து உயிர் சக்தியால் செயல்படுகிறது. இதுவே கடவுள் ஒளியின் விளக்கு, உடலில் விரிவது சுடர், புறத்தில் ஓங்கும் அகண்ட நிறை நிலையே ஜோதி. இது அனுபவத்தில் விளங்கும். அருள் விளங்காத அபக்குவ நிலையில் இம்மூன்றும் உயிர், உடல், உலகு என்று பிரியும் என அறிவித்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(துரியமும்)** விழிப்பு கனவு உறக்கத்திற்கு மேலாக யோகிகட்கு துரிய நிலை கிட்டும். இதில் ஒருமை, சுத்த மனம், உணர்வு கெடாமை, சலனமின்மையுடன் தன்வயத்த னாகும் நிறைவு ஏற்படும். சுகநிலை யோக நித்திரை, அறிதுயில் இதுவே. இது நிலைக்காமல் இறங்கிவிடும். ஆனால் இந்த அனுபவத்தால் சில சித்துக்களைப் பெறுவர், செய்வர். அதற்கும் மேலான துரியாதீத நிலையில் புறத்திலிருந்து சென்று பதிக்கலப்பால் மறைந்து விடுவதால் அனுபவமற்று வாழ்வு சூன்யமாகி விடும். ஆனால் சுத்த சன்மார்க்கி அம்மேல் நிலையில் மனத்தால் ஒன்றி நின்று அருள் அனுபவத்தை அகத்திலிருக்கும் அருட்சக்தியால் பரவிப்படர்ந்து நித்தியன் ஆவதால் இதை அறிவித்த சுகபூரணம் தரும் சிற்றம்பலத்து அருட்பெருஞ்ஜோதியே வா!

**(எவ்வகை)** நிலையான சுகம் எது எனத்தெரியாமல் மனிதன் அலைந்து திரிந்து புறச்சுகம் அனுபவித்து பிறகு இதெல்லாம் வீண் என்னும் முடிவுக்கு வருகிறான். அதை அப்படிக் கொள்ள வேண்டியதில்லை. உலக இச்சைகளின்மீது அப்போதுதான் வெறுப்பு வரும். பிறகுதான் நமது உண்மையான தேவை எது என்பதை சிற்சபையின் கண் நின்று நிலைத்த வாழ்வை அடைய வகை செய்யும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!

**(இயற்கை)** சச்சிதானந்தம் என்பது மெய்யறிவு இன்பம் ஆகும். இதுவே இயற்கை உண்மை, விளக்கம், இன்பம் ஆகும். இதில் விளக்கம் என்பது சிற்சபை. அதாவது ஞான விளக்கம் கொண்ட ஆலயம். சுத்த சன்மார்க்கி யின் உண்மை வடிவம் அகத்தில் சத்து நிலை நின்று விரிந்து அருள் ஒளி நிறைவால் அகண்ட வடிவமாய் திகழும். பூரண இன்பம் நிலைக்கும். பூரண சுகம் நிலைக்கும். புறத்திருப்பவருக்கு அவனது வடிவம் பழையதாகவே தோன்றும். ஆனால் அவன் சுத்த நித்த தேக வடிவினனாய் அயர்வு இல்லாமலிருப்பான் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா! **(70)**

**(சாக்கிரா)** *சாக்கிரம் முதல் நிலை. சாக்கிராதீதம் இறுதி நிலை. இந்த சாக்கிராதீத நிலையை சில யோக ஞான சாதகர்கள் ஓரளவு அறிவர். மற்றவர்கள் ஆராய்ந்து உபாய ஞானத்தால் பேசுவர். இவ்விரு வகைக்கும் அனுபவப்படாதது சாக்கிராதீதத் தனிவெளி. இதை சன்மார்க்கி தயவுடனான ஒழுக்கத்துடன் சத்விசாரம் செய்து அறிய வேண்டும். புறத்திலிருந்து கண்டு "தான்" கெட்டு, தான் அதுவே என்றெண்ணி உடலை விட்டு உள்ளே ஒன்றி மறைகிறான். சன்மார்க்கியோ விசார சாதனையில் முதிர்ந்து துரியாதீத விழிப்பு நிலை அடைந்து, உள்ளுணர்வால் பிரபஞ்ச வெளியைக் கடந்து ஒளிர்கிறான். சிற்றம்பலத்தே நிறைவான இன்பத்தொடு நித்திய வாழ்வில் இருக்கிறான் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(சுட்டுதற்)** *உலகர்கள் இதுவரை கூறிவந்த துரியாதீதம் என்பது ஒரு மின்னலைப்போல மறைந்திடும். சுட்ட முடியாது. ஆனால் சன்மார்க்கியின் உள்ளிருந்து பூரணமாய் விளங்கும் இறைவன் விழிப்பு நிலையிலும் நழுவாமல் விளங்குகிறான். அகத்திலும் புறத்திலும் பேரின்பம் கண்டு மகிழ்வான். இதுவே அதீத சுகம் (சுகாதீதம்). மனிதன் பல கோள்களை நோக்கி ஆராய்கிறான். ஆனால் அதற்கப்பால் எதுவும் தெரிவதில்லை. ஆனால் அட்டமேல் (அதற்கும் மேலாக) எனது சிற்சபை அறிவை அண்டாண்டங்கட்கும் செல்ல வைத்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(நுவம்தவி)** *நவநிலை என்பது நெருப்பு, சூரியன், சந்திரன், நட்சத்திரம், ஆன்மா, ஜீவன், கரணம், இந்திரியம், சிரநடு சிற்றம்பல ஒளிகளாம். மனிதன் உடல் நிலை நின்று புற ஆராய்ச்சியில் தனக்கு உள்ளீடாக கடவுள் ஆன்ம ஜோதியைக் காண்பது விசார நிலை. அதன் முடிவில் கடவுள் ஜோதியே முதலாகவும், அது தானாய் நின்று, அதன் அருள் அல்லது தயவால் தனது உணர்வாய், உயிராய், உடலாய்க் கொண்டு அருளின்ப வாழ்வு*

*வாழ்வதே சன்மார்க்கம். மற்ற நிலை அவம். எனவே சிற்சபையானது அதைத் தவிர்த்தல் வேண்டும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(உபயபக்)** *ஊனக்கண் கொண்டு பார்க்கும்போது அநித்திய காட்சிகள் தெரியும். ஞானக்கண் கொண்டு பார்க்கும் போது ஒவ்வொரு பொருளின் அகம் புறம் முன்பின், ஆதி அந்தம், இகம்பரம் ஆகிய இருபக்கத் தோற்றங்களும் தெரியும். அருளால் மறைப்பு நீங்கி இருக்கும். இதனால் பயம் பூஜ்யமாகி எது நடக்குமோ என அஞ்சாமல் இருக்கலாம். இல்வாழ்வானுக்கும் இந்த அபயம் பொருந்தும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(சேகரமாம்)** *பேரருட் சக்தியின் கூறான பொருட்சக்தி, அருட்சக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி, யோகசித்தி, அட்டமா சித்தி, அட்ட ஐஸ்வர்யம் எல்லாம் சேர்த்து நமது சிற்சபையில் கொட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அது அந்த அருட்பெருஞ்ஜோதி என்னும் சுரங்கத்தைக் கொண்டு இருக்கிறது. அண்மைக்காலம் வரை சுத்த சன்மார்க்கம் வெளிப்படாததால் அனைவரும், புறத்தில் ஆடிய சித்தர்களும் இவ்வுலகில் நிலைக்கவில்லை என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!.* **(80)**

**(மனாதிகட்)** *ஆண்டவனே அனாதியெனும் போது அவர் அமரும் இடமாம் சிற்சபையும் அனாதியே. அண்ட முழுதும் நிறைந்துள்ள அவ்வெளியில் காணப்படும் ஒவ்வொரு சிறிய அணுவிலும் அமைந்துள்ள பேரொளியே அக்கடவுளின் சிற்றம்பல சிற்சபையாம். இது சத்திய ஞானத்துக்கு மட்டும் புலப்படும். ஆனால் சாதி, மத பேதம் பாராட்டுபவனுக்கு இது வெளிப் படாது. மனம், வாக்கு, காயத்திற்கோ மனம் புத்தி சித்தம் அகங்காரத்திற்கோ இது மிகவும் அப்பாலான வெளியாகும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(ஓதி நின்று)** *ஆதி சிற்சபை என்று இங்கே குறிப்பிடப்பட்டது எப்படியென்னில் இந்த சிற்சபை இப்போது*

*நம்மிடத்தில் இருந்தாலும் இதற்கு ஆதாரமான முதல்வடிவமான அருட்பெருஞ்ஜோதியே ஆதி சிற்சபை. நித்திய வாழ்வு பெற முயன்ற மனிதன் ஓதியும், உணர்ந்தும் பயனுறாதிருந்தான். தயவுடன் கூடிய சன்மார்க்கி, அருள் நிறை வாழ்வு பெறும்போது தன் ஆதிநிலைக் கடவுளின் அனாதி நிலை ஆக்கப்பெற்று அழிவற்ற அருளின்ப வடிவில் திகழ்கின்றான் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(வாரமும்)** *அமுத சபை அல்லது அமுதாலயம் என்பது உலகில் எங்கும் இல்லை. சித்தர்களில் சிலர் நமது உடம்பே ஆன்மாலயம் அது அழியாமல் பார்த்துக் கொண்டால் அதுவே அமுதாலயம் என்றனர். சுத்த சன்மார்க்கத்தில் சத்விசாரத்தால் அக வடிவமுற்று நிற்பதால் மெய்யன்பு பெருகி உள்ளொளி அருட்சக்தி வெளிப்பட்டு அழியாமல் நிறைவு தரும். எனவே வாரம் என்னும் அன்பு அழியா வரம் தரும். அந்த ஆரமுதச் சபையில் வீற்றிருக்கும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(இழியாப்)** *பாவ புண்ணியத்தால் துன்பமும் இன்பமும் வருகிறது. மனிதனைப் பண்படுத்தும் சித்தி நிலை போன்றவற்றால் சில இன்பங்கள் வந்தாலும் முடிவில் அழிகிறான். இப்போது சுத்த சன்மார்க்கம் வந்து விட்டதால் அழியாச் சிற்சபையில் விளங்கும் அருட்பெருஞ்ஜோதியால் உண்மை, ஒழுக்கம், சத்விசாரத்தால் அகஞான அனுபவம் கண்டு கலந்து அருள் இன்பம் பெற்று வாழ வேண்டியவனாய் இருப்பதால் ஞான, பக்தி, கர்ம, யோக, தியான, தந்திர, தவ முயற்சி என்பவைகளால் இழியாமல் சத்விசார சார்பில் அழியாத சிற்சபை காட்டும் வழியில் வாழ முயலும் நேரமிது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(கற்பம்)** *காலம் என்பது பல அற்புதங்களைக் கடந்து செல்கிறது. ஆனால் எல்லாம் அநித்தியம். காலத்தால் அழியாத அதிசயம் ஒன்று இருக்குமானால் அது இவ்வுடலை அருட்பெருஞ் சக்தியால் அந்த சுகானந்த*

*வடிவம் ஆக்கிக்கொண்டு என்றென்றும் வாழ்ந்து கொண்டிருப்பதே பேரற்புதம். இது எத்தனை கோடி ஆண்டுகளானாலும் அழியாது. இதுவே நமக்கு அருட்பெருஞ்ஜோதி சபை அளித்த பேரற்புதம் என உணர்த்திய அருட்பெருஞ்ஜோதியே வா!* **(90)**

**(எனைத்தும்)** *இன்ப துன்பம் மாறி மாறி வரும். ஆனால் மனிதனோ தனக்கு துன்பமே வரக்கூடாது என வேண்டு வான். ஆனால் மரணம் என்னும் பெருந்துன்பத்தை விலக்க இதுவரை முயலவில்லை. அதை விலக்கி விட்டு அழிவற்ற பேரின்பம் பெறாதது ஏன்? இம்மியளவுகூட துன்பமில்லாமல் வாழ தயவு நெறியுடன் சத்விசாரம் செய்து அனக வாழ்வு ஏற்று சுகானந்தம் காட்டும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(பாணிப்பில)** *ஆணிப்பொன் என்பது சுத்தமான பொன். அம்பலம் என்பது இங்கே நமது சிரசிலுள்ள சகஸ்ர ஆகாசம் என்னும் 1008 இதழ் தாமரை. ஆயிரத்தெட்டு என்னும் எண்ணை 96 தத்துவங்களால் பகுத்து கடப்பது* (1008÷96=10½) *அந்த மனிதனை பத்தரை மாற்று தங்கமாக மாற்றும் நிலை பெறும். (மாற்று அறியாத செழும் பசும்பொன்னே என்பதும் காண்க.) இதை யடைய சன்மார்க்கத்தில் விளக்கு, சுடர், ஜோதி என நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. சத்விசாரத்தில் பரவி இதில் முனைபவர்க்கு பாணிப்பு (தாமதம்) இல்லாமல் தரத்தயாராக உள்ள அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(எம்பலம்)** *அருட்பெருஞ்ஜோதி இறைவனின் உண்மை அகண்ட வெளி முழுதும் அறியப்படுகிறது. இது அனுபவப்படும் ஆன்ம சிற்றணு பேரின்ப உணர்வுமய மாயும், புறத்தே உள்ள வெளி ஒளிமயமான பிரபஞ்ச மாயும் இருக்கிறது. இது முறையே சிற்சபை பொற்சபை எனப்பட்டது. சிற்றம்பலக் கடவுளின் ஆணைப்படி புறத்தொழில் நடைபெறுகிறது. இதுவே ஊன்றிய மற்றும் உயர்த்திய திருவடி. இந்த உயர்த்திய திருவடியால்தான்*

*உலகமும் உயிரும் தோற்றுவிக்கப்பட்டது. எனவே அகநோக்கி திருமுன் நின்று சன்மார்க்கத்தவர் விண்ணப்பிக்கின்றனர். ஏனென்றால் நித்யானந்த வாழ்வை அருளுவது அதுவே "எம்பலம்" என ஏற்றித் தொழுகின்றனர் என ஓதப்படும் அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(தம்பர)** *தம்பர ஞானம் என்பது தற்பர ஞானம். சித்து-அம்பரம் சிதம்பரம் (அதாவது ஞான ஆகாசம்). ஆனால் சிற்றம்பலம் என்பது அணுத்துவமாயுள்ள சிறிய அளவிலான இயல்பு. இந்த சிற்றம்பலம் என்பது என்றும் அழியாமலிருக்க வேண்டுவதால் திரு என்னும் அடைமொழி தரப்பட்டது. இது பூர்வ ஞான சிதம்பரம். ஆனால் தற்பர ஞான சிதம்பரமே உத்தர ஞான சிதம்பரம். இது சுத்த சன்மார்க்க சத்விசாரத்தில் வெளி வந்தது. இதுவே சத்திய ஞானசபை (மெய்யறிவுத்தலம்) பூர்வத்திலே சிவபதியாயிருந்து, உத்தரத்தில் அருட்சிவ பதி என (அகவலில்) குறிப்பிடப்பட்டதே அருட்பெருஞ் ஜோதி என விளக்கும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(எச்சபை)** *சபை என்பதே பொது எனப்படும். பலர்கூடி உண்மையறியப் பெற்று பலன் காணுமிடம். ஆனால் நமக்கு பொதுச்சபை என்பது சத்திய ஞான சபையே. "உண்மை" என்பது ஆண்டவனுக்கும் அடியவருக்கும் பொதுவானது. இது விளங்காமல் மனிதன் உடற்பற்று காரணமாக அப்பொதுச் சபைக்கு புறத்திருந்து அவத்தைப்படுகிறான். ஆன்ம ஆலயமே அருட்பெருஞ் ஜோதி ஒளிரும் பொது (சபை). கன்மமாகிய உடற்பற்றும், மாயையாகிய உயிர் உணர்வுப் பற்றும் கடந்து ஆணவ மலம் அருள் விளக்கம் பெறும்போது அனுபவப்படுவது பொதுச்சபை உண்மை என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!* **(100)**

**(வாடுதல்)** *நாம் நினைப்பது கிடைக்கவில்லையென்றால் வாடுகிறோம். நாம் உலகியலில் எதையெல்லாம் அனுபவிக்க நினைக்கின்றோமோ அவை எல்லாமே*

*அநித்யம். இப்படி நம் வாழ்வு ஒழிகிறது. மாறாக மணிமன்றில் ஆடும் இறைவனை நெருங்கி திருவருள் வல்லபத்தால் நமது சிற்சபை மணிமன்றில் ஆடுபவனை அடைதல் வேண்டும். ஆடுதல் என்பது அருள் உண்மை வெளிப்பட இடையறாது படைத்தல் முதல் அருளல் ஈறாக உள்ள செயல்களை எக்காலத்தும் தொடர்தலே என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(நாடக)** *ஆடகப் பொது ஒளிர் என்பது - அகம் என்னும் பொதுவில் ஆடிக்கொண்டே ஒளிர்தல். ஆடிக்கொண் டிருப்பவர்கள் தமது மனோ பாவங்களைக் காட்டாமல் ஏற்றுக்கொண்ட பாத்திரத்தின் பாவங்களைக் காட்டுதல் மரபு. மனிதனும் இறையுண்மை கொண்டு அகநிலை நின்று தன்னைக் காட்டிக் கொள்ளாமல் அனக வாழ்வு வாழ்வதற்கான கலையைப் பற்ற வேண்டும் என்ற பெரிய ஒப்பற்ற உண்மையை (உரைத்த) நவின்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(கற்பனை)** *நித்திய ஒளிவீசிப் பிரகாசித்து விளங்குவது நமது அற்புத சிற்சபை. இதில் வளரும் ஒளி அருட்பெருஞ் ஜோதி. இது சிர நடு சிற்றம்பலத்தில் உள்ளது. இறையொளி என்பது எவரது கற்பனைக்கும் அடங்கி விடவில்லை. எனினும் பல யோகிகள், ஞானிகள் எட்டிய வரையில் அதை உணர்ந்து அருளும் ஆற்றலும் பெற்று அற்புதங்களும் செய்தனர். அருட்பெருஞ்ஜோதி என்பது ஒளியைத் தருவது என்று கொள்வதைவிட இது கடவுளைக் காட்டும் கற்பனைச் சொல்லாகக் கொள்ளாமல், அந்த ஜோதி என்கிற சொல்லுக்குள்ள புகழ், சிறப்பு, இறைவாழ்வையே வழங்குவதாய்க் கொள்வதே சரியானது என்றவாறு விளக்கிய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(ஈன்ற)** *ஈன்ற தாயின் தயவுகூட இறைவன் தயவில் ஒரு கூறுதான். அதனினும் பெரிது சிற்சபையின் தயவு. எப்படியெனில் இதுவரை எடுத்த பிறவிகள் அனைத் திற்கும் இறைவனே தாயாகி நின்றதால் இப்பிறப்பின்*

நற்றாய் ஒரு கூறு எனத் தெரிவித்த அருட்பெருஞ் ஜோதியே வா!

**(இன்புறு)** நமது பிறவியில் சூழ்நிலை காரணமாக எதை எதையோ விரும்புகிறோம். எது எது நமக்கு வேண்டும் என்பதை ஆண்டவன் அளித்துக் கொண்டே இருக்கிறான். அதைப் பெற்று நாம் அனுபவிக்கிறோம். ஆனால் எனக்கோ புறத்தே உள்ள ஜீவர்களிடம் அன்பை இடைவிடாமல் செலுத்திக் கொண்டே இருப்பதால் என் அகத்தே இன்பம் பெருகி ஓடுகிறது. அதை உலகுக்கு தரும் நிலைக்கு என்னை உயர்த்திய அருட்பெருஞ்ஜோதியே வா! **(110)**

**(எம்மையும்)** மனிதன் தனது ஆன்ம வடிவத்தில், அறிவு ஆண் இயல் என்றும் அதனைச் சூழ்ந்துள்ள உடம்பு பெண் இயல் எனவும், இது அகத்தில் உள்ள நித்தியக் கடவுளின் ஆன்ம சொரூபத்திற்கு மாறுபட்டதென்றும் கொண் டான். இப்படி பல பிறவிகளை எடுத்த மனிதன் ஒவ்வொரு பிறவியிலும் அநித்திய உடம்பானதாய், ஒளிவடிவான அணுவை தந்தையிடம் பெற்று உருவாகி இருந்தாலும், அந்த இறைவனும் நானும் இரண்டாகவே வாழ்கின்றோம். அத்வைதமாய் சேர்ந்து இருந்ததில்லை. ஆனால் பிரியவுமில்லை. அன்னையும் பிதாவுமாய் அவன் என்னைத் தோற்றுவித்துக் கொண்டே இருப்பதை உணர்த்திய அருட்பெருஞ்ஜோதியே வா!

**(பிரிவுற்று)** இறைவனும் நானும் பிரிந்ததில்லை. அவனில் லாத இடம் எதுவுமில்லை. எனவே என்னுள்ளும் அவன் இருப்பதால் நான் தனித்து இருக்க முடியாது. வேதாந்தத்தில் அகம் பிரம்மாஸ்மி எனும்போது அகம்தான் பிரம்மம் என்றாகிறது. அப்படியானால் புறத்தில் பிரம்மம் இல்லையென்றாகிறது. இந்த அறிவுக்கு அறிவுறுத்தப்பட வேண்டியது புறமும் பிரம்மமே என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!

**(சாதியும்)** *பிரபஞ்சம் ஒளியாலானது. எங்கும் அதுவே நிறைந்திருக்கிறது. அதற்கு முதல் அருட்பெருஞ்ஜோதி. எனவே இது அனாதியும் ஆதியும் ஆன உண்மை. அதைக் காண்பதும் உய்வு பெறுவதும் தயவுடன் கூடிய சத்விசாரத்தால் மட்டுமே இயலும். ஆதலால் இடையில் மனிதர்களைப் பிரித்த சாதி, சமயமெல்லாம் எவ்வளவு முயன்றாலும் அதைக் காண முடியாது. காரணம் அவர்கட்கு நேயமும் தயவுமில்லை என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(தனுகரண)** *உடலும் கரணங்களும் எதற்காக தரப்பட்டன? புவன போகங்களை ஒழுக்கத்துடன் சேர்ந்து நிறைப் படுத்திய பின் கடவுளனுபவம் பெற முயல வேண்டும். அந்த முயற்சிக்கு முன்பு அது தனு, கரண, புவன, போகங்களை ஒதுக்காமல் கடந்து செல்ல வேண்டும் என்பதை அறிய வேண்டும் என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(உனும்)** *உயிர் உணர்வு என்பது அக உயிர்நிலையையும், புறத் தேகத்தையும் பொருத்தி நின்று விழிப்பு நிலையில் புலன் உணர்வுக்குக் காரணமாயும், உறக்கத்தில் ஒடுங்கியுமிருக்கும். பொறி புலன் வளர்ச்சியற்ற தாவரங்களின் உணர்ச்சி வெளிப்படாது. அவை ஜீவ இம்சை அடையாது. மற்றவை உபாதையடையும். எனவே கொலை புலை தவிர்த்தலை சன்மார்க்கம் வலியுறுத்துகிறது. இதற்கெல்லாம் காரணம் மனமும், பகுத்தறிவும். ஜீவ இம்சை செய்பவர்கள் இறை இயலை அறிய முடியாமல் போவது அகங்கார போதத்தால்தான். இதைக் கடந்தால்தான் அருள் உணர்வு ஏற்படும். இது அனுபவாதீதம் என அருளிய அருட்பெருஞ்ஜோதியே வா!* **(120)**

**(பொதுவுணர்)** *கடவுளின் உண்மை வடிவம் பருப்பொருள் அல்ல. கண்ணுக்குத் தெரியாது. உணர்வால் அறியலாம் என்பதும் சாத்தியம் ஆகாது. காரணம் அது எப்படி இருக்கும் என்ற அனுபவம் இல்லை. மனிதன் அருள்*

*ஞானத்தால் தேக, இந்திரிய, கரண நிலைக்கு அப்பால் சென்று ஒன்றேயான அருட்பெருஞ்ஜோதியைத் தவிர "தான்" என்பது வேறொன்றும் இல்லை என்னும் நிலை பொது உணர்வு. அது துரிய நிலையில்தான் - தானும் அவனும் ஒன்று - எனும் பொது உணர்வு அனுபவப் படும். இதைத்தவிர அருட்பெருஞ்ஜோதி என்பதை புத்தக, உபாய அறிவால் இயம்ப முடியாது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(உளவினில்)** *அருட்பெருஞ்ஜோதி என்பதை மனிதன் எப்படி அறிவது? முகத்தலளவை, நீட்டலளவை, எண்ணிக்கை, பரிமாணம், அனுமானம் போன்ற எதனாலும் இதன் அளவு இதுதான் என அறிய முடியாது எனத் தெரிந்து கொண்டபின் - அருள் என்ற அவனது ஒற்றன் மூலம் - நெருங்கி, தொடர்பு கொண்டு, பிறர் காணா வண்ணம் ஒன்றியிருந்து அந்தப் பெரும் பதியை தயவு வண்ணம் பூண்டு உணர்ந்து உணர்ந்து அனுபவப்பட்டு அடையலாம் என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(என்னையும்)** *இதுவரை எடுத்த பிறவிகட்கெல்லாம் அன்னையாயிருந்து, உவந்து இப்பிறவியில் எல்லா இலட்சணங்களையும் கொடுத்து ஆயிரமாயிரம் அன்னையின் சால்பு கொண்டு இருக்கும் இறைவனை என் அகத்தில் வைத்திருக்கிறேன். இத்தேகம் அழிவுற் றால் அவன் என் தேகத்திலிருந்து அகன்று விடுவான். பின்பு எங்கு தேடுவது? என்ன வழியெனக் கேட்டபோது ஒரே உபாயமாகிய ஜீவகாருண்யமும் சத்விசாரமும் செய் என்ற பணியைக் கொடுத்து, செய்வதைப் பார்த்து, மனமுவந்து இறவா வரமளித்த என் அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(ஓதி ஓதா)** *அருட்பெருஞ்ஜோதி தான் அண்ட பிண்டத்திற் கெல்லாம் ஆதாரம். அதில் ஒரு கூறான நாம் அவனுக்கு உறவாக உரியவனாக ஆகிறோம் என்பதை உணராமல், ஓதாமல், தெரியாமல் இருந்து விட்டோம். இப்போது*

*அதை உணர்ந்து ஓதி, உறவு கொண்டு இனி பிரியாமல் இருந்து மேன்மை பெற்றுத் திகழும் முறையறிந்தோம். அந்த ஆதியும் அந்தமும் இல்லாத தலைவன் என் உறவினன் என்பதை உணர்த்திய அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(படியடி)** *உலகமெலாம் உதிக்கின்ற ஒளிநிலை, மெய்யின்பம் உறுகின்ற வெளிநிலை என்று இரண்டு நிலையாகி இலங்கிய நின் சேவடிகள் என்பதைப்போல இதுவரை இறைவன் தன் தோற்றத்தை வெளிப்படுத்தவில்லை யெனினும், தோன்றும் பொருளில் எல்லாம் அவனே இருக்கின்றான் என்பதால் அதன் அடி நிலை என்பது ஒளிநிலை, அதன் முடி நிலை என்பது அருள் தரும் வெளிநிலை என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!* **(130)**

**(பவனத்தி)** *மனிதனுக்கு இடப்பட்ட ஆணை என்ன? உண்மை எது என்பதைக் கண்டு உயிரின்பமடைந்து அழியாது விளங்கு! பேறு பெறு! என்பதே. அதற்கு ஆதாரமாக உள்ளது. மண்ணுலகில் ஐம்பூதங்கள், உயிரினங்கள், அக, புற கருவிகள், தயவு போன்றவை யாகும். ஆன்மாவுக்கும் உடலுக்கும் இடைவிளங்கும் உயிர் உணர்விலே அருள்மயமான அருவுருவாய் தோற்றி ஆண்டவன் நமக்கு அனுபவப்படுகிறார். இந்த உயிரனுபவம் கொண்ட மனிதன். இந்தப் புவியின் அண்டப் பரப்பு எங்கும், காற்றும் அதனுள்ளே பிராணனும் நிரப்பப் பட்டுள்ளதால், அதில் தான் என்றும், அவன் என்றும் இல்லாமல் அவன், அவனாகவே விளங்கும் அருட் பெருஞ்ஜோதியே வா!*

**(திவளுற்ற)** *அண்ட வெளியில் பேரொளியால் உருவாகித் திகழும் பலவாகிய அண்ட கோளங்கள் உருவாகியது. வெறும் பேரொளி அப்படியே இருந்து விட்டால் என்ன பயன்? அது எப்படி உருண்டு திரண்டு அண்ட கோளங்கள் ஆனதோ அப்படி அவனுக்கு அவனாக, மேற்சொன்ன வரிகளுக்கு பெருமை சேர்க்க அது பெண் வடிவாய் நின்று உருவங்களை, உடலை உருவாக்குவதில்*

*அவளுக்கு அவளுமாகி எல்லாத் திறல்களையும் தன் அகத்தே கொண்டுள்ள அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(மதனுற்ற)** *மேற்சொன்ன அடிகளில் உயிரும் உடலும் அவனும் அவளுமாக காட்டப்பட்டது. அடுத்து இவ்வுலகிலுள்ள பொருட்களாகவும் அதன்மீது மனிதனுக்குள்ள இச்சையையும் விச்சையையும் உருவாக்கி உலகை இயக்கம் பெறச்செய்த அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(எப்பாலு)** *பால் என்பது பங்கு, பாதி எனவும் பொருள்படும். எனவே ஒளியோ, வெளியோ, அண்டமோ, பிண்டமோ, உறவோ பகையோ அனைத்திலும் பாதியாய் நிற்பவன் அருட்பெருஞ்ஜோதி இறைவன். எனவே எல்லா அண்டங்களும், அதற்கு அப்பாலுமாய் உள்ள அனைத்தும் அவன் பால் நோக்கியே உள்ளது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(வல்லதாய்)** *எல்லாப் பொருளிலும் அவன் ஆதிக்கம் இருக்கிறது. ஆக்குவான், காப்பான், அழிப்பான். ஆனால் எவர் முன்பும் தோன்றியதில்லை. அப்படி அவன் தோற்றிய பொருளை அல்லாமலும் செய்கிறான். மனிதன் தயவோடு வாழ்வதை விடுத்து கொடுஞ்செயல் ஏன் செய்கிறான்? அவர் ஏன் தடுக்கவில்லை? காரணம் அவர் அகத்தே குடிகொண்டிருப்பவர். மனிதனோ புறத்தில் குற்றம் செய்கிறான். அகப்பக்குவம் இல்லா மையை திருத்தவே சன்மார்க்கம் வெளிப்பட்டது. அது அவனை அனக வாழ்வுக்கு அழைத்துச் செல்லும் மார்க்கமாகும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!* **(140)**

**(எப்பொருள்)** *உலகம் என்பது பொருள் மயமானது. ஐம்பூதங்களாயிருந்தாலும், அகமாய் இருந்தாலும், புறமாயிருந்தாலும் அவைகளின் ஆதாரமாய் நிற்பது எது என ஆன்றோரும் சான்றோரும் மெய்யறிவாளர்களும் அறுதியிட்டுச் சொல்வது மெய்ப்பொருள் என்பது இந்த*

ஒரு பொருள்தான் என போற்றப்படும் அருட்பெருஞ் ஜோதியே வா!

**(தாங்ககி)** உயிரைத் தாங்குவது உடல், அதைத்தாங்குவது பூமி, அது சுற்றி வருவதை தாங்குவது வெளி. இவைகளில் பல அணுக்கள் உள்ளனவே அவற்றைத் தாங்குவது யார்? சர (அசைவும்) பொருட்களையும் அசர (அசையாப்) பொருட்களையும் தாங்குவது யார்? அசையும் பொருள்களில் அந்தந்த வேகத்தில் அசைந்து கொண்டும், அசையாப் பொருட்களில் அசையாமல் ஆங்காங்கே அதன் அதன் இடத்தில் நின்று தாங்கிக் கொண்டும் விளங்கிக் கொண்டிருக்கும் அருட்பெருஞ் ஜோதியே வா!

**(சத்தர்)** சடப் பொருளானாலும், உயிர்களானாலும் அது எதையோ ஒன்றை சாதிக்கும் ஆற்றல் பெற்றிருக்கும். அந்த ஆற்றல், சக்தி எனப்படும். ஆற்றல் என்பது அந்தப் பொருளின் உள்ளே எங்கேயோ தங்கி இருக்கும். அதை சத்தர் என்பர். சத்தியின் உள்ளும் புறமும் தழைத் திருக்கும் இடமாகிய சத்தர் என்பது ஆண்டவனின் தேசம் (திசை) என விளங்க வைத்த அருட்பெருஞ் ஜோதியே வா!

**(சத்திகள்)** ஆற்றல் பெற்று சாதிக்கும் மேற்சொன்ன சத்திகள் எண்ணிலடங்காது எனினும், இவற்றை ஆதிசத்தி, பராசத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி என ஐந்தினுள் கூறுவர். இந்த எல்லாச் சத்திகளையும் எங்கெங்கும் தழைக்கச் செய்தால்தான் அதைக்கொண்டு உயிரினங்கள் கண்டும், உண்டும், உயிரைப் பெருக்கியும் அறிவு பெற்றும், இறைநிலை அறியவும் இன்னும் பிறவும் சாத்தியமாகி விளங்குகிறது என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!

**(முந்துறும்)** மேற்சொன்ன சத்தி சத்தர்களை ஆதாரமாகக் கொண்டு முதல் தொழிலாக படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழில்களைச் செய்ய பிரம்மா, விஷ்ணு, ருத்ரன்,

*மகேசுரன், சதாசிவன் ஆகிய ஐவருக்கும் அளித்த அருட்பெருஞ்ஜோதியே வா!* **(150)**

*(மூர்த்திகள் பலர்க்கும் என்பது மேற்சொன்ன கடவுளருக்கும் ஆயுள் உண்டு. எனவே அது முடிந்தவுடன் வேறொருவர் அதிகாரம் பெறுவார். இப்படி இதுவரை பலர் வந்து சென்றனர்.)*

**(பெரிதினும்)** *இதுவரை பார்த்தும், கேட்டும், அறிந்தும், கற்பனையிலும் எனக்கு எதுவெல்லாம் பெரிதாகவும், சிறிதாகவும், அரிதாகவும், புதிதாகவும், பழையதாகவும் தெரிந்ததோ அதற்கும் பெரிதாக, மிகச்சிறிதாக, மிக அரிதாக, மிகப்புதிதாக, மிகப்பழையதாகியது ஒன்றே ஒன்றுதான் என உணர்த்திய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(காட்சியும்)** *காட்சி என்பது புறக்கண், அகக்கண், உணர்வுக் கண், அறிவுக்கண் போன்றவற்றால் காண்பது. ஆனால் சிற்றம்பலவன் நமக்குக் கொடுத்த திருவருள் சீர்-மூன்றாவது கண். அதை இதுவரை திறக்கவில்லை. அதன்மூலம் எந்தக் காட்சியையும் காணவில்லை. அந்தக் காட்சியும் அது தரும் ஆட்சியாகிய அனுபவத்தையும் பார் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*
*(காட்சிக்கு முன்பாக - "திருக்கதவம் திறவாயோ" பாடல். காட்சிக்குப்பின் "ஆணிப் பொன்னம்பலத்தே கண்ட காட்சி" எனும் பாடல் காண்க.)*

**(இன்புறு)** *சித்துக்கள் பல புரியும் சித்தர்கள் இருக்கலாம். ஆனால் நீ அன்புடன், கருணையுடன் பிணைந்த இன்பமுறு சித்திகள் எல்லாம் புரிந்திடுக. இவ்வுல கருக்கும் அதனைப் பின்பற்றும் வழியினை போதித்து இன்பம் பெறச்செய் என்று எனக்கு அன்புடன் அருளிய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(இறவா)** *அறவாழி என்பது தருமச்சக்கரம். அது நீதிதேவன் கையிலுள்ளது. 32 வகையிலான அறங்களை வளர்ப்ப வர்க்கு அது உயர்நிலை அளிக்கும். இறவா வரம்*

*என்பதை எனக்கு அளித்து என்னை மேலேற்றியது அந்த தனிப்பெருங்கருணை என்பதை தன்னகத்தே கொண்ட அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(நான் அந்த)** *அந்தமில்லா நலம் பெறுதல் என்பது இன்பம் பெறுவது அல்ல. அது நித்தியானந்தம் பெறுதலாகும் (இறைவனும் ஆன்மாவும் வேறு வேறு அல்ல ஒரே நிலையில் உள்ளது என்பதே இது) அப்படிப்பட்ட நலத்தை எனக்கு அளித்து ஆன் (மாவையும்) அந்த மில்லா அந்த ஆண்டவனுடன் ஒன்றாக்கிய அருட் பெருஞ்ஜோதியே வா!* **(160)**

**(எண்ணிய)** *நான் பெருநெறி பிடித்து ஒழுக எண்ணிய (விசாரத்திலிருந்த) போது எனது நோக்கம் (எண்ணி) ஆங்கு நிறைவேற்றத் திருவுளம் கொண்டு அந்தப் பெருநெறியாம் சன்மார்க்கத்தை இயற்றுக என்று என் அருகணைந்து (அண்ணி) உள் ஓங்கும் ஒளி காட்டிய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(மேயினை)** *தொடர்ந்து மேற்சொன்ன விசாரத்தில் மேவிய (தேடிய) தால் உனக்கு மெய்ப்பொருள் என்றால் என்ன என்பது விளங்கியதுடன் அதன் முடிவில் நீ அதுவாகவே ஆகிவிட்டாய் என்று எனக்கு அருளிய அருட்பெருஞ் ஜோதியே வா!*

*(அருட்ஜோதி ஆனேன் என்று அறையப்பா முரசு)*

**(எண்ணில்)** *இந்தநிலை அருளியதை எண்ணில் அது செழுமையான தேன், வானவர் உண்ட அமுதம் போன்றவைகளை உண்பவர் எவ்வளவு மகிழ்வாரோ அந்த அளவு மகிழ்வை, இன்சுவையை சுவைக்கச் செய்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

*(அம்மையைக் கண்டேன் அமுதமும் உண்டேனடி)*

**(சிந்தையில்)** *சரியை, கிரியை, யோகம், ஞானம், வேதம், ஆகமம், ஓதுதல், தவம், தானம், தருமம் எனப் பல்வேறு செயல்களால் சிவத்தை அடையலாம் என்பதாகச் சொல்வதெல்லாம் என்னால் இயலுமோ எனத்*

*துன்புற்று அழுதபோது, இதையெல்லாம் செய்ய வேண்டாம். ஒன்றை மட்டும் செய் - உனது சிந்தையில் எந்தவிதமான பற்றும் இல்லாமல் விட்டொழி - நீ சிவநிலை பெறுவாய் என (சிவம் பெறுதல் என்பது ஆன்மிகத்தில் புதிய அத்தியாயம். அது என்ன என விளக்கி) மொழிந்தார். அது மிகப்பெரிய அற்புதம். அதுதான் ஐந்தொழில் செய்யும் ஆற்றலைப் பெறுதல். அப்படி என் சிந்தையிலிருந்த எல்லாத் துன்பத்தையும் ஒழித்து எனக்கு ஐந்தொழில் செய்யும் வல்லமை அளித்து அருளிய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(எங்கெங்கு)** *இதைப் பார்த்தபோது எந்தெந்த உயிர்கள் எந்தெந்த பக்குவத்தில், எந்த இடத்தில் இருந்தாலும் அந்த இடத்திலும் ஆண்டவன் இருப்பதால், அங்கேயே, அப்போதே அருளிக் கொண்டிருக்கிறார் என்பதை விளக்கிய அருட்பெருஞ்ஜோதியே வா!* **(170)**

**(சகமுதல்)** *இப்பிரபஞ்சத்திற்கு ஒளியே ஆதாரமாயிருப்ப துடன், ஆதிக்கமாயும் உள்ளது. புறப்புறமாகிய நட்சத்திர ஒளியும், புறமாகிய சூரியன் மற்ற கிரகங்களில் ஒளி யாயும், அகப்புறமாகிய சந்திர ஒளியாயும், அகமாகிய பூமியில் அக்னி (நெருப்பாயும்) யாயும் முற்றிலும் நிறைந்துள்ள அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(சிகரமும்)** *ஆன்மிகத்தின் முடிபு என்பது 'அ' என்கிற கடவுளை 'உ' என்கிற ஆன்மா சென்று அடைய வேண்டும். 'சி' என்னும் சிவமும் 'வ' என்னும் வனப்பும் சேர்ந்து 'உ' கரத்தைக் கொண்டு பிறவி தந்தது. அந்தப்பிறவி பெற்ற உடல் ஆணவம், கன்மம், மாயை நீக்கி தனிப்பட்டபோது அகரமாகிய கடவுளைச் சேரும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(உபரச)** *இரசவாதம் என்று சொல்லப்படுகின்ற வேதியலில் சடப் பொருளான செம்பு என்பதை பொன்னாக்கலாம். அந்த வேதியல் செய்பவர்கள் அழியும் உடம்பை அழியாமல் செய்யலாம். ஆனால் இறைவன் நினைத்*

*தால் ஒரு சாதாரண "புல்"லைக்கூட தேவனாக மாற்றல் கூடும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(மந்தணம்)** *மந்தணம் என்பது இரகசியம். மறைகள் காட்டாத மறைபொருள் என்னவெனில் எல்லா அண்டங்களிலும், எல்லா உயிர்களின் உள்ளேயும் இருப்பது அந்தப் பேரொளியின் கூறுதான் என்பதை சற்றும் சந்தேகமில்லாமலும், பிறருக்கு தீங்கு நினைக்கா மலும், எல்லா உயிர்களும் இன்புற்று வாழட்டும் என வாழும் சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்தவர்களே அந்தணர்கள். அவர்கள் வழுத்தும் அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(எம்புயக்)** *தனது புஜம் என்னும் தோளின் அருகமைந்த கனி வடிவிலான இதயத்தை எவரெல்லாம் கருணையால் நிறைவித்து கனிய வைக்கிறார்களோ அவர்கட் கெல்லாம் அம்புஜம் என்று சொல்லப்படும் தாமரை மலர் போன்ற அவரவர் இதயத்தில் வந்து அமர்ந்திடும் அருட்பெருஞ்ஜோதியே வா!* **(180)**

**(செடியறு)** *இப்படியுள்ளவர்கட்கு முற்பிறவி வரை அவர்கள் செய்த தீவினை என்னும் வித்து இப்பிறவியில் செடியாக முளைக்க ஆரம்பித்து துன்பம் விளைவிக்க முயலும் போது அத்தீவினைச்செடிகளை அறுத்து நல்ல ஆரோக்கியமான வாழ்வும் நிலைத்து இன்புறக்கூடிய எல்லாவற்றையும் இரக்கமுடன் வாழும் அடியவர்க்குத் தரும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(துன்பறு)** *இப்படி முற்பிறவி வினைகளை இல்லாதபடி இறைவன் செய்தாலும் இப்பிறப்பில் நாம் சில துன்பங்களையும் பட வேண்டியிருக்கிறது. இது கீழாலவத்தை, மத்தியாலவத்தை, மேலாலவத்தை எனவும் சொல்லப்படும். உயிரானது பஞ்ச பூதங்களா லான இன்னொரு உடம்பு (உணவு, பெண்) போன்ற வற்றை அனுபவித்தல் கீழாலவத்தை. இதைக் கடந்து மத்தியாலவத்தையான இன்னொரு உயிரை நேசிக்கும்*

*(ஆன்மநேய) நிலைக்கு ஏறும். அதன் பிறகு சிவத்தை நோக்கிச் செல்வது நிர்மலாவத்தை. அது சிவதுரிய துவாதசப்பபடியில் சேர்க்கும் என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(பொது அது)** *அது என்னும் இறைவனால் உருவாக்கப்பட்ட பஞ்ச பூதங்கள் பொதுவானது ஆயிற்று. அது என்னும் இறைவனால் உருவாக்கப்பட்ட 84 லட்சம் யோனி பேதங்களில் உருவான உயிரினங்களும் அதன் அம்சமும் சிறப்பானதாயிற்று. அது என்னும் இறைவனால் உருவாக்கப்பட்ட மனித இனம் நாம் ஏன் பிறந்தும் இறந்தும் போகிறோம் என எண்ணி இறைதேடலில் ஈடுபட்டது புதிதாயிற்று. அது என்பதென்ன என இத்தனைக்காலம் தேடிய மனிதனுக்கு சன்மார்க்கம் மூலம் தெரிவிக்கப்பட்டது என்ன? பிரபஞ்சங்களையும், ஜீவர்களையும், ஆன்மாக்களையும் உருவாக்கிய பேரொளியான ஆதியும் அந்தமும் இல்லா அருட் பெருஞ்ஜோதியாகும். அது பழையது. அதை நோக்கி செல் என்றது. எனவேதான் பொதுவானதும் சிறப்பான தும், புதிதானதும், பழையதாவதும் அப்படியே அது அதுவாய்த் திகழ் (ஒளிர்) கின்றது என்ற உண்மையை தெளிவித்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(சேதனப்)** *ஒவ்வொரு மனிதனுக்குள்ளிருக்கும் சேதனம் என்னும் அறிவு (சிவம்) ஒளிர அதற்குப் பரை (சக்தி) என்னும் உடம்பு தனது புருவ மத்தி என்னும் ஆதன (இட)த்தை ஆசனமாகக் கொடுத்து அமரச் செய்த அவ்வுடம்பும், ஆன்மாவும், அருளும் சிவமுமாக ஓங்கிட வழி செய்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(ஓமயத்)** *பிரணவம் (ஓம்) என்பது ஒலி வடிவிலானது. அது காற்றில் கரைந்து செல்லும். பிரணவ உடம்பும் அதைப்போல காற்றில் கலந்து விடுமே தவிர மரண முற்றுக் கீழே விழாது. மண்ணுக்கோ நெருப்புக்கோ இரையாகாது. எனக்கு அப்படிப்பட்ட திருஉருவை (உடம்பை) மிகவும் மகிழ்வுடன் அளித்து ஆ (பசு)*

*மயமாய் பிறந்து, பிறந்து இவ்வுலகில் திரியாமல் மீண்டும் பிறப்பதைத் தவிர்த்த அருட்பெருஞ்ஜோதியே வா!* **(190)**

**(எப்படி)** *இதுகாறும் இத்தூல உடம்பை வைத்திருந்ததால் அது ஒருநாள் கீழே விழுமே அதைத் தடுப்பது எப்படி என எண்ணிய என் கருத்தறிந்து அதை அப்படியே புரிந்து கொண்டு இங்கு எனக்கு பிரணவ தேகம் அளித்த தயவை எண்ணி மகிழ்ந்து நன்றி செலுத்தும் வகையில் அருளிய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(எத்தகை)** *என் மனத்தின் ஆசைகள், தளர்வுகள் இத்தகையதாகி எனக்கு மேன்மை கிடைத்த போதிலும் இன்னொரு புறம் இவ்வுலகருக்கு நான் என்ன செய்யப் போகிறேன் என்ற தளர்வும் எனக்கு ஏற்பட்டது என்பதையும் அறிந்து அதையும் தருகிறேன் என்ற மாட்சி கண்டு மகிழ்ந்தேன். அப்படி அருளிய அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(இங்குற)** *நீ இந்த மண்ணிலேயே இவ்வுடம்போடேயே திரிந்து உள்ளம் இளைத்துப் போகாமல் இருக்க உனக்கு ஒருவகை (உபாயம்) சொல்கிறேன் என்று என் உள்ளங்கை நெல்லிக்கனி போல ஒரு தகவலைத் தந்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(பாருயப்)** *இப்போது தொடங்கி பார் (உலக உயிர்கள் அனைத்தும்) உய்ய (நற்கதியடைய) அனைத்துப் பணிகளையும் புரிக எனப்பணித்து (கட்டளையிட்டு) என் அரிய உயிருக்குள் ஒளிரும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(தேவியுற்று)** *இப்படி என் உயிருக்குள் ஒளிர்ந்த நிலைக்குப் பின் தேவி என்னும் அருள் சத்தி என்னை உற்று எனக்கு ஒளிர் (பிரகாச) நிலை தந்து அருட்பிரகாசமாக்கி பிறகு திருவுருவுடன் எனது ஆவி (முன் நெற்றி)யில் கலந்து சிற்றம்பல அறிவையும் பிரகாசிக்கும் நிலைக்கு உயர்த்திய அருட்பெருஞ்ஜோதியே வா!* **(200)**

**(எவ்வழி)** *இருக்கு வேதம் - ஒரே தெய்வம் சூரியன் என்கிறது. ஆனால் உயிர்கள் பிரம்மத்தை அடைய வேண்டும் என்று ஆரம்பித்து நானே பிரம்மம் என்னும் ஆணவ நிலையில் அவைகள் தடுமாற்றமாய் செல்கின்றன. எனவே உயிர்கள் மெய்ம்மையுணர்ந்து இந்த மெய்யான உடம்பை மரணமடையச் செய்யாமல் மெய்யாக நிலைக்கச் செய்து அந்த மெய்யாகும் ஒளிநிலை பெறும் மெய்யான வழியாம் சன்மார்க்க வழியை எனக்கு அருளிய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(வையமும்)** *இந்த சன்மார்க்க நெறியை எனக்குக் காட்டி "ஐ" எனும் கடவுளைப் பற்றிய அறிவு அனைத்தையும் அளித்ததால் இந்த வையகத்தில் உள்ளோரும் வானத்தில் உள்ளோரும் என்னை வாழ்த்திட வைத்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(சாமாறு)** *இதுவரை இப்புவியில் வந்த மார்க்கங்களெல்லாம் சொர்க்கம், நரகம் பற்றியே பேசி வருகின்றனவே தவிர அது மரணத்திற்குப் பிறகல்லவா கிட்டும் என்று யோசிக்கக் கூட முடியாமல், வெள்ளம் கரை புரண் டோடும் சாகும் ஆறுகள் போன்ற மார்க்கங்களில் மூழ்கு கின்றனர். ஆனால் அதைத்தவிர்த்து மக்கள் இப்பிறவியி லேயே இறவாமை பெற்று இகத்தே பரத்தையும் பெற வழிகாட்டும் சன்மார்க்க நெறியை அவர்கட்கு ஏற்புடையதாக ஆ(கு) மாறு செய்யும் பணியை எனக்கே அளித்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(சத்தியமா)** *இப்படி ஒரு பணியை நிறைவேற்றும் முகமாக (சூரியனிலிருந்து உஷ்ணமும் ஒளியும் பயன்பாட்டில் இருப்பதைப் போல) சத்தியம் (சத்து + இயம் - எல்லா நற்குணங்களும் ஆற்றலும் அடங்கியுள்ள கருவூலம்) என்பதிலிருந்து சிவம் (அறிவையும்) சத்தி (ஆற்றலையும்) ஆகிய இரண்டையும் எனக்கு ஈந்து அறிவால் சத்விசாரத்தையும் ஆன்ம லாபத்தையும், ஆற்றலால் ஜீவ காருண்யத்தையும் ஆன்ம நேயத்தையும் செயலாக்கும்*

*திறல் (தைரியம்) வளர்க்கும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(சாவா நிலை)** *இவ்வாறாக சாவாநிலைக்கு வழி இதுதான் என அதைப்பற்றிய முழு விவரத்தையும் உனக்கே தந்தேன் என்றதும், இதுவல்லவோ உலகருக்காக நான் பெற்ற ஆவா (ஆஹா) என அதிசயிக்கத்தக்க அருள் பெட்டகம் என வியந்தேன். அதை அருளிய அருட் பெருஞ்ஜோதியே வா!* **(210)**

**(சாதியும்)** *இந்த அதிசயக்களிப்பு சிறிது நேரம் கூட நிலைக்கவில்லை. ஏனென்றால், இச்சமுதாயத்தில் வேத விற்பன்னர்கள், மாடு மேய்ப்பவர்கள், விவசாயிகள், பல தொழில் செய்பவர்கள் எனப் பல பிரிவினர் அவரவர் கட்கான ஒழுக்கத்தில் இருப்பதால் இதை எவரிடம் எடுத்துச் செல்வேன் எனத்தயங்கி நின்றபோது சாதியும், மதமும் பொய் என இன்றல்ல நேற்றல்ல ஆதியிலேயே உனக்கு உணர்த்தியிருக்கிறேனே என்று என்னுடைய ஐயம் நீக்கிய அருட்பெருஞ்ஜோதியே வா!*
*(மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும் (ஆதியில்) ஒன்பது வயதில் பாடியது)*

**(மயர்ந்தி)** *இந்த சாதி, மத, சமய, உயர்வு, தாழ்வு அதன் வெறுப்புணர்வு கண்டு நீ சிறிதும் மனத்தினால் மயர்ந்திடேல் (மயக்கமுறாதே) சிறிதும் மனம் தளர்ந்து அஞ்சி இப்பணியைத் தொய்வுறச் செய்யாதே. அயர்வுற்று கை கால் சோர்ந்து விடாதே என்று என் அச்சம் தவிர்த்து ஆறுதல் அளித்த அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(தேசுறத்)** *இந்த சாதி மதமெல்லாம் புறத்தோற்றத்தில் அதற்கான சின்னங்களையும் குறிகளையும் கொண்டு அழகெனத் திரிகிறது. ஆனால் அகம் தேசுற (அழகுற) உடல் திகழ (ஒளிர) பயன் தருகின்ற திரு (மேன்மை பொருந்திய) நெறி (நீதி மார்க்கம்) தெளிவிக்கும் பொருளின் இயல்பு என்ன என்பதை சற்றும் சந்தேக*

*மின்றி மாயை என்னும் கவசத்தினுள் ஒளிந்திருக்கும் ஆசு (குற்ற உணர்வுடன் இருக்கும் வேடங்களை) அற (அறுத்து) உண்மையைத் தெளிவித்து அருளிய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(காட்டிய)** *இப்படிக் காட்டுவித்த இத்தகைய உலகத்தார் எல்லாரையும் கருணை கொள்ளச் செய்து திடம் பெறத்தக்க சித்தி கைகூடும் வகையில் நடத்திச் செல்ல வல்லமையளித்து அருளிய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(எங்குலம்)** *இந்த உலகத்தாரெல்லாம் எம் குலம், எம் இனம் என்று எதைச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள் எனின் அது அவரவரின் உடம்பின் உயரம் அவர்களின் விரலால் 96 அங்குலம் உள்ள சதைப் பிண்டம் என்பதைத் தானே தவிர அதற்குமேல் அல்ல. இந்த உலகில் அவர்கட்குள்ள உறவு இவ்வளவுதான். இதற்காகவா அவர்கள் பிறந்தார்கள்? அதற்கு மேல் உள்ளதை, அறிவை, ஆண்டவனை அவர்கள் மறந்து விட்டு இந்த இனம், இந்தக் குலம் என்று பெருமை பிதற்றியும், வாதிட்டும் மடிகின்றனர். இது தொடரக் கூடாது என்பதில் தெளிவிருக்கட்டும் என்று அருளிய அருட்பெருஞ்ஜோதியே வா!* **(220)**

**(எம்மதம்)** *இவ்வுலகர் வழிபட்டுக் கொண்டிருக்கும் கடவுளர்கள் எல்லாம் எம் மதத்தில் பிறந்தவர்கள் (எம் இறை எம்மதம்) என்ற கேள்விக்கு விடையிறுக்க முடியாது. இவ்வுலகில் வாழும் உயிர்த்திரள் (கூட்டம்) அத்தனைக்கும் எது மதம்? அந்த உயிர்த்திரளாம் ஆடு மாடுகள் கூட்டம் பலியிடப்படக் கூடாது என்று அவைகளையும் காக்கும் கடவுள் எந்த மதம்? அம்மதம் (அந்த மதம்தான்) சன்மார்க்கம் என்பது அறிவிக்கப்பட வேண்டிய காலம் இது என அருளிய அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(கூறிய கரு)** *மேற்கூறிய (பிரசித்தம் ஆக்கத்தக்கதான) கருநிலை (உட்பொருளை) குலவ (கொண்டாடும்*

*வகையில்) இதை கீழ்மேல் (கீழானதும் மேலானதுமாகிய அனைத்து நிலையிலும் இருப்பவர்கள்) குலவ (நட்புற்று) ஆறியல் (ஒழுக்க வழியில்) பொருந்தச்செய் என உரைத்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(எண்தர)** *இந்த இறைவனின் ஆதிக்கம் பல அண்டங்களிலும் நிறைந்து, ஒளிர்ந்து நிற்பதால் அவற்றின் எண்ணிக் கையைக்கூட எவராலும் இயம்ப முடியாது என்ற உண்மையறிந்து கொண்டு நிற்க என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(சார் உயிர்)** *அதைச் சார்ந்து நிற்கும் உயிர்கட்கெல்லாம் ஆதரவாகவும் ஒவ்வொரு அரிய உயிருக்கும் உயிரான சக்தியானதாகவும் உள்ள அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(வாழி நீடுழி)** *வாழ்க நீ, அளவு கடந்த நெடுங்காலம் வாழ்க என்று வாழ்த்தியதுடன் சிறிது கூட பாரமோ, சலனமோ இல்லாத கருணை என்னும் கடலினை, இரக்கத்தை என்னுள்ளே பதித்து மகிழ்ந்த அருட்பெருஞ்ஜோதியே வா!* **(230)**

**(மாய்ந்த)** *(இது மாண்டுவிட்ட அல்லது மாய்ந்து போன ஒருவனை எழுப்புவது அல்ல. உடம்பார் அழியில் உயிரார் அழிவர். எனவே எழுப்பப்பட்டாலும் உடலின் பல உறுப்புகள் வேலை செய்யாது. எனவே எனக்கும் உனக்கும் என்ற பாடலில் சாதல் பிறத்தலை தவிர்த்தேன் என்கிறார். அதுதான் நமது குறிக்கோள். இந்தக் கருணையை அளித்ததன் நோக்கம் நீ மரணமில்லாப் பெருவாழ்வுக்கு அடிகோல வேண்டும் என்பதே).*

*இந்த மனிதர்கள் மா-மாய்ந்தும், ய-பிறந்தும் வருவது மாயை. இதில் சிக்கித் தவிக்கும் உயிர்கள் மீண்டும் மீண்டும் வெவ்வேறு பிறவிகளாய் பிறக்கிறார்களே, இதை ஆய்ந்து மரணமில்லாமைக்கு வழி வகுக்கக் கற்றுக்கொடு என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(எச்சம்)** *இவ்வுலகரை சன்மார்க்க நெறிக்கு கொண்டு வரும் பணியை எப்படித் தொடங்குவது என நினைத்தபோதும்*

*சாகாக்கலை பற்றியும் அறிவிப்பது எப்படி என அச்சம் ஏற்பட்டபோதும் - இறைவன் என்னிடம் “உனக்கு எந்தவிதமான எச்சம் (குறைவுமில்லை) உனக்கு வேண்டியதெல்லாம் அந்தந்த நேரத்தில் பெறுவாய் எனவே பயம் சிறிதும் வேண்டாம்'' என அதை முழுவதுமாக என்னிடமிருந்து தவிர்க்கச் செய்துவிட்ட அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(நீடுக நீயே)** *நீயே நெடுங்காலம் நிலைத்திருப்பாய். நீண்டும் உயர்ந்தும், ஒளிர்ந்தும் இருக்கப் போகிறாய். நீ உறுதி யுடன் நிலைத்து நின்று ஆடுக (பணியை செய்க) வெற்றி பெறப் போவதும் நீதான் என்றருளிய அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(முத்திறல்)** *அதற்கு மூன்று வகை தேகங்களான சுத்த, பிரணவ, ஞான தேகியாகி முதல் தோற்ற மாற்றம் எய்திட முழுமையான ஒத்துழைப்பை நல்கி வலிமையும், தைரியமும் எனக்கு அருளிய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(மூவகை சித்)** *ஆன்மிகத்தில் முன்னேற நினைப்பவர்கள் பல வழிகளில் முயற்சிப்பர். ஆனால் ஆன்மிகத்தின் தலைமை நிலையில் உள்ளவருக்கு எத்தனைவகையான வழிகளில் மனிதர்கள் முயல்வர் எனத் தெரிந்திருக்க வேண்டும். அந்த வகையில் கர்ம, யோக, ஞானசித்தி எனும் மூவகை சித்திகளும் இடம் பெறும். இதில் முயல்பவர்கள் முழுநிலை பெறாவிட்டாலும் இந்த வழிகள் உண்டு என்பதையும் - அது எந்தெந்த இடங்களில் முற்றுப் பெறுகிறது போன்ற விஷயங் களையும், முடிநிலை (எந்த வகையில் ஆகி முடியும்) என்பதையும் எனக்குத் தெரிவித்து அருளிய அருட் பெருஞ்ஜோதியே வா!* **(240)**

**(கருமசித்)** *சரியை, கிரியைகளைச் செம்மையாகச் செய்த தாலேயே பலர் நற்கதி அடைந்தாரென்பதை நாம் அறிகிறோம். ஆழ்வார்கள் நாயன்மார்கள் போன்ற பலர்*

இவ்வகை கரும சித்தர்களாய் பலப்பலவாயிருப்பதால் அதையும் நீ தெரிந்து கொண்டு அரசாட்சி செய்க என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!

**(யோகசித்தி)** பலவிதமான யோகங்களைச் செய்தும் பலர் உயர்வதுண்டு. அவர்கள் மேம்பட்ட நிலையில் பல ஒழுக்க முறைகளைக் கடைப்பிடிப்பர். இரசவாதம் போன்றவற்றாலும் இன்னும் பிற வகைகளாலும் சில சித்துகளும் கைவரப் பெறுவர். மருத்துவமும் செய்வர் என்று அவைகள் முழுவதையும் எனக்கு உணர்த்திய அருட்பெருஞ்ஜோதியே வா!

**(ஞானசித்தி)** இவ்விரண்டு நிலைக்கப்பாலான ஞானநிலை பெற்றவர்களும் உண்டு. அவற்றையும் சற்றும் குறை யின்றி எனக்கு அறிவித்த அருட்பெருஞ்ஜோதியே வா!

**(புடையுறு)** ஓரளவு பக்குவப்பட்ட ஆன்மாக்கள் முத்திபெற வழியுண்டு. இன்னும் சிறிது பக்குவப்பட்டால் சித்தநிலை பெறலாம். ஆனால் முத்தி நிலை பெற நினைப்பவர்களும் சித்துக்களைச் செய்யவே முயல்வர். காரணம் இந்த சித்தி நிலைக்குச் செல்லும் பாதையில் புடை (பக்கத்துணை) யாக வருவது பல நற்பண்புகள். உணவு உறக்கம், ஒழுக்கம் போன்றவை கட்டுப்பாட்டில் இருக்க வேண்டிய அவசியம் தலையாயது என்பதை அருளிய அருட்பெருஞ்ஜோதியே வா!

**(முத்திஎன்)** முத்தி என்பது சில காலத்திற்குப் பிறவி நீங்கி இருப்பது. மீண்டும் பிறவி வரும் என்ற அருட்பெருஞ் ஜோதியே வா! **(250)**

**(சித்திஎன்)** யோகத்தின் பயனாக சில அரிய கலைகள் கைவரப் பெறுதலும், சிவானுபவத்தில் திளைத்து மேலும் சில காலம் பிறவியின்றி நீங்கி இருப்பதும் உண்டு என்றருளிய அருட்பெருஞ்ஜோதியே வா!

**(ஏகசிற்)** மேற்கண்ட இத்தனை முத்தி சித்திகள் எல்லாம் எதை நோக்கி பயணித்திருக்க வேண்டும்? ஏக (ஒன்றாகிய) சிற் (ஞானம், அறிவு) சித்தியைத்தான்.

*ஆனால் அவ்வளவு தெளிவும், முயற்சியும் செய்யு முன்பே அவசரப்பட்டு, அதைப்பற்றி தெளிவாக அறியும் முன்பே செயலில் ஈடுபடுவதால் அந்த எண்ணிக்கை ஒன்றே ஒன்று என்று உள்ள ஞானக்கடவுளையும் அதன் இயல் பலவேறாகவும் ஆகியது என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(இன்பசித்)** *இறை இன்பமளிக்கும் சித்தி என்பது ஒன்றுதான். அது நித்தியானந்தம் மட்டுமே. ஆனால் உலகம் என்று ஒன்றும் உயிர்கள் பலகோடியும் படைத்த பிறகு அவைகள் பக்குவம் பெற வேண்டியிருப்பதால் அதுவரை அது விரும்பும் வண்ணம் இன்பமனுபவித்து, பிறகு அது நிலையற்றதாயிருப்பதை உணர்ந்து நித்தியானந்த வழியைத் தேடிவரும் வகை செய்யப் பட்டதென்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(எட்டிரண்)** *எட்டு (அ) = கடவுள். இரண்டு (உ) = உயிர். இரண்டும் சேர்த்தால் பத்து (ய) = உயிருடம்பு. (எட்டோடு இரண்டினை சேர்த்து எண்ணவும் அறியீர். அப்படி அறிந்தால் அது சன்மார்க்கம்). எனவே இந்த உடம்பும், உயிரும் அருளாகவும், சிவமாகவும் மாற வேண்டும். இது இயலும். இதுதான் சன்மார்க்க சித்தின் முதற்படி. (மேற்கண்ட வரிகளில் உள்ள முத்தி, சித்தியெல்லாம் இதன் முன் நில்லாது). ஆன்மிகத்தின் மிக உயர்ந்த நிலையிலிருந்து இதை அருளிச் செய்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(இப்படி)** *சன்மார்க்க சித்தி என்பதன் முதற்படி மேற்படி வரியில் கண்ட உடம்பை அருளாக்கி உயிரை சிவமாக்கு தலே. இந்தப்படியைக் கண்டாயல்லவா. இனி மேலேறிச் செல்ல அனைத்து படிகளிலும் அந்த சித்தியை ஆதார மாகக் கொண்டுதானிருக்கும் என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!* **(260)**

**(படிமுடி)** *இந்தப்படிகளின் முடிவாயுள்ள படியையும் கடந்துவிட்டாய். அகண்ட ஜோதியின் அடியையும்*

*முடியையும் எவரும் கண்டதில்லை. அதற்காக முயற் சித்தவர் இருவர்தான். அவர்கள் இன்னும் விசனப் பட்டுக் கொண்டேயிருக்கின்றனர். அப்படிப்பட்ட அகண்ட ஜோதியின் அடியையும் முடியையும் நீ பார் எனக்காட்டிய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(ஜோதியுள்)** *அப்படிக் காணப்பட்ட ஜோதியில் இரண்டு சொரூபக் கூறுகள் உள்ளன. முதலாவது ஜோதி என்பது முதலில் புலப்பட்டது. காரணம் ஆதியான அது புறஜோதி. இரண்டாவது ஜோதி - உள்ஜோதி என்பது புலப்படாதது. அது அந்தம். முடிவானது. இது அருள் ஜோதி என விவரித்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(இந்தசிற்)** *இந்த அருள் கூறான சிற்ஜோதி என்பது அறிவு மயமாய் இருந்து, பிறவிகளைப் பெறுபவனுக்கு அது ஓரறிவு முதல் ஆறறிவு ஈறாக உருவம் தர உதவும். அந்த அறிவின் இயல்பால் அது வாழும். ஏகதேசம் ஆறறிவு மனிதனால் அதைக் கொண்டு நித்திய வாழ்வில் வாழும் நிலைக்கு முயலலாம். அவனும் முயலாமல் ஆதியில் தரப்பட்ட அறிவு வளராமல் அந்த நிலையிலேயே, இருந்து வருகிறது. இதை மாற்ற முயல வேண்டும் என்பதாக அருளிய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(ஆதியும்)** *இதனால் ஜோதியின் ஆதியும் அந்தமும், உயிர் களின் ஆதி அந்தமும் அறிந்து கொண்டாய். எனவே இந்த சன்மார்க்க நெறிக்கு ஆதியானாய் என்று அருளிய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(நல்லமுது)** *இதையெல்லாம் எப்படிச் செய்வது என்று என் மனம் கேட்டபோது இறவாநிலை தரும் அமுதம் என்பார்களே அப்படிப்பட்ட விஷயத்தை மேற் சொன்ன வரிகளால் கேட்கும்போது அந்த அமுதத்தை என் நாவில் தராமல் மனத்தில் தந்து சுவைக்கச் செய்தான். அதை என் உடம்புள் ஏற்கச் செய்து என் துன்பம் நீக்கிய அருட்பெருஞ்ஜோதியே வா!* **(270)**

**(கற்பகம்)** *உவமையாகக் காட்டப்பட்ட கற்பக விருட்சம் என்பது எப்போது, எதைக்கேட்டாலும் தரும் என்பர். அப்படி இந்த சன்மார்க்கத்தை நடத்த தயவு (ஈஸ்வரத்தன்மை) யென்னும் கனியை என் உள்ளம் என்னும் கையில் கொடுத்து இவ்வுலகில் அற்புதம் இயற்றி சன்மார்க்கத்தை அழகுறச் செய் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(கதிர்நல)** *கதிரவனால்தான் நமது பூமியின் இயக்கம், உயிர்கள் வெப்பம், மழை, குளிர்ச்சி, காற்றின் சலனம், சந்திரனின் ஒளி எல்லாம் கிடைக்கிறது. அதனால் பயிர்களும் உயிர்களும் எல்லா நலமும் பெறுகிறது. அந்தக் கதிர்நலம் அளிக்கும் நன்மைக்கு நிகராக என் இரு கண்களிலும் உயிர்கட்கு இரக்கத்தின் மூலம், நேயத்தின் மூலம் கொடுத்து அதிசயம் இயற்று என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

*(வள்ளலார் ஏற்கனவே அமுதம், கற்பகம் போன்ற வற்றைப் பெற்று விட்டார். இந்த வரியில் சுயம் ஜோதியான சூரியனின் நிலை பெற்றார்)*

**(அருள் ஒளி)** *உயிர்கட்கு இதம் புரியும் தன்மை கொண்ட அருள் ஒளி என்னும் இரக்க நெறியை எனது தனித்துவம் அடைந்த அறிவினில் மலரச்செய்து இதுமுதல் அருள் நெறியை உலகருக்கு விளக்கம் பெற வேண்டியதான எல்லா முயற்சியையும் செய்விக்க வேண்டும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(பரையொளி)** *இதுவரை கடின சித்தர்கள், மத குருமார்கள், அசுரர்கள், அரசர்கள் போன்றோரின் ஆதிக்கத்தில் இருளாட்சியும், மருளாட்சியும் நடந்து கொண்டிருந் தாலும் கடவுளின் அருள் சக்தி என்பதை என் மனதில் விரித்து அதில் அமரச் செய்து இதுமுதல், முதற் சொன்ன மருளாட்சியைக் களைந்து அருளாட்சியை இயற்றுக என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(வல்லப)** *ஐஞ்சக்திகள், அவற்றுள் அடங்கிய பல சக்திகள் எல்லாம் அருட்பெரும் சக்தியின் உள்ளடங்கி இருப்ப*

*தால், அப்படிப்பட்ட வல்லப சக்தியை எனக்குத்தந்து அதன் கீழுள்ள ஆற்றல்களையும் தன்மைகளையும் விவரித்துத் தலைவனாக்கி எனது அலைச்சலை நீக்கிய அருட்பெருஞ்ஜோதியே வா!* **(280)**

**(ஆரியலக)** *இந்த வல்லப சக்திகள் பெற்றபிறகு அண்டத்திலுள்ள அக்னி, சூரியன், சந்திரன், நட்சத்திரம் இவைகள் புறத்தில் நிறைந்த தன்மையோடு இருப்பதைப்போல எனது உடம்பிலும் அவற்றின் தன்மைகளான, இந்திரியம், கரணம், ஜீவன், ஆன்மா என நிறைந்த தன்மையோடு முழுமை பெற்றதால் அழியா நிலையான அதுவே அமுதம் பெற்ற நிலை என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(சூரிய சந்)** *இதுவரை பல மதங்களாலும் போற்றப்படும் சூரியனும் சந்திரனும் உண்மையில் சுயமான ஜோதியை உடையன அல்ல. சூரியனின் ஜோதி என்பது, அணுக்கள் வெடித்துச் சிதறும் ஓர் அணு உலையிலிருந்து பெறப்படும் உஷ்ணமும் ஒளியுமே. அந்த அணுக்கள் என்பது அருட்பெரும் ஜோதியின் கூறுகளே. சந்திரன் அந்த ஒளியை பிரதிபலிக்கிறது. இதையறிந்த உயர் அறிவுடையோர் (ஆரியர்) சன்மார்க்கத்தவரே என்ற புகழுக்கு உரித்தான அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(பிறிவேது)** *இனிமேல் பிரிவு என்பது கிடையாது. யாம் உன்னைப் பற்றிக் கொண்டோம். உனக்கு நமது அறிவையே வடிவாக அமைத்துக் கொடுத்திருக்கிறோம் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!* (Nonduel wisdom)

**(எஞ்சேல்)** *எனவே எதைக்கண்டும் சுருங்கி, வாட்டமுற்று குறைபடாதே. இந்தப் பிரபஞ்சத்தில் எதைக்கண்டும் பயங்கொள்ளாதே என்று அருளிய அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(மாண்டுழலா)** *மீண்டும் இறந்தும் பிறந்தும் உழலும் நிலையை அறவே ஒழித்து எனது இளம் பருவத்திலேயே என்னை ஆட்கொண்டு, வழிநடத்தி, உடனாயிருந்து, அனுபவம்*

*பெறச்செய்து அருளிய அருட்பெருஞ்ஜோதியே வா!*
**(290)**

**(பற்றுகள்)** *எனக்கு உலகர், நண்பர், உறவினர், உணவு, உடை, இடம், இறைபக்தி போன்ற பலவற்றின் மீதும் பற்றுகள் இருந்ததை மீண்டும் பற்றிட முடியாத வண்ணம் அறவே நீக்கி அதற்கும் மேலாக அற்றமும் (மரணத்தையும்) நீக்கியருளிய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(சமயம்)** *எனக்கும் சைவம் முதலியவற்றில் நிறைய பற்று இருந்தது. எல்லாப்பற்றும் இப்போது அறுக்கப்பட்டு விட்டதால் அந்தச்சமயம் குலம் முதலிய சார்புகள், தொடர்புகள் போய்விட்ட அந்த அமயம் (சமையத்தி லேயே, அந்தக்கண முதலே) தோன்றிய இறைவனைக் காணச்செய்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(வாய்தற்கு)** *வேத ஆகமங்களில் கரை காண்பது அரிது. அந்த வாய்ப்பு கிட்டாது. அப்படி கண்டவர்கள்கூட அருட் பெருஞ்ஜோதி என்பது ஆய்தற்கு - பொருள் காண்பது என்பது - அரிது என்று ஒதுங்கிப் போய்விடுவர் என்பதை அறிவித்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(எல்லாம்)** *பிரபஞ்சத்தில் எத்தனைவிதமான சித்துக்கள் உள்ளதோ அவை அனைத்தும் எனக்கு அடங்கிடும் வல்லமையைக் கொடுத்து இனிமேல் உன்னையல்லாது எனக்கு வேறு எதுவுமே என் வசம் இல்லை என்ற என் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(நுவையிலா)** *குற்றமில்லா உள்ளத்தவர்கள் எவராயினும் எதையாவது விரும்பினால் அந்த விருப்பத்தை நிறை வேற்றித்தரும் என் அருட்பெருஞ்ஜோதியே வா!* **(300)**

**(கூற்றுதை)** *மரணம் என்பது என்னை நெருங்காமல் புறம் போகச்செய்து (ஒழுக்கமின்மையால் தான் மரணம் சம்பவிக்கின்றது. ஆதலால் அந்தக்குற்றம் புரிதலுக்கே இடமில்லாமல் செய்து) என்னுள்ளேயுள்ள நற்குணம் கண்டு அருட்சக்தியின் ஆற்றலை மிகச் செய்த அருட் பெருஞ்ஜோதியே வா!*

**(நுன்றறி)** *நல்லது எது கெட்டது எது எனத் தெரியாமல் திரியும் நாய் போன்று இருந்த என்னை, சிறு வயதிலேயே உன் வசப்படுத்தி உவந்து ஆண்டு கொண்ட அருட் பெருஞ்ஜோதியே வா!*

**(நாயினும்)** *எசமானன் கூர்வாள் கொண்டு குத்தினாலும் நாய் அவனைக் கடிக்காது. மாறாக வாலை ஆட்டும். எசமானன் சாப்பிட்ட பிறகு மீதியுள்ள உணவை எடுத்து வைத்தால்தான் அது சாப்பிடும். அதுவரை பொறுமை யாக இருக்கும். ஆனால் நானோ பொறுமையில்லாமல் நற்கதியைக் கொடுக்க ஏன் தாமதம் என வாதிட்டு (இரப்பவர்க்கு ஒன்று ஈகிலீர் பின் யாதுக்கைய இப்பெயர் [தியாகராசன் எனும் பெயர்] பெற்றீர்) எனப்பாடினேன். ஈ என்பது மாட்டையும் கடிக்கும், மனிதனையும் கடிக்கும். அதைப்போல நானும் தரம் தெரியாமல் வாழ்ந்தேன். இதையெல்லாம் பொறுத்துக் கொண்டு எப்படியாவது எனக்கு நற்கதி கொடுத்தே தீர வேண்டும் என்ற நோக்கத்தில் என்னை ஏற்று அருளிய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(தோத்திரம்)** *(வள்ளலார் காலம்வரை யஜுர் வேதம், தேவாரம், பிரபந்தம் போன்றவை தோத்திரப் பாடல் களாயிருந்தன. ஆனால் வள்ளலார் இப்பாடல்களால் இறைவனை தோத்தரிக்கவில்லை. ஏதாகுமோ என எண்ணி நான் இசைத்தவெல்லாம் வேதாகமம் என்றே தன்மேல் அணிந்தனன் எனப்பாடியது தனது 5817 பாடல்களால் தோத்திரம் செய்தது நமக்காக) இறைவா, இந்த சன்மார்க்கத்தை உலகத்தவரிடம் கொண்டு செல்லும்போது அவர்கள் இவைகளால் தோத்தரித்தால் தான் நன்மையும் நற்கதியும் கிட்டுமோ என வினவிய போது - முடியும் போதெல்லாம் தோத்தரிக்கட்டும். முடியாத நிலையில் சத் விசாரமும் ஜீவகாருண்யமும் செய்யட்டும். அது அவர்களை தகுதி பெறச் செய்வதுடன் நிலைத்த ஆனந்த நிலை ஏகும் வழி பிறக்கும் என அருளிய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(எச்சோதனை)** *சந்தோஷமாயிருக்கும்போது உறவுகளுடன் விருந்து உண்போம். ஊருடன் கூடி விழா எடுப்போம். ஆனால் சோதனை (கஷ்டம்) வந்தால் அதை நிவர்த்திக்க தான தருமம் செய்வோம். ஆனால் பெருமானார்க்கு எந்தப் பற்றும் இல்லாததால் எந்தச் சோதனைகளையும் தரமுடியவில்லை. எனவே நம் பொருட்டு எனக்கு எப்படி சோதனைகள் இயற்றாமல் நற்கதி அளித்தீர் களோ அப்படி சன்மார்க்க நெறியின் ஆணிவேரான ஜீவகாருண்ய ஒழுக்கமுள்ளவர்கட்கும் எச்சோதனை களும் இயற்றாமல் (அச்சோ) இரக்கத்துடன் அருள் தருவேன் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!* **(310)**

**(ஏறாநிலை)** *ஏறாநிலை மிசை ஏற்றி 36 தத்துவங்களையும் எனக்கு மிகச்சாதாரணம் என்று அன்று காட்டினாய். இப்போது உலகருக்கு நற்கதியருளும் ஆற்றல் தந்ததால் ஈண்டு (அந்தப் பிரகாரம்) சட்டப்படி நடு (பூமி) யிலுள்ள மனித தரத்திலான தத்துவங்கட்கு அப்பால் கடத்தி அருளிய அருட்பெருஞ்ஜோதியே வா!*

*(சிவ தத்துவம் - 5, வித்யா தத்துவம் - 7, ஆன்ம தத்துவம் - 24, ஆக 36. ஆன்ம தத்துவம் எளிதில் விலக்கப்பட முடியாதது)*

**(தாபத்துய)** *மேற்சொன்ன தத்துவங்கள் வாயிலாக உலகர்கள் படும் தாபம் (துன்பம்), துயரம் (துக்கம், நோக்காடு) சொல்லி முடியாது. அப்படிப்பட்டவைகளைத் தவிர்த்ததுடன் அவைகளின் முடிவில் ஆபத்து (மரணம்) என்ற ஒன்று நேருமே அதையும் அறவே நீக்கிய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(மருட்பகை)** *அநித்தியத்தின் மீது ஆசை கொண்டு அலையும் இருள் நிலையிலுள்ள மனிதர்கள் அதை நிலைப்படுத்த என்னென்னவோ உத்திகளைக் கையாண்டு, உடன் பிறந்தவரைக்கூட வெறுத்தும் வஞ்சித்தும் வாழ முற்பட்டு விட்டனர். இது மருள் நிலை. மருள் என்னும் பகையை வளர்க்கிறோம். இதைப்போக்க எனக்கு வழி (குரு) தேவை. (நமது சார்பாக பெருமானார் அந்த*

*மருட்பகை அவர்க்கு இருப்பதாகச் சொல்லி) அதைத் தருவதற்காக இறைவனாகிய நீயே வந்து என்னை வாழ்வித்தருள வேண்டும் என விண்ணப்பித்ததற்கு இணங்கி எனக்கு குருவாயிருந்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(உருவமும்)** *அப்படி குருவானவர் வந்து அமர்ந்தபின் அருள்நிலை எது என விளக்கத் தொடங்கினார். (மணம்-அருவம், மலர் உருவம் என்பதைப்போல காணும் பொருட்கள் உருவம், உள்ளே உள்ள ஆண்டவன் அருவம்) ஆன்மா அருவம் - உடம்பு உருவம். எனவே இந்த ஆன்மாவும் உடலும் சேர்ந்து எண்ணிக்கை யில் இரண்டாகி (உபயமாகி)றது. இவைகளின் கூட்டு முயற்சியால்தான் அருள் பெற வேண்டும் என அறிவித்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(இருளறு)** *அந்தக் குருவின் மானசீக போதனையால் எனது இருள் என்னும் அகங்காரத்தை அறுத்து என் உள்ளத்தில் என்னவெல்லாம் எண்ணியிருந்தேனோ அதையும், அருள் அமுதமும் அளித்த அருட்பெருஞ் ஜோதியே வா!* **(320)**

**(தெருள் நிலை)** *அந்த குருவானவர் தெருள் (தெளிவான) நிலை இதுதான் எனத் தெருட்டி (தெரிவித்து) என் உள்ளத்தில் அமர்ந்து அருள் கட்டளை பிறப்பித்து இவ்வழி நில் எனக் காட்டிய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(பொருட்பத)** *எனக்கு குருவாயிருந்து பொருள் (சத்தியத்தின் அடையாளம்) பதம் (வழிகளை) எல்லாம் எனக்குப் புரிய வைத்து மேலோங்க வைத்து அருட்பதம் பெறு என்றளித்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(உருள்சக)** *எனது குருவாகி, எப்படி ஒரு சக்கரமானது முன்னும் பின்னுமாகச் சுழன்று கொண்டிருப்பதைப் போல என் உள்ளம் என்னும் சக்கரமும் உலக இச்சைகளில் சுழன்று சுழன்று சலித்து விடாமல் இருக்க*

*ஓர் உபாயமாக என்னை அருள்வழியில் கொண்டு வந்து நிறுத்தி நிலைக்கச் செய்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(வெருள்மன)** *எனக்குக் குருவாய் நின்று, மயக்கத்தில் என் மனம் மாயாது, மாயையில் சிக்கிக்கொண்டு தவித்தபோது அதை நீக்கி என் உள்ளத்தினுள்ளே அருள் என்னும் விளக்கை ஏற்றி அது பிரகாசிப்பதைக் கண்டு களித்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(சுருள்விரி)** *எனது குருவானவர் என் மனத்திலிருந்த தாமச குணத்தின் வெளிப்பாடாக சுருண்டும், சுழன்றும், கலங்கியும், வீங்கியும் இருந்ததைப் பார்த்து, கடிந்து என் உள்ளம் முழுதும் பிரகாசமான அருள் விளக்கென்னும் ஒளியை பரப்பி சாத்விக நிலை நிறுத்தி தெளிவு பெறச் செய்த அருட்பெருஞ்ஜோதியே வா* **(330)**

**(விருப்போடு)** *குருவின் கருணையால் எனது விருப்பங்களை பகைத்துக் கொண்டேன். எதன்மீதும் வெறுப்புகள் இல்லாமல் இருந்தேன். பயனாக அருட்பேறு அளித்துக் கட்டளையிட்ட அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(அருட்பேர்)** *அவரது அருளால் எனக்கு அருள் (பிரகாசம்) என்னும் பேர் (பெயரானது) சூட்டப்பட்டு (அந்த அருட்பிரகாசம்) உலகனைத்தும் தழைத்து மலர்ந்திட அருள்மயமான வாழ்வும் புகழும் அளித்த அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(உலகெலாம்)** *குருவின் கருணையால் எல்லா அண்டங் கட்கும் என் உள்ளத்திலிருந்து முடிவே இல்லாத நிலைத்த ஒளியை பரவச் செய்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(விண்ணினுள்)** *விண்ணின் அகத்திலும், நடுவிலும், புறத்தி லும் நெருங்கியும் உள்ளது அந்த விண்வெளியின் ஆதாரஜோதி அணுக்களே என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(விண்ணுறு)** *விண்ணின் தோற்றமும், அதன் நிலையும், ஏதோ ஒரு காரண நிமித்தமாக நெருங்கியும், ஒளிர்ந்தும்*

*உள்ளது ஜோதியணுக்களே என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!* **(340)**

**(காற்றினுள்)** *காற்றின் உள்ளும், நடுவிலும், புறத்திலும் அபார சக்தியுடன் விளங்குவதும் ஓங்குவதும் அதன் உள்ளிருக் கும் ஜோதி அணுக்களால்தான் என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(காற்றுரு)** *காற்றினுள் மிகுந்தும், மணம் வீசியும், விட்டுக் கொடுத்தும் உள்ள காற்றிலிருப்பது ஜோதி அணுக்களே என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(அனலினுள்)** *அனலின் மூலமாயும், நடுவாயும். மிகுந்தும் விளங்கும் நெருப்பானது ஜோதியின் மூலமே என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(அனலுறு)** *அனல் மிகுந்தும், நிலைத்தும், தங்கியும் உள்ள நெருப்பானது ஜோதியின் தோற்றமே என்ற அருட் பெருஞ்ஜோதியே வா!*

**(புனலினுள்)** *புனலின் ஆதாரமானதும், இடையிலுள்ளதும், அதன் உற்பத்திக்குத் தாயானதும் ஜோதியின் அணுக் களே என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!* **(350)**

**(புனலுறு)** *புனல் மிகுவதும், நிலைப்பதும், உற்பத்தியும், பெருக்கமும் ஜோதி அணுக்களால்தான் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(புவியினுள்)** *புவியினுள் புவியாய், நடுவாய், அவைதரும் ஒளியாய் விளங்குவது ஜோதியின் அணுவே என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(புவியது)** *புவியின் ஈர்ப்பும், நிலைப்பும், மலைகள் கரைந்து மண்ணாவதும் ஜோதி அணுவினால்தான் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(விண்ணிலை)** *சூரியனின் வெப்பமானது அப்படியே பூமிக்கு வந்தால் எல்லாமே எரிந்துவிடும். அதை விண்ணில் அமைந்த சிவஜோதி காக்கிறது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(வளிநிலை)** *கணக்கிட முடியாத காற்றின் சக்தி வளர்ந்து மிகுந்தால் பூமியைப் புரட்டிக்கூட போடலாம் என்பதால் வெப்பம் அதை கட்டுக்குள் வைத்திருக்கிறது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!* **(360)**

**(நெருப்பது)** *நெருப்பின் கூறு எங்கெல்லாம் உள்ளதோ அதை ஆங்காங்கே கட்டுப்படுத்தி உயிர்களின் உற்பத்தியும் வாழ்வும் நிலைப்படுத்துமாறு செய்யும் அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(நீர்நிலை)** *நீர்நிலைகளான கடல்களின் அலைகளையும் நீர் மட்டத்தையும் கட்டுப்படுத்தி அதை ஆர்வத்துடன் கரையைத் தாண்டாமல் காப்பது சூரிய ஜோதியின் கூறுதான் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(புவிநிலை)** *புவியில் கிடைக்கும் பல உலோகங்கள் தங்கம் போன்றவையும் பிறவும் பலவிதமாக, சுத்தப்படுத்தப் பட்டு பயன்படுகிறது. அதற்கு ஆதாரமானது வெப்பம் தான் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(மண்ணினில்)** *இந்த மண்ணுக்கு திண்மை தரும் கடினத் தன்மை கொண்ட பாறைகளும் அவற்றுடன் கலந்த உலோகங்களும் ஜோதியால் தான் என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(மண்ணினில்)** *மண்ணினில் பொன், வைரம் போன்றவை இறுகியதற்கு காரணம் வெப்பமே என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!* **(370)**

**(மண்ணினில்)** *மண்ணினில் நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் அனைத்தும் அண்ணித்து இருந்தும் அவை ஒவ்வொன் றுக்கும் தனித்திறம் (உயிர்களை வளர்த்தல், மருத்துவம் போன்றவை) உண்டு என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(மண்ணினில்)** *மண்ணினில் நாற்றம் (தோன்றுதல்) என்பது எல்லா ஜீவ ராசிகளும் (கடலில் தோன்றும் உயிரினங் களும்கூட) மண்ணை ஆதாரமாகக் கொண்டே தோன்றும். பயிர்களும் நாற்றங்காலில் தோன்றுவதற்கு ஆதாரம் வெப்பமே என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(மண்ணினில்)** *இந்த மண்ணானது பற்பல விதைகளை உருவாக்கும் கருநிலையை உள்ளடக்கியது. அவை மீண்டும் வளர்வதற்கும் ஆதாரம் வெப்பமே என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(மண்ணினில்)** *மண்ணினில் ஐம்பூதங்களும் கலந்ததால் அவைகள் கூட்டாக பல நன்மைகளை (நீர்நிலைகளை உருவாக்குதல்) மழை மேகம் போன்றவை சூரிய வெப்பத்தால் உருவாக்கப்பட்டு உயிர்கட்கு உபகரிக் கின்றன என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(மண்ணிடை)** *மண்ணிற்கு ஆதாரமாக அதன் அடியில் கடினமான பாறைகள் மற்றும் இரும்பு போன்றவை உருவாக்கப்பட்டு உறைந்த நிலையிலுள்ள உலோகங்கள் உள்ளதால் அதற்கு ஆதாரமானது வெப்பம்தான் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!* **(380)**

**(மண்ணினில்)** *மண்ணில் ஐம்பூதங்களும் கலந்துள்ளன. ஒவ்வொரு பூதத்திற்குள்ளும் அதன் தன்மை கொண்ட நுண்ணிய அணு இருக்கும். நிலத்தின் நுண்ணணு வாலணு, நீரின் நுண்ணணு திரவ அணு, நெருப்பின் நுண்ணணு குரு அணு, வாயுவின் நுண்ணணு லகு அணு, ஆகாயத்தின் நுண்ணணு விபு அணு எனப்படும். இந்த ஐந்தும் கலப்பதற்கு அதனதன் நுண்ணணுக்கள் மூலமாக அமைந்து அளப்பரிய ஆற்றலை, பெரிய செயல்களைச் செய்வதற்கு ஆதாரமானது ஜோதி தான் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(மண்இயல்)** *மண்ணில் உயிர்கள் உருவாக, மண்ணைக் கொண்டு அதன் சக்திகளை உருவாக்கி உலகியலுக்கு வித்திட்ட அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(மண்ணுரு)** *மண்ணால் செய்யப்பட்ட உருவங்கட்கு அதற்கான கலைகளையும், மென்மையையும் கொடுத்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(மண்ணொளி)** *மண்ணால் செய்யப்பட்ட அவ்வுருவங்கட்கு தேக காந்தமும் கருவைத் தாங்கும் சக்தியையும் தந்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(மண்கண)** *மண்ணால் செய்யப்பட்ட உருவங்கள் சிலவற்றை தனியாகவும், சிலவற்றை கூட்டமாகவும் உருவாக்கி, அவைகள் இன்னொன்றை அணுகுவதற்கும் உள்ள சூழ்நிலையை உருவாக்கிய அருட்பெருஞ் ஜோதியே வா!* **(390)**

**(மண் நிலை)** *மண்ணினால் இப்போது சத்தர்களையும் உருவாக்கி அவைகளின் தேவியரிடம் கொண்டு வைத்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(மண் கரு)** *பல்வேறு வகையான உயிர்களின் தொகை, வகை, விரிவுகட்கு ஏற்ப அவைகளின் பொருந்தலுக்கு வகை செய்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(மண்ணினில்)** *மண்ணிலிருந்து பல நுண்ணுயிர்கள், பறவைகள், விலங்குகட்கு, தாவரங்கட்கு உரிய கருவின் வித்தளித்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(மண்ணுரு)** *இப்படி மண்ணினில் செய்யப்பட்ட உருவங்கள் பலவாறாக வகுக்கப்பட்டு அதன் செயல்களும் பலவாக விரிவடையச் செய்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(மண்ணிடை)** *மண்ணில் அந்த தாவரங்கள், பிற உயிர்கள் வாழத்தக்கதான பலவற்றையும் பயன்பாடுகள் பலவாயும் அமைத்த அருட்பெருஞ்ஜோதியே வா! (400)*

**(மண்ணியல்)** *மண்ணின் இப்பக்குவத்துடன் மற்ற பூதங்களையும் அதற்குத் துணை நிற்கச்செய்து உயிர்கட்குப் பாதுகாப்பளித்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(நீரினில்)** *நீர் என்றால் குளிர்ச்சி இருக்கும் மற்றும் ஒழுகும் தன்மையும் பிற குணங்களும், அதனுள் ஆர் (ஒளி) வுற இருக்கும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(நீரினில்)** *நீரினில் பசுமைத்தன்மையும் அதனால் பல நன்மைகளும், அதிலும் ஒளியின் கூறு நின்று பணி செய்யும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(நீரிடைப்பூ)** *நீரினில் விரியும் தன்மை (மேகம்), அழுத்தத்தி னால் தடைகளை உடைத்துப் பாயும் தன்மை போன்றவை உண்டு என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(நீரினில்)** *நீர் என்பது தான் எல்லாப் பொருளிலுமுள்ள சுவைத்தன்மைக்கு ஆதாரம். பல்வகையான ஈர்ப்புக்கும் காரணம் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!* **(410)**

**(நீரினில்)** *நீர் என்பது தான் கருவுக்கு விந்து நிலையைத் தருகிறது. அதன் பயன் அளவிடற்கரியது என்ற அருட் பெருஞ்ஜோதியே வா!*

**(நீரிடை நான்)** *நீரினில் மண், நெருப்பு, காற்று, வெளி இவை பிணைந்திருப்பதால் பல நன்மைகளை உயிர்கள் பெறுகின்றன என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(நீரிடையடி)** *நீரின் கடினநிலை, திரவநிலை, வாயுநிலை ஆகியவற்றுக்கெல்லாம் நெருப்பு என்பதே காரண மாகியது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(நீரிடையொளி)** *நீரிடை ஒளி இருப்பதும், புற ஒளி ஊடுருவு வதும் நிகழ்வதால் கடலிலும், நிலத்திலுள்ள நீர் நிலைகளும் சங்கு போன்ற உயிரினங்கள் வாழ்வதுடன் பலப்பல நன்மைகள் பயக்கிறது என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(நீரிடை சக்)** *நீரினுள்ளும் பெண்மை குணமுள்ள சத்திகளை தோற்றுவித்து உயிர்கள் பெருக வழி செய்கிறது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!* **(420)**

**(நீரினில்)** *நீரினுள் ஆண் சத்தர்களையும் தோற்றுவித்து உயிர்கள் பெருகக் காரணமான அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(நீரிடைஉயி)** *நீர்நிலைகளில் பல நீர்வாழ் தாவரங்களும் உயிர்களும் தோற்றுவிக்கப்பட்டும், வாழ வைக்கப் பட்டும் உள்ளன என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(நீரிடைநிலை)** *நீருக்குள் அடர்த்தி, சுவை, நீர்வாழ் தாவரங்கள் மற்றும் பல உயிரினங்களும் உள்ளது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(நீருறுபக்)** *நீருக்கு தகுதி, முதிர்ச்சி (பாசி பிடிக்கும்) தன்னாற்றல், தெருட்சி, போக்கு போன்ற பல பக்குவங்கள் அமைத்து தரப்பட்டிருக்கிறது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(நீரியல்)** *நீர் என்பது படைக்கப்பட்ட அதே நிலையில் சில இடங்களில் இல்லாமல் பலப்பல மாற்றங்களுடனும், மீட்சித் திறத்துடனும், பலவாகப் பயன்பட்டு வருகிறது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!* **(430)**

**(தீயினில்)** *தீ என்பது வெப்பத்தை வெளிப்படுத்திக் கொண்டேயிருப்பதால் அல்லது எரிவதால் அதன் மூலப்பொருளானது செலவாகிக் கொண்டேயிருக்கும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(தீயினில்)** *தீயின் ஒளியானது வெண்மையை ஆதார நிறமாகக் கொண்டது. இன்னும் பிற நிறங்களைப் புறத்தே கொண்டும் ஒளிரும் என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(தீயிடைப்பூ)** *தீயின் பிழம்புகள் பூக்களைப் போல மலரும். மிகுந்து ஒளிரும் தன்மையும் கொண்டது என்ற அருட் பெருஞ்ஜோதியே வா!*

**(தீயிடைஒளி)** *தீயின் கூறுகளான நட்சத்திரம், சூரியன், நிலவு போன்றவைகட்கு மட்டுமல்லாமல் ஒளிக்கதிர்கள், (புற ஊதாக்கதிர்கள், எக்ஸ்ரே, ரிமோட் கண்ட்ரோல்) போன்றவைகட்கும் ஆதாரமாயிருக்கிறது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(தீயிடை அரு)** *தீ என்பது அருவாயும், புனிதமாயும், கருவிற்கு ஆதாரமாகவும் வெவ்வேறு நிலைகளில் பரிணமித்து பணியாற்றுகிறது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(440)**

**(தீயிடைமூவி)** *தீயின் கூறினால்தான் உயிர்கள் உருவாவதும், வாழ்வதும், ஒடுங்குவதும் நடைபெறுகிறது என்பதை உணர்த்திய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(தீயிடைநடு)** *தீ என்பது ஐம்பூதங்கட்கு நடுவானது. நடு என்பது பூமியைக் குறிக்கும். அதிலிருந்து பெறப்பட்ட கரி, மற்றைய எரிபொருள்கள்களை ஆதாரமாக்கி மண்ணுக்கும் நீருக்கும் இடைப்பட்ட நிலையிலுள்ள, நடு நிலையிலுள்ள அம்சத்தால் புகை அல்லது நீர்த் திவலைகள் உருவாக்கும் ஒரு தொடர் வேதியல் மாற்றமே தீ என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(தீயிடைப்)** *தீ என்பதன் மிகப்பெரிய வலிமை - மனிதன் சுத்த உஷ்ணத்தைக் கொண்டு அளப்பரிய சித்திகளைப் பெறும் வழி அமைக்கப்பட்டுள்ளது என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(தீயிடைசித்)** *தீயினால் பெறப்படும் சித்துகள் ஏராளம். எதை விரும்பினாலும் தரவல்லது சித்து. அதன் தரம் அப்படி அமைக்கப்பட்டுள்ளது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(தீயிடைசத்)** *தீயின் அத்தகைய திறனுக்கு மூல காரணமாய் அமைந்தது அதனுள் அமைந்த சத்தி சத்தரே என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!* **(450)**

**(தீயிடையு)** *தீயினால் பல உயிர்கள், தாவரங்கள், உயிரற்ற பொருட்களும் உருவாக்கப்பட்டன என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(தீயிடைநிலை)** *தீயினால் பலப்பல வேறு வேறான செயல் பாடுகளும், பயன்களும், பக்குவமும் பதமும் உருவா கிறது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*
*(கனிதல், சமைத்தல் போன்றவை)*

**(தீயினில்)** *தீயின் அம்சத்தால் விதைகள் பதப்படுத்தல், மேகம் உருவாதல், உடல் வெப்பம் சீராயிருத்தல் போன்றவை அடங்கும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(தீயினில்)** *தீயினால் பாறைகள் உருகின. இரும்பு போன்றவை உருக்கப்படுவதற்கும் தீயே உதவுகிறது. மருத்துவம் போன்ற துறைகளிலும் அது உதவுகிறது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(தீயியல்)** *தீ என்பது இன்னும் பல்வேறு விஷயங்களையும், செயல்களையும், நலங்களையும் உள்ளடக்கி, உயிர்களை உருவாக்கி வாழ வைத்து வகைப்படுத்துகிறது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!* **(460)**

**(காற்றிடை)** *காற்று என்பது அசைதலையும், உயிர்கள், பயிர்கள் சுவாசிக்கவும், உள்ளிருந்தும் உதவுகிறது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(காற்றிடை பூ)** *காற்று சுருங்கும், விரியும், ஆற்றலும் அதிக முள்ளது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(காற்றினில்)** *காற்றின் தொடுவுணர்ச்சியுடன் மேலும் பல அதிசய சக்திகளைக் கொண்டது. மனதைக் கட்டுப் படுத்த உறுதுணை நிற்கும். இது ஆன்மாவுக்கு மிக அருகில் சென்று வரும் (தனஞ்செயன்) தன்மையும் கொண்டது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(காற்றினில்)** *காற்று என்பது அணு முதல் ஆகாயம் வரை பல விந்தைகளைப் புரிய வல்லமையுள்ளது. அதை மையமாகக் கொண்ட அணுக்களே கரு உருவாகவும் காரணமானது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(காற்றிடை)** *காற்றில் பேரொலி உருவானது. அதைப்போல இரகசியமாய் எழுப்பப்படும் ஒலியையும் அது கேட்க வைக்கும் திறனுள்ளது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!* **(470)**

**(காற்றிடை)** *காற்று தான் மனிதன் பிறக்கும்போது பெற்ற இடை, நடு, கடையான தூல, சூக்கும, காரண தேகத்தை சுத்த, பிரணவ, ஞான தேகமாக்கும் ஆற்றல் பெற்றது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(காற்றினில்)** *காற்றினில் வீசும் குணம் பலவாயும், உள்ளே பிராண வாயு, நீர்ம வாயு, கரியமில வாயு போன்ற*

*கணங்களையும் பிராணன் முதல் தனஞ்செயன் ஈறாக பத்துவித வாயுக்களால் அற்புத செயல் புரியத்தக்கது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(காற்றிடை)** *காற்று தோற்றுவித்த சத்திகள் கணக்கில. அதற்குத் தாழ்வுமில்லை. ஆற்றலுக்கும் அளவில்லை என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(காற்றிடை)** *காற்று தோற்றுவித்த சத்தர்களும் கணக்கில, அவற்றின் ஆற்றல்களும் மிக்கதாக்கத் துணை நின்றது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(காற்றிடை)** *காற்றிடை தோன்றிய உயிர்கள் பல. அசைவுகள் பல. சுவாசக் கலைகளும் பல என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!* **(480)**

**(காற்றிடை)** *காற்றுதான் மனம், புத்தி, சித்தம், அகங்காரம், விழிப்பு நிலை, கனவுநிலை, உறக்கநிலை, பேருறக்க நிலைகளை முழுவதுமாக கட்டுப்படுத்துகிறது. வகைப் படுத்தும் ஆற்றலும் கொண்டது என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(காற்றிடை)** *காற்றுதான் நமக்கு உணர்வுகளும் எண்ணங் களும் உருவாக்கி அதன் வலிமையால் உலகை நடத்து கிறது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(காற்றிடை)** *காற்றின் செயலை முறையாகப் பயன்படுத்து வோருக்கு எதையும் செய்யும் (சித்து) ஆற்றல்களும், கருதுகின்ற பயன்களும், சாகாநிலை அடைதலும் கூடும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(காற்றினில்)** *காற்றைப் பக்குவமாக, அளவு தெரிந்து பயன் படுத்துவோருக்கு அது அவரை எந்த நிலைக்கும் ஏறிச் செல்லும் பயனளித்து அற்புதம் நிகழ்த்தும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(காற்றினில்)** *காற்றையும் காலத்தையும் தொடர்புபடுத்தி இடகலை, பிங்கலை நீளத்தைக் கட்டுப்படுத்தி சுவாசங் களின் எண்ணிக்கையை குறைப்பதால் ஆயுளை நீட்டிக்கும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!* **(490)**

**(காற்றியல்)** *காற்றினில் அதிக சக்தியையும், ஆற்றலையும் புகுத்தி வைத்து உயிர் வாழ்வதற்கும், மேன்மை நிலை அடைவதற்கும் அதுவே வழிகாட்டும் என்ற நிலைக்கு ஏற்றப்பட்டிருக்கிறது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(வெளியிடை)** *விண்வெளி என்பதின் பகுதித்தோற்றம் தான் தென்படுகிறது. மீதமுள்ளது எவ்வளவு என்று தெரியாது என்ற நிலையில் உள்ள மனிதன் அதன் விரிவையும், அதன் துணையும், பங்கீடும் தெரிந்து கொள்ள முடியாத அற்புதமாயுள்ளது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(வெளியிடை)** *விண்ணின் இடையேதான் மற்றைய பூதங்களெல்லாமும் அவற்றின் திறங்களும் பத்திரமாய் பங்காற்றிக் கொண்டிருக்கிறது என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(வெளியினில்)** *விண்ணில்தான் முதலில் தோன்றிய பேரொலி என்னும் பெரிய நாதம் வெளிப்பட்டு பல அண்டங்கட்கும் வியப்பூட்டி நிலை பெறச் செய்திருக் கிறது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(வெளியிடை)** *இந்த வெளிதான் உயிர்களெல்லாம் தோன்ற வும், உலவி வாழவும், பெருகவும், ஒடுங்கவும் இட மளித்தது என்பது மிக அரிய போற்றத்தக்க செயல் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(வெளியிடை)** *விண்வெளி என்பது தான் மனிதர்கட்குத் தரப்படும் முத்தி, சித்தி போன்றவைகளைத் தந்து ஆன்ம விடுதலைக்கு ஒரு புகலிடமாய் அமைந்திருக்கிறது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(வெளியினில்)** *வெளியினில்தான் அதிசயிக்கத்தக்க சத்தி, சத்தர்களும் நெருங்கி உறவு கொள்ள இருத்தி இடமளித்தது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(வெளியிடை)** *வெளியினில் தோன்றிய ஒரு பெரிய விஷயம் பேரொலி. அதன் நீட்சியாகவே பல அண்டங்கள் உருவாகி பிறகு ஐம்பூதங்கள், உயிர்கள் எல்லாமே*

*உருவாகியது என்று உரைத்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(வெளியிடை)** *விண்வெளியில்தான் நட்சத்திரங்கள், சூரியன், சந்திரன், பூமி, கிரகங்கள், வால் நட்சத்திரங்கள், இடி, மின்னல், மழை என பலப்பலவாக விரிக்கப்பட்டு உருவாக்கப்பட்டன என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(வெளியிடை)** *வெளியில்தான் உயிர் இயல், வித்து இயல், சித்து இயல் தோற்றுவிக்கப்பட்டு உயிரினங்களின் ஆன்ம விடுதலைக்கு வழி வகுக்கப்பட்டது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!* **(510)**

**(வெளியின்)** *வெளியில் இவ்வளவு அற்புதங்களைப் படைத்து இதுவரை பலவற்றை நடத்தியதுடன் நிற்காமல், இனி வரப்போகும் காலங்களிலும் உயிர்களையும் உடனிருந்து அருளும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

## உடற்கூறுகளின் அமைப்பு

| | | | |
|---|---|---|---|
| I. | அகம் | நெருப்பு | ஆன்மா |
| II. | அகப்புறம் | சூரியன் | ஜீவன் |
| III. | புறம் | சந்திரன் | அந்தக்கரணம் |
| IV. | புறப்புறம் | நட்சத்திரங்கள் | புறக்கரணம் |

## I. அக உறுப்பு

**அகத்தலை / அகமுதல்**

**A.** *சூரிய, சந்திர, அக்னி, நட்சத்திர, பிரம்ம, மாய, ருத்ர சத்திகளும் அவைகளை இயக்கும் சத்தர்கட்கும், அவர்கள் இருக்கும் இடத்திற்கும், பெருகுதற்கும் உரிய இடம்.*

**B.** *நினைவு, கனவு, உறக்க, பேருறக்க அவத்தைகளும் அவற்றின் இடமும்*

**C.** *பித்த, வாத, சிலேட்டுமை விருத்திக்கும் அதிகாரத்திற்கான இடம்*

**அகத்திடை / அகநடு**

**D.** *அறிதல், அநுபவித்தல் அவைகளை இயக்கும் சத்தர்கள், சத்திகள், அவற்றின் இருப்பிடமும் பெருகுமிடமும்*

**அகக்கடை / அகப்புறம்**

**E.** *நினைத்தல், விசாரித்தல், நிச்சயித்தல் போன்ற சூக்கும, கரண தொழில்கட்கும் அவைகளை உருவாக்கும் மனம், புத்தி, சித்தம் அகங்காரம் என்னும் சூக்கும கரணங் களும், அவற்றை உருவாக்கும் அதிசூக்கும கரணங் களும், அக்கரணங்களில் உபகரணங்களாகிப் பலப்பல பேதப்பட்டு விரிந்த சத்துவம், ராஜசம், தாமசம் முதலிய குணங்களும் அவற்றின் இருப்பிடமும் அதிகாரத்திற் கான இடமும் பருவ மாற்றம், தகுதி, இச்சை, தேர்வு, அதிகாரம், காரணம், காரியம் செய்யும் இடைப்பாட்டு தொழில்களும் அவைகளை இயற்றும்போது இசைவு, அறிவு முதலிய கருவிகளும், அதற்கான இடமும் அதிகாரத்திற்கான இடமும். துரிசு நீக்கல், சுகம் விளைவித்தல், தூய்மை செய்தல், இன்ப, துன்ப, பரத்துவ, தத்துவ தொழில்கள் செய்யும் இருப்பிடமும் காரியப்படுத்தவுமான இடமும்.*

## II. அகப்புற உறுப்பு

**அகப்புறத்தலை / அகப்புறமுதல்**

**H.** *ஜீவனை ஆதரிக்கும் பூதப்பிரிதிவி, பூதநீர், பூதாக்கினி, பூதவாயு, பூதவெளி தோற்றுவித்தலும்*

**J.** *உபபிருதிவி, உபநீர், உபாக்கினி, உபவாயு தோற்றங்களும் அவற்றின் இருப்பிடமும் தொழிற்படும் இடமும்*

**அகப்புறநடு / அகப்புறத்திடை**

**K.** *ஒலி, உருவ சுவை, நாற்ற, பரிச அறிவுகளும் அவைகளின் இருப்பிடமான செவி, கண், நாக்கு, மூக்கு, உடம்பு உள்ளேயும், வெளியேயும் உள்ள பொறிகள்*

**அகப்புறக்கடை / அகப்புறப்புறம்**

**L.** *பேச்சு, நடத்தை, கொடுத்தல், எடுத்தல் போன்ற அறிதல் களும், அவைகள் இருப்பதற்கான வாக்கு, பாதம், கை,*

*நீர்வாயில், மலவாயில் என்னும் கருமம் உள்ளிட்ட பொறிகளும், அவைகள் தொழில் படுதற்குரிய கருமப் புறவிடப் பொறிகளும்*

## III. புற உறுப்பு

**புறமுதல் / புறத்தலை**

**M.** *மேல்நிலைச் சுக்கிலம் அல்லது கீழ்நிலைச் சுக்கில வகைகள்*

**புறநடு / புறத்திடை**

**N.** *ஓங்கார ஆங்கார மூளை வகைகள். தலை, கடை அமுத வகைகள்*

**புறக்கடை / புறப்புறம்**

**P.** *வெண்மை, செம்மை, பசுமை, கருமை, பொன்மை என்னும் வண்ண வகைகளும், அவற்றில் வெண்மையில் செம்மை போன்ற இருபது வகையிலான கலவைகளும், அவற்றின் பேத வகைகளும், இவைகள் இருப்பதற்கான இடமும் செயல் வகையும் பயன் வகைகளும்*

## IV. புறப்புற உறுப்பு

**புறப்புறமுதல் / புறப்புறத்தலை**

**Q.** *நல்ல இரத்தம், புல்லிரத்தம், கலவை இரத்தம் போன்ற இரத்த வகைகளும், மெல்லிறைச்சி, கல்லிறைச்சி, மண்ணிறைச்சி, நீரிறைச்சி முதலிய இறைச்சி வகைகளும்*

**புறப்புறநடு / புறப்புறத்திடை**

**R.** *பேரெலும்பு, சிற்றெலும்பு, நீட்டு எலும்பு முடக்கெலும்பு முதலியன.*

**புறப்புறக்கடை**

**S.** *வெண் நரம்பு, செந்நரம்பு, பச்சை நரம்பு, சிறு நரம்பு, பெருநரம்பு முதலிய நரம்பு வகைகள், மீத்தோல்,*

*புடைத்தோல், வல்தோல், மெல்தோல் முதலிய தோல் வகைகள்*

*அகவல் வரிகள் 513 முதல் 544 வரையிலான விளக்கம் பெற வள்ளலாரால் மேலே தரப்பட்டதைக் கொண்டு பார்க்கலாம்.*

**(புறநடு)** *புறநடுவொடு கடை புணர்ப்பித்து ஒரு முதல் ...*

*புறநடு* (N) - *புறக்கடை* (P) - *புறமுதல்* (M) - *மனித உடலமைப்புக்கு ஆதாரமான மூளை மற்றும் அறிவும் அதற்கு ஆதாரமான சுக்கிலமுமே என்று அறம் பொருந்தச் செய்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(புறந்த)** *புறம்தலை நடுவொடு புணர்ப்பித்து ஒரு கடை ...*

*புறம் தலை* (M) - *புறநடு* (N) - *புறக்கடை* (P) - *மேல் நிலை கீழ் நிலை சுக்கிலங்களால் ஓங்கார மூளையானது தெய்வீக நிலையையும், ஆங்கார மூளையால் உலக இச்சைகளும் மூளையின் மேல் கீழ் அம்சமாய் அறத்தின் படிப் பெறச்செய்த அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(அகப்புற)** *அகப்புற நடுக்கடை அணைவால் புறமுதல் அகப்பட*

*அகப்புற* (K) - *அகப்புறக்கடை* (L) - *புறமுதல்* (M) - *அந்தக் கரணங்களும், புறக்கரணங்களான அவயவங் களை சுக்கிலத்தினூடே வந்த விதி அகப்படும் படி வகுத்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(அகப்புற)** *அகப்புற நடுமுதல் அணைவால் புறக்கடை*

*அகப்புற நடு* - (K) *அகப்புறமுதல்* - (H) *புறக்கடை* - (P) *புறக்கரணங்கள் உடம்புடன், பூதங்களின் சேர்க்கை கிடைத்த பின் உடலில் பலவித நிறமான இரத்தம், நரம்புக்கான வண்ணமும் சேருகின்றன என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!* **(520)**

**(கருதக)** *கருது அகநடுவொடு கடை அணைந்த அகமுதல்...*

*அகநடு* - D *அகக்கடை* - E *அகமுதல்* - A

*அதன்பிறகு மனம், அறிவு, சத்தி சத்தர்களால் அருள்*

*நிலையில் வைக்கப்படுகிறது என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(துணியக)** *தணி அகநடுவொடு தலை அணைந்து அகப்புற முதல் ...*

*அகநடு* - D *அகத்தலை* - (B+C) *அகப்புறம்* - E

*பிறகு சத்தி சத்தர்களின் அவத்தைகளையும், பித்தவாத சிலேத்துமங்களையும், அவற்றின் தத்துவங்களையும் செயல்பாட்டில் அணி வகுக்கச் செய்வர் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(அகநடு)** *அகநடு புறக்கடை அணைந்து அகப்புற முதல் ...*

*அகநடு* - D *புறக்கடை* - P *அகப்புறம்* - J

*இங்கு சத்தி சத்தர்களின் சேர்க்கையால் அறிவைக் கொண்டு சிந்தித்தல் முதலியன தோற்றுவிக்கப்பட்டது ஜீவ உப பூதங்களின் செயல்பாட்டால் என்ற அருட் பெருஞ்ஜோதியே வா!*

**(அகநடு)** *அகநடு புறத்தலை அணைந்து அகப்புறக்கடை ...*

*அகநடு* - D *புறத்தலை* - M *அகப்புறக்கடை* - L

*சத்தி சத்தர்களின் அடிப்படைப் பொருளால் இரத்தம், இறைச்சியின் பிரிவை நிர்ணயித்து புற உறுப்புக்களை செயல்பட வைக்கிறது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(அகநடு)** *அகநடு அதனால் அகப்புறநடுவை ...*

*அகநடு* - D *அகப்புற நடு* - K

*புறத்தை அறியும் கருவிகளின் அகங்காரம் நீக்கப்பட்டு அதனதன் செயல்களை, குறிக்கோளை தெளிவாகவே பிரித்து நடைமுறைப்படுத்தும் என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!* **(530)**

**(அகப்புற)** *அகப்புற நடுவால் அணி புற நடுவை ...*

*அகப்புற நடு* - K *அணிபுறநடு* - N

*கரணங்களாலும் உறுப்புகளாலும் நிகழும் செயல் களினால் அறிவு பெருகி மேம்படுகிறது என்ற அருட் பெருஞ்ஜோதியே வா!*

**(புறநடு)** *புறநடு  அதனால் புறப்புற நடுவை*

*புறநடு* - N *புறப்புற நடு* - R

*அறிவினால் தனக்குத் தேவையான எலும்பு மற்றும் உடலமைப்பை ஏற்படுத்தி ஆன்மாவை முன்னேற்றும் வழிகளை விவரிக்க வழி செய்கிறது என்ற அருட் பெருஞ்ஜோதியே வா!*

**(புகலரு)** *புகல அரும் அகண்ட பூரண நடுவால் அகநடு வகுத்த....*

*அகநடு* - B *எடுத்துச்சொல்ல அரிதான சிரநடு சிற்றம் பலத்திற்கு இவ்வுடம்பிலுள்ள ஆன்மாவை உயர்த்த ஐந்து அவத்தை நிலைகளை அகத்தின் நடுவே வைத்து வகை செய்தது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(புறப்புற)** *புறப்புறக் கடை முதல் புணர்ப்பால் புறப்புற அறக்கணம் ...*

*புறப்புறக்கடை* - S, *புறப்புற முதல்* - Q *புறப்புற (அறம்) நடு* - R

*(அறம் என்பது இடை / நடு என்று பொருள்படும்)* - *எலும்பும், இரத்தமும், இறைச்சியும் நரம்பினாலும், தோலாலும் மூடப்பட்டு இந்த உடம்பிற்கு முழுப் பரிமாணத்தையும் அளித்து உருவகப்படுத்தி இயற்கை யின் விதிப்படி தொடர்கிறது என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(புறத்திய)** *புறத்து இயல் கடை முதல் புணர்ப்பால் புறத்துறும் ...*

*புறக்கடை* - P, *புறமுதல்* - M, *புறத்துறும்* - (QRS) -

*சுக்கிலம், வன்னம், எலும்பு, தோல் முதலியன இணைந்து உருவாக்கிய இந்த உடம்பு இயற்கையின் விதிகளின்படி உருவாக்கப்பட்டு மேல்நிலை அடைய ஆவன செய்யப் பட்டுள்ளது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!* **(540)**

**(அகப்புற)** *அகப்புறக் கடைமுதல் அணைவால் அக்கணம் ...*

*அகப்புறம்* - L, *அகப்புறமுதல்* - H, *மனிதனின் பேச்சு நடத்தை ஜீவனின் பூதப்பிரித்வி முதலிய அம்சங்களால்*

*மனிதன் தனித்தனியாக முயன்று தான் ஆன்மிகத்தில் முன்னேற முடியும் என்பதே இயற்கையின் கோட்பாடு என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(அகக்கடை)** *அகக்கடை முதல் புணர்ப்பு அதனால் ...*

*அகக்கடை - C, அகமுதல் - A, பித்த, வாத, சிலேத்துமம் மற்றும் சூரிய சந்திர அக்னி கலைகள், சத்தி, சத்தர்களின் உள்ளே உள்ள தனித்தன்மையைக் கொண்டு விளங்கு வது போற்றுதற்கு உரியது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(வானிடைக்)** *வானவெளிக்கு இடையே காற்றும், அந்தக் காற்று இருக்குமிடத்தின் இடையில் நெருப்பும் இருப்பதைப்போல மனிதனின் உடம்பிலும், வெளிகளும் அதனுள்ளே வாயுவும், வாயுவினுள்ளே அக்னியும், பிணைந்து ஆன்மாவின் ஆன்-அற (மரணமென்னும் முடிவை) மாற்றும் உபகாரம் செய்யத்தக்கனவா யிருக்கின்றன என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(நெருப்பிடை)** *நெருப்பெனும் அக்னி, இரத்தம், சுக்கிலம் - தாதுக்கள் போன்றவை ஒன்றினுள் ஒன்றாய் அமைக்கப் பட்டு அருப்பிட (மரணமெனும் துக்கம் தொலைக்க) வழியுள்ளது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(நீர்மேல்)** *மனித உடலில் நீரின் அம்சங்களெல்லாம் நெருப்பால் சூழப்பட்டு உடலின் வெப்பம் சீராக அமைந்தும் அதனுள்ளே உயிர்ப்பு சக்தியாக பிராண னென்னும் காற்றும் ஆர்வுற (ஜோதி பொருந்த) அமைத்துத்தந்த அருட்பெருஞ்ஜோதியே வா!* **(550)**

**(புனல்மேல்)** *விந்து எனும் புனலால் உருவாகி மண் தத்துவத்தில் அது புடைத்து (பெரிதாகி) உடம்பாகி அதிலுள்ள அனலின் (பித்தத்தின்) காரணமானது, உணவை ஜீரணப்படுத்தி வெளிப்பட்டதால்தான் என்று விளக்கிய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(பகுதிவான்)** *இதற்கெல்லாம் ஆதாரமான பெரிய பூதமான வெளியின் ஒருசிறு பகுதியைத்தான் இந்த உடலினுள்ளே*

*உள்ள வெளியும் பயன்படுத்தி அகல்வெளி (விரிந்து) வாழ்கிறது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(உயிர்வெளி)** *அப்படிப்பட்ட அந்த உடம்பினுள்ளே உள்ள, உரைப்பதற்கு அரிதான ஆன்மாகாசம், ஜீவாகாசம், கரணாகாசம் போன்றவற்றை உள்ளடக்கி நிற்கும் உயிர்ச்சக்தி நிலையின் இறுதிநிலையான ஆன்மாவுக்கு அகமானது அருளாகாசமே என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(உயிர்வெளி)** *உயிர்ச்சக்தி இருக்கும் வெளியானது எப்போதும் தொடர்பில் வைத்திருப்பது இடகலை, பிங்கலையே. அந்தக்கலையில் மனமும் உடனிருப்பதால் உயிருடன் சேர்ந்து மேனிலை அடைய ஒன்றுக்கொன்று அயல்அற (அன்னியமல்லாததாக) இருத்தல் அவசியம் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(கலைவெளி)** *இந்தக் கலைநாடிகள் இரண்டும் கலப்பு அற (ஒன்றாகச் சேராமல்) இருக்குங்கால் சுத்த (சுழுமுனை) நாடியை அலர்வெளி (மலரச்செய்து) அதனூடே குண்டலினி செல்ல வழி பிறக்கும் என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!* **(560)**

**(சுத்தநல்)** *இந்தச் சுழுமுனையாகிய சுத்த நல்வழியை துரிசு போக்கும் பரவெளியில் கொண்டு சேர்க்கும் இடமாக வகுத்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(பரவெளி)** *இந்தப் பரவெளியிலிருக்கும் மனித உடலிலுள்ள கடவுளான்மாவானது பராபர வெளியிலுள்ள மூலப் பொருளின் தன்மைகொண்ட அரசாட்சியை ஏற்க வகை செய்யும் நிலைக்கு தன்னை உருவாக்கிக் கொள்ளும் நிலை இது என்று கூறிய அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(பரம்பர)** *பரத்தின் பரவெளியை நிமித்த காரணமான பர அபர வெளியில் அரந்தெற (நிலைக்கச்) செய்யும் முதல் படியாக இந்த நிலை இருக்கிறது என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(பராபர)** *இந்த மனித ஆன்மா இருக்கும் பராபர வெளி யானது மேனிலை பெற்ற தேவர்கள் சஞ்சரிக்கும் பெரு வெளியில் நிலைபெற முயற்சிக்கும்போது அராவற (ஒன்றோடொன்று மோதிவிடாமல்) இருக்க வகை செய்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(பெருவெளி)** *அந்தப்பெருவெளி அதனைப் பெருஞ்சுக வெளியான விஞ்ஞான கலர் சஞ்சரிக்கும் வெளியில் சேர்க்க அருள் செய்யவும் வகை செய்யப்பட்டிருக்கிறது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!* **(570)**

**(குணமுத)** *இந்த நிலைக்கு உயர்ந்தவர் கூட தமது (தாமச, ராஜஸ, சாத்விக) முக்குணங்களால் தகுதி பெறுவது தடைப்பட வாய்ப்பு இருக்கிறது. எனவே அவர்கள் குணம் முதலிய கருவிகளை அறவே விட்டொழித்து நிர்க்குணம் அணைவுற (சேர்ந்திருக்க) வேண்டும் என்ற அருட் பெருஞ்ஜோதியே வா!*

**(மனமுதல்)** *இந்த ஆன்மாவானது மகா உன்னதமானது. இது மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய கருவிகளின் தயவினாலும் அருளினாலும் சுத்தமுற்ற காலத்து அனம் (திரிதேக சித்தி) உறுவதும் சாத்தியமே என்ற அருட் பெருஞ்ஜோதியே வா!*

**(காலமேமுத)** *மனிதனுக்குத் தரப்பட்ட சக்திகளில் வாசிக் கலையும் ஒன்று - அது ரேசகம், பூரகம், கும்பகம் போன்றவற்றில் காற்றை எவ்வளவு காலம் நிறுத்த வேண்டும் போன்றவற்றை முறையாகச் செய்பவர் ஆலமரம் விழுதுவிட்டு பூமியில் நிலைத்திருப்பதைப் போல பூமியில் நிலைத்திருப்பர் என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(துரிசறு)** *இந்த மனிதனின் மும்மலங்களின் துரிசு அறுக்கப் பட்டால் ஆண்டவனின் இருப்பிடமாம் சுத்த நல்வெளி (மனிதனின் சிரநடு சிற்றம்பல வெளி) யில் வாழ்ந்து அரசு செய்யலாம் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(இவ்வெளி)** *இந்த மனிதனின் உடலிலுள்ள பலவெளிகளைப் பார்த்தால் அவற்றில் சில துரிசுகள் நிரப்பப்பட்டும், பலவெளிகள் வெற்றிடமாகவும் காணப்படும். நற்கதி பெற வேண்டுமானால் இவற்றை இறைவனின் துணை மற்றும் பயிற்சி, நற்குணம் மூலம் நிரப்பிக் கொள்ள வேண்டும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!* **(580)**

**(ஓங்கிய)** *அண்டத்தில் ஓங்கி நிற்கும் முச்சுடர்களில் சூரியனும், சந்திரனும் புறத்தே காணப்பட்டாலும், அக்கினி என்பது பூமிக்கு இடையே மறைந்திருப்பதைப் போல மனித உடம்பிலும் வலது கண்ணும், இடது கண்ணும் தோற்றத்தில் இருப்பினும் அக்னியானது புருவ மத்தியில் மறைக்கப்பட்டுதான் உள்ளது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(சிருட்டி)** *இப்படியான மனித உயிர்கள் மட்டுமல்லாமல் அனைத்து ஜீவ ராசிகளையும் சிருட்டிக்க வேண்டி அதற்குத் தலைவரையும் அவருக்கு உதவ சிருட்டி அண்டங்களையும் அருளின் வலிமையானது படைத்தது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(காவல்செய்)** *அவ்வுயிர்களை காப்பதற்கென்று ஒரு தலைவரையும் அவருக்கு உதவும் அண்டங்களையும் அருளின் வலிமையானது நடைமுறைப்படுத்தி ஆவன செய்தது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(அழித்தல்)** *அவ்வண்ணமே அந்த உயிர்களெல்லாம் வாழுங் காலத்தில் பிணி, மூப்பு இதர காரணங்களாலும் அழிக்க, தலைவரையும் அவர்க்கான அண்டங்களும் படைக்கப் பட்டது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(மறைத்திடு)** *அப்படி மரணமுற்றதில் இருந்த ஆன்மாக்களை மறைத்திடுதற்கும், அது தருமத்தின்படி நடத்த வேண்டுமென்பதற்கென்று தலைவரையும் அதற்கான அண்டங்களும் படைக்கப்பட்டது என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!* **(590)**

**(தெளிவு செய்)** *அப்படி மறைக்கப்பட்டு வைத்திருக்கும் ஆன்மாக்களுக்கு தெளிவுதந்து அது அதற்கு உண்டான நரகமோ, பிறவியோ, சொர்க்கமோ இன்னும் உயர் நிலையோ தருவதற்கான தலைவரையும் அதற்கான அண்டங்களும் படைக்கப்பட்டது என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(விந்துவாம்)** *இந்த ஜீவராசிகளின் உற்பத்திக்கு ஆதாரமான விந்து என்பது சத்தியின் அம்சம். அதற்கென அண்டங் களும் உண்டு. அதிலுள்ள திரங்களால்தான் மனிதப் பிறவி எடுத்தவர்கள் முத்தேக சித்தி பெற்று உயர்நிலை அடைகிறார்கள் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(ஓங்கார)** *பேரொலியால் உண்டான சத்தி ஓங்கார சத்தி (சூரியனில் வெடித்துச் சிதறும் அணுக்களில் இன்று வரை கேட்கும் சப்தம் ஓம் என்பதுதான் என நாசா 2018-ல் வெளியிட்டிருக்கிறது). எனவே அது உருவாக்கிய பல சிதறல்கள் சூரியனைப்போல ஆங்காங்கே அமைந்து அந்த ஓங்காரத்தை ஒலிக்கச் செய்து கொண்டே யிருக்கிறது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(சத்தத்)** *உயிர் உருவாக விந்துவுடன் நாதம் தேவை. அது காற்றுடன் கூடி பரநாதம், அபரநாதம் போன்றவற்றால் பிரிந்து பல பிரிவுகளான சம்புபட்ச, அணு பட்சத்தின் வர்க்கத்தினரை உருவாக்குகிறது என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(நாதமாம்)** *மனிதன் தனது யோக சத்தியால் பெருநிலை பெறும்போது அவனுக்கு நாதவொலி கேட்கும். இந்த நாதத்தின் ஒலியால் மனம் என்னும் மான் பிடிபட்டு அடங்கி அவனுக்கு நற்கதியளிக்க துணைபுரியும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!* **(600)**

**(பகர்பரா)** *பல சத்திகளை உள்ளடக்கியது பராசக்தி. சத்திகட்கெல்லாம் அதீதமானது அருட்சத்தி. அந்த அருட்சத்தியில் பதியும் (சேரும்) உயிர்கட்கு அகங்காரம்*

நீங்கி விடுவதால் அற்புத நிலைக்குச் சமீபத்தில் செல்வார்கள் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!

**(பரசிவ)** பரசிவம் என்பது எல்லாவற்றிற்கும் மேலான மெய்யானது. அதற்கான அண்டம் பரசிவ அண்டம். அதன் வழி செல்வோருக்கு சிருட்டிக்கப்பட்ட உயிர்களின் தேவைகளை அறிந்து உயர்பதவியில் நிறுத்தும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!

**(எண்ணில்)** எண்களால் சொல்லமுடியாத பல சக்திகளையும் பல அண்டங்களையும் நெருக்கமாகப் படைத்த அருட்பெருஞ்ஜோதியே வா!

**(அளவில்)** அளவில்லாத எண்ணிக்கையிலான சத்தர்களையும் அளவில்லாத அண்டங்களையும் மேற்சொன்ன சத்திகளை தேவியராக்கிக் கொண்டனர் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!

**(உயிர்வகை)** உயிர்வகைகள், அண்டங்கள் இவைகளை முடிவில்லாமல், பழுதில்லாமல், பலகோடி எண்ணிக்கையில், தளர்வேயில்லாமல் படைத்த அருட்பெருஞ்ஜோதியே வா! **(610)**

**(களவில)** கடல்வகைக்கு களவில்லாமல் (வஞ்சனையில்லாமல்) கங்குஇல (கரைகள் இல்லாமல்) வரம்பில்லாமலும், அளவில்லாமலும் வகுத்த அருட்பெருஞ்ஜோதியே வா!

**(கடல் அவை)** கடல்கட்கு வரும் உபரிநீரை சூரியனும், பூமியும் உறிஞ்சிவிடுவதால் கடல்நீர் கரையைத் தாண்டாமல் உள்ளது அதன் அட்டமாக (கரையாக) நிற்பது ஜோதியின் கூறான வெப்பமே என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!

**(கடல்களு)** கடல்கள், மலைகள், பூமியின் சுழற்சி (கதி) மற்றும் நதிகள் எல்லாம் அதனதன் எல்லையில் தத்தம் வேலைகளைச் செவ்வனே செய்ய வைப்பது வெப்பமே என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!

**(கடலிடைப்)** *கடல்களையும் அவற்றினூடே பலப்பல வளங்கள், முத்து, பவளம், உப்பு போன்றவைகளும், பற்பல கோடி தாவரங்கள், உயிர்களும் எந்தத் தடையு மின்றி படைத்துக் காத்து அருளும் அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(மலையிடை)** *மலைகளைப் படைத்தும், அதில் பலப்பல வளங்களும், தாவரங்களும், மூலிகைகளும், உயிரினங் களும் படைத்துக் காத்து அருளும் அருட்பெருஞ் ஜோதியே வா!* **(620)**

**(ஒன்றினில்)** *கடல் என்பது ஒன்றுதான். அதிலிருந்து மழை என்று ஒன்று பிறக்கும். அந்த மழையில் ஆயிரம் ஆறுகள், குளங்கள், நீர்நிலைகள் பெருச்செய்து இல்லை என்பது இல்லாமல் செய்யும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(பத்திடை)** *இன்றைக்குப் பத்து சிவப்பு, வெள்ளை அணுக்கள் என்பது நாளைக்கு பல ஆயிரம், கோடி அணுக்களாக மாறும் வகை செய்து உலகை நடத்தும் அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(நூற்றிடை)** *அதைப்போல நூறு சொற்களை மனிதன் படைத்து அதில் நுவல் (சொல்) அதன் மூலம் ஆயிரம் விளக்கங்களும் அதன் எண்ணிக்கை அனந்த எண்ணி லடங்காததாயும் செய்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(கோடியில்)** *அப்படிப் பல்கிப் பெருகிய உயிர்கள் பலகோடி. அதன் யோனி பேதங்கள் 84 லட்சம், அதில் பெருகிய உயிர்கள் பலப்பல கோடியினை வாழ வைத்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(வித்தியல்)** *வித்து (விதை) என்பதின் இயல் முளைத்து மரமாகும். ஆனால், அதன் விளைவுகளான நிழல், பிராணவாயு, மழை, விறகு, பூ, காய், இலை, கனி மற்றும் விதைகளைத்தரும். எறும்பு முதல் யானை வரை பல உயிர்கள் பயன்பெறும். அந்த இனம் உற்பத்தியாக அது விதைகளையும் தரும். மனிதன் ஒருவன் எண்ணிக்கை யில் ஒன்றாயிருந்தாலும் அவன் ஆசிரியராகவோ,*

*அல்லது எந்த தொழில் செய்தாலும் எத்தனை ஆயிரம் பேர் பயன் பெறுகின்றனர். அத்தகைய பயன்களை விளைவிக்கும் அருட்பெருஞ்ஜோதியே வா!* **(630)**

**(விளைவியல்)** *எறும்பு முதல் யானை வரை, புல் முதல் ஆலமரம் வரை இப்படி இருந்தாலும், அந்த இனம் அதே இனமாக எப்படி தொடர்கிறது எனின் அந்த வித்திலோ, விந்திலோ அந்த இனம் பெருகுவதற்கான தரம், குணம், இயல்பு, தன்மை இன்னும் பிறவும் மட்டுமே அடங்கி யிருக்கும் அளவு செய்த (வரையறுத்த) அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(வித்தும்)** *தாவர வித்தினுள் அமைந்த பதத்தினால் அது பலகாய் கனிகளைத் தருகிறது. அந்தப் பெருக்கத்திற்கான வீரியம் அதனுள் வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஆலமரம் என்பதன் மூலம் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு வந்த அதே ஆலமரத் தன்மையுடன் மரபும், வலிமையும், நுண்மையும் அதிசயிக்கத்தக்கதாகவே இன்னும் இருக்க வைத்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(வித்திடை)** *விதைகளிலுள்ள உயிர்ச்சத்தும், உந்துதலும் (சத்தியும்) தான் விதை செடியாவதும் செடி விதையாவது மாயிருக்கிறது. அந்த சத்து இழந்து போனால் முளைக் காது என்பதாக அமைத்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(வித்தினுள்)** *ஒரு வித்து என்பதன் மூலம் வந்துகொண்டே யிருக்கும் அந்த மரத்தின் இனம் இன்னும் எத்தனை கோடி ஆண்டுகட்கு எத்தனை தலைமுறைகட்கு வந்து கொண்டேயிருக்கும். அப்படி அந்த உயிர்ச்சத்து படைக்கப்பட்ட தன் மூல சக்தியான அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(விளைவினு)** *விதையின் விளைவின் உள் விளைந்தது மரம். அதன் விளைவு கனி. கனியில் வருவது விதை. இப்படிக் கலந்து வரும் ஆற்றலை அதனுள் வைத்த அருட்பெருஞ் ஜோதியே வா!* **(640)**

**(முளையதின்)** *விதைகளின் முளைப்புத்தன்மை என்பதும் இதைப்போலத்தான். அது முளைப்புத் தன்மையுடன் இணைந்தே இருக்க வகை செய்த அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(வித்திடை)** *அந்த வித்தானது பிஞ்சு, காய் பதத்தில் இருந்தால் முளைக்காது. கனிந்து பதம் பெற்றால்தான் முளைக்கும். எனவே காய்ப்பதமும் கனிந்த பதமுமாய் உள்ள தன்மையறிதல் வேண்டும் என்ற அருட் பெருஞ்ஜோதியே வா!*

**(பதமதில்)** *அந்த வித்தின் பதமும் பதப்படவேண்டும். அந்தப்பதம் அதனுள் வரை ஊடுருவி இருக்க வேண்டும். (மேலாக இருந்தால் பயனில்லை) என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*
*(இந்த வித்து தாவரம் எல்லாம் சொல்லப்பட்டதன் முக்கிய காரணம் - பதம் என்று வித்துக்குச் சொன்னதை பக்குவம் என்பது மனிதனுக்காகச் சொல்லப்பட்டதே. பக்குவப்பட்டால் பதம் அருள் ஆகிவிடும். எனவே அருளால் அருள் பெற்று அருள் நிலை ஏறி அருள் அடைதல் வேண்டும்.)*

**(ஒற்றுமை)** *அந்தப் பதத்தைப்பெற பக்குவம் எப்படி ஏற்படும்? என எண்ணியபோது உலகியலிலுள்ள இனத்துக்கும் குணத்துக்கும் உள்ள ஒற்றுமை, வேறு இனப் பிரிக்கும் வேற்றுமை, எனக்கே இவை எல்லாம் சொந்தம் என்னும் உரிமை கொண்டாடும் தன்மை அனைத்தும் எவருக்கு அற்றுப் போகிறதோ அவருக்கு அந்தப் பக்குவம் கிட்டும்படி வகுக்கப்பட்டுள்ளது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(பொருள்நிலை)** *பொருள் நிலை என்பது 36 தத்துவங்கள். அவற்றின் உறுப்பியல் என்பது 60 தாத்விகங்கள். நெருப்பு என்பது தத்துவம். அதன் உஷ்ணமும், ஒளியும் தாத்விகம். எனவே பொது வகை என்பது இவற்றிற்கான உறவுகளே என அருளூற வகுத்த அருட்பெருஞ்ஜோதியே வா!* **(650)**

**(உறவினில்)** *ஒரு மனிதனின் உடல் உறுப்புக்கள் எல்லாமே அந்த மனிதனுடன் உறவுகொண்டுதானிருக்கும். சில நேரங்களில் அவனுக்கு ஊறு விளையும் வண்ணம் மனம் நினைத்து வாயால் வசை பாடுவான். அது பகையை வளர்க்கும். உறவு கொண்ட உறுப்பே பகையாகும் நிலை. ஆறாதாரம் நமக்கு உறவுதான். மனம் அதை நினைப்பதே இல்லை என்பது உறவினில் பகை என்ற உலக நியதி இருக்கிறது என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(பகையினில்)** *மாயை என்பது மனிதனை நீசனாக்கும். ஆசைகளால் அலைக்கும். ஆனால் அதுதான் திரோதாயி என்னும் சக்தியாக மாறி மனிதனை ஈசனாக்கும். இப்படி பகையிலும் உறவு உண்டென்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(பாதியும்)** *இத்தகையதான உறவும், பகையும் பாதியும் முழுவதுமாய் வருவது நமது பிறப்பிலும் இறப்பிலும் எஞ்சியுள்ள சஞ்சித பிராரத்த ஆகாமியமே என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(துணையும்)** *பிறவி எடுப்பதற்கு மூல காரணமான இவைகள் துணைக்காரணமும், நிமித்த காரணமும் கொண்டு பிறவிக்கு வழி வகுத்தன என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(உருவதில்)** *தூல தேகத்தினுள் சூக்கும தேகத்தையும் அவ்வுருவினுள் பிரணவ தேகத்தையும் வைத்து காரியப் படுத்தி முத்தேக சித்தியை ஒரு பிறவியினுள்ளேயே அடைய வழி வகுத்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(660)**

**(அருவினுள்)** *மனம் என்பது அருவம். அதனுள் உள்ள எண்ணங்களும் அருவம். அதைப்போல ஆண்டவன் அருவம். அருள் என்பது அவனுள் அருவம். இது அருளியல்பால் தோற்றுவிக்கப்பட்டது என்ற அருட் பெருஞ்ஜோதியே வா!*

*(அருள் என்பது புறப்பொருளாய் இருந்தால் எல்லோரும் அடைவதும் அபகரிப்பதும் சாத்தியமே. எனவே அது அருவாயிருக்கிறது).*

**(கரணமும்)** *அந்தக் கரணங்கள் மற்றும் அவையிருக்கும் இடங்கள், அவையறிந்த கலைகள் எல்லாம் ஒரு கோட்டையின் அரணைப்போல பாதுகாக்கப்பட்டாலும் அவை அருவமானதே என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(உருவதில்)** *உருவம் என்பது தெரியலாம். ஆனால் பின்னாலுள்ள ஞான சக்தி, கலைச்சக்தி போன்றவைகளை அறிய முடியாது. அதைப்போல உயிர்ச்சக்தி தெரியாது. ஆனால் அதனால் இயக்கப்படும் உருவம் தெரியும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(வண்ணமும்)** *இவ்வுலகில் எத்தனையோ இயற்கைத் தோற்றங்களும், அதிசய அழகிய வண்ணமும், வடிவமும் படைத்ததால் அதில் மயங்கி பலவாறு மனிதன் சிதையும் நிலையும் உண்டு என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(சிறுமையில்)** *சிறுமை எண்ணத்தால் கெட்டு சிறுமையில் வாழ்வதும், சிறுமையால் இது அழுக்கு உடம்பு என பலரால் சொல்லப்பட்ட உடம்பையே பெருமை பெறத்தக்க உடம்பாக்கவும் முனையலாம். இப்படி பலவாயும் உள்ள நிலைகள் உண்டு என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!* **(670)**

**(பெருமையில்)** *இறைநிலை பெருமை சேர்க்கும். அதை நோக்கிச் செல்பவர்கள் பெருநிலை அடைந்து பெருமை பெறுவர். சிலர் உலகியல் பொருட்களை சேர்ப்பதிலும், மகிழ்வதிலும் பெருமை கொண்டு இறுதியில் மரணமென்னும் சிறுமையடைவர். இது அருள்நிலை பெற வேண்டி அவர்களைத் திருந்தச் செய்வதற்கானவையே என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(திண்மையில்)** *திண்மை (நிதானம்)யுடன் இருந்து இறைவழி செல்பவன் திண்மை (மெய்ம்மை) யுடன் தொடர்ந்து செல்வான். அவனது திண்மை (வலிமை) அவனை நேர்மையில் அழைத்துச் சென்று அருள் வழிக்கு (மிகச் சமீபத்தில்) அண்மையில் சேர்க்கும் என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(மென்மையில்)** *மென்மைக்கும் மேன்மைக்கும் பெரு வித்தியாசமில்லை. நிலத்தை விட நீரும், அதைவிட நெருப்பும், அதைவிடக் காற்றும், அதைவிட ஆகாயமும் மென்மையானதுதான். ஆனால் ஆகாயம் எல்லா வற்றையும் விட மென்மையாயிருந்தாலும் எவ்வளவு பெரிய வன்மையான கோள்களையும் தாங்குகிறது. அப்படி மனிதனுக்குள்ளும் இதயம், ஈரம், கருணை படைக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும் மென்மையான மனம் இறைவனை அடைய வேண்டும் என்று அதைக் கடினப்படுத்தி குறிக்கோளை அடையலாம். எனவே தான் மென்மையென்பது வன்மைக்கு எதிராக காட்டப் படவில்லை என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(அடியினுள்)** *இப்படி மனிதர்கள் எவ்வளவு சிறுமைகொண்டு மிகக்கீழான அதல பாதாளத்தின் அடியில் இருந்தாலும் அதற்கும் அடியில் சென்று அவைகளின் இடையேயும் சென்று அந்தக்கீழ்நிலை அகற்ற வழி செய்து நன்மை பெற முனையும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(நடுவினுள்)** *அதற்கும் மேல் நிலையான நடுநிலைக்கு வந்தவர்களை மிகவும் நெருங்கி செறிவுடன் மேல் நிலைக்கு வழியமைத்துத் தரும் அருட்பெருஞ்ஜோதியே வா!* **(680)**

**(முடியினுள்)** *மிக மேலான முடிநிலைக்கு வரும் மனிதர்களை அதற்கும் மேலான நிலை தந்து, அந்த நிலையை செறிவித்து சுத்த தேகத்தின் முடியான பிரணவ தேகத்துக்கு ஏற்றும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(அகப்பூ)** *அகப்பூவாகிய ஆன்மாவானதை இப்போதுள்ள இந்த உடம்புக்கே சொந்தமாக்கிட உடலின் ஒரு உறுப்பாகவே ஆக்கிடவேண்டும். அதற்கு அவை (சபை) என்பது இவ்வுடலிலேயே இருக்கிறது. (சபை எனது உளம்) இந்த நிலைதான் நமது குறிக்கோளான ஆன்ம லாபம் பெறுதலாகும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(புறப்பூ)** *புறப்பூ என்னும் கரணங்கள் மனிதனுக்கு ஏன் தரப்பட்டது என்னில், மனத்தின் கட்டுப்பாட்டில் இருந்தால்தான் இந்த உடம்பானது பொலிவு பெறும். அதைப் பொன்னுடம்பாக்கும் வரையில் அதற்குத் தேவையானதைச் செய்தால் அறத்துடன் இந்த பதின்மூன்றாம் நிலையான ஏமசித்தி (சுத்ததேகம்) கிட்டும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(அகப்புற)** *இந்த ஜீவ சக்திதான் இவ்வுடம்புக்கு உந்துசக்தி. எனவே ஜீவக்கருவிகள், ஜீவக்காட்சியை ஓங்கார மூளையில் காண்பதற்கான ஜீவ அறிவு பெற்று இயங்க வழி வகுத்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(புறப்புற)** *அப்படி வந்த பிறகு புறப்புறப் பூவான இந்திரி யங்கள், கண்கள் புருவமத்தியையும், நாசியின் வாசியால் குண்டலினி சக்தியை ஏற்றவும் முனையும். அதன் முடிவில் காற்றில் கரையத்தக்கதான நிலை பெற்று இந்த உடம்பு அருளாக மாறிட வழிவகுக்கப்பட்டுள்ளது நிலைத்த நீதியென அருளிய அருட்பெருஞ்ஜோதியே வா!* **(690)**

**(பாரிடை)** *உலகத்தில் உயிர்கள் என்பது நான்கு இடங்களில் தோன்றும். (1) தாவரங்கள் மண்ணிலும் (2) பிற உயிர்களின் கழிவுகள், வியர்வை மரச்சாறு, கனிச்சாறு போன்றவைகளிலிருந்து புழு பூச்சிகளும், (3) கருப்பை களின் மூலம் மிருகங்களும், மனிதர்களும் (4) பறவை, மீன் வர்க்கங்கள் முட்டையிலிருந்தும் தோன்றும் என்று*

இந்த அரிய உயிர்கள் உலகில் வரும் வழிகளை அமைத்த அருட்பெருஞ்ஜோதியே வா!

**(ஊர்வன)** இப்படியான யோனி வழிகளில் வந்த உயிர்கள் வளர்ந்தும், பறந்தும், தாவரங்கள் பூமியின் கீழ் வேர்விட்டு மேல் நோக்கி வளர்ந்தும், மனிதர்களும், மிருகங்களும் நடந்தும் வாழ்வாதாரத்திற்காக இப்படி வாழ்கின்றன என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!

**(அசைவில)** இதுவரை உயிர்களை நான்கு வகைகளாகப் பிரித்து பார்த்த பிறகு அவைகளை இரண்டு பெரும் பிரிவுகளாகக் காணலாம். ஒன்று அசைவுஇல (எல்லாத் தாவரங்களும் பூமியில் நிற்ப)தாய் இருக்கும். மற்றவை அசைவு உளதாய், வாழ்ந்து வருகின்றன. எல்லா உயிர்களும் அசல்அற - இந்த முதல் தன்மை மாறாமல் இருக்க வழி வகுத்த அருட்பெருஞ்ஜோதியே வா!

(உணவு என்பது அசைவிலா புல், செடி, கொடி, மரத்திலிருந்து பெறப்பட்டால் - புல் வர்க்கத்திலிருந்து பெறப்பட்டால் அது தாவர உணவு. புல் அல்(லாத) உணவு - புலால் உணவு. அதுவே அசையும் பொருளி லிருந்து வந்ததால் அசை(யும்) உணவு - அதுவே அசைவ உணவு என மருவி வந்திருக்கலாம்.)

**(அறிவொடு)** அப்படி உருவான உயிர்கட்கு ஓரறிவு, ஈரறிவு, மூவறிவு, நான்கறிவு, ஐந்தறிவு, ஆறறிவு என வைத்து அதன் மூலம் வாழவும், படிப்படியாய் மேன்மை பெற்று கடவுளை அடையும் வழியும் வகுக்கப்பட்டுள்ளது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!

**(வெவ்வேறு)** இவ்வுயிர்கள் அனைத்திற்கும் வெவ்வேறு இயல்புகளும், வெவ்வேறு பயன்களும் உயிர்கட்கு ஏற்படும் என்பதால் அவ்வாறமைத்த அருட்பெருஞ் ஜோதியே வா! **(700)**

**(சித்திர)** அழகு, அதிசயம், நூதனம், சிறப்பு, அருவருப்பு, மொண்டி, முடம் போன்ற பலவகையான சிருட்டிகள் அந்தந்த ஆன்மாவின் விதிகட்கு ஏற்ப படைக்கப்

*பட்டன. ஆனால் அதைக் கண்டு விருப்பமுறுவது, வெறுப்பைக் காட்டுவது போன்றவை ஆன்ம விசாரத்தில் இருப்பவன் கண்ணுக்குத் தோன்றாது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(பெண்ணினுள்)** *பெண்ணுக்கு ஆண் சிசு, பெண் சிசு இரண்டும் பிறக்கும். ஆண் கருவிலும் பெண் சிசு ஆண் சிசுவினுக்கான வழி வகுத்து ஆதாரமாய் நிற்கும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(பெண்ணினுள்)** *பெண்ணில்தான் உடம்பானது பிறக்கிறது. அது வளர்கிறது, பிறகு மரணமுறுகிறது. பரு உடலின் இந்த மூன்றும் பெண் கொடுத்தது. பெண்ணில் உயிர் தோன்றுமுன்பாக ஆன்மாவானது ஆணின் உள்தான் கருவுற்றது (அது பிறந்து, வளர்ந்து, மாண்டபின்) அந்த ஆன்மா மீண்டும் ஒரு ஆணின் கருவில்தான் சேரும் என்ற இரண்டு விதத்தில் (இந்த மூன்றும், இரண்டும்) நடக்கிறது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(பெண்ணிடை)** *பிறவி என்பது ஏழு பொருட்களாலானது. அவை ஆன்மா, விதி, மண், நீர், நெருப்பு, காற்று, வெளி என்பனவாகும். ஆன்மா, விதி, விந்து (நீர்) இந்த மூன்றும் ஆணிடம் கருவாய் உருவாகும். பிறகு கருப்பை (வெளி), தொப்புள் கொடி மூலம் மூச்சு (காற்று) தாயின் உஷ்ணம் (நெருப்பு), தாயின் மூலம் உணவு (மண்) இந்த நான்கும் பெண்ணிடத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(பெண்ணியல்)** *முழுமையான ஆண் என்பவனிடம் பெண்ணின் குணமான (பேணுமை) அன்பு இருக்க வேண்டும். முழுமையான பெண் என்பவளிடம் ஆணின் (ஆளுமை) குணமான தைரியம் இருக்க வேண்டும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!* **(710)**

**(பெண்திறல்)** *பெண்ணில் திறல் (வலிமை) என்பது தாலாட்டல், பாலூட்டல், அன்பு காட்டல் போன்ற வெளிப்படையாகத் தெரியும். ஆண் திறல் (வலிமை)*

*என்பது வேதனை விலக்கல், சோதனை கடத்தல், சாதனை படைத்தல் போன்றவை அகத்தில் ஊறி யிருக்கும். வெளியில் தெரியாது என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(பெண்ணியல்)** *பெண்ணின் மனம் என்பது செயல்திறன் கொண்டது. ஆணின் திறல் அறிவு கொண்டது. செயலோடு அறிவு சேர்வதால் செயல் (மனம்) திருத்தம் பெறும். அதைப்போல அறிவோடு செயல் சேரும்போது அறிவு திருத்தம் பெறுவதால் இச்சையும் திருத்தம் பெறுகிறது. அந்த இச்சையே உயிர்களை இறைவனை நோக்கி அழைத்துச் செல்லும் என்பது படைப்பின் ஆழம் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(தனித்தனி)** *எல்லா ஜீவராசிகட்கும் ஆண் பெண் உடலமைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த உடலமைப்பு என்பது அந்தந்த ஜீவராசிகட்குத் தக்கவாறே அத்தன்மையதாய், அந்த அளவிலானதாய் படைக்கப்பட்டிருக்கிறது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(உனற்கரு)** *எண்ணுதற்கே அரிதான வகையில் எல்லா உயிர்கட்கும் அவை இணைந்திருக்கும் உடல்கட்கும், அவற்றை சுமக்கும் இந்த உலகுக்கும் தேவையான நிலம், நீர், நெருப்பு, காற்று, வெளி, உணவு, மழை போன்ற அனைத்தையும் பகுத்துப் பகுத்துக் கொடுத்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(ஓவுறா)** *சிறிது கூட ஓய்வு என்பதே இல்லாமல் ஏழு (தேவர்கள், மனிதர், மிருகம், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம்) வகையிலான உயிர்களை, உடல்களைப் படைத்து அவை மேலும் முன்னேற்றம் ஆகும் வகையினை செய்து கொண்டே இருக்கும் அருட்பெருஞ்ஜோதியே வா!* **(720)**

**(பைகளில்)** *கருப்பைகளிலும், முட்டைகளிலும், மண்ணின் மீதும், அழுக்கிலும் உயிர்கள் பிறந்து வாழ்ந்து*

*கொண்டிருந்தாலும் இவை அத்தனையும் ஐ (கடவுளை) அடைந்து நற்கதி பெற வேண்டியே தோற்றுவிக்கப் பட்டனவாகும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(தாய்க்கரு)** *மனிதனோ, மிருகமோ, பறவையோ, நீர்வாழ் வனவோ எவையாயிருந்தாலும் தாய்மைப்பேறு தொடங்கியது முதல் அதில் தங்கிய உயிர்களை நுட்பத்துடன் ஒவ்வொரு நொடிப்பொழுதும் ஆராய்ந்து காத்து அது முழுதுமாய் வெளிப்படும்வரை துணை நின்று அருளும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(முட்டைவாய்)** *முட்டையில் தங்கி இருக்கும் அவ்வுயிரை அடைகாத்து குஞ்சு பொரித்து வெளிவரும் வரை மிக உன்னிப்பான கவனத்துடன் பாதுகாத்து அருளும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(நிலம்பெறு)** *தாவரங்களையும், இம்மண்மீது நீண்ட பட்டியலில் இருக்கும் அனைத்து உயிர்களையும், மென்மை உள்ளத்துடன் குழந்தைகளோ, குட்டிகளோ, குஞ்சுகளோ, கன்றுகளோ எவையானாலும் காத்தருள் புரியும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(வேர்வுற)** *வேர்வையிலும் இன்னும் பிற பழரசமோ, அழுக்கு களிலோ கருவுற்று உயிராகும் நுண்ணுயிர்களையும் நுண்மையுடன் காக்கும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(730)**

**(உடலுறு)** *உடலுக்குப் பிணி வரும்போதும், தூல, சூக்கும தேகங்களின் நுண்மைக்கு எந்த பங்கமும் வராமல், அவை கெடாமல் அரண் போல நின்று துணையாய் இருந்து துன்பங்களைக்களையும் அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(சிசுமுதல்)** *சிசுவின் முதற்பருவமாம் பாலன், காளை, குமாரன், ஆடவன், மூத்தோன், ஆடலன், விருத்தன் ஆகிய ஆணின் பருவம் ஏழினையும் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்ற பெண்களின் பருவம் ஏழினையும் அந்தந்த வயதில்*

*அடைய வேண்டிய உடல் சார்ந்த மாற்றங்களையும் தாமதமின்றி செயல்படுத்தும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(உயிருறும்)** *அக உடலால் புற உடலும், புற உடலால் அக உயிரும் வளர்க்கப்படுவதால், உடல் ரீதியான வளர்ச்சி தேவைப்படும்போது அகவுடலை அதற்கு ஒத்துழைப்பு நல்கவும், அகவுடலும் ஆன்மாவும் நலம் பெற்று முன்னேற புற உடலும் ஒத்துழைக்கும் வகையறிவித்து ஓய்வில்லாமல் அவைகளைக் காத்தருளும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(பாடுறும்)** *வாழும் மனிதனுக்கு அவ்வப்போது வருத்தம் தரக்கூடிய வேதனை அல்லது உபாதைகள் வரும். உலகியலில் உள்ளவர்கட்கு அது கர்ப்ப அவஸ்தை, ஜென்மாவஸ்தை, பால்யாவஸ்த்தை, யௌவனாவஸ்த்தை, ஜராவஸ்த்தை, மரணாவஸ்த்தை, நரகாவஸ்த்தை எனவும், ஆன்மிகத்துள் இருப்பவர்க்கு சாக்கிரதம், சொப்பனம், கழுத்தி, துரியம், துரியாதீதம் என்ற அவஸ்தைகளாயும் இருக்கும். இவற்றிலிருந்து அவ்வப்போது மீட்டு, வெற்றி பெறச்செய்து காத்தருளும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(முச்சுடர்)** *முச்சுடர் எனப்படும் சூரியன், சந்திரன், அக்னியின் செயல்பாடுகளைக் கொண்டு நுண்ணுயிர், தாவரம், மற்ற ஜீவராசிகள், மனிதர்கள், தேவர்கள் போன்ற அனைவரையும் அச்சமின்றி இருக்கச்செய்யும் காப்புத்தெய்வமான அருட்பெருஞ்ஜோதியே வா!* **(740)**

**(வான்முகில்)** *உயிர்கட்கு எவ்விதக் குறைபாடும் இன்றி, உணவு, உயிர்களின் உற்பத்திக்குத் துணை நின்று வாழ்விக்க விண்ணிலிருந்த மேகத்தின் சக்தி கொண்டு மழை பொழியச் செய்து காத்தருளும் அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(இன்புறு)** *அப்படிப் பொழியும் மழையைக்கூட பஞ்சம், வெள்ளம் போன்றவற்றால் உயிர்கட்கு துன்பம் வராமல்*

*இன்புற்று வாழும் அளவுக்கு மழையின் அளவைப் பொழிய வைத்தும், காத்தும் அருளும் அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(எண்ணியல்)** *இந்த மழை சக்தி மட்டுமல்லாமல் எண்ணி லடங்காத சக்திகளால், இவ்வுலகமன்றி எல்லா உலகங் களையும், அதிலுள்ள எல்லா உயிர்களையும், இயக்கத் தையும் தாயன்புடன் காத்து அருளும் அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(அண்டப்)** *புறப்புறக் கோள்களாம் நட்சத்திரங்களின் வாயிலாக பனிப்பொழிவை உறச்செய்து (மேகத்திற்கும் மேல் உயரமான பனி மலைகளில் மழை பெய்வது அபூர்வம். அங்கும் சில தாவரங்கள் பனிக்கரடிகள் போன்ற உயிரினங்களை) வாழ வைத்து காத்தருளும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(தேவரை)** *(மனிதன் மரணமடைந்த பிறகு அவனது ஆன்மா பாவ புண்ணியத்துக்கேற்ப நரகம், சுவர்க்கம், உலகில் பிறவியெடுத்தல் மற்றும் ஐந்தொழில் செய்பவர் ஆவர். நரகத்தில் இருப்பது என்பது பூமியில் சந்து, பொந்து களில், இருளில் அந்த ஆன்மாக்கள் இருக்கும்)*
*சுவர்க்கம் என்பது ஆன்மாக்கள் விண்ணில் சஞ்சரிக்கும். சிலகாலம் வரை பிறவி இன்றி இருப்பர். கன்ம வினை கிடையாது. இவர்கள் தேவர்கள் எனப்படுவர் இவர்கட்கு புறம் என்னும் சந்திரனின் ஒளி உணவாக ஊட்டப்படும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!* **(750)**

**(அகப்புற)** *படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல், அருளலைச் செய்யும் ஐவருக்கும் அகப்புறமாகிய சூரியனின் ஒளி ஊட்டப்படும் என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(தருமக)** *இப்புவியிலுள்ள மாந்தர்கட்கு அகம் என்னும் பூமி தரும் அமுதால் - அக்னியால் விளையக்கூடிய உணவு ஊட்டப்பட்டு சத்தி சத்தர்களால் ஜீரணிக்கப்பட்டு இனம் அழியாமல் அருளினால் காத்தருளும்*

அருட்பெருஞ்ஜோதியே வா!
(நமது பித்ருக்களுக்கு நாம் செய்யும் திதி, பிண்ட தானம் போன்றவை அவர்கட்குச் சென்று சேராது என்பது இங்கே தெரிவிக்கப்படுகிறது)

**(காலமும்)** எனவே மனிதனுக்குக் காலம் என்பதைக் காட்டி செய்ய வேண்டிய நியதிகளை, ஏற்பாடுகளை, முறைமையைக் காட்டி எல்லா உயிர்களும் இந்தப் பிறவியிலேயே பெற வேண்டிய பேரின்பம் பெற்றுக் கொண்டு ஆலுற (நிறைவான) வாழ்வை வாழ முயல வேண்டும். காலத்தை வீணே கழித்தால் மீண்டும் மீண்டும் இறந்தும் பிறந்தும் வாழும் நியதி ஏற்படும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!

**(விச்சை)** மனிதனின் அறிவைப் பொறுத்துதான் ஆசைகள் அமைய வேண்டும். ஆசைப்பட வேண்டிய இறைவனிடம் பற்று வைத்தால் நல் வாழ்வும் மேன்மையும் உண்டாகும். வேண்டாத ஆசைகளால் அலையும்போது பயம்தான் வரும். பயம் பூஜ்ஜியம் ஆக வேண்டுமானால் எதன்மீது ஆசைப்பட வேண்டும் என்பதை தெளிவித்து, காத்து, அருளும் அருட்பெருஞ்ஜோதியே வா!

**(போகமும்)** மனிதன் மகிழ்ச்சியாய் அனுபவிக்கத்தக்கதான பொருள்களை இப்புவியில் தந்து அவைகளை நுகர்ந்த பின் அனுபவித்த உடலையும், மகிழ்ந்த மனத்தையும் ஆகமுள் (உள்நின்று) காத்து உன் கட்டுக்குள் வைத்திருக்கும் அருட்பெருஞ்ஜோதியே வா! **(760)**

**(கலையறிவு)** அப்படி அவைகள் களிப்புடனிருக்க பலவிதமான கலை அறிவுகளை அளித்து, வருந்தாமல் உலகியலில் உள்ள சமுசாரிகட்கும் இடகலை, பிங்கலை, யோகக்கலை, சாகாக்கலை போன்ற அறிவை அளித்து மனிதன் பிறந்தும், இறந்தும் வருந்தாமல் நற்கதி தந்தும், காத்தும் அருளுகின்ற அருட்பெருஞ்ஜோதியே வா!

**(விடயநிக)** ஈர்ப்பினால் மிகுந்து உருவாகும் உயிர்களைக் கட்டுப்படுத்தி அவைகளின் எண்ணிக்கையைக் கட்டுப்

*படுத்தி கடைத்தேற்றும் முறைமையையும் செய்யும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(துன்பளித்)** *உலக வாழ்க்கையில் சுகமாயிருப்பவர்களெல் லாம் துன்பமடைவர். ஆனால் இறைவனின் நியதி என்பது முதலில் துன்பத்தைக் கொடுத்தால் மனிதன் பண்பட்டு, திருந்தி, நேர்மை, ஒழுக்கம், இறைநம்பிக்கை யுடன் இருக்கக் கற்றுக்கொள்வான். அதன்படி நடந்து இறைவனைத் தேடி சுகமடைய வேண்டும் என்பதே அன்பான இறைவனின் காத்தருளும் உண்மை என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(கரணேந்)** *அப்படி சுகம் பெற வைக்கும் கடவுள் அதைக் கரண, இந்திரியங்களால் அனுபவிக்கவும், ஆன்மிகத்தி லிருப்போர்க்கு யோகமுடிவில் நாதவொலி கேட்டல், குண்டலினி சகஸ்ராரம் சென்று அடைதல் போன்ற செயல்களில் ஈடுபடுவோர்க்கு அரணாகி நின்று அருள்கின்றான் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(எத்தகை)** *எந்த உயிர்களெல்லாம் அறிவு மேம்பட எண்ணியதோ அவைகட்கு வேண்டியவற்றை எல்லாம் அளித்தும், உடனாக நின்று கருணையுடன் வாழ்ந்து மேம்படச் செய்கிறான் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!* **(770)**

**(எப்படி)** *எந்த ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்டு உயிர்களெல்லாம் எப்படி மேல்நிலை அடையவேண்டும் என எண்ணியதோ அப்படியே செய்து கொள்க என்று அருளும் தன்மையுடைய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(ஏங்காது)** *ஒரு காகம் காலையில் விழித்தவுடன் எனக்கு இன்று என்ன உணவு, எப்போது, எங்கு, எவ்வளவு கிடைக்கும் என ஏங்குவதில்லை. மாறாக, அது காலை யில் தனக்குத் தெரிந்த வழியில் கா கா எனக்கரையும். ஆனால் நேரத்துக்கு அதற்கான உணவை ஆண்டவன் அளித்துக் கொண்டுதானே இருக்கிறான். அதைப்போல உயிர்கள் இறைவனைக் குறித்துத் தொழுதாலும்,*

*தொழாவிட்டாலும், இறைவன் அதனதன் விதிக்கு ஏற்ப எல்லாவற்றையும் அது ஏங்காது இருந்தாலும் அதனதன் இடத்திலேயே தேவையானதை செய்தருள்கிறான் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(சொல்லுறும்)** *சொல்லி மாளாத அசுத்தம் (வினைகள்) இந்தத் தொல் (பழமையான) உயிரின் மீது சேர்ந்து பல பிறப்பு இறப்புகட்கு ஆளாகியபின்னும் அது இன்னும் தொடர்கிறது. அப்படிப்பட்ட அல்லலில் (துன்பத்தில்) இருந்து மீட்டெடுத்துக் காப்பாற்ற எப்போதும் தயாராக உள்ள கருணை மிகு அருட்பெருஞ்ஜோதியே வா! (ஆன்மாக்களின் வயது 250 கோடி ஆண்டுகள்)*

**(சுத்தமும்)** *ஆன்மா என்பது அழியாது. அதை விடுதலைபெற ஊக்கம் அளிக்கலாம். அல்லது பிறவிகளைக் கொடுத்துக் கொடுத்து தண்டனை தரலாம். அது துன்பம் அனுபவித்துக் கொண்டே இருக்கும். எனவே நல்வினை, தீவினை ஆகிய இருமையில் தோய்ந்து, மூழ்கிக் கிடக்கும் ஆன்மாவைச் சுமக்கும் பிறவியைக் காத்தருளும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(வாய்ந்திடு)** *வாய்ந்திடும் (சிறப்பு பெறத்தகுதியான) ஒருமையின் (நேயமுள்ள) உயிர்க்கு, சுத்தவகை (உடம்பும், கரணமும் ஆன்மாவும்) தூய்மை பெற ஆய்ந்து (வெற்றி தரும் முறைமைகளை அறிவித்து) உற (மேன்மை பெற)ச் செய்யும் அருட்பெருஞ்ஜோதியே வா!* **(780)**

**(எவையெலாம்)** *எந்தெந்த உயிர்களெல்லாம் ஈண்டின (அன்பு நிறைந்து) ஈண்டின (என்னை நெருங்கினவோ) அவைகள் எல்லாவற்றையும் ஒன்றுகூட விடுபடாமல் பயம் தெளிவித்துக் காத்தருளும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(அண்டத்து)** *அண்டத் துரிசையும் (ஆகாயத்திலுள்ள காற்று, கோள்கள், அணுக்கள், கதிர்கள், கிரகணம் போன்ற குற்றங்களையும் மாசுகளையும்) அகிலத்துரிசையும் (பூமியில் உண்டாகும் நடுக்கம், வெள்ளம் காட்டுத்தீ, கொள்ளை நோய்களையும்) அண்டற (அண்டினாலும்*

*நீண்ட நாள் நீடிக்காமல்) அடக்கும் அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(பிண்டத்)** *ஜீவர்கட்கு ஏற்படும் பசி, பிணி, கோபம், தாபம், பொறாமை போன்ற துரிசு (குற்றங்) களை அண்டற (நெருங்கினாலும் நீடிக்கச் செய்யாமல்) அடக்கும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(உயிருறும்)** *மாயை என்னும் காரியத் தத்துவங்களால் ஆனது இந்த உடம்பு. இது மனிதனைப் புனிதனாக்கும் எந்திரம். இந்த மாயா உடம்பினுள் உயிர் உள்ளது. இதன் பயன் பாட்டில் 36 தத்துவங்கள் உள்ளன. இதில் செயல்படும் கருவிகள் 31. இவையே உயிருக்கான உடம்பு. இவை காரண உடல், சட்டை உடல், குண உடல், நுண்ணுடல், பரு உடல் என்பன. இவை ஐந்தும் முதுகெலும்பின் உள்ளேதான் உள்ளன. ஆனால் உடல் முழுவதையும் இயக்குவது இவைகள்தான். எனவே இந்த மாயையின் விரிவுகள், வளர்ச்சிகள் அனைத்தையும் அவற்றின் நுண்மைகளை அடக்கி மனிதனை புனிதனாக்கும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(உயிருறும்)** *உயிரைப்பற்றி இருக்கும் பாவ புண்ணியங் களையும், அவற்றின் விரிவையும், ஒடுக்கத்தையும் ஓய்வின்றி தனது கைவசத்துள் வைத்துள்ள அருட் பெருஞ்ஜோதியே வா!* **(790)**

**(காமப்புடை)** *மனிதனுக்கு ஏற்படும் காமம் போன்றவை அளவு மீறிப் போகும்போது அவற்றை மனித உயிரின் குணத்திலிருந்து விலக்கி கட்டுப்படுத்தும் அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(பொங்குறு)** *அதைப்போலவே பொங்கி எழும் கோபம் முதலியவற்றால் மனிதனின் வாழ்நாள் குறைவதுடன் சமுதாய சீர்மையும் சேதமுறாமல் அடக்கி நல்வழிப் படுத்தும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(மதம்புரை)** *மேலும் செருக்கு, மோகம், மாற்சரியம் இன்னும் பிறவற்றால் மனிதனுக்கு ஏற்படும் தீய குணங்கள், புற்று*

*நோய்கள் போன்றதால் அவற்றை நாசம் செய்யும் உத்திகளையும் அவனுக்குத் தரும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(வடுவுறும்)** *முற்பிறவிகளில் செய்த பல வினைகளின் தீய பயனைத்தரும் அசுத்த பலன்களால் வருத்தமும், மேனிலையடைய தடைகளும் செறிந்து இருப்பினும் அதை அறுத்து அடக்கும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(சுத்தமும்)** *சஞ்சித வினைகளில் சில புண்ணியமும், பாவமும் இருக்கும். அதில் தோய்ந்து வருத்தமுறாதிருக்க தக்க உபாயத்தால் நல்வினை ஆக்கிடும் அருட்பெருஞ் ஜோதியே வா!* **(800)**

**(நால்வயின்)** *பாரினில் வேர்வையில், பைகளில், முட்டையில் மனிதன் ஒவ்வொருவனும் பலமுறை பிறந்திருப்பான். அப்போது செய்த துரிசு கூடிய வினைகள் இப்பிறவியிலும் நண்ணி உயிரிடம் வரும்போது அவைகளின் மூலகாரணங்களை அடக்கி அருளும் அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(நால்வயின்)** *பக்குவப்பட்டுவிட்ட ஆன்மாக்கள் இனி அவ்வண்ணம் நான்கு வகையான இடத்திலிருந்து எடுக்கும் பிறவிகளைத் தடுத்து, அடக்கி, காத்து பிறவிகளை நீக்கி அருளும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(மூவிடத்து)** *சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் ஆகிய மூன்று இடங்களில் தங்கியுள்ள நல்வினை, தீவினை ஆகிய இரு தொழில் (வினை)களையும் அடக்கியுள்ள ஆன்மாவின் அரில் (குற்றங்களை) அந்தந்த இடத்திலேயே அடக்கும் அருட் பெருஞ்ஜோதியே வா!*

**(மூவிடமும்)** *தூல, சூக்கும, பிரணவ தேகங்கள் மூன்றினால் ஏற்பட்ட காமம், கோபம், மாயை என்னும் மூன்று குற்றங்களையும் அடக்கும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(தத்துவ)** *மனிதனுக்குத் தரப்பட்ட 96 தத்துவ, தாத்விகங்களால் உருவாக்கப்பட்ட துரிசும் அவைகளால்*

*உண்டான மயக்க நிலையும் தொடராமல், அதற்கேற்ப அடக்கி அருளிய அருட்பெருஞ்ஜோதியே வா!* **(810)**

**(சுத்தமா)** *இப்படிப் பலவாறான குற்றங்களும் மயக்கங்களும் அறுக்கப்பட்டு சுத்தமாயை நிலையில் சூழ்ந்திருக்கும் தெளிவின்மையை அடக்கும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(கரைவின்)** *பாலில்தான் நெய் இருக்கிறது. நமது கண்களுக்கு அது தெரியாது. எனது கை எலும்பு முறிந்து விட்டால் எனக்கு அது தெரியாது. ஆனால் எக்ஸ்-ரேயின் மூலம் அதைப் பார்க்க முடியும். அதாவது, எனது பார்வை என்பது என் உடம்பிலுள்ள தோல்வரையில்தான் பார்க்கும். இதே நிலையில்தான் எல்லா பொருளி னுள்ளும் ஆண்டவன் இருக்கின்றான். ஒவ்வொரு அணுவினுள்ளும் அவன் அசைந்து கொண்டும் இருக்கிறான். அதைப் பார்க்க முடியாது. அது சக்தி வாய்ந்தது என்று நமக்குத் தெரியும். ஆண்டவன் நம் கண்ணுக்குத் தெரியாமல் இருப்பதை மாயை என்னும் திரைமறைப்பு என்கிறோம். அப்படியான நிலையை அறியாமை என்கிறது ஆன்மிகம். ஒரு பொருள் என்பது பல அணுக்களின் கூட்டம். ஒவ்வொரு அணுவினுள்ளும் கடவுள் சக்தி உள்ளது. அது நம் கண்கட்குத் தெரிவ தில்லை. ஆண்டவன் தம்மை எந்தத் திரைகளாலும் மறைத்துக் கொள்ளவுமில்லை. புறத்திலிருந்து காணும்போது நமது கண்கட்கு முதல் மறைப்பாகத் தோன்றுவது கருப்புத்திரை. இது அண்டங்கட்கே உள்ள மாயாதிரை.* (veiling cosmic soul) *இது மாயா சக்தியின் செயல், இது நமது உடலில் மூலாதாரம் என்ற இடமாகக் குறிக்கப்படுகிறது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(பேருறு நீல)** *அதன் பிறகு உள்ள திரை நீல நிறத்திரை. இது நாம் பிறந்தது முதல் உடனிருக்கும் பெருந்திரை. இது எதையும் காணவொட்டாமல் உடலுக்குள் உருவாகும் இச்சைகளை நிறைவேற்றுவதிலேயே காலத்தைக்*

*கழித்துவிடும். இதை கிரியாசக்தி என்பர். உடலில் இது சுவாதிட்டானம் என்ற இடமாக குறிக்கப்படுகின்றது என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(பச்சைத்)** *மூன்றாவதாக உள்ளது பச்சைத்திரை. உயிர் உணர்வில் அறிவு உண்டாக வேண்டும். அது புலன் உணர்வாக முதலில் தோன்றும். இது மருள் நிலையைக் காட்டி முதலில் அச்சத்தை விளைவிக்கும். மருள் விலகினால் மற்றது தெளிவாகத் தெரிய வழி பிறக்கும். இந்த பச்சைத்திரை பராசக்தி எனப்படும். உடலில் இதன் இடம் மணிபூரகம் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(செம்மைத்)** *இந்த நான்காவது திரையான சிவப்புத்திரை மனஅறிவுக்கு அதாவது சித்து அறிவின் உருவை மறைக்கும். அதற்குக் காப்பாயும் இருந்து பக்குவ ஆன்மாக்கட்கு உண்மை என்ன எனத் தெரிவிக்கும். இந்த மன வெளியில்தான் எத்தனை கலைகளை அறிய முடியுமோ, பெற முடியுமோ அதை இச்சிக்கும். அதிலுள்ள இறையின் தன்மையை அறியமாட்டாது இச்சிக்க மட்டுமே நினைக்கும். எத்தனையோ வேதங்களும் வழி நூல்களையும் மனிதன் படைத்தானே தவிர, இச்சை துறக்க வேண்டுமென சொல்லியதை நடைமுறைப் படுத்தியோர் சொற்பமே. இந்த சிவப்புத்திரை இச்சாசக்தி எனப்படும். இது உடலில் காட்டப்படும் இடம் அனாகதம் என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!* **(820)**

**(பொன்மைத்)** *இந்த ஐந்தாம் திரை பொன்மைச் சக்தியாம் ஞானசக்தி. இது உலகியல் பொருட்களின் புறத்தோற்ற மான அழகு, மதிப்பு, அற்புதம், அதிசயம், தோற்றம் போன்றவற்றைக் கண்டு மயங்கிவிடுமே தவிர அதனுள்ளே உள்ள உண்மையை, தன்மையைக் காண முயல்வதில்லை. இந்த அறியாமை நீங்க வேண்டும். அதை நீக்கினால் பொன்னுருவம் பெறும் நிலைக்கு அருகில் செல்லலாம். இந்த பொன்மைத்திரை என்பது*

*ஞானசக்தி. இது உடலில் இருக்கும் இடம் விசுத்தி என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(வெண்மைத்)** *இது பரமாகாச சொரூப வெண்மைத்திரை. அதன் பின்னால்தான் இறையொளி இருக்கிறது என்பதை சுத்த மனத்தினர் காண்பர். அது கடவுளுக்கு சமீபமான இடம். இந்த வெண்மைத்திரை ஆதிசக்தி என்பர். இது உடலில் உள்ள இடம் ஆக்ஞை என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(கலப்பு)** *ஆறு வண்ணங்களின் கூட்டு வண்ணம். இது நிராதாரத்திலுள்ள பரம்பொருளை மறைப்பது. நிறமற்ற சூரிய ஒளியானது, நிறமற்ற மழைத்துளி வழியே புகும்போது எப்படி ஏழு வண்ணமான வானவில் தெரிகிறதோ அப்படி இதுவும் சிற்சபையின் சூட்சும மாகத்தான் புறத்தே வண்ணங்களாயும், அகத்தே சக்திகளாயும், தாதுக்களாயும், மனித உடலில் ஆதாரங்களாயும் அந்த உள் ஒளியை விளங்கச் செய்து கொண்டு இருக்கின்றது. உண்மையில் இவை மறைப்பு என்பதைவிட பாதுகாப்பு என்பதே உண்மை என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(விடயநிக)** *ஏழு திரைகளின் விலக்கம் பற்றிய விளக்கம் மேல் கண்ட வரிகளில் தரப்பட்டிருந்தாலும், இந்த எட்டாவது திரையும், ஒன்பதாவது திரையும் காட்டப்படவோ நீக்கப்படவோ இல்லை. ஏழு திரை வரை நீக்கியவர்கள் இறைவனைக் காண்பவர்களாக (கோன் கண்ட குடி மக்களாக) ஆகலாம் அவ்வளவே. ஆனால் எட்டாவதும் ஒன்பதாவதுமான திரைகள் அகத்தில் நீக்கப்பட வேண்டியது. அப்படி நீக்கியவர்கள் இறைவனைக் கொண்ட (கோன் கொண்ட) குடிமக்களாகலாம் என்பதாக சொல்லப்பட்ட வரிகளாம்.*

*மனிதர்கள் விடயம் என்னும் (மண், பெண், பொன்) ஆசைகளில் (இதை முப்பாழ் என்றும் சொல்வர்) இருந்து வெளியேறினால் இத்திரை மனதிலிருந்து நீக்கப்படும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(தத்துவ)** *தத்துவங்கள் 96 (என்றாலும் அதற்கு மேலும் சிலவற்றை வள்ளலார் சொல்கிறார்) எனப் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தத்துவங்களை தனித்தனித் திரையால் (ஆன்ம தத்துவங்கள் என்பது கருப்புத்திரை, வித்யா தத்துவம் என்பது நீலத்திரை, மற்ற ஐந்து திரைகளும் சிவதத்துவங்கள்) விலக்கிட வேண்டும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!* **(830)**

**(திரைமறை)** *இப்படி எல்லாத் திரைகளையும் (ஏழு திரை களையாவது) நீக்கி இறை தரிசனம் கண்டு மனிதனும் அருளாட்சி பெற வேண்டுமென்பதே எண்ணம் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(தோற்றமா)** *அப்படி திரை நீக்கி தரிசனம் கண்டவர்க்கு இந்த பிரபஞ்சத்தில் தோற்றமளித்துக் கொண்டிருக்கும் பல்வேறு பொருள்கள் மீது உள்ள மாமாயையின் ஈர்ப்பால் தோன்றும் ஆசைகளையும், அதன் தொடர்பு களையும் அறுத்து, அருள் என்னும் திக்கு நோக்கி ஆற்றலைப் பெறு என்னும் ஞானத்தைக் காட்டும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(சுத்தமா)** *அத்துடன் நில்லாமல் சுத்த மாமாயை என்ற ஒன்றையும் அவர்களின் தொடர்பிலிருந்து அறுத்தது. அத்தகை மேன்மை பொருந்திய, பெருமை குணம் கொண்ட அன்பு நிறைந்த அருட்பெருஞ்ஜோதியே வா! (தோற்ற மாமாயை, சுத்த மாமாயை ஆகிய இரண்டை யும் நீக்க இறைவனால்தான் முடியும்)*

**(எனைத்து)** *அதன் பிறகு எனைத்து (ஒரு சிறிதளவுகூட) ஆணவம் மற்றும் அதன் அறிகுறிகள் கூட இல்லாமல் எல்லாவற்றையும் ஒழித்துக்கட்டி அனுக்கிரகம் (கருணை) புரிந்த அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(விடயமறை)** *இப்போது மனம் முதலிய கருவிகளில் புதைந்து கிடந்த மண், பெண், பொன்னாசைகளிலிருந்து அவ்வுயிர்களை இதுவரை அடைந்த துன்பங்களையெல்*

லாம் ஈடு செய்யும் வகையில் அனைத்து நலங்களையும் தெருட்டிக் கொடுத்த அருட்பெருஞ்ஜோதியே வா!**(840)**

**(சொரூப)** மேலும் உயிர்களின் உள்ளே வீற்றிருக்கும் இறைவனின் சொரூபத்தை இத்தனைக்காலம் மறைத்து வைத்த திரையை தொலைப்பித்து, அவைகட்கு அருளினைச் சேர்த்துத் திரட்டித் தந்த அருட்பெருஞ் ஜோதியே வா!

**(மறைப்பின்)** உயிர்களின் சஞ்சிதத்திலும் பிராரத்தத்திலும் மறைக்கப்பட்டிருந்த வினைகளின் தொகுப்பை எல்லாம் வரவழைத்து ஆங்கு அறத்தின்படி அவ்வுயிர் எந்த நிலை பெற வேண்டுமோ அந்த நிலையைத் தெருட்டித் தந்த அருட்பெருஞ்ஜோதியே வா!

**(எவ்வகை)** உலகில் பிறவி பெற்ற எல்லா உயிர்களும், எவ்வகைப்பட்டதாயினும், எத்தரப்பிலிருப்பினும் இறைவனை அறிந்து, அடைந்து இன்புற வேண்டும். அதற்கான எல்லா வழிகளும் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அதனதன் அறிவு மற்றும் பக்குவத்தின்படி வேறுபடுமே தவிர, அதன் பிறகு அனைத்தும் நற்கதியே பெறும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!

**(கடவுளர்)** அது மட்டுமல்ல, தேவர்கட்கும் இப்படிப்பட்ட மாயை மற்றும் ஆணவ மறைப்புகள் இருக்கிறது. அதையும் கடிந்து அவர்களும் இன்பமடையுமாறு தெருட்டித் தரும் அருட்பெருஞ்ஜோதியே வா!

**(சக்தி கண்)** அதற்கும் மேற்பட்ட பெண் சக்திகளால் இயங்கிக் கொண்டிருக்கும் அந்த மாய நிலைகளைத் தவிர்த்து அவர்கட்கும் அடைய வேண்டிய நற்கதியை அருளும் அருட்பெருஞ்ஜோதியே வா! **(850)**

**(சத்தர்கண்)** அவர்கட்கிணையான சத்தர்கட்கும் மறைப்பைத் தவிர்த்து தெருட்டும் கதியை அருளும் அருட்பெருஞ்ஜோதியே வா!

**(படைக்கும்)** படைக்கும் தலைவர்களாய் அதிகாரம் பெற்று அத்தொழிலை இதுவரை நடத்தியவர்களின்

*எண்ணிக்கை பல கோடியர்கள் ஆவர். அவர்கட்கும் ஆணவ மறைப்பைத் தவிர்த்து அருளும் அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(காக்கும்)** *காக்கும் தலைவர்களாய் இதுவரை அதிகாரம் பெற்றவர்களின் எண்ணிக்கை கணக்கில்லாக் கோடி யாகும். அவரவர் இயக்க காலம் முடிந்தபின் அவர்கட் கும் ஆக்கும் வழி நல்கிய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(அடக்கும்)** *அடக்கும் தலைவர்களாய் இருந்தவர்களின் எண்ணிக்கைக்கும் அளவேயில்லை. அவர்கட்கும் அவ்வப்போது உரிய பேற்றினைத் தந்தோம் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(மறைக்கும்)** *மறைக்கும் தலைவர்களாயிருந்தவர்களும் பல கோடி வகையினர் ஆவார்கள். அவர்கட்கும் அரிய பேறு அளித்தோம் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!* **(860)**

**(தெருட்டும்)** *ஜீவராசிகள் பெற வேண்டிய அருள் அல்லது மீண்டும் பிறவிகளை அருளிய அதிகாரம் பெற்ற பலகோடி எண்ணிக்கையில் இருந்தவர்கட்கும் அருள் தந்து நின்றோம் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(ஐந்தொழில்)** *இப்படிப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் தொழில்களைச் செய்யும் ஐவர் முதலானவர்களைப் படைத்தும் காத்தும், அழித்தும், மறைத்தும், அருளினோம் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(இறந்தவ)** *ஐந்தொழில் செய்பவர்கள் தத்தம் தொழிலைச் செய்வர். ஆனால் இறந்தவரை நேராக எழுப்புவது இவர்களால் முடியாது. ஏனென்றால் மறைப்பு மற்றும் அருளும் தலைவர்களிடம் சென்று சஞ்சித, பிராரத்தத் தின் படியே மீண்டும் பிறக்க வைக்க முடியும். ஆனால் இறந்தவரை அதே உருவத்துடன் எழுப்புவது என்பது நம்மால் மட்டுமே முடியும் என்ற அருட்பெருஞ் ஜோதியே வா!*

*(இது பிரபஞ்ச சட்டம்)*

**(செத்தவர்)** *இறந்தவர் எல்லோருக்கும் மறு பிறவி என்பது பலருக்கு உடனே கிடைத்தாலும், சிலருக்கு தேவராயும், இன்னும் சிலருக்கு பிறவி பெறும் தகுதி கூட இருக்காது. இவர்கள் சில காலமோ பல காலமோ நரகத்தில், இருட்டில் பிறவி கிட்டாமல் கிடப்பர். அவைகளையும் (உடனே எழுதிறல் - பிறவிகள் எடுக்கச்) செய்தாவது ஒருநாள் நற்கதி கிடைக்கச் செய்யும் வழி எத்தகையது என எனக்கு அருளிய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(இறந்தவ)** *இறைவனே, இந்த விதி இதுவரை பிரபஞ்சத்தில் நடந்து வருகிறது. ஆனால் இறந்தவனை எழுப்பும் வல்லபம் என்பதை எனக்கும் அறத்தின் விதிமுறைகட்கு உட்பட்டு அதன் துணையுடன் நான் அதைச் செய்ய வேண்டும் என நான் கேட்டபோது அதையும் கொடுத்து என்னை தைரியப்படுத்திய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(870)**

**(செத்தவ)** *அதைப்போலவே நரகத்தில் பலகாலமாக உழல் பவர்களையும், இன்னும் பலகாலம் பிறவியெடுக்கத் தகுதியில்லை என்று கிடக்கும் உயிர்களையும், சீக்கிரமே கடைத்தேற்றி நற்கதி தர வேண்டும் தாமதப்படுத்துவ தால் என்ன பயன்? எனவே அவர்கட்கும் உடனே பிறவி தந்து கடைத்தேற்றும் திறலை (சக்தியை) எனக்குத் தர வேண்டுமெனக் கேட்டபோது அதையும் கொடுத்து என்னை தைரியப்படுத்திய அருட்பெருஞ்ஜோதியே வா! (வள்ளலார் காலத்துக்கு முன்புவரை மனிதனின் இதயம், நுரையீரல், சிறுநீரகம் போன்றவை வேலை செய்வது நின்றுவிட்டால் மரணம் என்பது உறுதி செய்யப்பட்டது. மேற்சொன்ன வரிகள் எழுதப்பட்ட ஒரு நூற்றாண்டில் இந்த உறுப்புகள் உடம்பிலிருந்து எடுக்கப்பட்டோ, சில மணி நேரம் நிறுத்தப்பட்டோ (செயற்கை முறையில் உயிரைத் தக்க வைத்து) மீண்டும் உயிர் பெற்று எழுவது என்பது இந்த வள்ளலார் பெற்ற வரத்தின் முதல்படி. இது தூல தேகத்தில் நடத்தப்படும் அற்புதம். வருங்காலத்தில் இது சூக்கும, பிரணவ தேகத்தில்*

*நடைபெறும். அப்போது வள்ளலார் பெற்ற வரம் முழுமை பெறும்.)*

**(சித்தெலாம்)** *எனது தந்தையைப் போல இங்கு நான் கேட்ட வரத்தை இந்த உலகருக்காக, தகுதி உள்ளவர்கட் கெல்லாம் செய் என்று திறல் மிக்க சித்து அளித்து ஓங்கும் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(ஒன்றது)** *கடவுள் ஒன்று. பிரபஞ்சத்துடன் இரண்டு. அது ஒன்றினால் பரமாத்மா ஜீவாத்மா என இரண்டு. பரமான்வாவில் ஜீவான்மாவும், ஜீவான்மாவில் பரமான்மாவும் ஒன்றினால் அதை உணர்ந்தால் அது ஒன்றிடின் கடவுள் என்பது ஒன்றே என்ற என் ஒன்றே வா!*

**(ஒன்றல)** *ஒன்று எனும் கடவுள் ஒன்று. ஆனால் அந்த பரம் பொருள் ஒன்றல்ல. பரமும், பொருளுமான இரண்டும் அல்ல. பொருள் பரத்தினுள் ஒடுங்கினால் இரண்டல. ஒன்றிய பிறகும் அது ஒன்று அல்ல (வேறு வேறு தான்) என்ற ஒன்றே வா!*

**(ஒன்றினில்)** *ஒவ்வொரு உடம்பினுள்ளும் கடவுளான்ம அணு உள்ளது. அதனுடன் ஒன்றினால் உயிரான்மா தெரியாது. அதாவது ஒன்றுடன் ஒன்று சேர்ந்தால் ஒன்று மட்டுமே விளங்கும். அதுதான் ஒன்று எனும் ஒன்றாகிய கடவுளான்மாவே வா!* **(880)**

**(களங்கம்)** *(அருட்பெருஞ்ஜோதியே வா என்று அழைத்து அறிந்து கொண்ட அல்லது வரம் பெற்ற நிலையிலிருந்து மேம்பட்டு இறைவனிடம் நேர்காணல் நிலையை இப்போதுள்ள வரிகளில் காண முடிகிறது)*
*மரணம் என்னும் களங்கம் நீத்து உலகம் களிப்புற மெய்ந்நெறியாம் சன்மார்க்கம் விளங்க வைக்கும் வகையளித்து என்னுள்ளே விளங்கும் மெய்ப்பொருளே வா!*

**(மூவிருநிலை)** *மூவிரு* (3 x 2 = 6) *நிலையாம் ஆறு ஆதார நிலையின் முடிவிலுள்ள ஏழாம் நிலையான சகஸ்ராரத்*

*தில் - நடுமுடி - சிரநடுவின் மேல் ஓவற (ஓய்வின்றி அமர்ந்து) விளங்கும் ஒருமை மெய்ப்பொருளே வா!*

**(எழுநிலை)** *அதன்பிறகு ஏழாம் நிலையான குருஜாக்ரத நிலையில் இன்ப வடிவத்துடன், எல்லாக் குற்றங்களையும் நீக்கி ஒளி நிலையில் நிறுத்தி நடத்தும் மெய்ப் பொருளே வா!*

**(நுவநிலை)** *(6, 7 நிலைகளைச் சொன்னவர் 8, 10 நிலைகளைக் காட்டவில்லை. ஒன்றிற்கும் மற்றொரு நிலைக்குமுள்ள வெளி நிலையிது)*

*சிரநடு சிற்றம்பலத்தின் ஒன்பதாவது நிலையான சிவ துரிய நிலையை (உச்சிக்கு மேல் ஐந்து அங்குல உயரத்தில் வெளியில், அந்தரத்தில்) சிவமாயமாகித் திகழ்ந்த (சிவமய நிலை என்பது, தான் சைவத்தில் இருந்தபோது காட்டப் பட்ட நிலை என்பதால் "திகழ்ந்த" என்பதைக் கடந்த காலத்தில் சொல்கிறார்) மெய்ப்பொருளே வா!*

**(ஏகாதச)** *ஏகாதசம் என்னும் பதினொான்றாம் நிலை (சிவ துரிய நிலைக்கு மேல் ஐந்தங்குலம் உயரத்தில்) என்னும் குரு துரிய அதீத நிலையில் இருந்த மெய்ப்பொருளே வா!* **(890)**

**(திரயோத)** *துவாதச நிலை என்பது பனிரெண்டாம் நிலை. அக அனுபவ ஞானத்தில் பிண்ட அண்டங்களை அறியும் நிலை (அவை பூதநிலை, கரணநிலை, பிரகிருதி நிலை, மோகினி நிலை, அசுத்த மாயாநிலை, அசுத்த மகாமாயா நிலை, சுத்த மகாமாயா நிலை, சர்வ மகா மாயாநிலை, குண்டலினி நிலை, பிரணவ நிலை, பரிக்கிரக நிலை இவை மாயை என்னும் உடம்பினுள் உள்ள அண்டத்தின் கூறுகள்). அப்படி பத்தாகிய ஆன்மா முத்தேக சித்தியுடன் சேர்ந்து விளங்கும் பெருவாழ்வு நிலையே (ஏகாதச நிலைக்கு மேல் ஐந்து அங்குல உயரத்தில்) இந்த திரயோதச நிலையின் முடிபானது என்ற என் மெய்ப்பொருளே வா!*

**(ஈறெண்)** *அதற்கு மேல் ஏழரை அங்குல உயரத்தில் இறுதி நிலையான ஈறெண்* (2 x 8 = 16) *பதினாறாம் நிலையில், பூரண சுகத்துடன் பொருந்தும் மெய்ப்பொருளே வா!*

**(எல்லா)** *அண்டத்திலுள்ள எல்லா நிலைகளிலும் இசைந்து அமர்ந்திருப்பதைப்போல, பிண்டத்திலுள்ள எல்லா நிலைகளிலும் அதனதன் இடத்தில், அதற்கான பயன்பாட்டுடன் அமர்ந்து முழுமையாகி இயங்கும் (பிரகாசிக்கும்) எனது மெய்ப்பொருளே வா!*

**(மனாதிகள்)** *மனம் முதலிய கருவிகள் சிந்திக்கக்கூட முடியாத விண்வெளிக்கு அப்பாலும் அப்பாலுமாய், தோற்றமும் இல்லாமல், எல்லாப் பொருளின் உள்ளும் விளங்கி மறைவும் இல்லாமல் தொடக்கம் என்பதும் இல்லாமல், அனாதி உண்மையாகி அமர்ந்துள்ள மெய்ப்பொருளே வா!*

**(தானொரு)** *அதைப்போலவே நீ நீயாகவே இருந்து உடம்பிலுள்ள எலும்பு, தசைகள், உயிர் எல்லாவற்றிலும் கலந்து இருப்பினும் எல்லாமே ஒரு பொருள்தான் என்று ஆகிய ஒரு தனிப்பொருளே வா!* **(900)**

**(அதுவினுள்)** *நீ அண்டம், பிண்டம், சடங்கள் ஆகிய எதனுள்ளும் இருக்கின்றாய். எதுவானாலும் புறத்தில் காணும்போது அதுவாயும் இருக்கின்றாய். அன்றியும் சிற்றம்பலம் என்னும் பொதுவினுள்ளும் நடிக்கும் ஒரு பூரணப் பொருளாயும் ஆகி நின்ற பொருளே வா!*

**(இயல்பினு)** *இயல்பினுள் (இயற்கையுள்) இயற்கையாயும், இரக்கக் குணத்திற்கே இரக்கம் காட்டுபவனாயும் இருப்பதன் மூலமாக உலகில் உயல் (உயிர்வாழ்தல்) என்பதை நிகழ்த்திக் கொண்டிருக்கும் ஒரு தனிப் பொருளே வா!*

**(அருவினுள்)** *அருவமாகி கண்ணுக்குத் தெரியாமல் சூக்கும தேகத்தினுள் அருவாய் (ஆணவமாய்) அரு (கன்மம்) அரு (மாயையாய்), மனித உருவத்தினுள் அருவாய் அமர்ந்து*

*விளங்கும் (முத்தேக சித்தி தந்து துலங்க வைக்கும்) ஆற்றலுள்ள ஒரு தனிப்பொருளே வா!*

**(அலகிலா)** *மனம் முதலிய கருவிகளால் எட்ட முடியாத சித்தி நிலைகளும், உடலில் உள்ள எல்லாப் பொருள் களின் நிலையிலும் அமர்ந்து சிற்றம்பல நடிப்பும் உயிர்வாழ வழி செய்தும் முத்தேக சித்தியளிக்கும் வல்லமையுள்ள ஒரு தனிப்பொருளே வா!*
*(அகவல் வரிகள் 898 முதல் 906 வரிகள் வரையிலான தொகுப்பு வரி இது)*

**(பொருளினுள்)** *உலகிலுள்ள பொருள்கள் பல்வேறாய்த் தோற்றமளித்தாலும் அதன் உட்பொருளாயிருப்பதும் இதுதான் பொருள் - அதுதான் பொருள் என்ற எந்த முடிவுக்கும் வர முடியாமல் எல்லாமே அதே பொருளின் மறுதோற்றமே என்று எல்லாமே ஒருமையில் (நீயாகவே) விளங்கும் ஒரு தனிப்பொருளே வா!* **(910)**

**(ஆடுறுசித்)** *சாதகன் புருவ மத்தியிலுள்ள ஆடுறு (அசை கின்ற) அக்கினிக்கலையின் 64 அம்சங்களான சித்தியைக் கொண்டு இறைவனால் எழு (எழுப்பப்பட்ட) இந்த உடம்பினை கோடியும் (இளமையுடனும்) விளங்க (பிரகாசிக்க)க் குலவும் (பொருந்தும்) மெய்ப்பொருளே நீ வா!*

**(கூட்டுறு)** *கூடுஉறு (இந்த மனித உடல் என்னும் கூட்டில் உறுகின்ற) சித்திகள் (வல்லமையால் பெறும் வெற்றிகள்) கோடி, பல்கோடியாயிருக்கிறது. ஆனாலும் அவற்றை யெல்லாம் ஆட்டுற (மனிதனின் சுவாசம், கண்கள், மனம், புத்தி, உடம்பு போன்றவற்றை இயங்க வைத்து) விளங்கும் (பிரகாசமாக்கும்) அரும் பெரும் பொருளே வா!*

**(அறிவுறு)** *அறிவுறு (விஞ்ஞான, மெய்ஞான அறிவுற்று விளங்கும் உயிர்கள்) சித்திகள் (வெற்றிகள்) அனந்தங் கோடி படைப்புகளை உலகருக்குக் கொடுத்துக் கொண்டே இருக்கிறது. ஆனாலும் பிரிவுஅற (மற்ற*

*எவரும் இல்லாமல்) அனைத்தையும் மனிதர்கள் மூலமாகவே செய்து விளங்கும் (பிரகாசிக்கும்) பெரிய, பெருமை மிக்க தனிப்பொருளே வா!*

**(வீடுகள்)** *வீடுகள் (நாம் குடிக்கூலி கொடுத்து வாழும் இந்த உடம்புகள்) எல்லாம் அழியாநிலை பெற படைக்கப் பட்டதே, அதை சுத்த உடம்பாக்கும் விதிநெறிகளை ஆடல் செய்து (நடைமுறைப்படுத்தி) அருளுடம்பாக்கும் வழி காட்டி அருளும் அரும் பெரும் பொருளே வா!*

**(பற்றுகள்)** *எதில் பற்று (ஆசை) வைத்தாலும் அதில் பதிநெறி (ஆண்டவனாகிய உன்னை அடையும் வழியை) விளங்க (உயர்ந்து நிற்குமாறு) உற்று (பொருந்தி) அருள் ஆடல் (நீயாகவே நான் ஆகும் செயலை) செய்கின்ற ஒரு தனிப்பொருளே வா!* **(920)**

**(பரத்தினி)** *பரமென்னும் கடவுளின் உடனிருப்பது ஆன்மா. அப்படி உடனிருக்கும் ஆன்மாவைச் சுற்றியும் மேலு முள்ள பரமானது ஒன்றறக் கலந்த நிலையிலிருக்கும். அந்தப் பரத்தினுள்ளும் அது இருக்கும். பரமாகவும் ஆக்கி முடிக்கும் அந்தப்பரமே வா!*

**(பரம்பெறு)** *பரமென்னும் கடவுளைப் பெற வேண்டியது ஆன்மா. அதற்கு மேன்மை தருவதும் பரமே. பரத்தின் பதமானது உடம்பின் சிதாகாசத்தில் பொருந்தியுள்ளது. அந்த பரமாகாச சொரூபமான சிதம்பரமே வா!*

**(பரம்புக)** *உண்மை விளக்கத்தைப் பகரும் (உணர்த்தும்) பரமானது நம்மால் புகழ்பரமே (புகழப்படுகிறார்). அப்படிப்புகழும்போது மனிதனுக்கும் சத்விசார அறிவினால் சுகபரம் மட்டுமன்றி சிவ (அன்பின்) பரமும் கிட்டச்செய்யும் பரமே வா!*

**(பரங்கொள்)** *பரம் செய்வது தற்பரம். பரம் கொள்வது சிற்பரம் (ஆன்மா). தரம் கொள்வது பொற்பரம் (பெருவெளி). எங்கும் தானாய்த் திகழும் தனிப்பெரும் பரமே வா!*

**(வரம்பரா)** *பரம் என்பது கடவுள் அபரம் என்பது ஜீவன். எனவே இரண்டு இடங்களிலும் இறைவன் நீக்கமற நிறைந்திருப்பதால் மனிதன் பெறுகின்ற வரம் பர அபரமாயிருக்கிறது. வணம் என்பது தயவு. அதுவும் ஜீவதயவு - கடவுள் தயவென பர அபரமாயிருக்கிறது. பரம் என்பது பரமும் அபரமுமாயிருக்கிறது. பதம் என்னும் திருவடியும் அவனுள்ளே இருக்கும்போது அதம்பதம் என்றும், புறத்தேயிருக்கும்போது அதுவே பாதம் எனப்படுகிறது. பரமும் அபரமுமான பராபரமே நீ வா!* **(930)**

**(சத்திய)** *சத்திய பதம் என்பது அந்த அருள் வடிவினனின் திருவடியே. சத்துவ பதம் என்பது - அந்த அருள் எல்லா ஆற்றலும் கொண்டது. நித்திய பதம் என்பது - அந்த அருள் நித்தியமானவொன்றுதான். நிர்க்குணம் என்பது - இப்பிரபஞ்சத்தின் எந்த நிகழ்வாலும் அவனுக்கு பாதிப்பு கிடையாது என்ற பதத்திலுள்ள அருள் பதமே வா!*

**(தத்துவ)** *தத்-சிவம், துவம்-தன்மை. எனவே தத்துவ பதமே என்பது சிவமென்னும் அன்பின் பதமே. தற்பத பதமே என்பது தானே தானாய் நிற்பவனின் பதம். சித்துரு பதம் என்பது (சித்-அறிவு) அறிவின் உருவமே அந்தப்பதம். சிற்சுக பதமே - சித்தென்னும் உணர்வில் உயிர்கட்கு அனுபவமாகும் அருளின் பதமே வா!*

**(தம்பரம்)** *அ-அகரம். அகண்ட வெளிநிலை. ம-மகரம் - அறிவொளி. இதை உள்ளடக்கிய பரமே அம்பரம். அப்படி அறியும் மனிதனின் ஆன்ம நிலைக்கு அது தம் கடவுளாக தம் பரமாகத் தெரியும் நிலை கண்டு பணிவதே தம்பரம் பதம். அப்படி இன்பம் தருகின்றது தனிச்சுக பரம்பதம். எனவே அகண்ட வெளி நிலையுடன் காணும் அறிவொளியான அம்பரத்தின் பதமானது அருட்பதம் தரும் பதமே வா!*

**(தந்திர)** *பக்தி மார்க்கத்தின்மூலம் சில கலைகளால் கடவுளை உபாய ஞானத்தால் அறியலாம். அதில் விசாரம் செய்பவர்கள் மெய்யறிவு என்னும் சந்திர பதம் அறியலாம். அந்த மெய்யறிவு உறுதிப்பாட்டால், வைராக்யம் கொண்டு மனம் திடமாவது மந்திர பதம். இதனால் சாதகன் பல தொல்லைகளிலிருந்து காப்பாற்றப்படுவான். அந்த மந்திரத்தால் சித்திப்பது மந்தணம் (இறையோடு சமீபித்தல்) அப்படியும் சிலருக்கு நற்கதியருளும் மந்தண பதமே வா!*

**(நவம்தரு)** *நவம் என்றால் ஒன்பது என்பதைக் குறிக்கும். மண், நீர், நெருப்பு, காற்று, வெளி, காலம், திக்கு, ஆன்மா, மனம் ஆகிய ஒன்பதைத் தரும் பதமே. புறத்திற்கு வராமலேயே இவைகளைக் கொண்டு ஐந்தொழில் நடனத்தால் நடத்தித் தருகின்ற பதமே. அதன்மூலம் ஆன்மாக்கள் பக்குவம் பெற்று அவர்கட்குக் கடவுள் விளக்கமாம் சிவம் தரும் பதமே. அதனால் சிவானுபவம் (சிவ) மற்றும் சிவானந்தம் (சிவ) தரும் பதமே வா!* **(940)**

**(பிரமமெய்)** *பிரமம் (பிரம்மம்) என்பது அகண்ட வெளியிலுள்ள ஒளி. இந்த அகண்ட நிலையிலிருந்து பூதநிலை, ஜீவநிலை, யோகநிலை, ஞானநிலை கடந்து அருள் வெளிக்கு வந்து தன்னை அறியும் நிலை பெறுகிறது. கதி என்பது அது செல்லும் பாதையின் வழியும் வேகமும் அதன் முடிவில் சேர்வது பிரம்ம மெய்ப்பதி. குணமற்ற இந்த பிரம்ம நிற்குணம் இறுதியில் அடையப்போவது நீயேயாகிய அறிவெனும் சிற்குணமே வா!*

**(பிரமமே)** *இந்தப் பிரமமானது உள்ளொளியாகத் தோன்றி விளங்கும் பெருநிலையைக் காட்டுகிறது. அது நமது உச்சியிலுள்ள துவாரம் இதை பிரமரந்திரம் என்பர். இந்தப்பிரமமே, பிரம்மப்பெருநிலை. அதன் மேலுறும் வெறு வெளியில் உடம்பிலுள்ள அமுதம் மூளைப் பகுதியை நிரப்பி, உடம்பிலும் நிரம்பும். இது சுகானந்த நிலை. இதைப்பெற்றவர்கள் பல சித்திகளையும் பெறுவதால் அதையெல்லாம் பலவிதமான வஸ்துக்*

*களாக்கி இறுதியில் முத்தி பெறும் நிலைக்கு ஏற்றி பரம பதம் தரும் சிவமே வா!*

**(அவனோடு)** *சிரநடு சிற்றம்பலத்தில் தான் கடவுள் ஜோதி என்பது கருவுருவானதிலிருந்து இருக்கிறது. அங்கிருந்து தான் எல்லாச் சக்திகளையும் வெளிப்படுத்துகிறது. இதயம், மூளை, அறிவு எல்லாம் இந்த சிவஜோதியின் ஆற்றலால் இயங்கும். அறிவு வெளிப்பாட்டுக் கருவியாக ஆண் உடம்பையும், செயல் வெளிப்பாட்டுக் கருவியாக பெண் உடம்பையும் (அவன், அவள்) படைத்ததுடன், மனிதரல்லாத ஜீவர்கட்கு இத்தகைய முயற்சி இன்மையால் (அது) என்றும் இந்த சிவஜோதி தத்துவம் அமர்ந்திருக்கும் நவமணி பீடத்தில் இருப்பதைத் தெளிவுபடுத்திப் பொருந்திய சிவமே வா!*

**(எம்பொரு)** *செம்மையான சுடரின் வடிவில் உள்ள பொருளே செம்பொருள். அது சிவத்தைக் குறிக்கும். அது நமது உடலில் இருப்பினும், செயல்படுத்தினால்தான் அதன் தன்மை பிரகாசிக்கும். அப்போது தான் எம்பொருள் என்பது அகத்தில் அருள்கின்ற (சிவ) சிவமாகவும், புறத்தில் உயிர்களின் வடிவில் காணப்படும் (சிவ) சிவமாகவும் அறியப்படும் என அறிவித்த சிவமே சிவமே வா!*

**(ஒருநிலை)** *அகத்தில் நான் என்றும், புறத்தில் பிற உயிர்கள் என்னும் நிலையை மாற்றி, இரண்டும் வேறு வேறு அல்ல ஒருநிலைதான் என்னும் பக்குவம் வரும்போது, இதுவே உயர்ந்த நிலை என்னும் ஒரு திருநிலை (சிவரகசியம்) அறிந்து உயர்ந்து நிற்பது உயிரும் கடவுளும் தான் என அருளிய சிவமே சிவமே வா!* **(950)**

**(மெய்வைத்து)** *இந்த உடம்பு எப்போது அழியாத மெய்யாக விளங்குகிறதோ அப்போது சிரநடு சிற்றம்பலத்தி லிருக்கும் வெறு வெளியில் நடுவுறும் தெய்வத்தின் இருப்பிடமாய் நிறைந்து பதியும் சிவமே சிவமே வா!*

**(புரைதவிர்)** *மனிதர்களின் குற்றம் குறைகளை புரை (உயிர்க்கொல்லி) என்பர். ஆன்ம பக்குவம் பெறப்பெற இறைவன் அந்தக்குறைகளைத் தவிர்ப்பான். எனது விஷயத்தில் அதைத் தவிர்த்ததுமல்லாமல் எனது தலையின்மீது பொருந்தும்படியான பொன் முடியை (கிரீடத்தை) ஏம சித்தியை நாட்டிய (நிலைபெறச் செய்த) அன்பே சிவமே வா!*

**(கல்வியும்)** *எனக்கு சாகாக்கல்வியும், அழியாச் செல்வமும் (திரிதேக சித்தியும்) கல்வியும் (ஐந்தொழில் புரியும் வல்லபக் கலையையும்) அளித்த சிவமே சிவமே வா!*

**(அருளமுது)** *அருள் அமுது (அனைவரையும் இறவா நெறி புகுத்துவது) கருணையொன்றே. ஆதலால் அதனை எனக்கே அளித்து அருள் நெறி வழியாக மிகத்தெருட்டிய நிலை நிறைவித்து என்னை வளர்க்கும் சிவமே சிவமே வா!*

**(சத்தெலாம்)** *அண்ட சராசரங்களிலுமுள்ள எல்லா சத்துக் களுக்கும் அதிபதியானவன், அவையெல்லாம் தானே யாகியும், சித்துக்கள் எவ்வளவு உண்டோ அத்தனைக் கும் வல்லவன் ஆனவன் எனது ஆண்டவனான ஓர் திருவருள் சிவமே நீ வா!* **(960)**

**(எங்கே கரு)** *எங்கே கருணை என்ற கேள்விக்கு அது இயற்கையில் தான் உள்ளது என்னும் ஒரு விடை மட்டுமே உண்டு. அந்த இயற்கை படைக்கப்படவு மில்லை, காப்பவனுமில்லை, உயர்த்துபவனுமில்லை. அப்படிப்பட்ட கருணை எங்கு உள்ளதோ அங்கு இயற்கையாகவே விளங்கும் அருட் பெரும் சிவமே நீ வா!*

**(யாரே என்)** *உயிர்களின் துன்பங்களைத் துடைக்க வேண்டியது இறைவனின் செயல். தானும் தனது குடும்பமும் வசதியாக வாழ உழைத்துக் கொண்டே யிருப்பது மனிதனின் இயல்பு. அப்படிப்பட்ட சூழலில் தனக்கு சம்பந்தமில்லாமல் யாரோ ஒரு மனிதனின்*

*துன்பம் கண்டு துடைக்கப்புகும் மனிதன் - இறைவன் செய்ய வேண்டிய செயலை அல்லவா செய்கிறான்? எனவே துன்பம் துடைத்தவனின் வாழ்வை சீரே அளிக்கும் (அழகு செய்து அவனின் நன்னடத்தையை உயர்த்தி புகழ் சேர்க்கும் நன்மையளித்து சிறப்புறச் செய்யும்) சிதாகாச பரமான சிவமே நீ வா!*

**(பொய்நெறி)** *இந்த சாதியில் பிறந்ததால், இந்த மதத்தில் இருப்பதால், இந்தக் கோயிலை வணங்குவதால், இந்த மதத்திற்கு மாறியதால், இந்த வேதம் படிப்பதால், உயிர்ப்பலி கொடுப்பதால் எனக்கு சுவர்க்கம் நிச்சயம் என இவ்வுலகர் நம்பி வாழும் நெறிகளில் புகுத்தாது என்னை அருள் தரும் செந்நெறியாம் சன்மார்க்க நெறிக்கு தலைமை ஏற்கச் செய்து எனது சிற்சபையில் நிலைத்த சிவமே வா!*

**(கொல்லாநெறி)** *கொல்லாநெறி என்பது உயிர்களைக் கொல்லாமல் இருப்பது மட்டுமல்ல. அது மட்டும் போதாது. அன்பு நெறி, அறநெறி, சாந்த நெறி, சாத்விக நெறி, சத்துவ நெறி, காருண்யநெறி, கருணை நெறி போன்றவற்றையும் நாம் கடைப்பிடிக்க வேண்டும். இதுவே குரு அருளிய நெறியாம் சன்மைர்க்க நெறி. எல்லா உயிர்களும் இன்புற்று வாழும் நெறி இதுவே என எனக்கு பல பிறவிகளிலும், பல காலங்களில், பல கோடி முறை எனக்கு உரைத்தும், உணர்த்தியும் என்னுள் பதித்த மெய்ச்சிவமே வா!*

**(உயிரெலாம்)** *பொது என்பது சபை. அது உள்ளம். அதில் ஆண்டவன் அமர்ந்திருக்கிறார். இது எல்லா உயிர்களிலு முள்ள உண்மை. அதை புறக்கண்ணால் நோக்காமல் அகம் அதில் படுமாறு நோக்கும் போது எந்த ஒரு மனிதனுக்கும் செயிர் (குற்றம், கோபம்) என்பது தானாகவே விட்டுப்போகும். அதுதான் ஆன்ம நேயத்தின் அடிப்படையாகும் எனச் செப்பிய சிவமே வா!* **(970)**

**(பயிர்ப்பு)** *பயிர்ப்பு (அசுத்தம் அல்லது குற்றம்) உறுவதால் மனத்தில் ஆரம்பித்து மற்ற கரணங்களும் பற்பல தன்மை, குணம் கொண்ட மனிதர்கள் தத்தம் வழிகளில் செல்வதையே பரிசாகப் பெற்றுள்ளனர். ஆனால் உயிர்த்திரள்கள் என்று வரும்போது அவையனைத்திலு முள்ள இறையம்சமான ஆன்மா ஒன்றுதான் எனத் தெளிவாக உரைத்த மெய்ச்சிவமே வா!*

**(உயிருள்)** *ஒவ்வொரு உயிரினுள்ளும் ஆண்டவன் இருக்கின் றான். ஆண்டவனுள் எல்லா உயிர்களும் இருக்கின்றன. எனவே எதிர்ப்பட்ட உயிர்களின் உள்ளே உள்ள ஆண்டவன்தானே என்னுள்ளும் இருக்கின்றான் என்பதை உணர்ந்தால் பேதம் இருக்காது. எனவே நம் உயிரைப் பேணுதல் போல பிற உயிரைப் பேணவும் நேசிக்கவும் தொடங்க வேண்டும் என்று உரைத்த மெய்ச்சிவமே வா!*

**(இயலருள்)** *மனிதனுக்கு இயல்புள்ள ஒளி என்பது அறிவு தான். அதற்கு வரம்பு உண்டு. ஆனால் உயிர் என்னும் ஒளி (இறைவனின் அம்சம்) ஒவ்வொரு மனிதனின் உள்ளும் இருக்கிறது. அந்த ஒளி எல்லையற்ற தூரத்திற்கு பிரகாசிக்க வல்லது. அந்த உயிர் என்னும் ஒளியைக் காண முயற்சிக்க வேண்டும். உயிர் என்பது ஒளிதானே தவிர வேறில்லை என உரைத்த மெய்ச்சிவமே வா!*

**(அருளலாது)** *இறையெனும் கருணையின் அனுமதி இல்லாமல் ஒரு அணுவிலுள்ள (அசலை, அமலை* Proton, Electron*) போன்றவை அசைந்திடாது. அந்த சடப் பொருளின் நிலையே ஆண்டவனின் அனுமதி பெற்றுத்தான், அதன் செயல்பாட்டால்தான் உலகமே இயங்குகிறது. அதனால் உயிர்களின் அசைவுக்கு எவ்வளவு கருணை தேவைப்படும் என்பதைப் புரிந்து கொண்டு அந்த அருள் நலமாம் கருணை பரவிடச் செய் என்று அறைந்த (மிக ஆழமாகச் சொல்லிய) மெய்ச் சிவமே வா!*

*(உண்ணும்போதும், உறங்கும்போதும், உட்காரும்*

*போதும், ஓடும்போதும் உடனாக இருந்து உள்ளே போன மூச்சுக்காற்றை வெளியில் தள்ளுவது எவரின் முயற்சியால் என சிந்தித்தால் இது புரியும்.)*

**(அருளூறின்)** *இறைவனின் கிருபை என்பது கிடைத்து விட்டால் எல்லாம் கைகூடும். இது முற்றிலும் உண்மை. எனவே அந்தக் கருணை என்பதைக் கைக்கொள்ள வேண்டிய முயற்சிகள் அனைத்தினையும் செய்திடுக என்று கூறிய தயவுடைச்சிவமே வா!* **(980)**

**(அருள்நெறி)** *சன்மார்க்க நெறி ஒன்றே ஒளி காட்டும் தெருட்சியான நெறி. மற்றெல்லாம் இருள்நெறி (நரகத்திற்குச் செல்லும் நெறி) என எனக்கு வாய்ச் சொல்லால் முழக்கமிட்ட சிவமே வா!*
*(மற்றெல்லாம் என்பது சரியை, கிரியை, யோக, தவ மார்க்கங்கள்)*

**(அருள்பெறி)** *துரும்பு என்பது சடப்பொருள். அதுகூட ஆண்டவனின் அருள் பெற்றுவிட்டால் அதனாலும்கூட படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலை செய்திட முடியும் என்ற தெளிவு நமது அறிவுக்கு எட்டவேண்டும். (தாம் இறைவன் முன்னால் எம்மாத்திரம் என்று குறைத்து மதிப்பிடுதல் சரியானதல்ல) என்று செப்பிய சிவமே வா!*

**(அருளறிவு)** *ஆண்டவன் கருணை வடிவினன் தான் என்று அறிதல் ஒன்றே அறிவு. மற்ற சாத்திர, தோத்திர, ஜெப, தப, மந்திர, யந்திர, தந்திர, பலி பற்றிய அறிவெல்லாம் நரக வழி காட்டும் அறிவு என்ற உத்தியை வகுத்த (வகைப்படுத்திய) மெய்ச்சிவமே வா!*

**(அருட்சுக)** *அருட்சுகம் (சத்து-நம் உள்ளேயிருக்கும் ஆண்டவன். சித்-நமது அறிவினால் அவனை அறிந்து அடைவது. ஆனந்தம்-சுகம். இதை சச்சிதானந்தம் என்பர்) என்பது நிலைத்த நித்தியானந்தமாய் இருப்பது. இதுவே பெறுவதற்கு அரிதான பெரிய சுகம். பிறவெல்லாம் மருட்சுகம் (அற்பசுகம்) நீர்க்குமிழி போல*

*தோன்றி மறைந்திடும் என வகை செய்த மெய்ச்சிவமே வா!*

*(ஆன்மிகத்தில் அடிக்கடி சிற்றின்பம் (இல்லற வாழ்வு) என்றும் பேரின்பம் (இறைவன் திருவடியடைதல்) எனப் பார்த்திருக்கிறோம். ஆனால் மேலே காணப்படும் வள்ளலாரின் வரிகளில் அருட்சுகம், மருட்சுகம் போன்றவைகளைப் பார்க்க முடிகிறது. சன்மார்க்கத்தில் மரணமில்லாமை என்பது - முயற்சி செய்பவர்கட்கு உடம்பு என்பது அருளாகவும், உயிர் என்பது சிவமாகவும் மாறும்.)*

**(அருட்பேறு)** *ஆண்டவனின் அருட்பேறு பெறுவதுதான் பெரும்பேறு. அது மட்டுமே நமது இருள் என்னும் பாவங்களை ஆதாயமாகக் கொண்டு அலையும் நிலைமையை அறுக்கும் என உரக்கச் சொன்ன சிவமே வா!*

*(இருளை - பேறு என்பது வழக்கில் இல்லை. ஆனாலும் வள்ளலார் மனிதர்கள் பாவங்களைச் செய்து செய்து பெற்றது அந்த இருள் ஆதாயம் என்று கடிந்து ஆதங்கப்பட்டு நமக்காகச் சொன்னது)* **(990)**

**(அருட்டனி)** *இறைவனின் தனி வல்லபத்தினால் எல்லாம் செய்யத்தக்க கடவுள் சக்தியை அடைவிப்பது அதனின் தனிச்சித்து என்று இயம்பிய சிவமே வா!*

**(அருளறியா)** *நான் என்பது என் உடம்பு மட்டுமே என வாழும் மனிதர்கட்கு நற்கதி எப்படிக் கிடைக்கும்? பயம், பிணி, மூப்பு, மரணம் இவற்றுடன் சேர்ந்து வாழக் கற்றானே தவிர அருள் என்பது என்ன என்பதைக் கற்கவே இல்லை. எனவே அவனுக்கு அவனும் தெரிய வில்லை. எம்மையும் தெரியவில்லை. மேற்சொன்ன துயர்களைத் தீர்க்கும் பொருள் அவனுள்ளேயே இருப்பதும் தெரியவில்லை. எனவே உடலின் இரகசியத்தை அவர்கட்கு கருணையுடன் உணர்த்து என்று புகன்ற மெய்ச்சிவமே வா!*

**(அருணிலை)** *அருள் என்பதின் நிலைப்பாடு என்ன? கருணையைக் கொண்டு பிரபஞ்சத்தை, உயிர்களைத் தோற்றுவித்து எல்லா இன்பமும் பெற வகுத்து அறிவினால் தம்மை உணர்ந்து அடைய வேண்டும் என்பதே. எனவே அதுவே அனைத்தையும் தரும் நிலையில் காத்திருப்பதால் மனித வாழ்க்கையின் பொருள் (இலட்சியம், குறிக்கோள், நிலைப்பாடு) என்ன எனத் தெரிந்து அது அந்த அருளை நாடுதலே எனக்காட்டிடு என்று புகன்ற மெய்ச்சிவமே வா!*

**(அருள்வடி)** *ஆண்டவன் பல வடிவங்களை உருவாக்கி அதனுள்ளே விளங்குகின்றான். ஆனால் அவனுக் கென்று என்ன உருவம் வைத்திருக்கிறான் என்னில் அது அருள் புரிவதற்காக உருவகப்படுத்திக் கொண்ட கருணை வடிவமே. அவன் மாயையால் படைத்த வடிவங்கள் அழியலாம். ஆனால் அவனின் வடிவமான கருணை அழியாத தனி வடிவமாகும். எனவே அவர்கள் அந்தக் கருணையைப் பெற்றிட நீ எல்லா முயற்சி களையும் செய்திடு என்றருளிய சிவமே வா!*

**(அருளேநம்)** *(யானை என்பது உருவத்தில் பெரியது. சுடர் என்பது நெருப்பின் வடிவம். எனவே உருவம், வடிவம் வேறுபாடறியவும்)*
*அருள் (கருணை) என்பது தான் நமது இயல்பு (சுபாவம்) அருள் என்பதுதான் நமது உருவம் (புறத்தோற்றம்). அருள் என்பது தான் நமது வடிவம் (சுயரூபம்) என்ற சிவமே வா!* **(1000)**

**(அருளேநம்)** *நமது ஆதாரம் - அடி எது எனில் அருள் (கருணை). நமது முடி எது எனில் அருள் (கருணை). நமது நடு எது எனில் அருள் (கருணைதான்) என்ற என் மெய்ச்சிவமே வா!*

**(அருளேநம்)** *நமது அறிவு என்பது அருள். நமது மனம் என்பது அருள் (கருணை). நமது குணம் என்பது அருள் (எதற்காக எனில் நமது மனமும், குணமும் உன்னை*

*நல்வழிப்படுத்தவே இருக்கிறது). அதை நீ பயன்படுத்தி என்னை அறிந்தும், உன் நற்கதி நினைந்தும் உன் குணங்களை மேம்படுத்துவதற்காகத்தான். அது எப்படி முடியும் என்னில் நான் உன்னுள் இருக்கிறேன் என்பதால் இது சாத்தியமாகும் என்ற சிவமே வா!*

**(அருளேநம்)** *நம் அருளே உனக்குப் பதியுமிடமாம். நம் பதமே உனக்கு அருளுவதாம். நாமிருக்கும் இடம் உனது உள்ள மென்னும் இடமே. காரணம் உன்னை நல்வழிப்படுத்தி அருள் அடைவிக்கத்தான் என்ற சிவமே வா!*

**(அருளேநம்)** *நமது அருள்தான் உனக்குத் துணை. நமது தொழில் உன்னுள் கருணையை வரவழைத்து நிலை பெறச் செய்யத்தான். நமது விருப்பமும், உனக்கு அதன்மூலம் அருளுவதற்குத்தான் என்ற சிவமே வா!*

**(அருளேநம்)** *உனக்குப் பொருள் என்பதும் சொத்து சுகம் என்பதும் நமது அருள்தான். உனக்கு ஒளி (தேகம்) அளிப்பதும் நமது அருள்தான். அந்த அளவற்ற கருணைதான் நாம் என்ற சிவமே வா!* **(1010)**

**(அருளேநம்)** *நீங்கள் என்னை அடையத்தடையாயிருப்பது உங்களின் குலப் பாகுபாடுகள்தான். இவ்வுலகில் குலம் என்பது மனித குலம்தான். அதற்கு அருள் தருவேன். நம்மினம் என்பது அகவினம்தான். அதற்கு அருள் தருவேன். எனவே இதிலிருந்து கருணையுள்ள அகவினத்தவரும் சாதி பேதமற்ற குலத்தவருமே நமது அருள் பெறுவர் என்பதை நாமறிவிக்கிறோம் என்ற சிவமே வா!*

**(அருளேநம்)** *உலகருக்கு நாம் தரும் சுகம் அருள்தான். (நீங்கள் எந்தப் பெயர் வைத்திருந்தாலும் அது நம்மையே குறிக்கும் என்பதால்) நம் பெயரும் அருள்தான். நானும் அருள்தான் என்பதை அறிவாயாக என்ற சிவமே வா!*

**(அருளொளி)** *நீ இப்போது அடைந்தது காருண்யக் கதிரவனின் அருள் ஒளிதான். நீ உண்டது அருள்*

*அமுதம்தான். இதற்குக் காரணமானது உனது அருள் மதி (அருளறிவு) தான் என்று அருளிய சிவமே வா!*

**(அருணிலை)** *நீ அருள் ஒளி பெற்று அருளமுது உண்டது அருளறிவால் தான் என மேல் வரிகளில் காட்டப்பட்ட பின் நீ அருள் நிலை (நிலைத்த அருள்) பெற்றனை. அருள் (கருணை) வடிவு உற்றனை. எனவே இனி உனக்கு இடப்பட்ட தொழில் அருள் அரசு (அருள் ஆட்சி) இயற்றுக (தொடங்குக) என்று சன்மார்க்கத்தின் உச்ச நிலை தொட வைத்து அருளிய சிவமே வா!*

**(உள்ளகத்)** *ஆன்மா என்பது எல்லா உடலுக்குள்ளும் இருப்பதுதான். ஆனால் அந்த ஆன்மாவுக்குள் கடவுள் என்ற ஒன்று இருப்பதை உணர்ந்திடும் வாய்ப்பு மிக மிகக் குறைவு. காரணம் முயற்சியின்மை. (வள்ளலாருக்கு) எனக்கு இப்போது அருளரசு இயற்றும் நிலையே அருளப்பட்டுவிட்டது. ஆதலால் எனக்குள் இருக்கும் ஒளியானது உள்ளகத்தில் அமர்ந்து, உயிரில் கலந்து, உணர்வில் கலந்து வள்ளல்தன்மை கொண்ட சிற்றம்பலத்தில் அனுபவமாகி வளரும் சிவபதியே வா!*

**(1020)**

**(நிகரிலா)** *அருளரசு இயற்றும் பணி, அகத்திலே ஒளி தோன்றிய அனுபவம், ஆண்டவன் என்னை தன் நிலைக்கு உயர்த்தியது போன்றவை எல்லாம் கிடைத்த தால் நான் நிகரிலா இன்ப நிலையின் நடுவில் இருக்கிறேன். அப்படி என்னை சிறப்போடு வாழ வைக்கும் தனிச்சிவ பதியே வா!*

**(சுத்தசன்)** *இதுவரை காணப்பட்ட நெறிகள் எல்லாம் அகத்தினுள்ளே இறைவனைக் காணச் சொல்லி அதிலேயே ஆழ்ந்து போயினர். ஆனால் சுத்த சன்மார்க்கம் என்பது அறிவால் கண்ட கடவுளை வணங்கி, சில சுகங்கள் பெற்று மறைவதைப் போலல்லாமல் கருணை என்னும் அடிப்படை கொண்டு, உயிர்களின் மீது நேயம் வைத்து, அனக*

நெறியில் செலுத்துவது. இந்த சுத்த சன்மார்க்க நிலை மட்டுமே நித்திய சுகநிலையாகும். அதில் வைத்து என்னை சத்திய நிலையின் இலட்சணங்களான உண்மை, வாய்மை, மெய்ம்மை போன்றவற்றால் சத்தியனாக்கிய தனிச்சிவபதியே வா!

**(ஐவரும்)** ஐந்தொழில் புரியும் கடவுளர்கள் எல்லாம் அந்தப் பதவியை, அதிகாரத்தை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவனிடம் இருந்துதான் பெற்றார்கள். ஆனால் அதில் எவரும் இதுவரை அருட்பெருஞ்ஜோதி (ஆண்டவனைக் கண்டதில்லை. ஆண்டவனின் வடிவு தயவு. அந்த தயவு என்பதை என் கையில் கதி (விரைந்து) வரப்புரிந்த சிவபதியே வா!

**(துன்பம்)** ஆதி தைவிகம், ஆதி பௌதிகம், ஆதி ஆன்மிகம் போன்றவை நமது முதற்பிறவியிலிருந்தே நம்முடன் வரும் வினைகளாம். இதனால் வரும் துன்பங்களைத் தொலைத்து என்னுள் மலர்ந்து, விரிந்து, நிறைந்த அருட்ஜோதி ஒளியினால் எனக்கு இன்பானுபவம் அளித்த எழில் (வலிமையுள்ள) சிவபதியே வா!

**(சித்தமும்)** சித்தம் என்பது மனத்தின் தெளிவு. ஆனால் அது இறைவனைக் காட்டாது. அகங்காரம் தொலைந்தால் தான் அருள் என்பது உணரப்படும். அதன் மூலம் இறை அனுபவம் கிட்டும். எனவே சித்தம், மனம், வாக்கு, கரணங்களால் செல்ல முடியாத, சொல்ல முடியாத பெருநிலைக்கு ஒத்து (ஒப்புக்கொண்டு, உற (அதில் பொருந்த) ஏற்றிய (என்னை அங்கு ஏற்றிய) ஒரு (தெய்வமாம்) அந்த சிவபதியே வா! **(1030)**

**(கையறவு)** தாமத குணம் என்பது கையறவு (சோம்பல்). இது குடிகொண்டிருப்பின் முன்னேற்றம் என்பது சிறிதும் இருக்காது. என்னிடம் இருந்த அந்த குணத்தைக் கடிந்து, தேற்றி (பக்குவப்படுத்தி) இந்த உலகின் மிக உயர்ந்த நிலையில் ஏற்றி வைத்த மிகப்பெரிய சக்தியாகிய சிவபதியே வா!

**(இன்புற)** *இச்சிறியேனுக்கு இன்பம் என்பது உயிர்கட்கு உபகரித்தல் என்பதே. இப்படி உதவும் எல்லாக் காலத்திலும், எல்லா உயிர்கட்கும், எல்லாத் தேவைகளையும் தடையின்றித் தர எண்ணும்தோறும், அந்த வல்லபம் எனக்கு எப்போது இறைவா தருவாய் என்று எண்ணியபோதெல்லாம் அதை அன்புடன் என் கண் எதிரிலேயே அந்தத் தேவைகளை நிறைவு செய்யும் எனது கருணை என்னும் அருட் சிவபதியே வா!*

**(பிழையெலாம்)** *(வள்ளலார் நமக்காக, தாம் பிழை செய்தது போலச் சொல்லி இறைவனின் கருணையை விளக்குகிறார்).*

*நன்மை, தீமை என்பது தெரியாத மனமும், செயலும் கோபதாபங்களும் என் உடலையும் உள்ளத்தையும் மிகுந்த வெப்பத்துக்குள்ளாக்கிய போதிலும், அந்தப் பிழைகளையெலாம் பொறுத்து என்னுள்ளே கருணை பிறங்கி (வெளிப்படச் செய்து) அமுதமென்னும் மழை (குளிர்ச்சியை) பொழிந்த வளர் சிவபதியே வா!*

**(உளத்தினு)** *உள்ளத்தில் மகிழ்ச்சியும், கண்ணில் கருணையும், உயிரில் உணர்வும் என் குளத்தின் (நெற்றி - புருவ மத்தியில்) அந்த அமுதமும் நிரம்பி வழியச் செய்த எனது குருவான (இறைவனான) சிவபதியே வா!*

**(பரமுடன்)** *கு-இருட்டு, ரு-நீக்குதல், மன, அறிவு முதலிய கருவிகளிலுள்ள இருளை நீக்குவதற்கு உபாயம், நாம் குருவைத் தேடி அதைப் போக்கிக்கொள்ள வேண்டும் என்பது ஆன்மிக மரபு. குறிப்பாக பரம் எது, அபரம் எது? எதைக் கொள்ள வேண்டும் எதைத் தள்ள வேண்டும் என்பதை அவர் தெரிவிப்பார். அந்த வகையிலே எனக்கும் இதை திரம் (முத்தி) உற அருளிய திருஅருட் குருவே வருக!* **(1040)**

**(மதிநிலை)** *மதிநிலை (இடகலை) இரவியின் (பிங்கலை) வளர்நிலை (பரிபாலனம்) செய்து, அனலின் (புருவ மத்தியிலுள்ள அக்னியின்) திதிநிலை-ஸ்திதி (உடம்பைக்*

*காத்தல்) அனைத்தையும் தெரித்த (தெரிவித்த) சற் (உண்மை) குருவே வருக!*

**(கணநிலை)** *கணநிலை என்பது (நமது ஆயுள்) காலத்தின் அளவு. ஒவ்வொருவருக்கும் மூலாதாரத்தில் ஒரு சக்தி தரப்பட்டிருக்கிறது. அந்தச் சக்தி தான் மூச்சுக்காற்றை வெளியில் தள்ளுகிறது. ஒரு நாளைக்கு நாம் 21,600 முறை மூச்சை வெளிவிடுகிறோம். எனவே, அந்தச் சக்தியானது எத்தனை நாளைக்கு அந்த வேலையைச் செய்ய முடியுமோ அதைச் செய்ததும் ஓய்ந்துவிடும். அப்போது மரணம் சம்பவிக்கும். இதுதான் கணத்தின் கருநிலை. நாம் ஒரு நாளைக்கு விடும் 21,600 சுவாசத்தின் எண்ணிக்கையைக் குறைக்க வழியிருக்கிறது. ஒரு சுவாசத்திற்கு 4 நொடிகள் தேவை. இந்த 4 நொடி என்பதை 5 நெடியாக்கினால் அந்தளவு நமது கருநிலைச் சக்தியின் ஆயுள் கூடும். மாறாக நாம் பெருந்தீனி, பெருந்தூக்கம், மைதுனம், கோபம், பயம் இவற்றால் ஆயுளைக் குறைக்கும் வழிகளைத்தான் பழக்கத்தில் வைத்திருக்கிறோம். இந்தத் தீய குணங்களை நீக்கி நற்குணமுற எனக்குள்ளே குலாவிக் கொண்டு நிற்கும் சற்குருவே வருக!*

**(பதிநிலை)** *பதி (இறைவன்) நிலை. பசு (ஆன்மா) நிலை, பாசம் (ஆணவம், கர்மம் மாயை) நிலை. இறைவன் அறிவுப் பொருள். ஆன்மா - அறிவித்தால் அறியும் ஆற்றலுள்ள பொருள். எனவே உயிருக்கு உதவ விரும்பினாலும் ஆன்மாவுக்கு இறைவனின் அறிவுக்கனலைத் தாங்கும் சக்தியில்லை என்பதால் நேராக உதவ முடியாமல் தனது வைப்புச் சக்தியான மாயையில் தன் சக்தியைப் பதித்து அதிலிருந்து சட அறிவுக் கருவிகளான தத்துவங்களைத் தோற்றுவித்து உடம்பாக வழங்கி உதவுகிறான். அந்த தத்துவங்களில் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கும் உயிர்க்கு அறிவைப் பெற்றுத்தரும் உட்கருவி களாயின. இந்த நிலையெலாம் என் அறிவுக்குத் தெரிய*

*வைத்து, என் உள்ளே ஒளியேற்றி வழி காட்டிய சற்குருவே வருக!*

**(பிரமரக)** *இந்த பதி, பசு, பாசத்துடன் நம்மைப் படைக்கும் பிரம்மனின் தொழில் ரகசியம் என்னவெனில், உடம்பைக் கொடுத்த அக்கடவுள் மனிதனின் 12 வயது முதல் 72 வயது வரை விந்துவை உருவாக்கும் சக்தியை யும் தருகிறான். மனித உயிர்களைப் பிறப்பிக்கும் சக்தி அது. அதை அளவுடன் பயன்படுத்திய பின் அக்கிரம, அதிக்கிரமத்தில் அதை வீணாக்காமல், குண்டலி சக்தியை ஏற்றுவதற்கு உயர்ந்த நிலைக்கு செல்லும் ரகசியத்தைப் பேசி அதைப்போகாப் புனலாக்கி இறைவனுக்கு தரமுற (சமநிலை பெறும் உபாயத்தை) விளக்கிய சாந்த நிலையிலுள்ள சற்குருவே வருக!*

**(பரமரக)** *காக்கும் தலைவரான பரந்தாமனும் பரம ரகசியமாக காத்தல் தொழிலை என்னால் நிறைவுடன் செய்ய முடியவில்லை. காரணம் மனம், புத்தி, சித்தம், அகங்காரம், ஆசை, கோபம் இவற்றால் நினைத்தது நிறை வேறாது ஏமாற்றமடையும் மனிதனின் மூச்சுக்காற்று உடலை தணலாக்கி உறுப்புகளைக் கெடுத்து விடுவதால் விரைவிலேயே மாண்டுவிடுகிறான். என்னால் காக்க முடியாமல் போவதற்கு வேகாக்கால் காரணம் என வரமுற (அவனின் வாழ்நாள் இயற்கையாக முடியும் வரை) அனுக்கிரகம் கிடைக்காமல் போவதுண்டு என்ற சற்குருவே வருக!* **(1050)**

**(சிவரகசியம்)** *மனிதன் தனக்குத் தரப்பட்ட மேலான அழியா நிலை பெறத் தகுதியுள்ள உடம்பை (தன் இச்சைகட் காகவே வாழ்ந்து வரும் காரணத்தால்) அதன் உறுப்புக் களை நைந்து போன துணிபோல இற்றும், கிழிந்தும், இனி உடுத்தவே முடியாத நிலையில் (கண் தெரிய வில்லை, பற்கள் இல்லை, நரை, திரை, மூப்பு, என எண்ணிலடங்கா உடல் வியாதிகள்) உள்ளதால் அவன் உடலை அழித்து வேறு உடலைப் பெறும் நிலைக்கு ஆளாகிறான். அந்தப் பிறப்பு மரமாகவோ, மிருக*

*மாகவோ கூட இருக்கலாம். ஆனால் இந்த நிகழ்வுகள், சட்ட நியதிகள் எல்லாம் அவன் அறிவில் ஏறுவதில்லை. காரணம் அந்த அறிவு செத்து (சாகாத்தலையறியாமல்) சாகிறான். அவனுக்கு அந்த நவநிலைகளை (விந்து, நாதம், பரவிந்து, பரநாதம், அபரவிந்து, அபரநாதம், திக்ராந்தம், அதிக்ராந்தம், அருள்) அறியக்கூடத் துணிவ தில்லை என்பதை எனக்குக் காட்டிய ஞான சற்குருவே வருக!*

**(சத்தியல்)** *சத்து என்பது இறைவன்தான். அவன் இந்த ஆன்மாவுக்கு அறிவு தரவேண்டி, மாயையை ஆதார மாகக் கொண்ட உடம்பையும், மனத்தையும், கரணங் களையும், கலைகளையும், புவனத்தையும், போகத்தை யும், ஐம்பூதங்களையும் தந்து நல்வழிப்படுத்துவதே அந்த சத்தின் இயலாக (இயல்பாக, தத்துவமாக, ஆணையாக. அனுபவமாக) அனைத்தையும் தந்ததுடன், சித் எனும் அறிவால் தெளிவு பெற்று மேன்மையடைய ஆறு ஆதாரங்கள், மற்றும் சிரநடு சிற்றம்பல சித்திலேயே அமர்ந்தும் முழுமை பெறச் செய்ய என்னென்ன முயற்சிகள் செய்திருக்கிறான் என்றும், அத்தகைய அனைத்து விஷயங்களையும் தெரித்த (தெரிந்து தெளிய) வைத்த அருட் சிவ குருவே வருக!*

**(அறிபவை)** *அண்டங்கள், கோள்கள், ஐம்பூதங்கள், உலகம், உயிர்கள், பிறப்பு, இறப்பு, ஆண்டவன், ஆன்மா, கரணம், நேயம், காருண்யம், பிறவாமை, இறவாமை, பிரியாமை, சத்து, சித்து, ஆனந்தம், சாகாக்கல்வி என எவற்றை யெல்லாம் அறிய வேண்டுமோ, அவற்றையெல்லாம் அறிவித்து, என்னுள்ளே நான் கருவிலிருந்த நாள் முதல் கலந்து பிரியாமல் விளங்கும் பெரிதினும் பெரிதான சற்குருவே வருக!*

**(கேட்பவை)** *வேதம், நாதம், போதம், கலை போன்றவற்றைக் காதால் கேட்டும், ஓங்கார, நாதாந்த நிலை அனுபவப் பட்டும், இறைவன் சாற்றியதையும், இரகசியமாய் சொன்னதைக் கேட்டபோதும், இறைவனே உள்ளிருந்து*

*கேள்விகளாய்க் கேட்டும், அவனே பதிலாய் இருத்திய எல்லாவற்றையும் கேட்பித்து என்னுள்ளே இன்னும் கேட்க வேண்டும், இருக்க வேண்டும் என்ற (எண்ணம்) வேட்கை விளங்கிக் கொண்டே இருக்கச்செய்த மிக மிகத் தூயவனாக விளங்கும் விமல (மலமற்ற அப்பழுக் கற்ற) சற்குருவே வருக!*

**(காண்பவை)** *ஆணிப் பொன்னம்பலத்தே கண்ட காட்சி, சிற்றம்பலக்காட்சி. கூடம், மாடம், தம்பம், மணி, விளக்கு, ஒளி, ஜோதிமலை, அண்டம், அண்டாண்டம், அகவொளி, ஜீவக்காட்சி, ஆன்மக்காட்சி, கருணையும் சிவமும் ஒன்றெனக் காணும் காட்சி, சன்மார்க்கம் நீடூழி துலங்கும் (சிறக்கும்) காட்சி போன்றவற்றை எல்லாம் எனக்கே காட்டுவித்து மாண்பதம் (நீதி நெறியுடனான பக்குவம்) அளித்து ஒளிரும் சற்குருவே வருக!* **(1060)**

**(செய்பவை)** *தில்லையிலே திரை தூக்கி தரிசித்தபோது நகைக்க வைத்தாய், வீதியிலே ஆடையிலே எனை மணந்தாய், சன்மார்க்க சங்கம் துலங்க தருமச்சாலை, ஞானசபை கட்டச் செய்தாய், ஒளிநிலை பெறச் செய்தாய், உயிர்கட்கு உதவும் வகையில் திருவருட் பாவை செய்வித்தாய், உயிர்களின் துயர்கண்டு கண்ணீர் விடச்செய்து கருணையால் அதைத் துடைக்கும் அருள் செய்தாய். இத்தனைக்கும் மேலாக ஐந்தொழிலை செய்யப் பணித்தாய், இப்படி என்னை உயரச்செய்து உய்வித்து ஓங்கி நிற்கும் சற்குருவே வருக!*

**(உண்பவை)** *(மனிதன் ஆணவம், கன்மம், மாயை என்னும் மலங்களைத் தானே ஓயாமல் உண்கிறான். அதன் விளைவாக இன்னும் பல வினைகளை சேர்த்துக் கொண்டு அடுத்த பிறவியில் மனிதனாக பிறப்பதற்கே கூட வழியற்று மாண்டு போகிறான்)*

*இறைவன் எனக்கு அன்றாடம் அன்பு, அறிவு, தயவு, இறை சிந்தனை, கொல்லாமை, எளியவர் துயர் கண்டு அழுதல், அதைத் துடைத்தல், இறையருள், ஞானம், ஒருமை, ஆன்ம நேயம், ஆன்மலாபம், ஜீவகாருண்யம்,*

*சத்விசாரம் போன்றவைகளே நான் உண்ணத்தக்கவை என உண்ணுவித்து என்னுள் (பண்பு) இரக்க சுபாவம் மட்டுமே மிகுந்து விளங்கச் செய்த இறைவனான சற்குருவே வருக!*

**(சாகாக்க)** *மரணமுறாமல் நிலைத்து நிற்கும் வாழ்வினைப் பற்றிய கல்விதான் சாகாக்கல்வி. இது பல வழிகளில் கற்கக்கூடியதாய் இருந்தாலும் கூட அது தரமான (மேன்மையான)தாக இருக்க வேண்டுமென்றால் அதை தயவினால் அன்றி வேறு எதனாலும் பெறக்கூடாது. அந்தத்தரமான சாகாக் கல்வியைத்தான் எனக்குக் கற்பித்து அதன்பிறகு ஏகா (நீங்காத) கரப்பொருள் (கைப்பொருளாம்) கருணை என்பதை எனக்கு ஈந்த (கொடுத்த) சற்குருவே வருக!*

**(சத்திய)** *சித்திகள் என்பது மந்திர, யந்திர, அட்ட, யோக, ஞான சித்திகள் எனப்பலவுண்டு. ஆனால் இவைகள் நிலையானது அல்ல. சத்தியம் என்றும் நிலைத்திருப்பது. சிவசத்தி - ஆன்மாவிலிருந்து வெளிப்படும் இறை அருளின் அற்புத ஆற்றலால் விளையும் சித்திகள். இது நித்தியமானது. அந்த சிவசத்தியை அந்த சத்தியப் பெருந்தகை அளித்து என் உள்ளேயும் விளங்கிக் கொண்டிருக்கும் அந்த சற்குருவே வருக!*

**(எல்லா)** *ஒரு சிற்றணு வடிவினனான என்னை, எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்த என்னை எட்டிரண்டு அறியாமல் இருந்த என்னை, எட்டிரண்டு அறிவித்து, மெய்யறிவு, திரிதேக சித்தி, ஒளி உடம்பு நிலை கொடுத்து, ஐந்தொழில் வல்லபம் தந்து ஏறாநிலை ஏற்றி, சித்தெலாம் வல்லான் இவன் என என்னை உயர்த்திய சற்குருவே வருக!* **(1070)**

**(சீருற)** *ஒவ்வொரு பிறவி எடுக்கும்போதும் ஒரு தாய் ஆதாரமாய் இருப்பாள். ஆனால் எத்தனை பிறவி எடுத்தாலும் உயிருக்கு ஒரு தாய்தான் என்பதே உண்மை. இந்தப்பிறவியில் எனக்கு ஒரு பெயர் வைத்தார்கள்.*

அந்தப் பெயரையே நான் தக்க வைத்துக்கொண்டு நான் வாழ வேண்டும் என்பதற்காக சீர்உற - ஞான தேகம் உறவேண்டியும், அருளாம் தேசுற - பிரணவ தேகத்தை உற வேண்டியும், அழியாப் பேருற - இந்த சிதம்பரம் இராமலிங்கம் என்னும் பெயர் அழியாமல் உறவேண்டி யும் எனக்கு சுத்த வடிவமும் கொடுத்த நற்றாயே வா!

**(பொருந்தி)** சடப்பொருளான அணுவாயிருந்த எனக்கு, உயிர் கொடுத்து பல பிறவிகளைக் கொடுத்து, இப்பிறவியில் பொருந்த வைத்து அருள் என்னும் பெரும் போகத்தையும் கொடுத்து இன்பமடைந்திடு என்று பெருந்தயவால் என்னைப் பெற்ற நற்றாயே வா!

**(ஆன்றசன்)** எத்தனையோ மத மார்க்கங்களில் பல நெறி யாளர்களை ஈன்று இவ்வுலகுக்கு அனுப்பினாய். அவர்களும் நீ இட்ட பணிகளைச் செய்து கொண்டே வாழ்வையும் முடித்துக் கொண்டனர். அதற்கு ஆன்ற (மேலான) சன்மார்க்கத்தைத் தோற்றுவித்து அதற்கு அணிகலன்களைப் பூட்டுவித்து நித்தியனாகி வாழ வேண்டி என்னை ஈன்றதுடன் அருளமுது அளித்து வளர்த்த நற்றாயே வா!

**(பசித்திடு)** பிறந்தது முதல் உணவு உட்கொண்டே உடல் வளரும். இதன் காரணம் பசி. குழந்தைப் பருவ முதல் நேரம் காலம் கூட இல்லாமல் எனக்கு உணவளித்தது மன்றி, பசியுடன் உறங்குவதைப் பார்க்கவும் சகிக்காமல் அருவமான நீ உருவமாயும் வந்து பசி தீர்த்ததையும், என்னுடன் வசித்த (வசனித்து - பேசியதையும்) நினைவு கூர்கிறேன். இது எதன் பொருட்டு? உனது அருளும் வாய்மையும் மட்டுமேயல்லவா நற்றாயே? நீ வா!

**(தளர்ந்த)** வயிற்றுப் பசியைப் போக்கியதுண்டு எனினும் எனது உள்ளம் சோர்வுற்று இருந்தபோது அருகில் வந்து எதன் பொருட்டு சோர்வுற்றாயென வினவி அதற்கு மருந்தாய் உள்ளம் தெளிவிக்கும் அருள் உணர்வைத் தந்து அகமும் புறமும் ஒருமையுடனிருக்கும் பக்குவம் வருவித்த நற்றாயே வா! **(1080)**

**(அருளமுது)** *(வள்ளலார் அருளிய உரைநடைப்பகுதி பக்கம் 432-ல் குறிப்பிட்டுள்ளபடி) பஞ்ச அமுத ஸ்தானங்கள்: (1) நாக்கின் அடியில் இனிப்புள்ள ஊற்று ஜலம்போல (2) உள்நாக்கில் இளகின சர்க்கரைப் பாகுபோல (3) மூக்கு முனையில் காய்ச்சின சர்க்கரைப் பாகுபோல (4) நெற்றி நடுவில் முதிர்ந்த சர்க்கரைப்போலாகி (5) பிறகு உள்ளே இனிப்புள்ள குளிர்ச்சி பொருந்திய மணிக்கட்டி போல இருக்கும் ஐவகை அமுதமும், எல்லாவற்றிற்கும் மேலாக நினது அருளமுதே முதலானது என்று எனக்கு அதைத் தெருட்டியளித்த அருட்செல்வ நற்றாயே வா!*

**(இயலமுதே)** *பிண்டம் உருவாவதற்கு இயல்பான முதல் அமுதமானது தோல், எலும்பு, தசை, மூளை, சுக்கிலம், இரத்தம், இரசம் ஆகும். இவைகளை ஆதாரமாகக் கொண்டே ஆறாதாரம் வழியாக குண்டலியானது சகஸ்ராரத்திற்குச் சென்று ஏழ்நிலையில் உய்ய வைக்கும் என எனக்கு அருளிய இப்பிண்டத்திற்கு உரிய நற்றாயே வா!*

**(நுண்புறும்)** *இரசவாதம், யோகம், தவம் போன்றவற்றால் கைகூடும் அட்டமாசித்திகள் மனிதருக்கு நட்பா யிருக்கும். அத்துடன் ஆன்மாவின் உள்ளேயிருக்கும் அருள் அமுதம் சித்திக்க வேண்டுமென்றால் கருணை யும் அறிவும் செயல்பட வேண்டும். எனவே அட்டமா சித்தியுடன் அருளமுத சித்தியும் சேர்ந்து (ஒன்பது) நவவகை சித்தியாகி நற்பண்புகளுடன் நானிருக்க எனக்கு அருளும் உயர்குணமுள்ள நற்றாயே வா!*

**(மற்றுள)** *இதைத்தவிர மற்றுமுள்ள அமுதங்கள் ஐம்பூதங் களால், உணவுகளால், மூலிகைகளால் மற்றும் பிற வற்றால் வரும் அமுதத்திற்கிணையானவற்றை யெல்லாம் என்னை உண்ணச் செய்து ஓங்கச்செய்யும் அருள் நற்றாயே வா!*

**(கலக்கமு)** *எண்ணற்ற பிறவிகளை எடுத்தெடுத்து பல துன்பங்களை அடைய நேர்ந்தது. வினைகள் சேர்ந்தது. எனினும் இப்பிறவியில் அத்தனை கலக்கங்களையும்*

*அச்சங்களையும் தொலைத்து எனது உள்ளத்திலிருந்த துன்பத்தையும் அறவே நீக்கி அருளிய நற்றாயே வா!*

**(1090)**

**(துய்ப்பினி)** *உலகர்களைப் போல போகத்தில் துய்க்காமல், ஈயென்று கேளாத இயல்பினில் துய்த்தேன், ஈது இடு என்றபோது அதையிட்டுத் துய்த்தேன், இல்லாமை எனக்கில்லை எல்லார்க்குந்தருவேன் என்று தந்து துய்த்தேன். இப்படிப்பட்ட சுகங்களையெல்லாம் பெறு என எனக்கே அளித்து, தளர்வு, சோர்வு இல்லாமல் தவிர்த்த இன்புடைத் தாயே வா!*

**(சித்திகள்)** *எல்லா சித்திகளையும், எல்லா அற்புதங்களை யும், அறிந்திட, தெரிந்திடச் செய்திட, மாற்றிடத் தக்கதான சக்தியை எனக்கே அளித்த பெருந்தயவுடைய தாயே வா!*

**(சத்திநிபா)** *இருவினை ஒப்பு எனப்படும். பாவ புண்ணியம் பூஜ்ஜியம் ஆகிவிட்டால் அந்த உயிர் உடனே பலபரி பாகத்தை அடையும். முன்பு மறைப்புச் சக்தியாயிருந்த திருவருள் இப்போது அருட்சக்தியாக மாறி உயிர் அறிவில் பதியும். இதுவே சத்திநிபாதம். இதைப்பெறும் உயிர்கள் இறைவனால் உபதேசிக்கப்படுவர். அந்த நிலை எனக்கு அளித்து அதற்கும் மேல் நிலையாம் சிர நடுவில் உளம் பதித்து (திருவடி தீட்சை) அருள் ஒளியாய் நிலைக்க வைத்த மரபு (பழைமை) குணத்துடன் உள்ள நற்றாயே வா!*

**(சத்திசத்)** *இந்த நிலை பெற்றவுடன் சத்தி சத்தர்களெல்லாம் என்னிடம் வந்து நின்று நாங்கள் எதையெல்லாம் செய்ய வேண்டும் பணித்தருள்வீர் என்று விண்ணப்பித்து நிற்கும் வண்ணம், எனக்கு அவர்களை ஆட்சி செய்யும் சித்தியை அளித்த அற்புதத் தெய்வமான நற்றாயே வா!*

**(தன்னிகர்)** *நான் எத்தனையோ பிறவிகள் எடுத்தெடுத்து வாழ்ந்த போதெல்லாம் காட்டாது இந்தப்பிறவியில் தான் எனக்கு தன்னிகரில்லாத் தலைவனைக்*

*(அருட்பெருஞ்ஜோதி) காட்டி, என்னை மேலேற்றியும் விட்ட இனிய குணமுள்ள நற்றாயே வா!* **(1100)**

**(வெளிப்பட)** *எவையெல்லாம் இவ்வுலகில் வெளிப்பட வேண்டும் என அருட்பெருஞ்ஜோதி விரும்பியதோ (காருண்யம், கொல்லாமை, சாதி, மத பிரிவுகளற்ற ஆன்மநேய சமுதாயம் போன்றவை) அதை எனக்குத் தந்து சன்மார்க்கம் தோற்றுவித்து அதன் விளைவு களையும் (சாகாக்கல்வி, முத்தேக சித்தி, ஐந்தொழில் வல்லபம் போன்றவை) ஒவ்வொன்றாக அளித்து அளித்து இன்பத்தில் திளைக்கச் செய்யும் மூலதனமாக இப்பிறவியை எனக்கு அளித்த அன்புடைத் தாயே வா!*

**(எண்ணக)** *அகத்திலே உள்ள அந்தக் கரணங்கள், புறத்திலே உள்ள புறக் கரணங்களால் நான் என்னவெல்லாம் அறிந்தும், நினைத்தும், ஒதுக்கியும், உள்வாங்கியும், அபகாரம் செய்தும் உபகாரம் செய்தும், இறையை நினைந்தும், மறந்தும் செய்தவைகளை எல்லாம் இப்பிறவியில் மட்டுமல்ல, இதுவரை எடுத்த பிறவிகளில் கூட எஞ்ஞான்றும் (எப்போதும்) நீ எண்ணிப் பார்த்துக் கொண்டே, கண்களைக் காப்பது போன்றே என்னைக் காக்கும் கருணை நற்றாயே வா!*

**(இன்னருள்)** *எவரும் பெறற்கு அரிதான இனிய அருளமுதம் அளித்ததுடன், எலும்பு, தோல், இரத்தம் போன்ற மண்ணால் ஆன இந்த சாதாரண உடம்பை, சுத்த உடம்பாக்கி, இறவாத திறம் பெற்ற தரமான உடம்பாக்கி என்னை வளர்த்திடும் இன்பத்தின் உறைவிடமான தாயே வா!*

**(என்னுடல்)** *சாதாரண மனிதனாய் இருக்கும் என் உடல், என் உயிர், என் அறிவு எல்லாம் அந்தத்தரத்திலும், தன்மையிலும் இருந்தது. ஆனால் நீ அதை மாற்றி உன் உடல், உன் உயிர், உன் அறிவு என்று அதை ஆக்கிக் கொண்டாய். ஒளிரவும் வைக்கிறாய். அப்படிப்பட்ட தயவுடைத்தாயே வா!*

**(தெரியாவகை)** *ஆன்மிகத்தில் படியேறலாமென்று ஒற்றியூர், தில்லை தலங்கட்குச் சென்றேன். தருமச்சாலையமைக்க எண்ணங்கொண்டு சிறிது நிலம் வேண்டி யோசித்தேன். கைகூடவில்லை. எந்த வழியும் தெரியாமல் மனம் தளர்ந்து, உடல் சோர்ந்தேன். இதைக்கண்டு தரிக்க முடியாமல் உனக்கு வெறு வெளியில் ஏன் நாட்டம்? இதோ பெருவெளி தருகிறேன். தருமச்சாலை கட்டு. ஒரு திரை என்ன ஏழு திரைகளை நீக்கும் ஞான சபையும் கட்டு என்று என் அருகணைந்து என் கைக்கு அந்த நிலம் எட்டும்படிச் செய்த தயவுடைத்தாயே வா!* **(1110)**

**(சினமுதல்)** *(உரைநடை : எச்சரிப்பு பத்திரிகை 25.11.1872) தருமச் சாலையிலுள்ளவர்கள் அடிக்கடி சண்டையிடு வதைப் பார்த்து எச்சரிப்பு பத்திரிகை விடுத்தும் - எதிர்த்து சண்டை தொடுப்பவர்களும் இங்கிருத்தல் அனாவசியம். அப்படிப்பட்டவர்களை ஒரு பேச்சு மில்லாமல் இந்த இடம் விட்டு போய்விடத்தக்க முயற்சி எடுக்க வேண்டும் - சிதம்பரம் இராமலிங்கம்.*

*எனக்கு ஆசை என்று ஒன்று இருந்து அது நிறை வேறாமல் போனால் அதனால் சினம் முதலியன வரலாம். ஆனால் எனக்கு இந்த ஜனங்கள் எல்லாம் ஆண்டவன் எப்போது வருவார் என்ற விசாரமில்லாமல் தங்களுக்குள்ளேயே சண்டையிட்டு வருகின்றனரே என்று சினம் வந்து எச்சரிக்கை பத்திரிக்கை வெளியிட்ட குறைகளை எல்லாம் தீர்த்து எனது கனவிலும் (மக்களின் நலனே கனவு) நனவிலும் என்னைப் பிரியாத கருணை நற்றாயே வா!*

**(தூக்கமும்)** *இறைவன் வரும் நேரத்தில் இந்த மனிதர்கள் விழித்திராமல் தூங்குகிறார்களே - இறைவனின் கருணையைப் பெறும் முயற்சிகள் ஏதும் செய்யாமல் உள்ளனரே என்ற என் துன்பமும் சன்மார்க்கத்தை எப்படி இவர்கட்குப் புகட்டுவேன் என்ற அச்சமும் ஏக்கமும் நீக்கிய என் தனித்தாயே நீ வா!*

**(துன்பெலாம்)** *மக்களின் மனோ நிலையையும், பழக்கமும் கண்டு நீ துன்பப்படாதே. அதைத்தவிர்த்து சன்மார்க்கம் துலங்கும் என்பதை நம்பு என்று என் மனதை அன்பினால் நிரப்பி இன்பெலாம் அளித்த என் தனித்தந்தையே வருக!*

**(நாயிற்கடை)** *இழி குணங்கள் பல கொண்டது நாய். குறிப்பாகத் தன் இனத்தை வெறுப்பதில் அதற்கு முதலிடம் உண்டு. ஆனால், மனிதன் தோன்றிய பிறகு, அதைவிட இழி குணமுள்ளவர்கள் பலர் குரோதம் பாராட்டுவதைப் பார்க்கும்போது நாயினும் கடையனாயிருப்பது கண்கூடு, நானும் அப்படியே (மனித குலத்தின் பொருட்டு தன்னை முன்னிலைப் படுத்திக்காட்டி) எனினும், நலம் பெற வழி காட்டி இருக்கிறாய். ஆனால் அதைவிட தயவில் பெரிதாய், அடித்தாலும் அணைக்கும் குணமுடைய என் தந்தையே வருக!* **(1120)**

**(அறிவிலாப்)** *ஆறு மாதக் குழந்தையாய் இருந்தபோது தில்லை தரிசனத்தின்போது சிரித்ததே அதுவா? ஒன்பது வயதில் தெய்வ மணி மாலை பாடியதா? ஞான சம்பந்தரைப்பற்றி சொற்பொழிவு ஆற்றியதா? தமிழ் தந்தை மொழி எனத் தெளிய வைத்ததா? எது அறியாப்பருவம்? கருவில் கலந்த துணை எனும்போது அது அறிவுடன் சேர்ந்தது தானே, அறிவுடையது தானே தவிர அறிவிலாப் பருவம் என்று சொன்னது நம் பொருட்டுதான் - உலகருக்காகத்தான் - எனச் சொல்லி, வணங்கி பிரிவு இலாது என்னுள் அமர்ந்த பேரருள் தந்தையே வருக!*

**(புன்னிகர்)** *புல் கூட ஆடுமாடுகட்கு உணவாகப் பயன் படுகிறது. அந்தளவு கூட உபசரிக்கத் தெரியாமல் - புல்லுக்குக் கூட நிகர் இல்லாமல் தயவற்றவனாக இருந்தாலும் என் பொருட்டு இங்கு வந்து என்னைப் பொருந்திய தன்னிகரில்லாத தனிப்பெரும் தந்தையே வருக!*

**(அகத்தினு)** *எனது உள்ளேயும் புறத்தேயும் அமர்ந்தவர்தான் அருட்பெருஞ்ஜோதியினை - இதுவரை எவரும் பெறாததை - எனக்கே சகத்தினில் (இந்த உலகத்தில்) தந்தவரே எனது மெய்யான மெய்க்குத் தந்தையே வருக!*

**(இணையிலா)** *நான் ஈடு இணையிலாக் களிப்பில் எய்தி யிருக்க எண்ணிய ஆண்டவர் எனக்கு அன்பு அறிவு ஆகிய இரண்டு துணையடிகளை (ஆதாரங்களை) என் சென்னியில் (முடிமீது) சூட்டிய தந்தையே வருக!*

**(ஆதியீறு)** *அப்படி அன்பையும், அறிவையும் துணையாகக் கொண்ட இந்த சன்மார்க்கத்தை ஆதி (தொடக்கமும்) ஈறு (முடிவும்) இல்லாது அருள் அரசாட்சி செய்து எனக்கு இப்போது ஜோதி மா மகுடம் (ஒளி வட்டம்) சூட்டிய (உருவாக்கிய) என் தந்தையே வருக!* **(1130)**

**(எட்டிர)** *மகுடம் சூட்டப்பட்ட பிறகு எட்டு இரண்டுகளை* (8 x 2) *அறிவித்ததால் நான் எவ்வித இடையூறுமின்றி*
*(1) சாதல் பிறத்தல் அவத்தை தவிர்த்தேன்*
*(2) அருளும் பொருளும் பெற்றேன்*
*(3) காமம் மயக்கம் தாண்டினேன்*
*(4) தாங்கல் விடுதல் சமமாயிற்று*
*(5) ஏங்கல் சலித்தல் இளைப்பு நீங்கினேன்*
*(6) உறவும் பகையும் ஒன்றதாயிற்று*
*(7) ஒன்று இரண்டு என ஓதும் பேதம் ஓடிப்போயிற்று*
*(8) மறைப்பு நினைப்பு எனும் வலிப்பு நீங்கினேன்*
*பிறகு என்தனை ஏற்றி பட்டி மண்டப (வித்தியா மண்டபம் - சான்றோர் கூடும் மண்டப)த்தில் பதித்து (அமர வைத்து), தலைமை ஏற்கச்சொல்லி புன் மார்க்கம் இல்லாத சன்மார்க்கம் இது என தீர்ப்பு வழங்கச் செய்த மெய்த்தந்தையே வருக!*

**(துங்கோல்)** *அந்தச் சபையின் அரியணையில் அமர்ந்த பின் (அரசனாயிருந்தால் செங்கோல் என்பதைக் கையில் பிடித்திருப்பான். அதன் அளவு அரசனின் உயர மிருக்கும்) ஆண்டவனின் செங்கோலான ஒளிக்கதிர்*

*(சாதாரண சூரியனின் ஒளிக்கதிர் நமது பூமியின் வரும் வரையில் உள்ள நீளமே ஒன்பது கோடியே முப்பது லட்சம் மைல்கள் என்றால்) அண்டாண்டங்கட்கு அப்பாலும் செல்லும் அருட்பெருஞ்ஜோதிக் கதிரின் அளவென்ன? அந்த அளப்பரிய நீளம் கொண்ட அருட்பெருஞ்ஜோதி செங்கோலை கையில் பிடித்து ஆட்சியை நடத்து எனச் செப்பிய என் தந்தையே வருக!*

**(தன்பொருள்)** *அதைப்போலவே தன் அரசாட்சியில் தன் பொருள் அனைத்தையும், என் பொருளாக்கியது என்பது அண்டங்கள், கோள்கள், உலகம், உயிர்கள், ஐம்பூதங்கள், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் வரையிலான செயல்பாடுகள் எல்லாம் அடங்கும் என அருளிய என் தனித் தந்தையே வருக!*

**(தன்வடிவு)** *ஆண்டவன் அருவாயும், உருவாயும், அரு உருவாயும் இருப்பவன், அப்படிப்பட்டவன் எல்லா வடிவத்தையும் தன் அரசாட்சியில் என் வடிவமாக்கி விட்டான் என்பது எப்படி? அருட்பெருஞ்ஜோதி இறைவன் இதுவரை வெளிப்படாமல் அகத்திலேயே ஆட்சி செய்து வந்திருப்பதும், சன்மார்க்கம் தொடங்கும் காலம் வந்து விட்டதால் புறத்திலும் அந்த வெளிப்பாடு தோற்றும் உன் வடிவினை அனக வடிவாக்கியதே உண்மை என்ற என் தனித்தந்தையே வருக!*

**(தன்சித்த)** *ஐம்பூதங்களின் துணை கொண்டு ஒரு சிறிய விதை ஆலமரமாகிறது. ஒரு துளி விந்து ஒரு மனிதனை உருவாக்குகிறது. ஒரு ரொட்டித்துண்டை இருவர் சாப்பிட்டாலும் ஒருவருக்கு "ஏ" பிரிவு இரத்தமாகவும், இன்னொருவருக்கு "ஓ" பிரிவு இரத்தமாகவும் அவரவர் மரபணுவின்படி மாறுகிறது. இப்படி அண்டத்தில் அனந்தங்கோடி சித்துக்களை அன்றாடம் ஆண்டவன் செய்து கொண்டிருக்கிறான். இவை அட்டமா சித்திகள் போல மறைவதில்லை. அப்படிப்பட்ட சித்துக்களை எல்லாம் இதுவரை "தான்" தனது சமுகத்தினில்*

*(சந்நிதியில்) செய்து கொண்டு இருப்பதை இப்போது என் சித்தாக்கிய என் தனித்தந்தையே வருக!* **(1140)**

**(துன்வசமா)** *தத்-சிவம், துவம்-தன்மை. சிவத்தன்மையாவது மனிதர்கட்கு 96 தத்துவங்களைக் கொடுத்து, படைத்து அதன் மூலம் அவன் வளர, உணர, உய்ய வழி செய்து இயக்குகிறான். அப்படி தன் வசமிருந்த தத்துவங்களின் ஆதாரமாயிருந்த சித்துக்கள் அனைத்தையும் என் வசமாக்கிய என் உயிர்த்தந்தையே வருக!*

**(துன்கையில்)** *அப்படி தத்துவங்களின் தந்தையான இறைவன் தன் கையில் பிடித்திருந்த தனிப்பெரும் (கருணை) ஜோதியை என் கையில் கொடுத்து இனி தத்துவங்களை கருணையுடன் இணைத்தே இயற்று என்று சொன்ன என் தனித்தந்தையே வருக!*

**(துன்னையும்)** *தன்னையும் (அறிவையும்), தன் அருட் சக்தியின் வடிவையும் (முயற்சியையும், செயல்பாட்டையும்) என்னையும் (உயிரையும்) ஒன்று (சேர்) என உய்யும் வகை இயற்றிய தந்தையே வருக!*

**(துன்னியல்)** *தம்மால் படைக்கப்பட்ட உயிர்கள் அகங்காரத்தினால், மாயையினால், பாசத்தில் அழுந்தி நற்கதியடையாமல் இருப்பினும் மறக்கருணையால் அதைத் தண்டித்து, மீண்டும் திருந்தி வாழ வழி செய்து கொண்டே இருப்பது இயல்பு. எந்த உயிரையும் கைவிட மாட்டான் என்பதே அவனது இயல்பும் செயல்பாடும். எனவே தன் இயலை என் இயல்பாக்கியும், தன் செயலை என் செயல்பாடாக்கியும் அதைத் தொடருமாறு பணித்த என் தனித்தந்தையே வருக!*

**(துன்னுரு)** *இறைவன் தன் உரு என்பது கருணை. இறைவன் தன்உரை என்பது சத்தியம். எனவே கருணையும் அக, புற, அண்ட, பிண்ட தத்துவங்களைக் கொண்டு உயிர்கள் உய்யவும், ஒளி நிலை பெறும் உண்மைகளை எனக்குத் தெளியும் விதத்தில் தெரியப்படுத்திய என் தனித் தந்தையே வருக!* **(1150)**

**(சதுரப்)** *விவேகம், சமநோக்கு, காரிய சமர்த்தனான பேரருளாளருக்கு விருப்பு, வெறுப்பு இன்றி உயிர்களிடம் தொடர்புள்ள தலைவனுக்கு எதிராக, நிகராக, சமமாக எவ்வுலகிலும் எவருமின்றி ஓங்கி உயர்ந்து நிற்பவராகிய என் தந்தையே வருக!*

**(மனவாக்கு)** *மனம் என்பதற்கு வரைப்பு (எல்லை) கிடையாது. வாக்கு (வார்த்தை) என்பதற்கும் எல்லை கிடையாது. எனவே அருளாளர்களின் இனத்திற்கு வாக்கு, வார்த்தை அல்லது மொழி என்பது மௌனமே. அந்த இனத்தின் மௌனமென்னும் வாக்கை எனக்கு அருளிய எனது உயிர்த்தந்தையே வருக!*

**(உணர்ந்து)** *உணர்ந்து - மனஅறிவினால் உணர்ந்து, உணர்ந்து - ஜீவஅறிவினால் உணர்ந்து, உணரினும் - ஆன்ம அறிவால் உணர்ந்தாலும் கூட, உணராப் பெருநிலை - அருள்அறிவு என்பதை உணராப் பெருநிலை என்ற நிலை எனக்கு இல்லாமல் அந்த அருளறிவு அணைந்திட (கிட்டிட) எனக்கே அருள் செய்த தந்தையே வருக!*

**(துரிய)** *சாக்கிரம், சொப்பனம், சுழுத்தியில் வாழ்பவரே உலகர். துரிய நிலை சென்று அத்துடன் நின்றோர் எஞ்சிய சாதகர்கள். ஆனால் துரியம், துரியாதீதம், குரு ஜாக்ரதம், சிவ துரியம், குரு துரியாதீதமாம் சுக பூரணம் என்னும் பெரிய வாழ்வளித்த பெரும் தனித்தந்தையே வருக!*

**(ஈறிலாப்)** *மூவர்களாகட்டும், தேவர்களாகட்டும், முத்தர் களாகட்டும், சித்தர்களாகட்டும், இவர்கள் ஈறு (இறவாமை) பெற்றிருக்கலாம். ஆனால் இவர்கள் எல்லோரையும் கடந்த நிலையாம் ஒளிதேகமும், ஐந்தொழில் வல்லபமும் பெறும் பேறளித்து என்னை ஆண்ட பெருந்தகைத் தந்தையே வருக!* **(1160)**

**(எவ்வகை)** *அஷ்டமா சித்திகள் பெற்றவர், பஞ்சாக்கினி நடுநின்று தவம் செய்தவர், மந்திர, தந்திர, யோகிகள், ஞானிகள் என பலதரப்பட்ட திறம் படைத்தவர்களும்,*

*சென்று அடைய அரிதான நிலைகளை (முத்தேக சித்தி போன்றவைகளை, சாகா நிலையை) எனக்களித்த நற்றந்தையே வருக!*

**(இனிப்பிற)** *உலகர் இதுவரை வேண்டியது பிறவா நெறிதான். எனவே வள்ளலார் குறிப்பாக இனிப்பிறவா நெறி என்ற ஒன்றைக் கேட்கிறார். நாம் பிறவியுறுவதற்கு முதற் காரணமாயிருப்பவர் தந்தை (இறைவன்). எனவே அவரே முன்வந்து இனிப் பிறவாநெறி உனக்கு அளித்தேன் என்று அருளிய தனிப்பெருந் தலைமைத் தந்தையே இப்படிப்பட்ட வரம் தந்தையே நீ வருக!*

**(பற்றயர்)** *சன்மார்க்கம் என்பதை நிலை நிறுத்த வேண்டும் என்பது தலையாய பொறுப்பு. இருப்பினும் அதைச் செய்ய முடியுமா அல்லது வேறு மாற்று ஏற்பாடு இருக்கிறதா என்று எண்ணி அதன் மீதுள்ள பற்று அயர்வதைப் போல் தோன்றுகிறதே என அஞ்சினாலும், சன்மார்க்கத்தின்மீது எனக்குள்ள பற்றினைக் கண்டு, அணைந்து, என்னைப் பார்த்து சற்றும் பயப்படாதே என என்னைத் தாங்கிக்கொண்ட துணையே வா!*

**(தளர்ந்த)** *அப்படித் தளர்ந்து போன அத்தருணத்தில் என் தளர்வுகளை எல்லாம் தவிர்த்து உட்கிளர்ந்திட (உள்ளே ஒரு பேரொளியானது, ஒளிவீசி உள்ளேயே) அமர்ந்து விட்டது. எனக்குக் கிடைத்த உடம்பினுள் உள்ள மெய்யான மெய்யாம். அத்துணையே வா!*

**(துறையிது)** *அப்படி அமர்ந்த துணை ஆறுதல் சொல்லி அதற்கான துறை (இடம்) இதுதான், அதை நோக்கிச் செல்லும் துணிவுடன் பயணம் தொடங்கு. நீ அதற்குச் செல்ல வேண்டிய படிகள் இது என அன்புடன் மொழிந்த மெய்த்துணையே வா!* **(1170)**

**(எங்குறு)** *எல்லா இடத்திலுமுள்ள தீமைகள் என்ன? சாதி, மத சண்டைகள், உயிர்ப்பலி, கொலை, ஒழுக்கமின்மை மற்றும் உலகரின் நியதிக்குப் புறம்பான ஆசைகள். அதன் விளைவில் வரும் விபரீதங்கள்தான். இது சன்மார்க்*

*கத்தவரை தொடராது இரவும், பகலும் மெய்க்காவல் புரிய சித்தமாயிருக்கும் துணையே வா!*

**(வேண்டிய)** *எனக்கென்று விருப்பு கிடையாது. சன்மார்க்கம் பரப்பு முகமாக நான் ஆருயிர்க்கெல்லாம் அன்பு செயல் வேண்டும். நினது அருட்புகழை இயம்பிடல் வேண்டும் என வேண்டிய விருப்பமெல்லாம் எனக்கே ஈண்டு (இங்கிருந்து) அருள் புரியும் என் உயிர்த்துணையே வா!*

**(இகத்தி)** *இவ்வுலகிலுள்ளவர்களும், பரத்திலுள்ள மூவர், தேவர்களாலும் இந்த சன்மார்க்கம், முத்தேக சித்தி, சாகாக்கல்வி போன்றவைகட்கு எந்தவிதமான இடரும் வராது எனது அகத்திலும் புறத்திலும் அமர்ந்த மெய்த்துணையே வா!*

**(அயர்வற)** *நான் அயர்வுறும் போதெல்லாம் எனக்கு அருள் துணையாகி என் உயிரைவிட மேலான ஒருமையுடன் என் உடனிருக்கும் நட்பே வா!*

**(அன்பினில்)** *உலகத்திலுள்ள நண்பர்கள் உடலுக்கு ஊறு நேரா வண்ணம் உறு துணையாயிருப்பர். ஆனால் எனக்கோ எனது அன்பினில் கலந்து, எனது அறிவினில் உள்ள சில குறைகளை நீக்கும் எண்ணத்தில், அதைத் தெரிந்து கொண்டு, இன்பத்தில் திளைக்க வைத்த என் இன்னுயிர் நட்பே வா!* **(1180)**

**(நான்புரி)** *சாதாரணமாக உலகியல் நண்பர்கள் நான் ஒரு பாடலை எழுத அமர்ந்தால் அதற்கான வெள்ளைத் தாள், எழுதுகோல் எடுத்து வந்து தருவார்கள். ஆனால் இப்போது எனக்குக் கிடைத்த நண்பனோ நான் புரிய வேண்டியதையெல்லாம் தானே புரிந்து பாடலை எழுதி முடித்து விடுகிறான். அத்துடன் நில்லாமல் எல்லோரும் என்னைப் போற்றும்படியாக வான்பதம் (உயர்ந்த திருவடி) அளிக்கவும் வாய்த்தவனாகி உடனிருக்கும். நட்பே வா!*

**(உள்ளமும்)** *உடற்கூறாகிய உள்ளமும், உணர்ச்சியும், அதனுள்ளே உள்ள உயிரானது எள் எனக்கொண்டால்,*

*அதனுள்ளே உள்ள எண்ணெய் என்பது போல என் உள்ளே உறுகின்ற நட்பே வா!*

**(செற்றமும்)** *இதுவரை எடுத்த எத்தனையோ பிறவிகளில் நான் கொண்ட பெருங்கோபமும், அது விளைவித்த தீமைகளையும் தீர்த்து, நான் செய்த பிற குற்றங்களைக் கூட குணமாகக் கொண்ட என் நட்பே வா!*

**(குணங்குறி)** *என்னுடைய குணம் (குற்றம், இலட்சணம், தன்மை, தாழ்வு) குறி (தரம்) முதலியவற்றை சுட்டிப் பார்க்காமல், எள்ளாமல், தண்டிக்காமல் என்னையே அணங்கு (அச்சம்) அறக் கலந்து கொண்ட அன்புடைய என் நட்பே வா!*

**(பிணக்கும்)** *உலக மனிதர்கட்கிடையே அன்றாடம் நிகழ்வதில் ஒன்றாகிய பிணக்கு (சண்டை) பேதம் (உயர்ந்தவன், தாழ்ந்தவன் போன்றவற்றால் அமைதி என்பதே இல்லாமல் போய்விட்டது. அதற்கும் அப்பால் இந்த மனிதர்கள் உருவில் உள்ள பேயுலக மக்கள் இதற்கெல்லாம் காரணம் கணக்கு - எழுத்து (தலை யெழுத்து) தான் என்றும் புகன்றதையெல்லாம் தீர்த்து என்னைக் கலந்த நல்ல நட்பே வா!* **(1190)**

**(சவலை)** *தாய்ப்பால் தேவையான அளவு கிடைக்காத குழந்தை மெலிவுற்றுக் காணப்படும். இதை சவலை என்பர். எனது ஆன்மாவுக்கும் அருட்பால் கிடைக்காத தால் சவலையானதைக் கண்டு நெஞ்சம் விம்மியது. அந்த தளர்ச்சியையும், அச்சத்தையும் நீக்கி, கவலையை யும் நீக்கி என்னைக் கலந்த நல்ல நட்பே வா!*

**(களைப்ப)** *ஆன்மநேயம் என்பதை உலகரிடையே விதைப்ப தும், விளைவிப்பதுவும் மிகவும் களைப்பைத் தரும் பணி. அதைச் செய்யும்போது நான் இளைத்துப் போனதை அறிந்து, கிளைப்பறிந்து - வளையில் இருந்து மண்ணைத் தோண்டி உள்ளே சிக்கிக்கொண்ட ஒரு முயலை விடுவிப்பதைப் போல எடுத்து கலக்கம் தவிர்த்து எனக்கு உதவிய என் உயிர் உறவே வா!*

**(தன்னைத்)** *இறைவனாகிய உன்னை சுற்றமாகக் கருதி, உறவாகக் கருதி சுற்றத்தாரோடு தழுவி வாழ்தலை அறியும் தரம் சிறிதும் இல்லாத என்னை உறவாக்கி, சுற்றமாக்கி தழுவிக் கொண்ட என் உயிர் உறவே வா!*

**(மனக்குறை)** *ஆசைகளைக் குறைக்க வேண்டும் என்று தான் ஆண்டவனிடம் வேண்டலாமே தவிர, என் ஆசைகளை யெல்லாம் நிறைவேற்று என்று வேண்டினால் எதுவும் நிறைவேறாமல் மனக்குறைகளே சூழும். அதை நீக்கி நல்வாழ்வளித்து என்றும் எனக்கு உறவாகவே இருந்திடும் உறவே வா!*

**(துன்னும்)** *உலகம் தோன்றி 250 கோடி ஆண்டுகளாகின்றது. அப்போதிலிருந்தே அநாதியான ஆண்டவன் ஒரு தும்பு, தூசாக இருந்த என்னை நெருங்கி இன்றுவரை துன்னும் (பிரியாமல்) இருப்பதுடன் அநாதியான என் உயிராய் அமர்ந்து உருவாயுமிருக்கும் எனது உறவே வா!* **(1200)**

**(என்றுமோர்)** *என்றும் ஓர் நிலையாய் உள்ளது பேரண்டப் பெருவெளி. இதில்தான் எல்லாம் அடக்கம். என்றும் ஓர் இயலாய் என்பது பேரொளி. அதன் இயல் என்றும் மாறாது. என்றும் உள்ளது இயற்கை உண்மை. இதுவும் மாறாது. இப்படி புறத்தில் விளங்கிக் கொண்டிருக்கும் சத்தே வா!*

**(அனைத்து)** *உலகைச் சுற்றிலும் பல நாடுகளில் பலர் வாழ்ந்தாலும் அவர்கள் காணும் பொருள்களில் எதை விளங்கிக் கொள்கிறார்கள்? நமது நாட்டில் பகல் உச்சிப்பொழுது என்றால் அமெரிக்க நாட்டிலே அது அர்த்த ராத்திரியாயிருக்கும். பனி மலையில் வாழ்பவனுக்கு மலையென்றாலே பனிதான் என்கிறான். எரிமலைக்கு அருகே வாழ்பவன் மலை என்றால் நெருப்பு என்கிறான். இத்தகைய உணர்வு உலக முழுவதும் இருந்தாலும், அனுபவத்தில் உணரினும் இப்பிரபஞ்சத்தின் தன்மை இனைத்து (இத்தகையது தான் இவ்வளவிற்குள் உள்ளது தான்) என அறிய*

*முடியாதது தான் இயற்கை உண்மை என்னும் விளக்கம் தரும் சத்தே வா!*

**(பொதுமறை)** *சாதாரண மனிதர்கட்குத்தான் இந்த நிலையா என்றால் அப்படியுமில்லை. பல சமயங்களிலுமுள்ள அருளாளர்கள், வேத விற்பன்னர்கள் எல்லாம் போற்றும் வேதங்களின் முடிவு என்ன? அவைகள் புகலும் (சொல்லும்) இறைவன் என்பது இதுதான் எனச் சொல்ல அரிதான இயற்கை உண்மையாம் சத்தே வா!*

**(ஆகமமுடி)** *ஆகமத்தின் முடிவுகளும், அவை கூறும் இறுதி நிலையையும் பார்க்கும்போது - அது ஆணவ, கர்ம, மாயையின் தன்மை பற்றியும், அதனை நிவர்த்திப்பது பற்றியும் சொல்கிறது. எனவே இது இறைவனிடம் ஏகுதற்கு (செல்வதற்கு) வழி சொல்லாமல் அனுபவத்தில் அறிதலாம் எனச் சொல்கிறது. அவைகட்கு இதுநாள் வரை தெரியாத இயற்கை உண்மை என்னும் தனிச்சத்தே வா!*

**(சத்தியம்)** *இறை உண்மை என்பது இயற்கை உண்மையில் உள்ளது. மனித வடிவில் இந்த சத்தியம் - என்பது அகத்தில் உண்மையாயும், சத்தியம் - என்பது அகப்புற மாகிய உயிரில் வாய்மையாகவும், சத்தியம் - என்பது புறமாகிய உடலில் மெய்மையாகவும் இருக்கிறது. சத்து + இயம் என்பது ஒளியும் ஒலியுமாகும். இது விந்து, நாதம் எனவும் விளங்குவது. எனவே இத்தகையதாகிய போற்றுதலுக்கு உரியதான என் தனிச்சத்தே வா!* **(1210)**

**(துரியமும்)** *(உரைநடை மெய்ம்மொழிப் பொருள் விளக்கம் பக்கம் 203, 204 திருவருள் துரியத் திருவாக்கில் எழுந்த ... என்ற வள்ளலாரின் குறிப்பைக் கொண்டு "அந்தரானுபவ திட்டாந்தமாக உபாசிக்க விளங்குகின்ற சிதம்பர ராசியத்தைக் குறிக்கும் சிற்சபைக்கண்ணே ... சிற்சபைக் கண் புறத்து உலகெலாம் என்னும் அவரசத்து அந்நிலைக்கண் உணர்ந்து ஓதற்கரியவன்" ...)*

*துரியநிலை என்பது அக உணர்வு நிலை. அங்கு*

*தோன்றுவது அகண்ட வெளியின் பெருநிலை. இது துரியவெளி! பெருவெளி! அங்கு பெற்ற அருள் வாக்குதான் மெய்ம்மொழிப் பொருள் வாக்கு. இந்த மெய்ம் மொழிப் பொருள்தான் "பெரிய வான் பொருள்" (எவராலும் அடைய முடியாதது). அதைப் புறத்தி லிருந்தே போற்றி வாழ்வது வேதங்கள். அப்படிப்பட்ட அரிய மெய்ச்சத்தே வா!*

**(அன்றதன்)** *எனவே மெய்ச்சத்து என்பது வேதங்களிலும் அன்று (இல்லை) (காணப்படவில்லை) - அதன் அப்பா லுள்ள தானே தானாகி நிற்கும், அதன் பரத்து அது தான் (அதற்கு பரம்-உடல்-அகண்டவெளி). அதனுள் உள்ள பரம்-ஒளியும் அதுதான். அதனுள் உள்ள சூரியன், சந்திரன், நட்சத்திரம், பூமியும் அதுதான் என்று பிரபஞ்சம் முழுதும் நிறைந்த என் தனிச்சத்தே வா!*

**(என்றும்)** *என்றும் உள்ளதுதான் சத்து. இதற்கு தோற்றமு மில்லை அழிவுமில்லை. அந்த ஒளியும், நாதமும் எங்கும் நிறைந்திருக்கிறது. அந்த நாதமும், விந்துவும் உயிர்களாய் விளங்கிக் கொண்டிருக்கிறது. (இதை இயற்கை விளக்கம் என்பர்) அப்படி விளங்கிடும் என் தனிச்சித்தே வா!*

**(சத்திகள்)** *அந்த சத்தானது அருவம். அது சத்தியாயும், சத்தராயும் பல எண்ணிக்கையுடன் தோற்றம் பெற்று வெளிப்படும். அப்படி வெளிப்பட்டது பல சித்துக்களை, காரியங்களைச் செய்யும். இப்படி விளங்க வைக்கும் என் தனிச்சித்தே வா!*

**(தத்துவம்)** *அத்தகையதான சித்துக்களைச் செய்ய ஆதாரமா யிருப்பது தத்துவங்கள் 36 எனவும் தாத்விகங்கள் 60 எனவும் மொத்தம் 96 ஆகும் எனவும் சொல்லப்படும். இப்படி புறத்தில் தத்துவங்களாய் விளங்கும் என் தனிச்சித்தே வா!* **(1220)**

**(படிநிலை)** *படி என்பது பூமி. இவ்வுலகம். இதைப்போல பல படிகள் (கிரகங்கள்) உள்ளன. இவற்றில் வாழும் உயிரினங்களும், வாழ்ந்த உயிரினங்களும் பலப்பல*

முயற்சி செய்து பல நிலைகளை, பதங்களை நிலையான பதங்களை அடைந்துமிருப்பார்கள். எனவே இது தொடர வேண்டும். மாறாக இது சிதைந்தோ, அழிந்தோ, ஒழிந்தோ போகாமல் திகழ்ந்து ஓங்கிடச் செய்யும் என் தனிச்சித்தே வா!

**(மூர்த்தர்)** மூர்த்தர்கள் என்பது ஒரு ஆன்மா எடுத்துக் கொண்டே இருக்கும் சத்தி சத்தரின் உருவங்கள். பல மூர்த்தர்கள் என்பது பல ஆன்மாக்கள். எனவே பல ஆன்மாக்கள் பல்லாயிரம் சத்தி சத்தர்களாய் ஏற்பட (உருவாக்கிட) அவைகட்கு நற்கதியை நோக்கிச் செல்லுமாறு ஒவ்வொரு பிறவியிலும் அனுபவத்தால் விளக்கிடும் என் தனிச்சித்தே வா!

**(உயிர்வகை)** உயிர்வகை பலவாய் - உயிர் என்பது பூலோகத்திலோ, தேவ லோகத்திலோ, நரகத்திலோ அவைகளின் பக்குவத்திற்கேற்ப இருக்கும். ஏழு பிறவிகள், நால்வகை யோனிகள், 84 லட்சம் ஜீவராசிகள், அவற்றில் ஆண், பெண் என உடல் வகை பலவாய் தொடரும். இப்பிறவிகளின் இயல்பான, இறுதியான, நிலையான அக வடிவம் அனக வடிவமாக மாறி இறைநிலை விளங்கிட அருளும் என் தனிச்சித்தே வா!

**(அறிவவை)** பட்டறிவு, அனுபவ அறிவு, நூலறிவு, நுவல் அறிவு, கலையறிவு போன்ற உலகியல் அறிவு அவை பலவாயும், அவற்றை அறியும் மன அறிவு, புலன்களின் அறிவு, ஜீவ அறிவு, ஆன்ம அறிவு போன்றவற்றை எறிவற (நீக்கமின்றி) விளக்கிடும் என் தனிச்சித்தே வா!

**(நினைவவை)** உலகர் அகக்கரணங்கள், புறக்கரணங்கள் கொண்டு நினைவுகள், ஆசைகளைப் பெருக்கிக் கொண்டே இருப்பர். அந்த நினைவுகள் எல்லாம் என்னவாக மாறுகின்றன? செயலாகவா, சாதகமாகவா, பாதகமாகவா எனத் தெரியாமல் இருந்தாலும் அவைகள் உயிர்களை எந்தவிதத்திலும் துன்புறுத்தாது சத்தையும், சித்தையும் விளக்கிடும் என் தனிச்சித்தே வா!

**(1230)**

**(காட்சிகள்)** *காட்சிப் பொருளான பூ இருந்தால் தேனீ வரும். புல் இருந்தால் பசு வரும். அவரவருக்குத் தேவையான பல பொருட்கள் உலகில் வைக்கப்பட்டுள்ளன. அவைகளைக் காண்பதும் பலவிதமான உயிரினங்கள் தான். யாருக்கு எது தேவை என்பதை அவரவர் மனம்தான் முடிவு செய்யும். அதன்பிறகு ஏட்சி (ஏமாற்றம்) இல்லாமல் அவைகளையும் பெறுவதற்கான உத்திகளை விளக்கும் என் தனிச்சித்தே வா!*

**(செய்வினை)** *எத்தனையோ பிறப்புகளில் செய்த நல்வினை தீவினைகள் உலகருக்கு பல எண்ணிக்கையில் இருக்கும். அதற்கு பிராயச்சித்தம் செய்வதற்குப் பலவான வழிகளும் உண்டு. எனவே எய்வற (வருத்தம் நீங்க) ஆன்மாவானது அதற்கான விளக்கம் பெற்று உய்யச் செய்யும் என் தனிச்சித்தே வா!*

**(அண்டசரா)** *வெளியிலுள்ள அண்டங்கள் பல. அவைகளில் சில உயிர்கள் அசைந்து கொண்டும், சில உயிர்கள் அசையாமலும் இருக்கும். அதன் நோக்கங்கள் பலவா யிருக்கலாம். ஆனால் உலகர் அதன் பின்னால் முழு நேரமும் செலவு செய்து கொண்டு நாம் பெற வேண்டிய கடவுளின் அருள் சக்தியைப் பெறும் வழி தெரியாமல், முயலாமல் இருப்பதை ஒழித்து எண்ணியதை எல்லாம் இவர் தருவார் என எண்ணி விளக்கம் பெற வகை செய்த என் தனிச்சித்தே வா!*

**(எல்லாம்)** *எனவே இந்த சித்து எனப்படும் இயற்கை விளக்கமானது எல்லாம் வல்ல சித்தராம் இறைவனே என மறைகள் புகன்றிட, அதுவே எல்லாவற்றையும் செய்ய வல்லது என விளக்கிடும் என் தனிச்சித்தே வா!*

**(ஒன்றதில்)** *இனி வருவது இயற்கை இன்பம். இந்த இயற்கை இன்பம் இயல்பாகவே ஒவ்வொருவரின் உள்ளும் இருக்கிறது. அது ஒருபடித்தாய் (கூடாமலும், குறையா மலும்) இருக்கும். எனவே இந்த இன்பத்திற்கு இணையான இன்பம் எவ்வுலகிலும் இல்லை. அது*

*ஒன்று, அதில் ஒன்று. அதற்கு மேல் எதுவுமில்லை என்ற என் தனி அன்பே வா!* **(1240)**

**(இது அது)** *சாதாரணமாக உலகியலில் சர்க்கரை சாப்பிட்ட ஒருவன் இது அற்புதமாக இனிக்கிறது என்னும்போது அதை சுவைக்காதவன் அந்த இன்பம் பெற முடியாது. உலகில் இப்படி அக, புற கரணங்களால் கிட்டும் அற்ப சுகமே கண்டு ஒழிகின்ற மனிதர்களால் அந்த இயற்கை இன்பம் என்னும் அருளமுத இன்பம் என்பதை இதைப் போல, அதைப்போல என்னும் இயல்புடையது அல்ல. அது எதிர்ப்பு என்பதே இல்லாத, நிகரல்லாத, ஈடு இணையில்லாத நிறைந்த இன்பம் என்ற என் தனி அன்பே வா!*

**(ஆக்குறும்)** *ஆண்டவன் மனிதனுக்கு அவத்தைகளை ஏன் ஏற்படச் செய்கிறான்? மனிதன் ஆக்கம் உற (மேனிலை ஏற) வேண்டும் என்பதால்தான். அந்த அவத்தை அனைத்தும், பிற உயிர்கட்குத் தீங்கு இழைக்காமல் இருந்தால் அந்த இயற்கை இன்பம் எல்லா உயிர் களையும் இன்புறச் செய்யும். மனிதனின் ஏக்கமான இறை நிலை அடைதலும் நிறைவு பெறும் என்ற என் தனி அன்பே வா!*

**(அறிவுக்கு)** *ஓரறிவு முதல் ஆறறிவு வரை வகைப்படுத்தப் பட்ட உலகில் மனிதன் பகுத்தறிவால் எதைத் தேட வேண்டும்? அற்பமான ஆனந்தமா? அல்ல, அது-சத்து. அது-சித்து. அது-ஆனந்தமாகிய சச்சிதானந்தமே! அது இயற்கை இன்பமே. அது தோன்றியதுமில்லை. அழிவது மில்லை. அது இப்பிரபஞ்சத்தில் எறிவற்று (நீக்கமின்றி) எங்கும் ஓங்கியிருப்பது என்ற என் தனி அன்பே வா!*

**(விடயமெ)** *விடயம் (விஷயம்) என்பது மண், பெண், பொன் என்னும் மூவாசை அல்லது முப்பாழ். உடம்பு என்பது எதனால் ஆனது? மாயையினால் ஆனதுதான். இதனுள்ளே தான் மனம், புத்தி, சித்தம், அகங்காரம், ஆறாதாரம், புருவமத்தி, குண்டலினி, சகஸ்ராரம்*

*எல்லாம் இருக்கிறது. இவற்றைக் கொண்டு சன்மார்க்கம் சார்ந்தவர்கள் சமாதிப் பழக்கத்தை விட சகஜப் பழக்கத்தைக் கைக்கொண்டவர்கள் ஆதலால் காலம் கருதி ஜீவகாருண்யம், சத்விசாரம் செய்து கொண்டே, இடையிடையே இறை சிந்தனை செய்து மேன்மேலும் அருளை விளைவித்து ஓங்க வேண்டும் என்ற என் தனி அன்பே வா!*

**(இம்மையும்)** *மறுமையும் (அடுத்த பிறவி) எம்மையும் (அதற்குப் பின்னால் வரும் பிறவிகளும்) வந்தாலும் பரவாயில்லை. இம்மையில் (இந்தப் பிறவியில்) நிரம்பிடும் (நிரம்பி வழிய வேண்டியது எது என்னில்), ஒருமை (அக ஆன்ம உண்மை கண்டு இறைவனை ஒன்றுதலான ஒருமை) என்பதை எடுத்துரைத்த என் தனி அன்பே வா!* **(1250)**

**(முத்தர்)** *முத்தர்கள் பக்குவம் பெற்றவர்கள். இவர்கள் கன்ம வினையைப் போக்கிவிட்டு சில காலம் பிறவி இல்லாத ஆன்மாவுடன் இருப்பவர். இவர்கள் பரமுக்தியை விரும்புபவர்கள். சித்தர்கள் யோகம், தவம், இரசவாதத் தால் பற்பல அற்புதம் செய்யும் சித்து வல்லபம் பெற்று, சிலநாள் அதில் இன்பமடைந்து அடங்குவர். அதற்கு மேலான சத்திகள், சத்தர்களும் மேனிலையடைய விரும்புவர். இப்படி எத்திறத்தவர்க்கும் அவரவர் இலட்சியத்தையடைவித்திட உடனாய் நிற்கும் என் தனி அன்பே வா!*

**(எல்லாநிலை)** *உயிர்கள் பிறவி பெற்று வாழும் நிலை, பிறவி எடுக்கத் தகுதி பெறாமல் தண்டனை பெற்ற நரக நிலை, கன்ம வினையில்லா தேவ நிலை, அதற்கும் மேலான விஞ்ஞான கலர்நிலை என இருக்கலாம். எல்லா உயிர்களும் இப்படி ஏதோ ஒருவிதத்தில் இன்பமாய் வாழ்கின்றன. அந்த உயிரினுள் உற்று அதை அனுபவிக்கச் செய்யும் என் தனி அன்பே வா!*

**(கரும்புறு)** *(இயற்கை இன்பம் என்பதைப் பார்த்த மகிழ்ச்சியில் இருக்கும் நாம் இந்த நேரத்தில் இனிப்பை பரிமாறிக் கொள்வதைப் போல எண்ணி, அமுதம் என்பது தேவர்கட்குக் கிடைத்தது. அதன் சுவை தேவர் கட்கு மட்டுமே தெரியும் எனவே நமது பூலோகத்தில் கிடைக்கும் இனிப்புகளை இங்கே வள்ளலார் சொல்கிறார்)*

*கன்னல் கரும்பின் சாறும், கனிந்த முக்கனியாம் மா, பலா, வாழையில் கிடைத்த நாம் விரும்பும் அதன் இரசமும் (சாறும்) பசுவின் பாலும் சேர்த்து அதற்கு மேலும்,*

**(குணங்கள்)** *நல்ல சுவைக்குணமுள்ள கொம்புத்தேன் கூட்டி ஒன்றாக்கி அதற்கு நறுமணமூட்டும் பொருட்களும் சேர்த்து, பதமாக பாகு காய்ச்சி உண்ணும் வகையில் சமைத்து அதனை,*

**(உணவு என)** *உணவு எனப் பலகாலங்களாகச் சொல்லிக் கொண்டே இருந்தாலும் அதில் எதுவும் நிகராகாத இன்ப மயமாவது எது தெரியுமா?* **(1260)**

**(கலந்தறி)** *அது அக அருள் அமுதம்! அது அறிவு உருவாய்க் கலந்து எண்ணுவதற்கு அரிதான சுவையுள்ளது. நலம் தரும் (சாகாநிலை தரும்) இயற்கையின் விளக்கம் கிடைக்கும். சொல்லித் தெரிய வைக்க முடியாத குளிர்ச்சியாயிருக்கும்.*

**(உள்ளதா)** *அது இல்லாத நாளே கிடையாது. என்றும் இருக்கும். அது அளவிலும் குறையாது. அது என்னுள்ளே தான் உள்ளது. என் உயிர், உள்ளம், உடம்புடன் புறத்திலும் கூட,*

**(எல்லாமாகி)** *எல்லாமே இனிக்கும். எல்லாமே களிக்கும். அது எல்லாம் வல்லதும், மேலானதுமான சுவையளிக்கும். எல்லாம் வல்ல சித்துகள் அளிக்கும். இது இயற்கையாக என்னுள்ளேயே தோன்றியது. தவம், யோகம்*

*போன்றவற்றைச் செய்து புறத்திலிருந்து பெற்றுப் பருகிய அமுதமல்ல. எனவே,*

**(சாகாவர)** *எனக்கு சாகா வரமளித்தது அதுதான். தனித்த பேரறிவு அண்டாண்டங்கட்கும் அப்பால் செல்லும் ஆற்றல் தந்தது அதுதான். மாகாதலால் (பேரன்பினால்) எனக்கு செத்தாரை எழுப்பும் வல்லப சக்தியும் வந்தது அதனால்தான்.*

**(செயற்கரு)** *செய்வதற்கு மிக அரியதான எண்ணிலடங்காத அனந்த சித்திகளும், அது தரும் சுத்த இன்பமும். இதை பிறருக்குத் தெரிவிக்கும்போது, அவர்கள் இது ஏதோ மாயை என மயக்கமுறாமலும், வள்ளல் தன்மையும் பெற்று* **(1270)**

**(பூரணவடி)** *அகம் பூரணம் பெற்று, அறிவு பொலிவு பெற்று, காருண்யம் சம்பூரணம் பெற்று, அன்ன ஆகாரம் தேவைப்படாத பூரண வடிவம் பெற்று, சகஸ்ரார அமுதம் பொங்கி மேல் ததும்பி, புற வழிபாடுகளையே சொல்லி அக ஆன்ம விளக்கம் தராத ஆகம முடிவையும், ஆரணங்களின் முடிவையும்,*

**(கடந்தெ ன)** *கடந்து எனது சுத்த அறிவானது அருட்சுடராய் ஒளிவீசி அந்த சபையின் நடுவே நடம் செய்து திகழ்கின்ற அருட்பெருஞ் ஜோதி எனும் மெய்ஞான ஆரமுதே வா!*

**(சத்திய)** *இது சத்து இயம் (இறைவனின் நாதமான) அமுது. தனித்திருக்கும் ஏகாந்த அமுது. நித்தியத்தை (நிலைத் திருக்கும் வாழ்வை)த் தரும் அமுது நிறை சிவ (காருண்யம் நிறைந்த) அமுதே வா!*

**(சச்சிதா)** *இது சத்து, சித்து, ஆனந்தமாகிய தனியான முதன் முதலாகத் தோன்றிய அமுது. மெய் (உடம்பில்), சித்-அறிவின் ஆகாசத்தில் விளைந்த ஆரமுதே வா!*

**(ஆனந்த)** *இது ஆன்-ஆன்மாவின், அந்தமாகிய இறைநிலை சேர்க்கும் ஆனந்த அமுது. அனுபவிக்கத்தக்க அருள் ஒளி அமுது. தனக்கு அந்தமென்பதே இல்லாத தத் + துவம் என்னும் அது-நீ ஆகும் என்ற அமுதே வா!* **(1280)**

**(நவநிலை)** *விந்து, நாதம், பரவிந்து, பரநாதம், அபரவிந்து, அபரநாதம், திக்ராந்தம், அதிக்ராந்தம், அருள் ஆகிய நவநிலை தரும் ஓர் நல்ல தெள்ளமுது. தெளிவிக்கும் அமுது. அகத்தே அருட் சிவமாய் இருக்கும் அருவ நிலை தனிலே திரண்டு புறத்திலே கருணையாய் செயல்படும் உள்ளிருக்கும் அமுதே வா!*

**(பொய்படா)** *இது கருணை என்னும் நற்செயல் பொங்கி வரும் புண்ணிய அமுது. இது பொய்படா (குறையாது கெடாது. புறப்புலனுக்குத் தெரியா)தது. இது கை (சிறுமை) படாத பெருமை மிக்கது. கடவுள் தரும் பெருஞ்சீர் இது. வானமுது சிர நடுவிலிருந்து வருவது. இது வானவர் பெற்ற கடல் அமுது அல்ல. பிண்ட சிதாகாச வானத்தி லிருந்து வரும் வானமுதே வா!*

**(அகப்புற)** *அகமாகிய ஆன்மாவிலும், புறமாகிய ஜீவனிலும், அகப்புறமாகிய கரணங்களிலும், புறப்புறமாகிய இந்திரியங்களிலும் உகந்து (இவைகளை நேசித்து அன்பு காட்டி) ஒழுக்கத்துடன் கூடிய கருணையை வெளிப் படுத்தியதால் இந்த நான்கு இடங்களிலும் பொங்கிய அமுதே வா!*

**(பனிமுதல்)** *பனி (அச்சம், நடுக்கம், துன்பம்) முதலானவற்றை நீக்கிய பரம்-மேலான, பர-அதற்கும் மேலான அமுது இது. இயற்கை விளக்கமான ஞானாகாச வடிவமே ஆன்மா என்ற தனி முதலாகிய சிதம்பர அமுதே வா!*

**(உலகெலாம்)** *இந்த உலகத்திற்கெல்லாம் அள்ளி அள்ளிக் கொடுத்தாலும் கூட சிறிதும் குறையாத அமுது இது. இதை அளக்கும் அளவுகோலைக்கூட அறியாத அளவு பெருந்திறல் கொண்ட அதியற்புதமான அமுதே வா!*

**(1290)**

**(அண்டமும்)** *கண்ணால் இந்த அண்டத்தையும், ஆகாயத்தி லுள்ள சில அண்டங்கள், அதிலுள்ள பண்டங்களை எப்படிப் பார்க்கிறோம். எதன்மீதெல்லாம் ஒளிபடு*

கிறதோ அவைகளை மட்டுமே பார்க்க முடிகிறது. அந்த ஒளியாயிருக்கும் பரம்பர (பரம ஆகாச) மணியே வா!

**(பிண்டமும்)** அதைப்போலவே நமது பிண்டமும், அதிலுள்ள பிண்டமும் (தலை, உடல், கை, கால், புறக்கரணம்) அதிலுள்ள பண்டம் என்பது ஆறாதாரம் போன்றவை. இவைகளைக் காட்டிய பர அபரமாகிய (கடவுளான்மா வாகிய) மணியே வா!

**(நினைத்தவை)** நம்முள் இருப்பதை உணர்ந்து செயல்படு வோருக்கு நினைத்தவை நினைத்து ஆங்கு எவ்வித மாற்றமும் இல்லாமல் அப்படியே அடைவித்து அனைத்தையும் தருவது பெறுவதற்கு அரிதானதான மணியே வா!

**(விண்பதம்)** விண்பதம் என்பது ஐந்தொழில் புரிபவர்களும் தேவர்களும் கண்பெற்று, பார்க்கும் திறம் பெற்று, பார்க்கும் பொருளின்மீது ஒளிவிழச் செய்து கொண் டிருக்கும் ககன (விண்ணிலிருக்கும்) மா (பெரிய) மணியே வா!

**(பார்பதம்)** பார்பதம் - இந்த பூமியும் இதிலிருக்கும் பயிர்களும் உயிர்களும், வளமும், செல்வமும், அழகும், சித்துக்களும் ஆகிய அனைத்திற்கும் பகரடி முழுதும் - ஆதாரமான எல்லாவற்றையும் உன்னைச் சார்புற்று நடத்திக் கொண்டிருக்கும் சரவொளி (தொடர்ந்து) பிரவாகமாக வந்து கொண்டே இருக்கும் ஒளிக்கதிர்களின் ஆதார மான மணியே வா! **(1300)**

**(அண்டகோடி)** ஒளியின் வேகம் ஒரு நொடிக்கு கிட்டத்தட்ட மூன்று லட்சம் கிலோமீட்டர். இதை $60 \times 60 \times 24 \times 365$-ஆல் பெருக்கினால் அதன் தூரம் ஒளியாண்டின் தூரம் என்பர். பல கிரகங்கள் 700 ஒளியாண்டு தூரத்தில் உள்ளதையும் பார்த்து ஆய்வு செய்கின்றனர். நாம் அதை அடைய எவ்வளவு காலம் பிடிக்கும் எனக் கணக்கிடுங்கள். ஆனால் இந்த “மணி”க்கு அரை விநாடி போதுமாம். காரணம் அதனுள்ளே உள்ள கலைகள்

*(அடங்கியுள்ள நுட்பங்கள்). உதாரணமாக ஓரிடத்தி லிருந்து இன்னொரு இடத்திற்குப் போக அக்னிக்கு 64 கலைகள். சூரியனுக்கு 12 கலைகள், சந்திரனுக்கு 16 கலைகள், நட்சத்திரத்திற்கு 4 கலைகள். எனவே அளவிடற்கரிய ஆற்றல் உள்ள கலை நிறை மணியே வா!*

**(சராசர)** *சரம்-அசையும், அசரம்-அசையாது. உயிர்கள் இந்த இரண்டு நிலைகளிலும் இருக்கும். அவைகள் அகத்தில் அருளும், புறத்தில் ஒளியும் கொண்டே விளங்கும். சாற்றிய பொருள்தோறும் என்பது சடப் பொருள். அதன் அகத்திலுள்ளது அருட்சக்தியில்லாமல் கிரியா சக்தியாயும், விராவி (விரவி) உள் விளங்கும். இதற்குக் காரணம் தெரிந்த ஞானமுள்ள வித்தக மணியே வா!*

**(மூவரும்)** *படைத்தல், காத்தல் அழித்தலைச் செய்யும் மூவரும், முனிவர்களும், முத்தர்களும், சித்தர்களும், பலகோடி தேவர்களும், வணங்கும்போது இச்சித்துக் கேட்கும் வரங்களைத் தட்டாமல் சித்திக்க (விளங்க)ச் செய்யும் மணியே வா!*

*(வள்ளலார் எதையும் இச்சிக்காததால் கேட்காததால் தன்னையே எடுத்துக்கொள் என்று சொன்ன மணி அது)*

**(தாழ்வெலாம்)** *மனிதனுக்குத் தாழ்வு என்பது உலக இச்சைகள். அதைத் தவிர்த்து சகமிசை (இப்புவி மீது) அழியா வாழ்வு (மரணமில்லாமை) அளித்து நித்தியமாய், நிறைவாய் (வளரொளி) வளர்ந்தும் ஒளிர்ந்தும் உள்ள மணியே வா!*

**(நவமணி)** *மேலே சொல்லப்பட்ட பரம்பரமணி, பராபர மணி, அரும் பெரும் மணி, ககன மாமணி, சரவொளி மணி, கலைநிறை மணி, வித்தக மணி, சித்தி செய் மணி, வளரொளி மணி ஆகிய நவமணிகள்தான் நலம் எல்லாம் தரும் ஒரு சிவ (அன்பு) மணி என்னும் அருட்செல்வ மாமணியே வா!* **(1310)**

**(வான்பெற)** *உள் விளங்கும் கடவுள் ஜோதியின் உண்மையை விளக்கும் சொற்பெருக்கு இது. உள்ளொளி என்பது ஊமை எழுத்து என்றும் மௌன மந்திரம் எனவும் கூறுவர். அந்த ஒளியை விளக்க வரும் ஒலி மொழியை பேசும் மந்திரம் என்பர். என் அனுபவத்தில் கண்ட உள் ஒளியைத்தான் ஒலி மந்திர வடிவாகப் பெற்று அதனையே புறத்தில் அருட்பெருஞ்ஜோதி என்று ஆண்டவர் அருளினார். வான் (பெருமை, சிறப்பு, நலம், மேனிலை) பெறுவதற்கு அரிய வகையெலாம் விரைந்து (அதி சீக்கிரமாக) நான் பெற அளித்த நாத மந்திரம் இதுவே! வானவரும் பெறற்கரிதான அனந்தங்கோடி சித்தி அனுபவம் தரும் மந்திரமே வா!*

**(கற்பம்)** *மந்திரம் எதற்காக ஓதப்படுகிறது? மனதை ஒருமைப்படுத்தி வாழ்வையும், உடம்பையும் நிலைபெறச் செய்யும். எனவே கற்பம் பல பல (எத்தனை ஆண்டுகள் ஆனாலும்) அழிவுறாத பொற்புற (அழகும் பொலிவும் உற-பிணி, மூப்பு, மரணமில்லா நிலை) அளித்த புனித (பரிசுத்தமான) மந்திரமே வா!*

**(சிகரமும்)** *அகரமும் (எட்டும்) உகரமும் (இரண்டும்) சேர்ந்து "ய" கரமான பத்து என்னும் உடம்பும், அழியாச் சிகரமும் (சி-சிவமாகிய அன்பும்), வகரமும் (வ-வனப்பு மிக்க சக்தியின் அருளால்) இளமை மாறாமல் இருக்க வழி செய்த இந்த வாய்மை மந்திரம் வெளியாகும்போது அகத்தே உள்ள ஒளிநிலை உண்மை மந்திரமாகவும், புறம் சூழ்ந்த உடல் மெய்மை மந்திர வடிவமாகவும் விளங்குவது சுத்த சன்மார்க்க அனுபவம் என்ற வாய்மை மந்திரமே வா!*

**(ஐந்தென)** *பண்டைக் காலத்திலிருந்தே இறைவழிபாடு செய்வதற்கு மந்திரங்கள் துணையாக இருக்கிறது. இது மறைமுறை (வேதங்களில் முறை செய்யப்பட்டிருக்கிறது). அவை ஐந்தென (சிவயநம), எட்டென (ஓம் நமோ நாராயண), ஆறென (சரவணபவ) நான்கென (ஓம் ஐம்*

*ரீம் க்லீம்) போன்ற மந்திரங்கள் மொழியப்பட்டன என்ற மந்திரமே வா!*

**(வேதமும்)** *எல்லா மதங்களிலும் வேதம், ஆகமம் இருக்கிறது. அவைகள் விரிக்கும் மந்திரங்களும் உண்டு. ஆனால் அவைகள் ஓதப்படும்போது உலவாது (புறம்போகாமல்), அழியாமல் ஓங்கும் மந்திரம்*

*அருட்பெருஞ்ஜோதி - அகம் - ஆன்மஜோதி*
*அருட்பெருஞ்ஜோதி - புறம் - ஜீவஜோதி*
*தனிப்பெருங்கருணை - அகப்புறம் - தயவு*
*அருட்பெருஞ்ஜோதி - புறப்புறம் - பெருவெளி*

*அக நிலையில் உள்ள ஆன்மா - ஜீவ உடம்பால், கருணை (தயவின்) யின் துணைகொண்டு அனகநிலையாம் பெருவெளியில் கலத்தல் ஆகும். அதை செயலில் ஓங்க விளக்கும் மகா மந்திரமே வா!* **(1320)**

**(உடற்பிணி)** *பிணி என்பது குற்றம். உடலுக்குள்ள குற்றங்கள் காமம், வெகுளி, மயக்கம். இதை நீக்கும் மருந்து ஒழுக்கம். உயிர்ப்பிணி என்பது மூன்று தேகங்கள். இந்தப்பிணியை நீக்குவது பரோபகாரம், ஜீவ காருண்யம் என்னும் அருட்சிவ மருந்தே வா!*

**(சித்திக்கு)** *காயசித்தி, மந்திரசித்தி, வாக்கு சித்தி, யோக சித்தி, ஞானசித்தி, அட்டமா சித்தி போன்றவற்றிற் கெல்லாம் மூலப்பொருளாயிருந்து வருவது சிவமருந்து என்னும் பற்றற்ற நிலை. அந்த நிலைக்கு ஏறியவர்களின் உள்ளம் தித்திக்கும். அதுவே ஞானம் கை கூடும் பதநிலை. அப்படி பிறவி நீக்கி நற்கதி தரும் திருவருள் மருந்தே வா!*

**(இறந்தவ)** *(உறங்குவது போலும் சாக்காடு. உறங்கி விழிப்பது போலும் பிறப்பு - இறந்த உயிர்கள் பெரும்பாலும் சொற்ப காலத்தில் மீண்டும் பிறவி பெற்றுவிடும். ஆனால் தாமச, ராஜசத்தால் அதீத பாவங்களைச் செய்த ஆன்மாக்கள் தண்டிக்கப்பட வேண்டியிருப்பதால் சில ஆண்டுகள் முதல் பல ஆண்டுகள் கூட பிறவி*

*கிடைக்காமல் நரகத்தில் தள்ளப்பட்டிருக்கும்)*

*இறைவனின் நியதிப்படி எல்லாப் பிறவிகளும் முன்னேறி அறிவின் முதிர்ச்சியாலும் நற்குணத்தாலும் இறைவனை அறிந்து அடைந்திட வேண்டும். அதுவரை அவைகட்கு தொடர்ந்து பிறவி தரப்படும். அந்தந்தப் பிறவியில் சேர்த்த புண்ணியத்தால் அவைகள் மேம்பட வாய்ப்பு அதிகம். ஆனால் நரகத்திலுள்ள ஆன்மாக்கட்கு விரைவில் கடைத்தேறும் வாய்ப்பு கிடைப்பது கடினம். எனவே அவைகள் அளவுகடந்த நெடுங்காலம் இங்கேயே உழலும். அது நற்கதி அடைவது என்பது மிக மிக தாமதப்படும் என்பதால் இறந்தவர்கள் எல்லாரும் எழுப்பப்பட வேண்டும். அதாவது தாமதமின்றி மீண்டும் பிறவி தர வேண்டும். அந்த வல்லபம் மிகச்சிறப்பு வாய்ந்தது. அதை உற்ற திருவருள் மருந்தே வா!*

*(இந்த வரிகள் - இறந்து கிடக்கும் மனிதரை அதே உருவத்துடன் அப்போதே எழுப்புவது அல்ல. மீண்டும் பிறவி கொடுத்து அவர்களும் தாமதமின்றி புண்ணியம் சேர்க்க வழி கேட்பதே)*

**(மரணப்)** *மரணப் பெரும்பிணி என்பது வாரா (வராது). அப்படியானால் அதை மிகு(ம்) (வெல்லும்) வகை எது? அதுதான் கரணங்கள் வடிவில் மனிதனுக்குத் தரப் பட்டது. அவற்றுள் பெரிய திறல் (வலிமை) இருக்கிறது எனக்காட்டியது எது? மனம், புத்தி, சித்தம், கண், காது, மூக்கு, வாய், உடம்பு என்பதைக் கொண்டு நாம் மரணத்தை வெல்லலாம். ஆனால் மூவாசைகளில் மூழ்கிப்போய், மனம் திரிந்து, மதி கெட்டு, சித்தம் சிதறி, பெருந்தீனி, பெருந்தூக்கம், மைதுனம், ஒழுக்கக்கேடு போன்றவைகளால் அவைகளை திசைமாற்றி, நாசப்படுத்தி மரணத்தை வலிய வரவேற்கிறான். அந்த நல்ல கரணங்களை கெடுக்காமல் வாழக் கற்றவனுக்கு மரணம் வாராது எனக் காட்டிய மருந்தே வா!*

**(நரைதிரை)** *மனிதனுக்கு நோய், வலி, வியாதிகளெல்லாம் உணவு மற்றும் உடலிலுள்ள கரணங்களின் தத்துவம்*

*கெடுவதால்தான் வருகிறது. மனிதன் தானாக வருவித்துக் கொள்ளும் நரை, திரை, பிணி, மூப்பு என்பது இயல்பாய் வராது. அது மனிதனை நெருங்காது எனச் சொல்லித் தரப்பட்டதே பெருஞ்சீர் என்ற நல்ல மருந்தே வா!* **(1330)**

**(என்றேஎன்)** *என்றும் இளமையோடு இருப்பது என்பது நரை, திரை மூப்பு வராமல் தடுப்பதுதான். எதைத் தடுக்க வேண்டும் என்பதை (வள்ளலார் இந்திரிய, கரண ஜீவ ஒழுக்கத்தில் காட்டியிருப்பதை) முக்கியமாக உணவு, தூக்கம், மைதுனம், பயம், கோபம், காமம் ஆகியவற்றை கட்டுப்படுத்துவதுடன் தூதுளை, கரிசாலை போன்ற வற்றை உட்கொள்ளும் வழக்கத்தை நடைமுறைப்படுத்தி னால் என்றும் இளமையோடிருக்கலாம் என்பதை யறிவித்த ஞான (அறிவு) மா மருந்தே வா!*

**(மலப்பிணி)** *இந்த ஒழுக்கமின்மை போன்றவற்றை நமக்குள் செயல்படுத்துவது ஆணவம், கன்மம், மாயை என்னும் மலங்கள்தான். இதைத் தவிர்த்து வெற்றியுடன், உடலையும், உயிரையும் வளப்படுத்தி, இளமையோடு வலம் வரச்செய்ய, நலம் பொருந்தி நமக்கு அருளி, ஸ்திரப்படுத்தும் மருந்தே வா!*

**(சிற்சபை)** *ஆன்மா என்னும் சிற்சபையின் நடுவில் திருநடனம் புரிந்து கொண்டிருக்கும் அற்புத மருந்து, உடற்பிணி, உயிர்ப்பிணி நீக்க வல்லது. ஆன்மாவை அது இருக்க வேண்டிய பக்குவத்தில் வைத்து சேர வேண்டிய இடத்தில் சேர்க்கும். பிணி வந்தால் மருந்து தேவைப் படும் என்பதில்லாமல் பிணி வராமல் தடுத்திடும் ஆனந்த மருந்தே வா!*

**(இடையுற)** *இறைவனைப் பொன்னாக மதித்து (மாற்றறியாத செழும் பசும் பொன்னே என்றபடி) போற்றி உயர்த்துவது மரபு. பொன் என்றால் அது எத்தனை மாற்று என்றும் அதன் இடை (எடை) எவ்வளவு என்பதெல்லாம் நிர்ணயிக்கப்படாத இயற்கை விளக்கமாய் இருப்பதால்*

*இதை யாரும் சோதித்துப் பார்க்கும் தடையொன்று மில்லாத தகவு (தகுதி, குணம், கிருபை, அறிவு, தெளிவு, யோக்கியம், நீதி) உடைய அதுவாய் (பரம் பொருளாய்)*

**(மாற்று)** *அந்தப் பொன்னுக்கு மாற்று (தங்கம், செம்பு கலப்பு விகிதம்) எவ்வளவு என மதித்து அளப்பதற்கு அரிதானதாயும், மிக வலுவானதாயும், பிரகாசிக்கும் வண்ணத்தையும் ஒருங்கே உடையது அதுவாய் (அப்பரம் பொருளாய்)* **(1340)**

**(காட்சிக்கு)** *இந்தப் பொன் என்பது நாம் காணும் ஆபரணப் பொன்போல ஒரே நிறம் கொண்டதா எனில் அல்ல - அது காட்சிக்கு இனியது. பூமியின் மீதும், வானத்திலும், கடலின் மீதும், எத்தனை காட்சிகள், எவ்வளவு இனிய நற்கலைகளை உடையதாய், உலகை ஆட்சி செய்வதற்குத் தகுதியான பல மகிமைகளையும், அழகு மிளிர்வும் உடையதாய் உள்ள பரம்பொருளாய்,*

**(கைதவர்)** *கைதவர் (கபடம் முதலிய சிறுமைக் குணமுடையோர்) கள் கனவிலும்கூட இதைக் காண முடியாது. நல்ல குணமுள்ள தயவுடையவர்கள் அவர்கள் செய்த தவப்பயனாய், திருவருளின் வெற்றியாய், வலிமையால்,*

**(உளம்பெறு)** *எங்கே உள்ளமானது தங்கி, தேவையுள்ளவர்கள் கண்ணில் படுமிடமெல்லாம் உதவுக, அள்ளித்தருக என்னும் வளம் நிறைந்து வாய்த்து நெருங்கிய அருளே, பொன்னே வா!*

**(புடம்படா)** *இந்தப் பொன்னின் தரம் எவரும் புடமிட்டு (நெருப்பிலிட்டு) திராவகம் சேர்த்து சுத்தப்படுத்தப்பட வில்லை. அது அதி சுத்தமானது. தங்க பஸ்பம் செய்பவர்கள் அதில் சில ஒஷதிகளைச் சேர்த்து செய்வார்களே அப்படி இதைச் செய்ய முடியாது. வடம்படா (ஊழித்தீ) என்பது - அதைவிட உஷ்ணமான தீ - உலகில் இல்லாத தீ - அப்படி அதிக உஷ்ணமும் படாத நலம் வாய்ந்த செம்பொன்னே வா!*

**(மும்மையும்)** *முத்தேக சித்தியைத் தரும் ஒரு வல்லபமும் பெற்ற செம்மையுடையதாதலாம் இம்மையே (இப்பிறப்பி லேயே) கிடைத்து இலங்கிய (ஒளிர்ந்து பிரகாசிக்கும்) பொன்னே வா!* **(1350)**

**(எடுத்து)** *இத்தகைய பெருமை கொண்ட பொன்னை எடுத்து எடுத்து எத்தனை பக்குவர்கட்கு கொடுத்தாலும் அதன் அளவு குறையாமல் வளர்ந்து கொண்டே யிருக்கும் மெய்யருட் பொன்னே வா!*

**(தளர்ந்தி)** *இதையெடுத்தால் அளவில் குறைந்துவிடுமோ என எண்ணி எவருக்கும் தராமல் இருக்கவும் முடியாதே என் செய்வது எனத் தளராமல் எடுக்கின் (எடுத்தால்), வளர்ந்திடுவேம், மற்றும் கிளர்ந்திடுவேம் (எழுச்சிப் பெருக்கத்துடன்) என உரைத்துப் பார்த்துக் கிடைத்த பொன்னே வா!*

**(எண்ணிய)** *எந்த இடமாயினும் தினமாயினும், எப்போ தெல்லாம் இதைக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றும் போதெல்லாம் அப்போதே, அங்கேயே கொடுத்து அந்த அறத்தை இயற்று என்று என்னை நெருங்கி என் கரத்தில் அமர்ந்த பைம் பொன்னே வா!*

**(நீகேள்)** *அந்தப் பைம்பொன், ஆணிப்பொன், ஜோதிப் பொன்னானது என்னிடம் "நீ கேள் தருகிறேன். கேட்க மறந்து விட்டாலும் பரவாயில்லை. நான் உன் கரத்தி லேயே இருப்பேன். உன்னை விட்டுப் போக மாட்டேன்" என என்னைப் பொருந்திய பொன்னே வா!*

**(எண்ணிய)** *நான் என்ன தவம் பண்ணினேன்? துன்பப் படுபவர்களைக் கண்டு துடித்தேன். வாடிய பயிரைக் கண்டபோது வாடினேன். உதவி செய்ய எண்ணினேன். எனவே எண்ணியபோதெல்லாம் எண்ணியபடியே, அந்தந்த இடத்திலேயே எனக்குத் தேவையானதை அருளிய அருள் பழுத்த செம்பொன்னே வா!* **(1360)**

**(விண்ணியல்)** *எல்லாத் தேவைகளையும் கேட்டுப் பெற்று சுகமாயிருக்கும் தேவர்களும், அவர்களின் தலைவர்*

*களும் இதைப்பார்த்து வியந்து போகுமளவு எனக்கு நான் செய்த புண்ணியங்களின் பயனாய் கிடைத்த பூத்த (நகைப்பு தோன்ற மகிழ்ந்த) பொன்னே வா!*

**(நால்வகை)** *தேவர்களின் குணம் என்பது மேலும் மேலும் வரம் பெற்று வாழ ஆசையுள்ளவர்கள்தான். ஆனால், மனிதர்கள் ஆசையறுத்து அருள் தர வேண்டுபவர்கள். எனவே பூமியில் நால்வகை யோனிகளின் வழியாகத் தோன்றும் உயிர்கட்குத்தான் இந்த நெறி நிலை நாட்டப்பட வேண்டும். எனவே இந்த பால், வினை, தெய்வம், ஊழ் என்னும் விதிமுறைகள் செய்யப் பட்டிருப்பதை உணர்ந்து செயல்படு எனப்பணித்த (ஆணையிட்ட) பைம் பொன்னே வா!*

**(எழுவகை)** *மேலும் எழுவகை நெறியில் உள்ளவர்களான நீர்வாழ்வன, தாவரம், ஊர்வன, பறப்பன, விலங்குகள், மனிதர்கள் நரகர்கள் ஆகியோரெல்லாம் அடுத்தடுத்த பிறவிகளைப் பெறும் வகை இயற்று. அதனால் அவைகள் முழுமை பெறட்டும் என முயங்கிய (என்னை விட்டு விலகாமல்) இருக்கும் பொன்னே வா!*

**(எண்ணிய)** *நரகத்தில் இருப்பவர்கட்கும் உடனே பிறவி கொடுத்து பிறவற்றிற்கும் அடுத்தடுத்த பிறவிகளைக் கொடுத்து அவைகள் புண்ணியம் சேர்த்து பலம் பெற்று மேன்மையுற நீ எதையெல்லாம் எண்ணி திட்டமிடு கிறாயோ அப்படியே செய் என்று என்னைப் பொருந்திய (பெருஞ்செல்வமே) நிதியே வா!*

**(ஊழிதோறு)** *பன்னெடுங்காலமும், அதற்கு மேலும், இடரின்றி உவப்பு (முடிவு) இல்லாமல் ஓங்கி வாழ் வாயாக என்று வாழ்த்தும் இறைவனாக எனக்கு வாய்த்த நன்னிதியே வா!* **(1370)**

**(இதமுற)** *அதற்கென இதமுற (உரிமையுடன் நன்மை செய்ய) பன்னெடுங்காலம் எடுத்தெடுத்து உலக மக்கட்கு உதவிடுக. அப்படி எவ்வளவு கொடுத்தாலும் கூட*

*சிறிதும் குறையாமல் அது ஓங்கி வளரும். அத்தன்மை கொண்ட ஓங்கு நிதியே வா!*

**(இருநிதி)** *இருநிதி என்பது கல்வியும் செல்வமும். எழுநிதி என்பது ஆறாதாரமும் சகஸ்ராரமும் சேர்ந்த நிதி. நவநிதி என்பது விந்து தொடங்கி அருள் வரையிலான ஒன்பது நிதி. இந்த இயல்பான நிதிமுதல் இறைவனின் திருவருள் நிதியெலாம் திரட்டித் தரும் ஒரு நிதியே வா!*

**(எவ்வகை)** *உலகரிடையே எத்தனை விதமான செல்வங்கள் உள்ளன? அஷ்ட ஐஸ்வர்யம் என்றும், பதினாறும் பெற்று பெருவாழ்வதில் உள்ள செல்வங்களில் உள்ளது போன்ற பல செல்வங்கள் இருந்தாலும், எவ்வகையிலான செல்வங்கள் எத்தனை இருந்தாலும் இந்த மாபெரும் நிதியிடை வருபவர்க்கு அவரவர் விருப்பப் படியே கிடைக்கச் செய்யும் வல்லபம் உள்ளது என்று அருளிய நிதியே வா!*

**(அற்புதம்)** *எத்தனையோ அதிசயங்கள், செல்வங்கள், பிரமிப்பூட்டும் கலைகள், கட்டடங்கள், மனிதர்கள் இருந்தாலும் ஓரிருமுறை பார்த்த பிறகு அது பிரமிப் பூட்டாது. ஆனால் உண்மையான அற்புதம் விளங்கு வதும், கற்பனை கடந்து விளங்குவதும் அருள் என்னும் பெருநிதியான கருணை மா நிதியே வா!*

**(நற்குண)** *இந்த நிரந்தரமான பரம்பொருள் நற்குண நிதி கொண்டது. சத்துவ குணம் கொண்டது. விருப்பு வெறுப்பு அற்றது. சிற்குணமான எந்தன் ஞான நிதியே வா!* **(1380)**

**(பளகிலா)** *அதற்கும் மேலாக - எவ்வித குற்றமும் இல்லா (பளகிலா)து ஓங்கும் பளிங்கு (பளிங்கு உருவமானது). இப்படி எல்லா வளமும் நிறைந்த என் மாணிக்க மலையே வா!*

**(மதியுற)** *மனிதனின் மதியிலும், உடலிலும் ஆற்றல் வளரவும் தேயவும் வகை செய்வது மதியுற விளங்கும் திண்மை யான பசுமையான மலையே. வாழ்க்கைக்கு வேண்டிய*

*பல வளங்களைத் தரும் பேரொளி வச்சிர மலையே வா!*

**(உரைமனம்)** *உரைக்கும் சொல்லுக்கும், மனத்திற்கும் எட்டாதது ஓங்கி நிற்கும் பொன்மலையே. அதை உள்ளுணர்வால் மட்டுமே அறிய முடியுமென்பதால் விழிப்பு, கனவு, உறக்க நிலை கடந்து, துரியமும் கடந்து, துரிய மேல் நிலையாம் அறிதுயில் வெளியில் காணப் படும் ஜோதி மாமலையே வா!*

**(புற்புதம்)** *நமது புவியிலுள்ள கடலில் புற்புதம் (நீர்க்குமிழிகள்), திரை (அலை), நுரை (மாசுள்ள வெண்மையான நுரை), புரை (உப்பு சத்தால் இறுகுதல்) முதலியன காண்ப துண்டு. இவை எதுவுமே இல்லாத அற்புதக் கடலான ஆண்டவன் என்னும் அமுதமான குளிர்ச்சியான கடலே வா!*

**(இருட்கலை)** *உலகியலை சம்சாரக் கடல் என்பதும் உண்டு. அது நம்மை இருள் நிலையில், ஆசையில் வைத்திருக்கும். வெளியில் காணப்படும் ஒளி எங்குளது எனத்தெரியாது. அந்த நிலையில் உள்ளவர்களின் இருட்கலைகளைத் தவிர்த்து ஒளியெலாம் வழங்கிய அருட் பெருங்கடலான ஆனந்தக்கடலே வா!* **(1390)**

**(பவக்கட)** *சம்சாரக்கடலில் பலகால் உழன்று வந்த உலகர் அதற்குமுன்னாலும் எடுத்த பிறவிகளிலெல்லாம் செய்த தீவினைகள் பவக்கடல் (பாவம் கடலளவு நிரம்பியிருக் கிறது). இறை அருளால் அதைக் கடந்து பார்த்தபோது அங்கே உவப்புடன் வளமிக்க செடி கொடிகள் நிறைந்து ஓங்கி நின்ற (கடற்) கரையே வா!*

**(என்றுயர்)** *அவ்வளவு பெரிய கடலை நீந்திக்கடந்து வந்ததால் எனது துயரம், சோடை (காய்த்து ஓய்ந்து போய் சோர்ந்த மரம்) கள் எல்லாம் தவிர்த்து, உள்ளம் நன்று உற, களிப்புற விளங்கிய அந்தக்கரையின் மீது கண்ட நந்தவன (பூஞ்சோலைக்) காவே வா!*

**(சேற்றுநீர்)** *அதனிடையே சேற்று நீரல்ல, நல்ல தீஞ்சுவை யுடனான ஓர் ஊற்று நீர் நிரம்பிய (தாமரைக்குளமே) பூந்தடமே வா!*

**(கோடைவாய்)** *அந்தப் பூஞ்சோலையும், தீஞ்சுவை நீரும் கண்டபிறகு கோடை வெயிலில் பரந்து விரிந்த குளிர்ச்சி தரும் மர நிழலில் அமரத்தக்க மேடையிலே வீசிய மெல்லென வந்த காற்றே வா!*

**(களைப்பற)** *என் களைப்பு நீங்கக் கிடைத்த கருணை யென்னும் நீரே, இளைப்பு நீங்க வாய்த்த இன்சுவை உணவே வா!* **(1400)**

**(தென்னை)** *தென்னை மரத்தில் கிடைத்த செவ்விளநீரே, தென்னை மரத்தில் கிடைத்த முற்றிய தேங்காய்ப் பிழிவின் தேங்காய்ப்பாலே வா!*

**(நீர்நசை)** *தண்ணீரால் வரும் குற்றத்தை (நசை) தவிர்க்கும் நெல்லிக்கனியே, வேரினில் விளைந்த பலாப் பழத்தின் மென்சுவைச் சுளையே வா!*

**(கட்டுமாம்)** *கட்டுக்காவலில் விளைந்த மாம்பழமே! (கட்டு) மலையில் விளைந்த வாழைப்பழமே. மிகுந்த சுவையுடன் நலம் பயக்கும் இலந்தைக்கனியே வா!*

**(புனிதவான்)** *புனித வானவர் உலகக் கற்பக மரத்தின் புதுமை யாம் பலமே (பழமே) இத்தனைக் கனிகளைக் கூட்டிக் கலந்த தீஞ்சுவையே வா!*

**(இதம் தரு)** *நன்மை தரும் கரும்பில் எடுத்த தீஞ்சுவை சாறே பதமாகத் திரட்டப்பட்ட வெல்லப்பாகின் சுவையே வா!* **(1410)**

**(சாலவே)** *மிகவும் இனிப்பாக உள்ள சர்க்கரைத்திரளே, நாவுக்கு ஏலவே (ஏற்புடையதான) இனிய கற்கண்டே வா!*

**(உவப்பு)** *உவப்பு (முடிவு) இல்லாது இனிக்கும் உயர் மலைத்தேனே சிறிதும் கலப்பு இல்லாத மலர்களில் திரட்டியெடுத்த மதுரமான கொம்புத்தேனே வா!*

**(நவையிலா)** *இகழ்வு இல்லாது எனக்கு நெருங்கிய தென்னஞ் சாறே, சுவைகளையெல்லாம் திரட்டியதான தூயதான நெருப்பில் சூடேற்றி இறக்கி வைத்த பதமே வா!*

**(பதம்பெற)** *பதம் பெறக்காய்ச்சிய நறுமணமுள்ள பசும் பாலே, இன்சுவை தரத்தக்க விதத்தில் சரியான பதத்தில் உருக்கிய இளம் பசு நெய்யே வா!*

**(உலர்ந்தி)** *உலராது, வதங்காது, உதிராது என்றும், அன்று மலர்ந்த நல்ல புதிய வண்ணத்துடன் உள்ள கண்கவர் மலரே வா!* **(1420)**

**(இகம்தரு)** *இந்த அண்ட முதல் எவ்வண்டத்திலுமுள்ள உயிர்களும் மகிழ்வுடனிருக்க மணம் வீசும் சுகந்த மலரே வா!*

**(யாழுறும்)** *யாழை மீட்டும்போது உருவாகும் இசையே, மிக இனிமையாய் அமைதி தரும் இன்னிசையே, ஏழுவித மான ஸ்வரங்களில் அமைந்துள்ள இசையே, இயல் பாகவே இசைந்து அருள் என்பது வேறானது அல்ல என்னும் இசையே வா*

**(திவளொளி)** *திவள் ஒளி - சூரிய ஒளி, பருவம் - உயர்ச்சியான ஒளி அது என்னொடும் சேர்ந்தது. அதனால் என் உடம்பும் ஒளி ஊடுருவும் உடம்பானது. அதனால் அடைந்த ஓர் சுகமே வா!*
*(ஒளி ஊடுருவும் நிலை பெற்றதால் வள்ளலாரை நிழற்படம் பிடிக்க முடியவில்லை)*

**(நாதநல்)** *கண்ணுக்கு கடற்கரையும், நந்தனக்காவும், முகர்வதற்கு மணம் வீசும் பூக்களும், வாய்க்கு தீஞ்சுவை உணவு, நீர், சாறு மற்றும் கனிகளும், உடம்பு சுத்தமாகிட ஒளியுடன் சேர்ந்து பிரகாசித்தும் இருப்பதை அனுபவத்தில் கண்ட வள்ளலார் இங்கே காதுக்கு இனிய நாதநல் (நல்ல இசையின்) வரைப்பு (எல்லையான) நாதாந்தம் என்னும் பாட்டு (பத்து ஓசைகளும்) வேத கீதத்தில் சொல்லப்பட்ட அந்த திருவில் விளைந்த பாட்டே வா!*

**(நன்மார்க்)** *பாட்டு என்பதைக் கேட்ட பிறகு நமக்கும் பாடத் தோன்றுமல்லவா? எதைப்பாடுவது? இதுவரை வந்த மார்க்கங்களில் நன்மார்க்கத்தவர்கள் நாவால் உறுதி படப்பாடிய ஒழுக்கமும், கருணையும், சத்தும், சித்தும், ஆனந்தமும் நிறைந்து சன்மார்க்கம் ஏற்றுக்கொண்ட பாட்டே வா!* **(1430)**

**(நம்புறும்)** *நம்பிக்கைக்கு உரியதென உலகர் கொண்டிருக்கும் தந்திர ஒழுக்க முறைகளையும், ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களை ஒழிக்கும் தந்திரமே ஆகமநூற் பாக்களாம். அவை நவிற்றிய (உறுதிபடச் சொல்லிய) பாட்டு என்பது அம்பலம் (கடவுள் ஜோதி) என்னும் (எமது பலமாகிய) எம்பலப் பாட்டே வா!*

**(என்மனக்)** *எனது மனதில் (காணாக் காட்சியைக் காட்டும்) கண்ணே, அதைவிட அருங்காட்சிகளை உயர் காட்சி களைக் காட்டும் என் அருட்கண்ணே, எனது இரு கண்களும் இதுவரை புறக்காட்சிகளை மட்டுமல்ல, நினது அருளால் தயவு புரிய இப்பூவுலகில் உள்ள உயிர்களைக் காட்டிய இரு கண்ணே, எனது உள் ஒளியாய் விளங்கும் எனது கண்ணின் மணியே வா!*

**(என்பெரும்)** *எனது உணர்வில் எல்லாமாய் நிறைந்திருப்பது இறைவனே என்பதால் அது என் பெருங்களிப்பே! அதற்குக் காரணமான அகம் புறம் ஆகிய இரண்டிலு முள்ள என் பெரும்பொருளே, எனது நிலை உயர எல்லா ஆற்றலையும் என் உள்ளேயே வைத்த வலிமையே, எனது சொல் எதுவும் தனித்து என்னால் செய்யப்படவில்லை. எல்லாம் செய்து முடித்த பெருஞ்செயலே வா*

**(என் பெரும்)** *எனக்கு அன்பு காட்டி தயவுடன் தவம் செய்யச் சொன்ன என் பெருந்தவமே, அதனால் எல்லாம் அருளிய தவப்பலனே, எல்லா உயிர்களும் இன்புற்று வாழ வழி சொன்ன என் பெருஞ்சுகமே எனக்கும் பேரின்ப வாழ்வளித்த என் பெரும் பேறே வா!*

**(என்பெரு)** *மரணமில்லாப் பெருவாழ்வளித்த என் பெருவாழ்வே என்னை உலகிற்கு வருவிக்கவுற்ற என்றன் வாழ்வின் முதலே (ஆதாரமே), என் பெரு வழக்கு (வழக்கம்) சன்மார்க்கம் நடத்துதலே, என் பெருங்கணக்கு (எழுத்து) என்பது திருவருட்பா என்னும் கணக்கை (எழுத்து) எழுத வைத்த என் பெருங்கணக்கே வா* **(1440)**

**(என்பெரு)** *என் பெரு நலம் என்பது மக்கள் சன்மார்க்கத்தில் பெறும் பெருஞ்சுக அனுபவமே. என் பெருங்குலமே என்பது அகவினம் சார்ந்து மக்கள் அருள் பெறும் குலமே, என் பெறு வலம் (வெற்றி) என்பது நீ அளித்த சாகாக்கல்வியை உலகருக்கு அறிவித்ததே. உனது பரோபகார சிந்தனைகள் செயலாகும் தருமச்சாலை களை செயலாக்கும் என் பெரும் (இடமே) புலமே வா!*

**(என்பெரு)** *என் பெருவரம் என்பது நினது அருளே. என் பெரும் தரம் என்பது சன்மார்க்க செயல்பாடே. என் பெருநெறி என்பது கொல்லா நெறியே. இனிப்பிறவாதே என்று இறவா நிலை எனக்குத் தந்த பெருநிலையே வா!*

**(என் பெருங்)** *என் பெருங்குணமான அன்பு, அறிவு, இரக்கம், ஈகை எல்லாம் நீதான். என் பெருங்கருத்தானது எல்லாவுயிர்களும் இன்புற்று வாழ்தலே. என் தயவு என்பது அகத்திலும் புறத்திலும் துளும்பி வழியும் நீதான். உலகர் செல்லத்தக்க நெறியான சுத்த சன்மார்க்கத்தைக் காட்டிய என் பெருங்கதியே வா!*

**(என் பெரும்)** *என் பெரும்பதி என்பது அருட்பெருஞ் ஜோதியே. என் உயிரின் இயல் என்பது உயிர் இரக்கமே. என் பெரு நிறைவு என்பது சன்மார்க்கம் தோற்று வித்ததே. இதை நிறைவேற்றும் வழி தயவுடன் கூடிய சத்விசாரம் செய்வதே என்ற என் தனி அறிவே வா!*

**(தோலெலாம்)** *சாதகனுக்கு மேற்சொன்னவைகள் எல்லாம் சாத்தியமாக மாறும் நிலையில் இதுவரை உறுதியா யிருந்த தோல் முதலியன குழையும். அதன் அடியி லிருக்கும் நரம்புகள் அனைத்தும் கட்டுவிட்டுத் தளரும்.*

*கூடி விலகும். (வயது முதிர்ச்சி உடம்பு தளர்ச்சி, பட்டினி, வியாதி போன்றவற்றால் உடம்பு இப்படி ஆவதும் உண்டு. இதை அதனுடன் சேர்க்கக்கூடாது).* **(1450)**

**(என்பெலாம்)** *எலும்புகளெல்லாம் வளையும், உருகும். ஒன்றுடன் ஒன்றுக்கு உள்ள தொடர்பு விலகும். மென்மையாயிருந்த தசைகள் உடம்புடன் தளரும்.*

**(இரத்தம்)** *இரத்தம் அனைத்தும் உள்ளேயே இறுகும் நிலைக்கு. வரும் இரத்தத்தால் உருவாகும் சுக்கிலமானது திரளும். இதற்கு உரம் (மனம்) தான் சலனமற்று உறுதியுடன் ஒத்துழைக்கும்.*

**(மடலெலாம்)** *மனிதன் தலையில் மேல் பகுதியிலிருக்கும் சகஸ்ராரத்தில் உள்ள அமுதமானது மூளையின் மலர்ச்சியால் உடலிலுள்ள நாடி நரம்புகளினுள் பாய்ந்து நிரம்பி ஓடும். அப்போது,*

**(ஒண்ணுதல்)** *ஒண்ணுதல் (முன்நெற்றியில்) வியர்த்துக் கொட்டும். முகம் ஒளிர்ந்து மலரும். மூச்சுக்காற்றில் வெப்பமே இல்லாமல் குளிர்ச்சியுடன், உணர்வில் இன்பமும், மனத்தில் அமைதி (சாந்தம்) உடலின் எல்லா உறுப்புக்களிலும் அனுபவப்படும்.*

**(உண்ணகை)** *மெய்யறிவின் விளக்கத்தால் நெகிழ்ந்த மனம் உள்ளே பூரித்து மகிழ்கிறது. மயிர் கூச்செறிகிறது. கண்களில் ஆனந்தக்கண்ணீர் பெருகி மயிர்க்கால்கள் தோறும் வியர்க்கிறது.* **(1460)**

**(வாய்துடித்)** *அப்போது நாக்கு குழறும். பேச்சு வராது. அதீத அன்பின் பிடியில் இருப்பதால் காதுகளெல்லாம் அடைப்பதும், (கூயிசைப்பொறி - காதுகளில் சவ்வு)*

**(மெய்யெலாம்)** *உடம்பின் வெப்பம் (வியர்வை நிரம்பியதால்) குறையும். நெஞ்சம் படபடக்கும். இதயத்துடிப்பினால் சற்று மூச்சுத்திணறல் இருக்கும். கைகள் தாமாகவே குவியும். கால்கள் நடக்க அஞ்சி தடுமாறும்.*

**(மனங்கனி)** *பக்குவம் அடைந்து மனம் கனியும். அறிவு நிறைந்து பிரகாசமாய் ஒளிரும். இருள் என்பதே*

*இருக்காது. மனத்தின் இனமாகிய புத்தி, சித்தம், அகங்காரம் இவைகளெல்லாம் இந்த நிலைகண்டு மகிழ்ந்து இன்புறும்.*

**(அகங்கார)** *அகங்காரமானது தன் முனைப்பை விடுத்து ஆங்காங்கு அதிகரிக்கும்போது எல்லா நிலைகளிலும் சிறப்புற்று செயல்படுவதை இந்த உலகமே பார்த்து வியந்து உள்ளம் தளர்ந்து மகிழ்ந்திட*

**(அறிவுறு)** *சத்தும் சித்துமாயுள்ள இறைவன் உயிரும், உடம்பும், அறிவாயும் இருக்கிறானாதலால் அந்த பக்குவம் பெற்ற அறிவு, உருவு அனைத்தும் ஆனந்தமா யிடவும், ஐம்பொறிகளிடத்தே உள்ள ஆன்மா பக்குவத்தால் பதியுண்மை பெற்றதால் தற்போதமும் போயிட* **(1470)**

**(தத்துவம்)** *தத்துவங்களாலான இவ்வுடம்பின் எல்லா தத்துவங்களும், தாத்விகங்களும் ஒருங்கே விலகிட (தத்துவ நிக்கிரகம்) சத்துவப் பொருளான அகண்ட வெளியில் அனக நிலையில் தனித்து நின்று ஓங்கிட*

**(உலகெலாம்)** *உலக முழுவதும் மூவாசைகளும் பிறவும் உள்ளன. அவைகளெல்லாம் மறைந்திட, பிறகு எல்லையற்ற அருளின்மீது ஆசை பொங்கிட*

**(என்னுள)** *அதன் பயனாய் என்னுள்ளத்தில் எழுந்து அருளி உயிர்களெல்லாம் மலர்ந்திட வேண்டி என் உள்ளத்தில் ஓங்கிய எனது அருட்பெருஞ்ஜோதியெனும் அன்பே வா!*

**(பொன்னடி)** *நினது பொன்னடிகள் கண்டு கொண்டேன். அருள் என்னும் அமுதால் புத்தம் புதியதாகத் தயாரிக்கப்பட்ட உணவு நீ, என் உள்ளத்தில் எழுந்து அருளிய என்னுடைய அன்பே வா!*

**(தன்னையே)** *உலகர் உன்னிடம் கேட்டு எதையெல்லாமோ பெற்றனர். ஆனால் நான் கேட்டபடி உன்னையே எனக்குத் தந்ததுடன் அருள் ஒளியால் என்னையும்*

*உன்னைப்போல் ஒளியாக மாறும் வேதித்தலும் புரிந்த எனது அன்பே வா!* **(1480)**

**(என்னுளே)** *ஒவ்வொரு ஜீவனிலும் நீ புறத்திருந்து அனுபவம் பெறச் செய்கிறாய். ஆனால் என் விஷயத்தில் நீ என்னுள்ளேதான் அரும்பினாய். என்னுள்ளேதான் மலர்ந்தாய். என்னுள்ளேதான் விரிந்தாய். எவரும் அறிந்திராத இந்த அனுபவம் நான் பெற அருளிய என் அன்பே வா!*

**(என்னுளே)** *என் மனம், என் உடல், என் அறிவு ஆகியவற்றின் உள்ளே நிறைந்து விளங்கும் பொருளாய், பழுத்து-முழுதும் பக்குவப்பட்டதாய், மறை கனிந்த (கரைந்தும் விட்ட) என்னுடைய அன்பே வா!*

**(தன்னுளே)** *தானே தனக்குள் நிறைவதும், நிகராவதும், எப்படி எனும் வழிமுறைகளை எல்லாம் தரத்தில் (சமானமாக) எனக்கே நிறைவித்து நிற்கும் என் தனி அன்பே வா!*

**(துன்புள)** *இறைவனின் படைப்பு இயற்கையின் இயலும் இன்பமும்! மனிதனோ மண்மீதுள்ள அத்தனைக்கும் ஆசைப்பட்டு, பொறாமைப்பட்டு, கோபப்பட்டு ராஜச, தாமச குணங்களால் துன்பத்தை வலிய வரவழைத்து துன்பப்படுகிறான். அதிலிருந்து பக்குவப்பட்ட பின் எனது துன்பங்கள் எல்லாவற்றையும் தொலைத்து எனது உருவை இன்புருவாக்கிய என்னுடைய அன்பே வா!*

**(பொன்னுட)** *என்னுடலில் அமுதம் கலந்ததால் அழியா உடம்பும், அருட்பெருஞ்ஜோதி கலந்ததால் பொன் னுடம்பும் எனக்குப் பொருந்தியிருக்கும் பொருட்டாய் வழி செய்த என் அன்பே வா!* **(1490)**

**(தன்வசமா)** *இறைவன் தன் வசமாவது அன்பினில் அடங்கும்போதுதான் (அன்பெனும் பிடியுள்) அந்த அன்பு மிகுந்து வெளிப்படும் பக்குவர்களைக் காணும் போது அது ததும்பி மேற் பொங்கி, என்னிடம் வந்து*

*என் உடல், அறிவு கடந்து புறவெளிக்கும் செல்லும் என் தனி அன்பே வா!*

**(தன்னுளே)** *இறைவன் தன்னுள்ளே பொங்குவது குளிர்ச்சியான அமுது. அது உண்பதற்கு சாலச்சிறந்தது. அதை உண்ணும்போது அது அன்புடன் கலந்திருந்தால் அதுவும் பொங்குவதைக் காட்டிய என் தனி அன்பே வா!*

**(அருள் ஒளி)** *அருள் ஒளிதான் சத்தியத்தையும், நித்தியத்தையும் காணச்செய்யும். அது நிறைந்த உடம்பில், மனதில், அறிவில் ஆணவம் என்னும் ஒரு இருள் அறுக்கப்பட்டு அங்கும் பிரகாசமாய் ஒளிர்ந்திட ஏற்றப்படும் விளக்கே வா!*

**(துன்புறு)** *மனம், மொழி, மெய் எல்லாம் குற்றம் புரிந்து கூண்டில் நிற்பதற்குக் காரணம் மனிதனுக்குள்ளே மாயாதனுவில் தரப்பட்ட 96 தத்துவங்களே! இந்தத் துன்பம் தரும் தத்துவத் துரிசுகளை (குற்றங்களை) நீக்கி நல்லவனாக இன்பம் நிறைந்து வாழ வேண்டி எனது உள்ளத்தில் அதை ஏற்றிய விளக்கே வா!*

**(மயலற)** *அருள் விளக்கு எல்லா ஜீவராசிகளிலும் இருக்கிறது. அது மயல் (மருள்) என்னும் மறைப்பால் எவருக்கும் தெரிவதில்லை. எனவே வாழ்வு அதனால் பாழாகி அழிகிறது. அப்படி உள்ள மயலை அறுக்க, அழியா வாழ்வு மேன்மேலும் இயல்பாக நிறைந்து இன்பமாய் வாழ என் உள்ளத்தில் ஏற்றிய விளக்கே வா!* **(1500)**

**(இடுவெளி)** *இடுவெளி (ஆகாயத்திற்கு இடப்பட்ட விதிக்கப்பட்ட) செயல் என்பது காற்று, நெருப்பு, நீர், நிலம், முதலியவற்றை ஒன்றிலிருந்து ஒன்றை உருவாக்கி, அதிலிருந்து பயிர், உயிர் என விரிந்துகொண்டே சென்று மீண்டும் அவ்வுயிர்களை அழித்தும், பிறக்க வைத்தும் தன்னுள்ளே இருக்கச் செய்வதாகும். அப்படிப்பட்ட தோற்றங்களில் ஒன்றான, இயல்பான ஒளி விளங்கிட இந்த ஐந்து பூதங்களின் நடுவிலமைந்த நடுவெளியான*

*நெருப்பின் நடுவிலே அமைந்த (அருட்பெருஞ்) ஜோதி நாட்டிய விளக்கே வா!*

**(கருவெளி)** *இருள் சூழ் ஞாலத்தின் நடுவே கதிரவன் ஒன்று மட்டுமே பிரகாசமாய் அண்டத்தில் விளங்குவதைப் போல பிண்டத்திலே இந்த உருவ வெளியாம் உடம்பின் நடுவே ஒளிர்ந்து அலங்கரிக்கும் ஆன்ம விளக்கே வா!*

**(தேற்றிய)** *எத்தனையோ நூல்கள் உள்ள இவ்வுலகில் தேற்றிய (ஐயங்கள் தீர்த்து அறிய வேண்டியதை தன்னகத்தே கொண்ட) வேதங்களின் தெளிவான நல்ல முடிவு என்ன? இறைவன் திருவடி அடைதலே! ஆனால் இது அறிவின் முடிவுதான். அதற்கு மேல் அருள் என்ற ஒன்று உண்டு. அந்தத் திருமுடியின் விளக்க அனுபவம் விளங்க ஞானஇயல் ஏற்றிய ஒரு ஒளி விளக்கே வா!*

**(ஆகம)** *அந்த வேதத்திற்கு உரையான ஆகமமும் உண்மை அறியாமலும், இறவாமை பற்றித் தெரியாமலும் போயிற்று. அதன் முடிபாக அருளொளி விளங்கிட வேகம் (மரணம்) கெடுத்து அதை அறுத்து விளங்கும் ஒளி விளக்கே வா!*

**(ஆரியர்)** *அறிவுடையோர் என்று இதுகாறும் கொள்ளப் பட்டவர்கள் எல்லோரும் அருள்நிலை என்பது அனாதி காரியம் என்றே சொல்லி வந்தனர். அதாவது பிறப்பு இறப்பெல்லாம் வரும் போகும். இது அனாதி சற்காரியம் என்றனர். இது வெறும் காரியம்தான். இதற்குக் காரணமே இல்லை எனச்சொல்லி வந்த நிலையை மாற்றி இந்த பிரபஞ்சக் காரியப்பாடு மனிதனுக்கும் கடவுள் மய நித்தியானந்த வாழ்வு கிட்டும் அந்த நாள் வெளிப்படும் என்று விளக்கும் ஓர் காரண விளக்கே வா!*

**(1510)**

**(தண்ணிய)** *எனக்கு அந்த குளிர்ச்சியான அமுது, உள்ளத்திற் கான அமுது எப்படி கிடைத்தது என்னில் - நான் செய்த புண்ணியங்களாலும், நற்செயல்களாலும், காருண்யத் தாலும் அறிவு மற்றும் அருளைப்பற்றி உலகருக்கு*

*உரைத்ததாலும் எனக்கு பலித்தது (பயன், நியாயம், வாய்ப்பு, நன்மை கிடைத்தது). எனவே வளர் பிறைபோல் படிப்படியாய் வளர்ந்து இப்போது நிறைமதியான பூரண மதியே வா!*

**(உய்தர)** *உய்வு (மேன்மை, இறவாமை) தருகின்ற அமுதம் உதவி, வரம் தந்து, என் உள்ளத்தால் செய்த தவங்க ளெல்லாம் பலித்ததால் கிடைத்த உயர் செல்வமான வளரும் மதியே வா!*

**(பதியெலாம்)** *உள்ளமென்னும் தூயதான, விசாலமான இடத்தில் தழைத்து இறைவனின் பதம் பெறும் அமுத நிதியெலாம் அளித்த நிறைந்த உயர்ந்த செல்வ மதியே வா!*

**(பாலென)** *மேல் வெளியென்பது தலையினைச் சுற்றியும் மேலுமுள்ள ஒளிவட்டம். அதில் பால் போன்ற தண்மை யான சந்திரகலை அமுதம் சிரசில் நிறைந்துள்ளதால் எஞ்ஞான்றும் (எக்காலத்தும்) அது விளங்க விளங்கிய மதியே வா!*

**(உயங்கிய)** *அந்த மதியமுதம் பெற்ற பின்னர் உள்ளம் வருந்துகிறது. உயிர் வாடுகிறது. அது தழைக்க (செழித்து வாழ) முகமெல்லாம் ஒளிபெற, உயிரும் நிமிர்ந்து நடக்க கருணை என்னும் அமுத மழையைப் பொழியும் மழையே வா!* **(1520)**

**(என்னையும்)** *என்னையும், அடியனாக்கி, பிள்ளையாக்கி, நேயனாக்கி பணிய வைத்து வணங்கச் செய்து கொண்டபின் என்னுள்ளே நிரம்பி மன்னிய (நிலைத்த பேறு பெற) கருணை மழை பொழிந்த மழையே வா!*

**(உளங்)** *என் உள்ளம் கொள்ளுமளவுக்கு மகிழ்ச்சி நிறைந்து அதற்கும் மேல் பொங்கி என் வாழ்வு வளங்கொள்ளக் கருணை மழை பொழி மழையே வா!*

**(நலந்தர)** *உலகருக்கு நலம் தர வேண்டும் என்று நான் பணிக்கப்பட்டு இருப்பதால் எனக்கு எல்லா நலமும் தர என் உடல், உயிர் நல்லறிவு ஆகியவற்றை மலர்ந்திடச்*

*செய்யும் வல்லபம் பெற்ற கருணை என்னும் மழையைப் பொழியும் மழையே வா!*

**(தூய்மையால்)** *என் வினைத்தூய்மையால் எனது குற்றங்கள் எல்லாவற்றையும் நீக்கி நல்ல சொல்வன்மையினால் கருணை மழையைப் பொழியும் மழையே வா!*

**(வெம்மல)** *கருணை மழை பொழிந்த பின் சற்று வெம்மை யுடன் கூடிய இரவு (நான் நற்பேறு அடையும் நாள்) விடியும் தருணம் தன்னில் மிகவும் செம்மையாக, மறக்க முடியாத, ஒரு அரிய உதயமாக எண்ணும் உள்ளம் திகழ்ந்து பெருமை கொண்ட செழுஞ்சுடரே வா! (1530)*

**(திரையெலாம்)** *கீழ்வானச் செங்கதிரோனைக் காண திரை மறைப்புகளை எல்லாம் தவிர்த்து, பக்குவமாய் அங்கே அடைந்து என்வரை (தடை) யெலாம் இருந்தது எனத் தெரிந்து அதை சாதாரணமாக விளங்கச் செய்து நடத்தி ஒளிரும் செஞ்சுடரே வா!*

**(அலகிலா)** *எண்ணற்ற தலைவர்களின் ஆளுமையிலுள்ள அரசுகளெல்லாம், உடலிலுள்ள தத்துவ உலகெலாம் பிரகாசிக்க உனது ஒளிக்கதிர் பாய்ச்சி எல்லாவற்றையும் விளங்க வைத்து ஓங்கி நிற்கும் செஞ்சுடரே வா!*

**(முன்னுறு)** *பல பிறவிகளிலிருந்து என்னுடனிருக்கும் எல்லா மல இருள்களையும் முழுவதும் நீக்கி என் உள்ளம் என்னும் மலைமீது உதித்து எழும் செஞ்சுடரே வா!*

**(ஆதியும்)** *நான் தோன்றுவதற்கு முன்பிருந்தும், எத்தனையோ பிறவிகள் எடுத்து வாழ்ந்தபோதும், எனக்கு அந்தமென்று இருந்தால் அதுவரையிலும் நீ ஜோதி வடிவில் அனைத்தினும் புகுந்து என் உள்ளத்தில் சூழ்ந்து துணையாயிருந்த மெய்ச்சுடரே வா!*

**(உள்ளொளி)** *எனது அகவொளி ஓங்கிடவும், உயிர் ஒளி விளங்கிடவும் உனது ஜோதியின் வெள்ளொளி (தூய்மையான ஒளியினால் எல்லாவற்றையும் ஓங்கிடச் செய்து) காட்டிய மெய்யருட்கனலே வா!* **(1540)**

**(நலங்கொள)** *நான் நலம்பெற, நலம் நிறைந்திட ஞான யாகத்தின்போது அக ஆன்ம ஒளி வலப்புறமாக சுழித்து எழுந்து வளர்ந்த மெய்க்கனலே வா*

**(வேதமும்)** *வேதமும், ஆகம விரிவும், பர அம்பர நாதமும், கடந்து மேநிலையில் விளங்கிடும் ஞான மெய்க்கனலே வா!*

*(அபர நிலையிலிருக்கும் வேதாகமங்களால் இந்த அருட்கனலைக் காண முடியாது)*

**(எண்ணிய)** *ஞானம் என்பது கொலை புலையற்ற தயவுடனிருத்தல் ஆகும். என்னிடம் அப்படிப்பட்ட அருங்குணங்களையெல்லாம் வளர்த்து, அவைகளைப் பற்றுக்கோடாக்கி நான் எண்ணிய எண்ணமெல்லாம் தர என்னுள் மிக நெருங்கிய உயர்ந்த புண்ணியனாகிய என் ஞான மெய்க்கனலே வா!*

**(வலமுறு)** *வல்லபம் அல்லது வல்லமை மிகப்பெற்ற சுத்த சன்மார்க்கத்தில் நிலை பெற எனக்கு எல்லா நலமும், துணையும் வழிகாட்டியுமாயமைந்து பெருமையளித்த ஞான மெய்க்கனலே வா!*

**(இரவொடு)** *(இரவு - இடகலை, பகல் - பிங்கலை, பொது - புருவ மத்தி) இடகலை பிங்கலையில்லாத சுழுமுனையில் நிற்கும் இயலால் பொது நடம் காணும் பரம (சுத்த) வேதாந்தம். ஆனால் அதனால் காணமுடியாத பரம் பரஞ்சுடரே வா!* **(1550)**

**(வரநிலை)** *சுத்த சித்தாந்தத்தில் பதியை பரஞ்சுடராய் அனுபவத்தில் குறிக்கப்படும் நிலை. சித்தாந்தம் என்பது பதியொடு ஐக்கியப்பட்டு வாழும் நிலை கிடைப்ப தில்லை. மறைந்து போதலே முடிவாகும். எனவே வரநிறை பொது என்பது அருளின் பொது வரம். பொது வாழ்வு சித்திக்கும் என்பது உண்மை. ஆதலால் வளர்திரு நடம் புரிகின்ற பரம சித்தாந்தப்பதியாம் பரஞ்சுடரே வா!*

**(சமரச)** *சமரசம் என்பது பாகுபாடின்மை. சத்தியம் என்பது உண்மை. தற்சுயஞ் சுடர் என்பது தானாகத் தோன்றிய சிறப்பு மிக்க ஒளி. அது அருள் ஒளி. உலகத்தில் எத்தனையோ மதங்கள் தோன்றினாலும் அன்பு என்பதை ஆதாரமாக்கியே சொல்லப்பட்டிருந்தாலும் உண்மையான சமரசம் ஏற்படவில்லை. காரணம் அருள் நாட்டம் இல்லை. எனவே சத்தியம் என்னும் சபையிலே சமரசமாம் அருட் பெருஞ்ஜோதி நடம்புரிவதை (செயல்படுவதை)க் காண வேண்டும். அப்படி நித்தியமாய் ஒளிரத் தகுதி பெற்ற தற்சுயஞ்சுடரே வா!*

**(சபை எனது)** *மேற்சொன்ன சமரசம் என்னும் சபை எது? எனது உள்ளமே என்று முழுதும் தெரிந்து கொண்ட இறைவன் அதில் வந்து அமர்ந்து கொண்டு, இனி இங்கிருந்தே ஆட்சி செய்யப் போகிறேன், எதற்கும் நீ அஞ்ச வேண்டாம் என்று எனக்கு அபயம் அளித்த ஓர் அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(மருளெலாம்)** *பல பிறவிகட்குப் பின் கிடைத்த மனிதப் பிறவியில் இருள், மருள் நிலையிலேயே வாழ்ந்து முடிவது இயல்பாகி விட்டது. ஆனால் எனக்கு அந்த இருள், மருள் எல்லாம் தவிர்த்து, எல்லா வரத்துடன் சாகாவரமும் கொடுத்து, அருள் என்னும் அமுதளித்து என்னை ஏறாநிலைக்கு ஏற்றிய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(வாழிநின்)** *இவ்வளவு பெரிய வரம் கொடுத்த இறைவனுக்கு நன்றி சொல்லி வாழ்த்தவும் செய்கிறார். உலகத்தின் பெரிய அருளாகிய நீ வாழ்க! உனது பெரிய சீர் (அழகு, வாழ்வு, நலம்புரியும் தன்மை, சிறப்பு, புகழ், மற்றும் தயவுக்குணங்களும்) வாழ்க! ஈடு இணை இல்லா ஆழியை (கருணைக்கடலை)க் கொடுத்த அருட்பெருஞ் ஜோதியே வா!* **(1560)**

**(என்னையும்)** *சாதாரண சிற்றணுவாயிருந்த எனக்கு உடல் கொடுத்து அறிவு கொடுத்து, கருணை காட்டி, அருள் கொடுத்து என்னையும் ஒரு பொருளென்று எண்ணி தாயாகவும், தந்தையாகவும் ஆகி என் உள்ளத்தையே அரியணை (சிம்மாசனம்) ஆக்கி அதில் மகிழ்வுடன் அமர்ந்து,*

**(உலகியல்)** *இந்த பிரபஞ்ச உலகத்தின் இயல்பாயிருக்கும் ஆணவம், கன்மம், மாயை, ராஜசம், தாமசம் போன்ற மலங்களையும் குணங்களையும் மூவாசைகள், கோபம், பிணி, நரை, மூப்பு, மரணம் போன்றவைகளை என் உள்ளம் சென்று பற்றாமல் எனக்குத் துன்பம் நேராவண்ணம், எல்லையற்ற பேரருளால் இதற்கு மூல காரணமான அறிவு கொண்டு அதை விளக்கி,*

**(சிறுநெறி)** *சிறு நெறிகளான மதங்கள், மார்க்கங்கள், அது சம்பந்தமான பேதங்கள், உயிர்க் கொலைகள் போன்றவற்றில் சென்று தீயவனாக ஆகாத திறன்களை (குணங்களை, காரணமறிந்து பகுத்து அறிதலை) அளித்து, நான் அழியாது, உறுநெறி (எது மனிதனுக்கு அறிவுறுத்தப் பட வேண்டுமோ அந்த நெறியை) சன்மார்க்கத்தை உணரும் பக்குவம் தந்து என் உடம்பை ஒளியுடம் பாக்கும் செயல் புரிந்து,*

**(சாகாக்கல்)** *சாகாக் கல்வியின் தன்மை, அதைப் பெறுவதற் கான தகுதி, எடுக்க வேண்டிய முயற்சி, அதன் தரமெல்லாம் உணரச்செய்து, சாகா வரத்தையும் எனக்குத்தந்து அதற்கும் மேலான*

**(அன்பையும்)** *அன்பையும் விளைவித்து, பெருக்கி, அருள் என்னும் பேரொளியால் இன்பம் என்பதை மனம், உடல், உயிர் எல்லாம் நிறைவித்து, என்னையும் அருட் பெருஞ்ஜோதியாகிய உன்னையும்* **(1570)**

**(ஓருருவா)** *ஒரே உருவமாக்கி (ஒன்றறக் கலந்து) நான் நினைத்தபடியெல்லாம், என் மனம் உந்தியபடி*

யெல்லாம் சீர் (வாழ்வும், வளமும், சீரும், சிறப்பும், புகழும்) உறச்செய்து உயிர்த்திறம் (வலிமை, உறுதி, மேன்மை) பெற, அழியாத,

**(அருளமுது)** அருள் என்னும் மேலான அற்புதமான அமுதினை அளித்தாய், மேலான அருள் நிலைக்கு ஏற்றினாய், அருள் அறிவு போன்றவைகளைத் தந்து சிறப்பித்த அருட்பெருஞ்ஜோதியே வா!

**(வெல்கநின்)** அருள் என்பது அகத்தில் நிலைத்து உறைவது. பெருஞ்சீர் என்பது புறத்தில் காணப்படும் அகண்ட ஜோதி. அருளின் ஆணைப்படி புறஜோதி பூதங்களையும், பிறகு உயிர்களைத் தோற்றுவித்தும், மறைத்தும் வருகிறது. இந்தச்செயல் இடைவிடாது தடைபடாது, ஓயாது இயங்கி ஓங்க வைக்கும். இவ்விரண்டும் வெல்லட்டும்! வெல்லட்டும். இதற்குக் காரணமான அருட்பெருஞ் ஜோதியே வா!

**(உலகுயிர்)** இந்தப் பிரபஞ்சமும் உயிர்களும் படைக்கப் பட்டதின் நோக்கம் என்னவெனில் சத்தாகிய இறைவனின் கூறான உயிர்த்திரள்கள் எல்லாம் சித்தாகிய அறிவைப்பெற்று, கருணையைக் கடைப் பிடித்து அதன்மூலம் ஒளி நெறி பெற்றிடவே, இப்போது நடைமுறையிலுள்ள படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களை யான் ஆகிய நான் செய்யத்தந்தனை,

**(போற்றி)** இதில் ஒரு உயிர்கூட அந்த ஒளிநிலை அடை யாமல் விடுபடக்கூடாது என்னும் சித்தியையும் எனக்குக் கொடுத்த இறைவனே உன் அருளைப் போற்றுகின்றேன். பெருஞ்சீரைப் போற்றுகின்றேன். இத்தகைய ஆற்றல் ஓங்கிக் கொண்டேயிருக்கும் என்ற அருட்பெருஞ்ஜோதியே வா! **(1580)**

**(மூவரும்)** பிரமன், அரி, அரனாகிய மூவரும், விண்ணுலக தேவர்களும், விதேக முத்தி பெற்ற முத்தர்களும், தவ,

*யோக, ஔஷதங்களில் சிறந்து விளங்கிய சித்தர்களும், அதற்கொத்த பிறரும் இதுவரை பெற்றிடாத ஐந்தொழில் இயக்கத்தை எனக்கு அளித்த நினது,*

**(போற்றி)** *பேரருளைப் போற்றுகின்றேன், பணிகின்றேன். நினது அளப்பரிய, சொல்லரிய பெருஞ்சீரைப் போற்று கின்றேன். ஆற்றல் மிக்கு ஓங்கிய அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(சித்திகள்)** *கருமசித்தி, யோகசித்தி, ஞானசித்தி (மூவகை சித்திகளையும்) அட்டமா சித்தி போன்ற பலவகை சித்திகளையும் மிகத்தெளிவாகத் தெளிவித்து, இவைகள் எல்லாமே சத்தியநிலை, ஒளி, ஒலி விந்து, நாத சத்து இயல்தான் என்பதனை உனது அளவிடற்கரிய தயவினால் தந்தனையே இறைவா,*

**(போற்றி)** *நினது பேரருளைப் போற்றுகின்றேன். துதிக் கின்றேன். நினது பெருஞ்சீரினைப் போற்றுகின்றேன். அள்ளக்குறையாத ஆற்றலில் ஓங்கும் அருட்பெருஞ் ஜோதியே வா!*

**(உலகினில்)** *பசி, பிணி, மூப்பு, பயம், முதுமை, அறியாமை, மரணம் போன்றவை உயிர்களுக்கு உறும் துன்பம் எனச் சொல்லப்பட்டது. ஆனால் அதற்கும் மேலாக உயிர்கள் பல பிறவிகளில் பிறந்து அடிபட்டும், பிடி பட்டும், கட்டப்பட்டும், மயக்கமுற்றும், திகைப்புற்றும், போரிட்டும், கொல்லப்பட்டும், அறுபட்டும், பயப் பட்டும், சிறைப்பட்டும், சிதைக்கப்பட்டும் பற்பல நூறு வகையான இடையூறுகளை அடைந்து வருவதால் இத்தகையதான கொலை, புலை, இரக்கமின்மை விலக வேண்டுமென்றால் நீயே அந்த இடத்தை அடைந்து வன்மனத்தை மாற்றி அதில் இரக்கம் வருவித்து எல்லா உயிர்களையும் இன்புற்று வாழவைத்து அவைகளுடன் நீயும் மகிழ்க! (ஆன்மிகத்தில் இப்படிப்பட்டவரிகளைப் பார்ப்பது அரிது)*

**(1590)**

**(சுத்தசன்)** *(சமயத்தில் சொல்லப்படுகின்றவைகளால் அற்ப சித்தியைப் பெற்றுக்கொண்டு-பூரண சித்தி அடையாமல் தடைப்பட்டு நிற்றல்போல் நில்லாமல்) (சர்வ சித்தியுள்ள கடவுள் ஒருவர் உண்டு என்றும் அவரை அன்பால் நெருங்கி பூரண சித்தியைப் பெற வேண்டுமெனக் கொள்ள வேண்டுவது சன்மார்க்க சங்கத்தவர்களுடைய கொள்கை. இதை ஆண்டவர் தெரிவித்தார் (உரைநடை-411). சுத்த சன்மார்க்கியின் முடிவு சாகாத கல்வியை அடைந்து உலகருக்குத் தெரிவிப்பதேயன்றி வேறில்லை. சாகாதவனே சன்மார்க்கி)*

*அப்படிப்பட்ட சுத்த சன்மார்க்க சுகநிலை பெறுக உத்தமன் ஆகுக என ஆண்டவன் ஆசியளித்தார்.*

*(ஒன்பது வயதில் "உத்தமர் தம் உறவு வேண்டும்" என "ஒருமையுடன் நினது திருவடி" என்ற பாடலில் வள்ளலார் கேட்டார். உத்தமன் - என்றால் எனக்கு எதுவும் வேண்டாம் என்று எல்லாவற்றையும் கொடுத்து விடுபவன் - நீயே எடுத்துக்கொள் என்பவன். அப்படி யொருவரின் உறவு 48 வயது வரை வள்ளலாருக்குக் கிடைக்கவில்லை. எனவேதான் ஆண்டவனே வள்ளலாரைப் பார்த்து "நீயே உத்தமன் ஆகுக, ஓங்குக" என்றது சன்மார்க்கத்தின் உச்சம் தொட்ட இறைவனின் வார்த்தை என்பது இங்கு காணத்தக்கது).*

**(போற்றி)** *எல்லையில்லா அன்பும், கருணையும், அறிவும், அருளும், முத்தேக சித்தியும், சாகா வரமும், ஐந்தொழில் வல்லபமும் தந்து உலகரை சன்மார்க்கத்தில் செலுத்த ஆணையிட்ட நின் அருளைப் போற்றுகின்றேன். பெருஞ்சீரையும் போற்றுகின்றேன். இத்தகை ஓங்கிய அற்புத ஆற்றலைக் கொண்ட அருட்பெருஞ்ஜோதியே வா!*

**(அருட்பெரு)** *அகத்தில் இருக்கும் ஆன்மா என்னும் அருட்பெருஞ்ஜோதியே நீ, அகப்புறத்திலிருக்கும் ஜீவனாகிய அருட்பெருஞ்ஜோதியால், புறத்திலிருக்கும்*

*உடல் என்பதை அருள் என்னும் அருட்பெருஞ் ஜோதியாக்கிய பின், புறப்புறம் என்னும் அகண்ட வெளியில் அருட்பெருஞ்ஜோதியாகிட அனக நிலைக்கு வா!*

அகத்தின் உள்ளிருக்கும் ஆன்மா ஜீவனோடு கூடிய உடலை அருளாக்கிய பின் அனக நிலைக்கு வெளியேறும் நிலையிது.

திருச்சிற்றம்பலம்

# ஜோதிப்பாடல்

**ஜோதி ஜோதி ஜோதி சுயம்**
**ஜோதி ஜோதி ஜோதி பரம்**
**ஜோதி ஜோதி ஜோதி அருள்**
**ஜோதி ஜோதி ஜோதி சிவம்**

**வாமஜோதி சோமஜோதி வானஜோதி ஞானஜோதி**
**மாகஜோதி யோகஜோதி வாதஜோதி நாதஜோதி**
**ஏமஜோதி வியோமஜோதி ஏறுஜோதி வீறுஜோதி**
**ஏகஜோதி ஏகஜோதி ஏகஜோதி ஏகஜோதி**

**ஆதி நீதி வேதனே ஆடல் நீடு பாதனே**
**வாதி ஞான போதனே வாழ்க வாழ்க நாதனே**

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

# ஜோதிப் பாடல் – சிறிய விளக்கம்

**ஜோதி :** *நட்சத்திரங்கள். அதில் ஒன்றுதான் துருவ நட்சத்திரம். அதனை நோக்கியே பூமியின் அச்சு* 23$^{o}$ *சாய்ந்திருக்கிறது. அந்த வட துருவ நட்சத்திரத்தால் இன்றும் காந்தம் வேலை செய்கிறது. அது மின்காந்த மாகவும் மாறி உலகை இயக்கிக் கொண்டிருக்கிறது. 2017 ஆகஸ்ட் மாதம் நாஸா விண்வெளி ஆராய்ச்சி அறிக்கைப்படி "நமது பூமியை ஆதிக்கம் செய்வது 87 நட்சத்திரங்களே. அவைகட்கும் பால்வீதி (ஜோதிமலை என்கிறது சன்மார்க்கம்) என்பவைகட்கும் இடையே உள்ள கருந்துளைகளால்தான் பூமியில் நில நடுக்கம் போன்ற உற்பாதங்கள் ஏற்படுகின்றன. இதைப்பற்றி முழுமையாக முடிவுக்கு வர இன்னும் பத்தாண்டுகள் ஆகலாம்" என அறிவித்தது. இந்த* M *87 என்னும் நட்சத்திரங்கள் என்பது தமிழில் நாம் 60 ஆண்டுகளை வைத்திருக்கிறோமே அவைகளும் நட்சத்திரங்களின் பெயர்களே. அசுவனி முதல் ரேவதி வரை 27 நட்சத்திரங்கள். ஆக இந்த (60+27) 87 நட்சத்திரங்கள் தான் இப்போது* M *87* (Mega stars 87) *என்னும் பெயர் கொண்டிருக்கிறது. இதில் தை மாதம் வரும் முழுமதி நாளில் சன்மார்க்கர்கட்கு வழி காட்டும் பூசம் நட்சத்திரமும் இருக்கிறது அல்லவா? (நமது மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் புறப் புறக்கரணங்கள் புறப் புற அண்டத்திலுள்ள நட்சத்திரங்களின் அம்சமே).*

**ஜோதி:** *இது வால் நட்சத்திரங்களைக் குறிக்கும். பூமியில் கிடைக்கும் பல உலோகங்கள்* (Metals) *பூமிக்குள் எப்படி வந்தன? பல வால் நட்சத்திரங்கள் பலகோடி ஆண்டு கட்கு முன்பு, பல இடங்களில் விழுந்து புதைந்தவை களே. ஒவ்வொன்றும் ஒரு தனிமம். எங்கெல்லாம் அவைகள் விழுந்தனவோ அங்கு மட்டுமே அந்தத் தன்மையிலான உலோகம் கிடைக்கிறது. கடலுக்கு அடியிலும் நிறைய உலோகங்கள் உள்ளன. உலோகம் இல்லை எனில் ஒரு புல்கூட முளைக்காது.*

**ஜோதி:** இது சூரியனைக் குறிக்கும். சந்திரன் மற்றும் சில கிரகங்களின் ஆதாரம் இதுவே. பயிர்கள் உயிர்கள் வாழ ஆதாரமானது. (நமது ஆன்மா என்பதும் சூரியனின் அம்சமே).

**சுயம் :** இவைகள் மூன்றும் சுயமாகத் தோன்றின.

**ஜோதி:** இது சந்திரனைக் குறிக்கும். உயிர்கள், பயிர்கள் தோன்றவும் வாழவும் காரணமானது. (ஜீவன் சந்திரனின் அம்சமே)

**ஜோதி :** இது மின்னல் என்பதைக் குறிக்கும். மழைக் காலங்களில் அதிக அழுத்த (HighVoltage) மின்சாரத்தை உருவாக்கி காற்றிலிருந்து நைட்ரஜன் வாயுவைப் பிரித்து மழை நீருடன் நைட்ரேட் என்பதைக் கலந்து பூமியில் சேர்க்கும். இது பயிர்கட்கு உரம்.

**ஜோதி :** இது பூமியிலுள்ள நெருப்பு. நாம் உண்ணும் உணவு இந்த நெருப்பினால் வருவதே. அதை அளக்கும் அலகு கலோரி. (உடம்பு என்பது நெருப்பின் அம்சமே)

**பரம் :** இவை மூன்றும் உயிர்களை தோற்றுவித்து வாழ வைக்கக் காரணமாயின.

**ஜோதி :** மூலாதாரக்கனல்

**ஜோதி :** ஒளி வடிவான விந்து

**ஜோதி :** ஜீவ ஒளி சுத்த உஷ்ணம்

**அருள் :** இவைகளைக் கொண்டு உடலானது அருள் பெற வேண்டும். (உடல் மண்ணில் விழாமல் காற்றில் கரைந்துவிடும்)

**ஜோதி :** வலது கண்

**ஜோதி :** இடது கண்

**ஜோதி :** புருவ மத்தி

**சிவம் :** இவற்றை ஆதாரமாக்கி ஆன்மாவை சிவ (ஒளி) யாக்கும் (அனக நிலையான புறவெளியில் சேர்க்கும்)

**வாமஜோதி :** அவன் சூரியன். அது அவனின் பிரகாசம். பெண்மை குணத்துடன் உயிர்களை இரட்சிப்பவன்.

**சோமஜோதி :** *அவன் சந்திரன். குளிர்ச்சியானவன். உயிரினங் களின் உடலில் புகும் அமுதமாயும், உயிர்கள் தோன்றக் காரணமுமானவன். அது வளரும்-தேயும்*

**வானஜோதி :** *அவன் ஆகாயம். அளக்க முடியாதவன். எங்கும் தோன்றும்படி எல்லையின்றி விரிந்தவன்.*

**ஞானஜோதி :** *அவன் வாலறிவன். மனித அறிவுக்கு அப்பாற் பட்டு ஞான அறிவுக்குப் புலப்படுபவன்.*

**மாகஜோதி :** *சர்வ வல்லபன். நிலைத்த முழுமையான சக்தி. கோடிக்கணக்கான நட்சத்திரங்களையும், கோள்களை யும் அந்தரத்தில் விண்வெளியில் வட்டமிட்டுத் தன்னைத்தானே சுற்றியும் வர இடமளித்து அவைகளை எந்தவிதமான ஆதாரமுமின்றித் தாங்குபவன்.*

**யோகஜோதி :** *அவன் தீ. மனித உடலை அருளாக மாற்ற சுத்த உஷ்ணமாகி அதனுள் நின்று, யோகவழி காட்டி துணை நிற்பவன்.*

**வாதஜோதி :** *தச (பத்து) வாயு சக்தியாக நின்று பிரபஞ்ச உயிர்களை இயக்குபவன். பிராணனை வாயுவினால் காப்பவன். ஜீவராசிகளின் உடம்பை வளர்ப்பவன். அவன் நெருப்புக்கும், நீருக்கும் ஆதாரமானவன்.*

**நாதஜோதி :** *அவன் ஒலி வடிவினன். உயிரைத் தோற்று விக்கும் நாதமானவன். பேரொலி* (Big bang) *முதல் சிறு சப்தம்* (Subtle sound) *வரையிலான ஒலியாயும், அந்தராத்மாவின் ரகசியக் குரலாயும் இருப்பவன்.*

**ஏமஜோதி :** *ஒளி வடிவினன். எல்லா அணுக்களின் உள்ளும் பிரகாசிப்பவன். அழிவற்ற பேரொளி அவனே!*

**வியோம ஜோதி :** *சர்வ வியாபகன். முழுமையானவன். எங்கும் நிறைந்தவன். சீதோஷ்ண நிலைக்கு ஆதார மானவன். சடபூத ஆன்ம அணுக்களின் இருப்பிட மானவன்.*

**ஏறுஜோதி :** *அவனே முழு சக்தி* (whole energy) *எந்த ஒரு சக்தியும் அவனைக் குறைக்க, அழிக்க முடியாது.*

**வீறு ஜோதி :** *அவன் எல்லையற்றவன். இளமை, முதுமை யற்றவன். தடையற்றவன். எதனுள்ளும் அடங்காதவன்.*

**ஏகஜோதி :** *அவனே தொடக்கம்*

**ஏகஜோதி :** *அவனே முழுமுதலானவன்*

**ஏகஜோதி :** *அவன் தன்னந்தனியன்*

**ஏகஜோதி :** *அவனே முடிவானவன்*

**ஆதி நீதி வேதனே :** *அவனே சத்தியம். முதல் நீதியரசன். குடி மக்களை வழி நடத்தி நீதி நிலைக்க சன்மானமும், தவறு செய்பவருக்கு(த்) - தண்டனையும் அளிப்பவன்.*

**ஆடல் நீடு பாதனே :** *தன் இடது பாதத்தை சற்றே உயர்த்தி அல்லும் பகலும் பிரபஞ்சத்திலுள்ள எல்லா அணுக்களின் உள்ளேயும் முடிவே இல்லாமல் ஆடிக் கொண்டே இருப்பவன்.*

**வாதி ஞான போதனே :** *உலகில் ஒவ்வொரு ஆன்மாவும் கடைத்தேற, தயவு, ஒழுக்கம், தவம் போன்ற நல்வழிகளைக் காட்டி ஆன்ம லாபம் பெற ஞான போதகனாக இருப்பவன்.*

**வாழ்க வாழ்க நாதனே :** *அவனே எல்லை, அவனே ஒளி அவனே எல்லாம். அவனின் அளப்பரிய புகழைப் பாடிப் பாடி ஏத்துவோம் வாரீர்.*

**எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க**

# அருட்பெருஞ் ஜோதி அகவல்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி
அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி
அருட்சிவநெறி சார் அருட்பெரு நிலை வாழ்
அருட்சிவ பதியாம் அருட்பெருஞ் ஜோதி
ஆகம முடிமேல் ஆரண முடி மேல்
ஆக நின்று ஓங்கிய அருட்பெருஞ் ஜோதி
இக நிலைப் பொருளாய் பரநிலை பொருளாய்
அகமற பொருந்திய அருட் பெருஞ் ஜோதி
ஈனமின்றி இகபரத்து இரண்டின் மேற்பொருளாய்
ஆனலின்றி ஓங்கிய அருட் பெருஞ் ஜோதி

உரை மனம் கடந்த ஒரு பெரு வெளிமேல்
அரைசு செய்து ஓங்கும் அருட் பெருஞ் ஜோதி
ஊக்கமும் உணர்ச்சியும் ஒளிதரும் ஆக்கையும்
ஆக்கமும் அருளிய அருட் பெருஞ் ஜோதி
எல்லையில் பிறப்பெனும் இருங்கடல் கடத்தி என்
அல்லலை நீக்கிய அருட் பெருஞ் ஜோதி
ஏறா நிலை மிசை ஏற்றி என் தனக்கே
ஆறாறு காட்டிய அருட் பெருஞ் ஜோதி
ஐயமும் திரிபும் அறுத்து எனது உடம்பினுள்
ஐயமும் நீக்கிய அருட் பெருஞ் ஜோதி

ஒன்றென இரண்டென ஒன்றிரண்டு இவை
அன்றென விளங்கிய அருட்பெருஞ் ஜோதி
ஓதாது உணர்ந்திட ஒளியளித்து எனக்கே
ஆதாரமாகிய அருட் பெருஞ் ஜோதி
ஔவியம் ஆதியோர் ஆறும் தவிர்த்தபேர்
அவ்வியல் வழுத்தும் அருட் பெருஞ் ஜோதி
திருநிலை தனிவெளி சிவவெளி எனும் ஓர்
அருள் வெளிப் பதிவளர் அருட் பெருஞ் ஜோதி
சுத்த சன்மார்க்க சுகத்தனி வெளியெனும்
அத்தகை சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

சுத்த மெய்ஞான சுகோதய வெளி எனும்
அத்து விதச்சபை அருட் பெருஞ் ஜோதி
தூயகலாந்த சுகம் தரும் வெளியெனும்
ஆய சிற்சபையில் அருட்பெருஞ் ஜோதி
ஞானயோகாந்த நடத்திரு வெளியெனும்
ஆனியில் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி
விமல போதாந்த மாமெய்ப்பொருள் வெளி எனும்
அமல சிற்சபையில் அருட்பெருஞ் ஜோதி
பெரிய நாதாந்தப் பெருநிலை வெளியெனும்
அரிய சிற்றம்பலத்து அருட்பெருஞ் ஜோதி

சுத்த வேதாந்த துரியமேல் வெளியெனும்
அத்தகு சிற்சபை அருட் பெருஞ் ஜோதி
சுத்த சித்தாந்த சுகப்பெரு வெளியெனும்
அத்தனி சிற்சபை அருட் பெருஞ் ஜோதி
தகர மெய்ஞான தனிப்பர வெளியெனும்
அகர நிலைப்பதி அருட் பெருஞ் ஜோதி
தத்துவ அதீதத் தனிப்பொருள் வெளி எனும்
அத்திரு அம்பலத்து அருட் பெருஞ் ஜோதி
சச்சிதானந்த தனிப்பர வெளியெனும்
அச்சியல் அம்பலத்து அருட்பெருஞ் ஜோதி

சாகாக்கலை நிலை தழைத்திடும் வெளி எனும்
ஆகாயத்து ஒளிர் அருட் பெருஞ் ஜோதி
காரண காரியம் காட்டிடும் வெளியெனும்
ஆரண சிற்சபை அருட் பெருஞ் ஜோதி
ஏகம் அனேகம் எனப்பகர் வெளி எனும்
ஆகம சிற்சபை அருட் பெருஞ் ஜோதி
வேத ஆகமங்களின் விளைவுகட்கு எல்லாம்
ஆதாரம் ஆம் சபை அருட் பெருஞ் ஜோதி
என்று ஆதிய சுடர்க்கு இயல் நிலையாய் அது
அன்றாம் திருச்சபை அருட் பெருஞ் ஜோதி

சமயம் கடந்த தனிப்பெரு வெளி ஆய்
அமையும் திருச்சபை அருட் பெருஞ் ஜோதி
முச்சுடர்களும் ஒளிமுயங்குற அளித்து அருள்

அச்சுடர் ஆம் சபை அருட் பெருஞ் ஜோதி
துரியமும் கடந்த சுக பூரணம் தரும்
அரிய சிற்றம்பலத்து அருட் பெருஞ் ஜோதி
எவ்வகை சுகங்களும் இனிதுற அளித்தருள்
அவ்வகை சிற்சபை அருட் பெருஞ் ஜோதி
இயற்கை உண்மை அதாய் இயற்கை இன்பமும் ஆம்
அயர்ப்பு இலாச் சிற்சபை அருட் பெருஞ் ஜோதி

சாக்கிர அதீத தனிவெளியாய் நிறைவு
ஆக்கிய சிற்சபை அருட் பெருஞ் ஜோதி
சுட்டுதற்கு அரிதாம் சுக அதீதவெளி எனும்
அட்ட மேல் சிற்சபை அருட் பெருஞ் ஜோதி
நவம் தவிர் நிலைகளும் நண்ணும் ஓர் நிலையாய்
அவம் தவிர் சிற்சபை அருட் பெருஞ் ஜோதி
உபய பக்கங்களும் ஒன்றெனக் காட்டிய
அபய சிற்சபையில் அருட் பெருஞ் ஜோதி
சேகரமாம் பலசித்தி நிலைக்கு எலாம்
ஆகரம் ஆம் சபை அருட் பெருஞ் ஜோதி

மன ஆதிகட்கு அரிய மதஅதீத வெளி ஆம்
அனாதி சிற்சபையில் அருட் பெருஞ் ஜோதி
ஓதி நின்று உணர்ந்து உணர்ந்து உணர்தற்கு அரிது ஆம்
ஆதி சிற்சபையில் அருட் பெருஞ் ஜோதி
வாரமும் அழியா வரமும் தரும் திரு
ஆரமுதாம் சபை அருட் பெருஞ் ஜோதி
இழியாப் பெரு நலம் எல்லாம் அளித்து அருள்
அழியா சிற்சபை அருட் பெருஞ் ஜோதி
கற்பம் பல பல கழியினும் அழிவு உறா
அற்புதம் தரும் சபை அருட் பெருஞ் ஜோதி

எனைத்தும் துன்பிலா இயல் அளித்து எண்ணிய
அனைத்தும் தரும் சபை அருட் பெருஞ் ஜோதி
பாணிப்பு இலதாய் பரவினோர்க்கு அருள்புரி
ஆணிப் பொன் அம்பலத்து அருட் பெருஞ் ஜோதி
எம்பலம் எனத் தொழுது ஏத்தினோர்க்கு அருள்புரி
அம்பலத்து ஆடல் செய் அருட் பெருஞ் ஜோதி

தம்பர ஞான சிதம்பரம் எனும் ஓர்
அம்பரத்து ஓங்கிய அருட் பெருஞ் ஜோதி
எச்சபை பொது என இயம்பினர் அறிஞர்கள்
அச்சபை இடங்கொளும் அருட் பெருஞ்ஜோதி

வாடுதல் நீக்கி மணி மன்று இடையே
ஆடுதல் வல்ல அருட் பெருஞ் ஜோதி
நாடகத் திருச்செயல் நவிற்றிடும் ஒரு பேர்
ஆடகப் பொது ஒளிர் அருட் பெருஞ் ஜோதி
கற்பனை முழுதும் கடந்து ஒளிதரும் ஓர்
அற்புதச் சிற்சபை அருட் பெருஞ் ஜோதி
ஈன்ற நல் தாயினும் இனிய பெரும் தயவு
ஆன்ற சிற் சபையில் அருட் பெருஞ் ஜோதி
இன்புறு நான் உளத்து எண்ணி ஆங்கு எண்ணி ஆங்கு
அன்புறத் தரும்சபை அருட் பெருஞ் ஜோதி

எம்மையும் என்னைவிட்டு இறையும் பிரியாது
அன்னை அப்பனும் ஆம் அருட் பெருஞ் ஜோதி
பிரிவு உற்று அறியாப் பெரும் பொருள் ஆய் என்
அறிவுக்கு அறிவாம் அருட் பெருஞ் ஜோதி
சாதியும் மதமும் சமயமும் காணா
ஆதி அனாதி ஆம் அருட் பெருஞ் ஜோதி
தனு கரண ஆதிகள் தாம் கடந்து அறியும் ஓர்
அனுபவம் ஆகிய அருட் பெருஞ் ஜோதி
உனும் உணர் உணர்வால் உணர்வு எலாம் கடந்த
அனுபவ அதீத அருட் பெருஞ் ஜோதி

பொது உணர் உணரும் போது அலால் பிரித்தே
அது எனில் தோன்றா அருட் பெருஞ் ஜோதி
உளவினில் அறிந்தால் ஒழிய மற்று அளக்கின்
அளவினில் அளவா அருட் பெருஞ் ஜோதி
என்னையும் பணிகொண்டு இறவா வரம் அளித்து
அன்னையில் உவந்த அருட்பெருஞ் ஜோதி
ஓதி ஓதாமல் உறவு எனக்கு அளித்த
ஆதி ஈறு இல்லா அருட் பெருஞ் ஜோதி

படி அடி வான்முடி பற்றினும் தோற்றா
அடி முடி எனும் ஓர் அருட் பெருஞ் ஜோதி

பவனத்தின் அண்டப் பரப்பு எங்கு எங்கும்
அவனுக்கு அவனாம் அருட் பெருஞ் ஜோதி
திவள் உற்ற அண்டத் திரளின் எங்கு எங்கும்
அவளுக்கு அவளாம் அருட் பெருஞ் ஜோதி
மதன் உற்ற அண்ட வரைப்பின் எங்கு எங்கும்
அதனுக்கு அதுவாம் அருட் பெருஞ் ஜோதி
எப்பாலும் ஆய் வெளி எல்லாம் கடந்து மேல்
அப்பாலும் ஆகிய அருட் பெருஞ் ஜோதி
வல்லதாய் எல்லாம் ஆகி எல்லாமும்
அல்லதாய் விளங்கும் அருட் பெருஞ் ஜோதி

எப்பொருள் மெய்ப்பொருள் என்பர் மெய் கண்டோர்
அப்பொருள் ஆகிய அருட் பெருஞ் ஜோதி
தாங்கு அகிலாண்ட சர அசர நிலை நின்று
ஆங்கு உற விளங்கும் அருட் பெருஞ் ஜோதி
சத்தர்கள் எல்லாம் தழைத்திட அகம் புறத்து
அத்திசை விளங்கும் அருட் பெருஞ் ஜோதி
சத்திகள் எல்லாம் தழைக்க எங்கு எங்கும்
அத்தகை விளங்கும் அருட் பெருஞ் ஜோதி
முந்துறும் ஐந்தொழில் மூர்த்திகள் பலர்க்கும்
ஐந்தொழில் அளிக்கும் அருட் பெருஞ் ஜோதி

பெரிதினும் பெரிதாய்ச் சிறிதினும் சிறிதாய்
அரிதினும் அரிதாம் அருட் பெருஞ் ஜோதி
காட்சியும் காணாக் காட்சியும் அது தரும்
ஆட்சியும் ஆகிய அருட் பெருஞ் ஜோதி
இன்புறு சித்திகள் எல்லாம் புரிக என்று
அன்புடன் எனக்கு அருள் அருட் பெருஞ் ஜோதி
இறவா வரம் அளித்து என்னை மேல் ஏற்றிய
அற ஆழியாம் தனி அருட் பெருஞ் ஜோதி
நான் அந்தம் இல்லா நலம் பெற எனக்கே
ஆனந்தம் நல்கிய அருட் பெருஞ் ஜோதி

எண்ணிய எண்ணி ஆங்கு இயற்றுக என்று எனை
அண்ணி உள் ஓங்கும் அருட் பெருஞ் ஜோதி
மேயினை மெய்ப்பொருள் விளங்கினை நீ அது
ஆயினை என்று அருள் அருட் பெருஞ் ஜோதி
எண்ணில் செழுந்தேன் இனிய தெள் அமுது என
அண்ணித்து இனிக்கும் அருட் பெருஞ் ஜோதி
சிந்தையில் துன்புஒழி சிவம் பெறுக எனத் தொழில்
ஐந்தையும் எனக்கு அருள் அருட் பெருஞ் ஜோதி
எங்கு எங்கு இருந்து உயிர் ஏது எது வேண்டினும்
அங்கு அங்கு இருந்து அருள் அருட் பெருஞ் ஜோதி

சகமுதல் புறப்புறம் தங்கிய அகப்புறம்
அகம் புறம் முற்றும் ஆம் அருட் பெருஞ் ஜோதி
சிகரமும் வகரமும் சேர்தனி உகரமும்
அகரமும் ஆகிய அருட் பெருஞ் ஜோதி
உபரச வேதியின் உபயமும் பரமும்
அபரமும் ஆகிய அருட் பெருஞ் ஜோதி
மந்தணம் இது என மறுவிலா மதியால்
அந்தணர் வழுத்தும் அருட் பெருஞ் ஜோதி
எம்புயக் கனி என எண்ணுவார் இதய
அம்புயத்து அமர்ந்த அருட் பெருஞ் ஜோதி

செடி அறுத்தே திட தேகமும் போகமும்
அடியருக்கே தரும் அருட் பெருஞ் ஜோதி
துன்பு அறுத்து ஒரு சிவ துரிய சுகம் தனை
அன்பருக்கே தரும் அருட் பெருஞ் ஜோதி
பொது அது சிறப்பு அது புதியது பழையது என்று
அது அது வாய்த் திகழ் அருட் பெருஞ் ஜோதி
சேதனப் பெருநிலை திகழ்தரும் ஒரு பரை
ஆதனத்து ஓங்கிய அருட் பெருஞ் ஜோதி
ஓமயத் திருஉரு உவப்புடன் அளித்து எனக்கு
ஆமயத் தடை தவிர் அருட் பெருஞ் ஜோதி

எப்படி எண்ணியது என் கருத்து இங்கு எனக்கு
அப்படி அருளிய அருட் பெருஞ் ஜோதி
எத்தகை விழைந்தன என் மனம் இங்கு எனக்கு

அத்தகை அருளிய அருட் பெருஞ் ஜோதி
இங்கு உறத் திரிந்து உளம் இளையா வகை எனக்கு
அங்கையில் கனியாம் அருட் பெருஞ் ஜோதி
பார் உயப் புரிக எனப் பணித்து எனக்கு அருளி என்
ஆர் உயிர்க்கு உள் ஒளிர் அருட் பெருஞ் ஜோதி
தேவி உற்று ஒளிர் தரு திரு உரு உடன் எனது
ஆவியில் கலந்து ஒளிர் அருட் பெருஞ் ஜோதி

எவ்வழி மெய்வழி என்ப வேத ஆகமம்
அவ்வழி எனக்கருள் அருட் பெருஞ் ஜோதி
வையமும் வானமும் வாழ்த்திட எனக்கு அருள்
ஐயறிவு அளித்த அருட் பெருஞ் ஜோதி
சாமாறு அனைத்தும் தவிர்த்து இங்கு எனக்கே
ஆமாறு அருளிய அருட் பெருஞ் ஜோதி
சத்தியம் ஆம் சிவ சத்தியை ஈந்து எனக்கு
அத்திறல் வளர்க்கும் அருட் பெருஞ் ஜோதி
சாவா நிலை இது தந்தனம் உனக்கே
ஆவா என அருள் அருட் பெருஞ் ஜோதி

சாதியும் மதமும் சமயமும் பொய் என
ஆதியில் உணர்த்திய அருட் பெருஞ் ஜோதி
மயர்ந்திடேல் சிறிதும் மனம் தளர்ந்து அஞ்சேல்
அயர்ந்திடேல் என்று அருள் அருட் பெருஞ் ஜோதி
தேசு உறத் திகழ்தரு திருநெறிப் பொருள் இயல்
ஆசு அறத்தெரித்த அருட் பெருஞ் ஜோதி
காட்டிய உலகு எலாம் கருணையால் சித்தியின்
ஆட்டு இயல் புரியும் அருட் பெருஞ் ஜோதி
எங்குலம் எம் இனம் என்ப தொண்ணூற்று ஆறு
அங்குலம் என்று அருள் அருட் பெருஞ் ஜோதி

எம் மதம் எம் இறை என்ப உயிர்த்திரள்
அம் மதம் என்று அருள் அருட் பெருஞ் ஜோதி
கூறிய கருநிலை குலவிய கீழ்மேல்
ஆறு இயல் என உரை அருட் பெருஞ் ஜோதி
எண் தர முடியாது இலங்கிய பற்பல
அண்டமும் நிறைந்து ஒளிர் அருட் பெருஞ் ஜோதி

சார் உயிர்க்கு எல்லாம் தாரகம் ஆம் பரை
ஆருயிர்க்கு உயிராம் அருட் பெருஞ் ஜோதி
வாழி நீடுழி வாழி என்று ஓங்கு பேர்
ஆழியை அளித்த அருட் பெருஞ் ஜோதி

மாய்ந்தவர் மீட்டும் வருநெறி தந்து இதை
ஆய்ந்திடு என்று உரைத்த அருட் பெருஞ் ஜோதி
எச்சம் நினக்கு இலை எல்லாம் பெறுக என்று
அச்சம் தவிர்த்த என் அருட் பெருஞ் ஜோதி
நீடுக நீயே நீள் உலகு அனைத்தும் நின்று
ஆடுக என்ற என் அருட் பெரும் ஜோதி
முத்திறல் வடிவமும் முன்னி ஆங்கு எய்து உறும்
அத்திறல் எனக்கு அருள் அருட் பெருஞ் ஜோதி
மூவகை சித்தியின் முடிவுகள் முழுவதும்
ஆவகை எனக்கு அருள் அருட் பெருஞ் ஜோதி

கரும சித்திகளின் கலை பல கோடியும்
அரசுற எனக்கு அருள் அருட் பெருஞ் ஜோதி
யோக சித்திகளின் வகை உறு பல கோடியும்
ஆக என்று எனக்கு அருள் அருட் பெருஞ் ஜோதி
ஞான சித்தியின் வகை நல்விரிவு அனைத்தும்
ஆனி நின்று எனக்கு அருள் அருட் பெருஞ் ஜோதி
புடையுறு சித்தியின் பொருட்டே முத்தியை
அடைவது என்று அருளிய அருட் பெருஞ் ஜோதி
முத்தி என்பது நிலை முன் உறு சாதனம்
அத் தகவு என்ற என் அருட் பெருஞ் ஜோதி

சித்தி என்பது நிலை சேர்ந்த அனுபவம்
அத்திறல் என்ற என் அருட் பெருஞ் ஜோதி
ஏக சிற்சித்தியே இயலுற அனேகம்
ஆகியது என்ற என் அருட் பெருஞ் ஜோதி
இன்ப சித்தியின் இயல் ஏகம் அனேகம்
அன்பருக்கு என்றஎன் அருட் பெருஞ் ஜோதி
எட்டு இரண்டு என்பன இயலும் முற்படி என
அட்ட நின்று அருளிய அருட் பெருஞ் ஜோதி

இப்படி கண்டனை இனிஉறு படி எலாம்
அப்படியே எனும் அருட் பெருஞ் ஜோதி

படி முடி கடந்தனை பார் இது பார் என
அடி முடி காட்டிய அருட் பெருஞ் ஜோதி
ஜோதியுள் ஜோதியின் சொரூபமே அந்தம்
ஆதி என்று அருளிய அருட் பெருஞ் ஜோதி
இந்த சிற் ஜோதியின் இயல் உரு ஆதி
அந்தம் என்று அருளிய அருட்பெருஞ் ஜோதி
ஆதியும் அந்தமும் அறிந்தனை நீயே
ஆதி என்று அருளிய அருட் பெருஞ் ஜோதி
நல் அமுதம் என் ஒரு நாஉளம் காட்டி என்
அல்லலை நீக்கிய அருட் பெருஞ் ஜோதி

கற்பகம் என் உளம் கைதனில் கொடுத்தே
அற்புதம் இயற்று எனும் அருட் பெருஞ் ஜோதி
கதிர் நலம் என் இரு கண்களில் கொடுத்தே
அதிசயம் இயற்று எனும் அருட்பெருஞ் ஜோதி
அருள் ஒளி என்தனி அறிவினில் விரித்தே
அருள் நெறி விளக்கு எனும் அருட் பெருஞ் ஜோதி
பரை ஒளி என் மனப் பதியினில் விரித்தே
அரசு அது இயற்று எனும் அருட் பெருஞ் ஜோதி
வல்லப சக்திகள் வகை எலாம் அளித்து எனது
அல்லலை நீக்கிய அருட் பெருஞ் ஜோதி

ஆர் இயல் அகம், புறம், அகப்புறம், புறப்புறம்
ஆரமுது எனக்கருள் அருட் பெருஞ் ஜோதி
சூரிய சந்திர ஜோதியுள் ஜோதி என்று
ஆரியர் புகழ்தரும் அருட் பெருஞ் ஜோதி
பிரிவு ஏது இனி உனைப் பிடித்தனம் உனக்கு நம்
அறிவே வடிவு எனும் அருட் பெருஞ் ஜோதி
எஞ்சேல் உலகினில் யாதொன்று பற்றியும்
அஞ்சேல் என்று அருள் அருட் பெருஞ் ஜோதி
மாண்டு உழலா வகை வந்து இளங் காலையே
ஆண்டு கொண்டு அருளிய அருட் பெருஞ் ஜோதி

பற்றுகள் அனைத்தையும் பற்று அறத் தவிர்த்து எனது
அற்றமும் நீக்கிய அருட் பெருஞ் ஜோதி
சமயம் குலம் முதல் சார்பு எலாம் விடுத்த
அமயம் தோன்றிய அருட் பெருஞ் ஜோதி
வாய்தற்கு உரித்து எனும் மறை ஆகமங்களால்
ஆய்தற்கு அரிய அருட் பெருஞ் ஜோதி
எல்லாம் வல்ல சித்து எனக்கு அளித்து எனக்கு உனை
அல்லாது இலை எனும் அருட் பெருஞ் ஜோதி
நவை இலா உளத்தில் நாடிய நாடிய
அவை எலாம் அளிக்கும் அருட் பெருஞ் ஜோதி

கூற்று உதைத்து என்பால் குற்றமும் குணங்கொண்டு
ஆற்றல் மிக்கு அளித்த அருட் பெருஞ் ஜோதி
நன்று அறிவு அறியா நாயினேன் தனையும்
அன்று உவந்து ஆண்ட அருட் பெருஞ் ஜோதி
நாயினும் கடையேன் ஈயினும் இழிந்தேன்
ஆயினும் அருளிய அருட் பெருஞ் ஜோதி
தோத்திரம் புகலேன் பாத்திரம் அல்லேன்
ஆத்திரம் அளித்த அருட் பெருஞ் ஜோதி
எச்சோதனைகளும் இயற்றாது எனக்கே
அச்சோ என்று அருள் அருட் பெருஞ் ஜோதி

ஏறாநிலை நடு ஏற்றி என் தனை ஈண்டு
ஆறாறு கடத்திய அருட் பெருஞ் ஜோதி
தாபத்துயரம் தவிர்த்து உலகு உறும் எலா
ஆபத்தும் நீக்கிய அருட் பெருஞ் ஜோதி
மருள் பகை தவிர்த்து எனை வாழ்வித்து எனக்கே
அருள் குரு ஆகிய அருட் பெருஞ் ஜோதி
உருவமும் அருவமும் உபயமும் ஆகிய
அருள் நிலை தெரித்த அருட் பெருஞ் ஜோதி
இருள் அறுத்து என் உளத்து எண்ணியாங்கு அருளி
அருள் அமுது அளித்த அருட் பெருஞ் ஜோதி

தெருள் நிலை இது என தெருட்டி என் உளத்து இருந்து
அருள் நிலை காட்டிய அருட் பெருஞ் ஜோதி
பொருள் பதம் எல்லாம் புரிந்து மேல் ஓங்கிய

அருள் பதம் அளித்த அருட் பெருஞ் ஜோதி
உருள் சகடு ஆகிய உளம் சலியா வகை
அருள் வழி நிறுத்திய அருட் பெருஞ் ஜோதி
வெருள் மன மாயை வினை இருள் நீக்கி உள்
அருள் விளக்கேற்றிய அருட் பெருஞ் ஜோதி
சுருள் விரிவு உடை மனச்சுழல் எலாம் அறுத்தே
அருள் ஒளி நிரப்பிய அருட் பெருஞ் ஜோதி

விருப்போடு இகலுற வெறுப்பும் தவிர்த்தே
அருட்பேறு அளித்த அருட்பெருஞ் ஜோதி
அருட்பேர் தரித்து உலகு அனைத்தும் மலர்ந்திட
அருட் சீர் அளித்த அருட் பெருஞ் ஜோதி
உலகு எலாம் பரவ என் உள்ளத்து இருந்தே
அலகு இலா ஒளி செய் அருட் பெருஞ் ஜோதி
விண்ணினுள் விண்ணாய் விண் நடு விண்ஆய்
அண்ணி நிறைந்த அருட் பெருஞ் ஜோதி
விண் உறு விண் ஆய் விண்நிலை விண் ஆய்
அண்ணி வயங்கும் அருட் பெருஞ் ஜோதி

காற்றினுள் காற்றாய் காற்றிடை காற்றாய்
ஆற்றலின் ஓங்கும் அருட் பெருஞ் ஜோதி
காற்று உறு காற்றாய் கானிலைக் காற்றாய்
ஆற்ற விளங்கும் அருட் பெருஞ் ஜோதி
அனலின் உள் அனலாய் அனல் நடு அனலாய்
அனல் உற விளங்கும் அருட் பெருஞ் ஜோதி
அனல் உறு அனலாய் அனல் நிலை அனலாய்
அனல் உற வயங்கும் அருட் பெருஞ் ஜோதி
புனலின் உள் புனலாய் புனல் இடைப்புனலாய்
அனை என வயங்கும் அருட் பெருஞ் ஜோதி

புனல் உறு புனலாய் புனல் நிலைப் புனலாய்
அனை எனப் பெருகும் அருட் பெருஞ் ஜோதி
புவியினுள் புவியாய் புவி நடுப் புவியாய்
அவை தர வயங்கும் அருட் பெருஞ் ஜோதி
புவி உறு புவியாய் புவி நிலைப் புவியாய்
அவை கொள விரிந்த அருட் பெருஞ் ஜோதி

விண்ணிலை சிவத்தின் வியல்நிலை அளவி
அண்ணுற அமைத்த அருட் பெருஞ் ஜோதி
வளிநிலை சத்தியின் வளர்நிலை அளவி
அளிஉற அமைத்த அருட் பெருஞ் ஜோதி

நெருப்பது நிலைநடு நிலைஎலாம் அளவி
அருப்பிட வகுத்த அருட் பெருஞ் ஜோதி
நீர்நிலை திரை வளர்நிலை தனை அளவி
ஆர்வுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
புவிநிலை சுத்தம் ஆம் பொற்பதி அளவி
அவை உற வகுத்த அருட் பெருட் ஜோதி
மண்ணினில் திண்மையை வகுத்து அதில் கிடக்கை
அண்ணுற அமைத்த அருட் பெருஞ் ஜோதி
மண்ணினில் பொன்மை வகுத்து அதில் ஐமையை
அண்ணுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி

மண்ணினில் ஐம்பூ வகுத்ததில் ஐந்திறம்
அண்ணுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
மண்ணினில் நாற்றம் வகுத்து அதில் பல்வகை
அண்ணுறப் புரிந்த அருட் பெருஞ் ஜோதி
மண்ணினில் பற்பல வகை கருநிலை இயல்
அண்ணுறப் புரிந்த அருட் பெருஞ் ஜோதி
மண்ணினில் ஐந்து இயல் வகுத்து அதில் பல்பயன்
அண்ணுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
மண்ணிடை அடிநிலை வகுத்த அதில் பல் நிலை
அண்ணுற அமைத்த அருட் பெருஞ் ஜோதி

மண்ணில் ஐந்து ஐந்து வகையும் கலந்து கொண்டு
அண்ணுறப் புரிந்த அருட் பெருஞ் ஜோதி
மண் இயல் சக்திகள் மண் செயல் சக்திகள்
அண்ணுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
மண் உரு சக்திகள் மண்கலை சக்திகள்
அண்ணுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
மண் ஒளி சக்திகள் மண் கரு சக்திகள்
அண்ணுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி

மண் கண சக்திகள் வகை பல பலவும்
அண்கொள அமைத்த அருட் பெருஞ் ஜோதி

மண் நிலை சத்தர்கள் வகை பல பலவும்
அண்ணுற அமைத்த அருட் பெருஞ் ஜோதி
மண் கரு உயிர்த்தொகை வகை விரி பலவா
அண் கொள அமைத்த அருட் பெருஞ் ஜோதி
மண்ணினில் பொருள் பல வகை விரி வெவ்வேறு
அண்ணுறப் புரிந்த அருட் பெருஞ் ஜோதி
மண்ணுரு நிலை பல வகுத்து அதில் செயல் பல
அண்ணுற அமைத்த அருட் பெருஞ் ஜோதி
மண்ணிடைப் பக்குவம் வகுத்து அதில் பயன் பல
அண்ணுற அமைத்த அருட் பெருஞ் ஜோதி

மண்ணியல் பல பல வகுத்து அதில் பிறவும்
அண்ணுற அமைத்த அருட் பெருஞ் ஜோதி
நீரினில் தண்மையும் நிகழ் ஊறு ஒழுக்கமும்
ஆர்வுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
நீரினில் பசுமையை நிறுத்தி அதில் பல
ஆருற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
நீரிடைப் பூ இயல் நிகழ்உறு திற இயல்
ஆர்தர வகுத்த அருட் பெருஞ் ஜோதி
நீரினில் சுவைநிலை நிறைத்து அதில் பல்வகை
ஆர்வுறப் புரிந்த அருட் பெருஞ் ஜோதி

நீரினில் கருநிலை நிகழ்த்திய பற்பல
ஆர்வுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
நீரிடை நான்கு இயல் நிலவு வித்து அதில் பல
ஆர்தர வகுத்த அருட் பெருஞ் ஜோதி
நீரிடை அடிநடு நிலைஉற வகுத்த அனல்
ஆர்தரப் புரிந்த அருட் பெருஞ் ஜோதி
நீரிடை ஒளி இயல் நிகழ் பல குண இயல்
ஆர்தர வகுத்த அருட் பெருஞ் ஜோதி
நீரிடை சத்திகள் நிகழ்வகை பல பல
ஆர்தர வகுத்த அருட் பெருஞ் ஜோதி

நீரினில் சத்தர்கள் நிறை வகை உறை வகை
ஆர்தரப் புரிந்த அருட் பெருஞ் ஜோதி
நீரிடை உயிர்பல நிகழ்வுறு பொருள் பல
ஆர்வுற அமைத்த அருட் பெருஞ் ஜோதி
நீரிடை நிலை பல நிலை உறு செயல் பல
ஆர்கொள வகுத்த அருட் பெருஞ் ஜோதி
நீர் உறு பக்குவ நிறைவு உறு பயன் பல
ஆர்உற அமைத்த அருட் பெருஞ் ஜோதி
நீரியல் பல பல நிறைத்து அதில் பிறவும்
ஆர்தரப் புரிந்த அருட் பெருஞ் ஜோதி

தீயினில் சூட்டு இயல் சேர்தரச் செலவு இயல்
ஆர்உற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
தீயினில் வெண்மை திகழ் இயல் பலவாய்
ஆய்உற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
தீயிடை பூ எலாம் திகழ் உறு திறம் எலாம்
ஆயுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
தீயிடை ஒளியே திகழ் உற அமைத்து அதில்
ஆய் பல வகுத்த அருட் பெருஞ் ஜோதி
தீயிடை அரு நிலை திரு நிலை கரு நிலை
ஆயுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி

தீயிடை மூவியல் செறிவித்து அதில் பல
ஆய் வகை அமைத்த அருட் பெருஞ்ஜோதி
தீயிடை நடுநிலை திகழ்நடு நடுநிலை
ஆயுற அமைத்த அருட் பெருஞ் ஜோதி
தீயிடைப் பெருந்திறல் சித்திகள் பல பல
ஆயுற அமைத்த அருட் பெருஞ் ஜோதி
தீயிடை சித்துகள் செப்புறும் அனைத்தும்
ஆயுற அமைத்த அருட் பெருஞ் ஜோதி
தீயிடை சத்திகள் செறிதரு சத்தர்கள்
ஆய்பல வகுத்த அருட் பெருஞ் ஜோதி

தீயிடை உயிர்பல திகழுறு பொருள் பல
ஆய்வகை அமைத்த அருட் பெருஞ் ஜோதி
தீயிடை நிலைபல திகழ் செயல் பல பயன்

ஆய் பல வகுத்த அருட் பெருஞ் ஜோதி
தீயினில் பக்குவம் சேர்குணம் இயல் குணம்
ஆய்பல வகுத்த அருட் பெருஞ் ஜோதி
தீயிடை உருக்கியல் சிறப்பியல் பொது இயல்
ஆய்வுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
தீ இயல் பல பல செறித்து அதில் பலவும்
ஆயுறப் புரிந்த அருட் பெருஞ் ஜோதி **(460)**

காற்று இடை அசை இயல் கலை இயல் உயிர் இயல்
ஆற்றலின் அமைந்த அருட் பெருஞ் ஜோதி
காற்றிடை பூ இயல் கருதுறு திற இயல்
ஆற்றலின் வகுத்த அருட் பெருஞ் ஜோதி
காற்றினில் ஊறியல் காட்டுறு பல பல
ஆற்றலின் அமைத்த அருட் பெருஞ் ஜோதி
காற்றினில் பெருநிலை கருநிலை அளவில
ஆற்றவும் வகுத்த அருட் பெருஞ் ஜோதி
காற்றிடை இரு இயல் காட்டி அதில் பல
ஆற்றவும் வகுத்த அருட் பெருஞ் ஜோதி **(470)**

காற்றினில் இடைநடு கடைநடு அகம்புறம்
ஆற்றவும் வகுத்த அருட் பெருஞ் ஜோதி
காற்றினில் குணம்பல கணம்பல வணம் பல
ஆற்றலின் அமைத்த அருட் பெருஞ் ஜோதி
காற்று இடை சத்திகள் கணக்கு இல உலப்பு இல
ஆற்றவும் அமைத்த அருட் பெருஞ் ஜோதி
காற்று இடை சத்தர்கள் கணிதம் கடந்தன
ஆற்றவும் வகுத்த அருட் பெருஞ் ஜோதி
காற்று இடை உயிர் பல கதிபல கலைபல
ஆற்றலின் அமைத்த அருட் பெருஞ் ஜோதி **(480)**

காற்று இடை நால் நிலை கருவிகள் அனைத்தையும்
ஆற்றுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
காற்று இடை உணர் இயல் கருது இயல் ஆதிய
ஆற்றுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
காற்று இடை செயல் எலாம் கருதிய பயன் எலாம்
ஆற்றவும் வகுத்த அருட் பெருஞ் ஜோதி

காற்றினில் பக்குவ கதி எலாம் விளைவித்து
ஆற்றலின் வகுத்த அருட் பெருஞ் ஜோதி
காற்றினில் காலம் கருதுறு வகை எலாம்
ஆற்றவும் வகுத்த அருட் பெருஞ் ஜோதி

காற்று இயல் பல பல கணித்து அதில் பிறவும்
ஆற்றவும் வகுத்த அருட் பெருஞ் ஜோதி
வெளிஇடைப் பகுதியின் விரிவு இயல் அணைவு இயல்
அளிஉற அமைத்த அருட் பெருஞ் ஜோதி
வெளியிடைப் பூ எலாம் வியப்புறு திறன் எலாம்
அளியுற அமைத்த அருட் பெருஞ் ஜோதி
வெளியினில் ஒலி நிறை வியன் நிலை அனைத்தும்
அளியுற அமைத்த அருட் பெருஞ் ஜோதி
வெளியிடை கருநிலை விரிநிலை அருநிலை
அளிகொள வகுத்த அருட் பெருஞ் ஜோதி

வெளியிடை முடிநிலை விளங்குற வகுத்தே
அளிபெற விளக்கும் அருட் பெருஞ் ஜோதி
வெளியினில் சத்திகள் வியப்புற சத்தர்கள்
அளியுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
வெளியிடை ஒன்றே விரித்து அதில் பற்பல
அளியுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
வெளியிடை பலவே விரித்து அதில் பற்பல
அளிதர அமைத்த அருட் பெருஞ் ஜோதி
வெளியிடை உயிர்இயல் வித்து இயல் சித்து இயல்
அளிபெற அமைத்த அருட் பெருஞ் ஜோதி

வெளியின் அனைத்தையும் விரித்து அதில் பிறவும்
அளியுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
புற நடு வொடு கடை புணர்ப்பித்து ஒரு முதல்
அறம் உற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
புறம் தலை நடுவொடு புணர்ப்பித்து ஒரு கடை
அறம் பெற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
அகப்புற நடுக்கடை அணைவால் புற முதல்
அகப்பட வகுத்த அருட் பெருஞ் ஜோதி

அகப்புற நடு முதல் அணைவால் புறக்கடை
அகப்பட அமைத்த அருட் பெருஞ் ஜோதி

கருது அக நடுவொடு கடை அணைந்து அகமுதல்
அருளுற அமைத்த அருட் பெருஞ் ஜோதி
தனி அக நடுவொடு தலை அணைந்து அகக்கடை
அணி உற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
அக நடு புறக்கடை அணைந்து அகப்புற முதல்
அகம் உற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
அக நடு புறம் தலை அணைந்து அகப்புறக்கடை
அகலிடை வகுத்த அருட் பெருஞ் ஜோதி
அக நடு அதனால் அகப்புற நடுவை
அகம் அற வகுத்த அருட் பெருஞ் ஜோதி

அகப்புற நடுவால் அணிபுற நடுவை
அகப்பட அமைத்த அருட் பெருஞ் ஜோதி
புறநடு அதனால் புறப்புற நடுவை
அறம் உற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
புகல அரும் அகண்ட பூரண நடுவால்
அகநடு வகுத்த அருட் பெருஞ் ஜோதி
புறப்புறக் கடை முதல் புணர்ப்பால் புறப்புற
அறக்கணம் வகுத்த அருட் பெருஞ் ஜோதி
புறத்து இயல் கடைமுதல் புணர்ப்பால் புறப்புறம்
அறக்கணம் வகுத்த அருட் பெருஞ் ஜோதி

அகப்புறக் கடைமுதல் அணைவால் அக்கணம்
அகத்து உற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
அகக்கடை முதல் புணர்ப்பு அதனால் அகக்கணம்
அகத்து இடை வகுத்த அருட் பெருஞ் ஜோதி
வானிடைக் காற்றும் காற்றிடை நெருப்பும்
ஆனற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
நெருப்பு இடை நீரும் நீரிடைப் புவியும்
அருப்பிட வகுத்த அருட் பெருஞ் ஜோதி
நீர்மேல் நெருப்பும் நெருப்பின் மேல் உயிர்ப்பும்
ஆர்வு உற வகுத்த அருட் பெருஞ் ஜோதி

புனல் மேல் புவியும் புவிமேல் புடைப்பும்
அனல்மேல் வகுத்த அருட் பெருஞ் ஜோதி
பகுதி வான் வெளியில் படர்ந்த மா பூத
அகல் வெளி வகுத்த அருட் பெருஞ் ஜோதி
உயிர் வெளி இடையே உரைக்க அரும் பகுதி
அய வெளி வகுத்த அருட் பெருஞ் ஜோதி
உயிர் வெளி அதனை உணர் கலை வெளியில்
அயலற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
கலை வெளி அதனை கலப்பு அற சுத்த
அலர் வெளி வகுத்த அருட் பெருஞ் ஜோதி

சுத்த நல் வெளியை துரிசு அறு பரவெளி
அத்திடை வகுத்த அருட் பெருஞ் ஜோதி
பர வெளி அதனை பரம்பர வெளியில்
அரசு உற அமைத்த அருட் பெருஞ் ஜோதி
பரம்பர வெளியை பராபர வெளியில்
அரந் தெற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
பராபர வெளியை பகர் பெரு வெளியில்
அராவற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
பெருவெளி அதனை பெருஞ்சுக வெளியில்
அருள் உற வகுத்த அருட் பெருஞ் ஜோதி

குணம் முதல் கருவிகள் கூடிய பகுதியில்
அணைவு உற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
மனம் முதல் கருவிகள் மன்னுயிர் வெளியிடை
அனம் உற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
காலமே முதலிய கருவிகள் கலைவெளி
ஆல் உற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
துரிசு அறு கருவிகள் சுத்த நல் வெளியிடை
அரசுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
இவ்வெளி எல்லாம் இலங்க அண்டங்கள்
அவ் வயின் அமைத்த அருட் பெருஞ் ஜோதி

ஓங்கிய அண்டம் ஒளி பெற முச்சுடர்
ஆங்கு இடை வகுத்த அருட் பெருஞ் ஜோதி
சிருட்டித் தலைவரை சிருட்டி அண்டங்களை

அருள் திறல் வகுத்த அருட் பெருஞ் ஜோதி
காவல் செய் தலைவரை காவல் அண்டங்களை
ஆவகை அமைத்த அருட் பெருஞ் ஜோதி
அழித்தல் செய் தலைவரை அவர் அண்டங்களை
அழுக்கு அற அமைத்த அருட் பெருஞ் ஜோதி
மறைத்திடு தலைவரை மற்றும் அண்டங்களை
அறத்தொடு வகுத்த அருட் பெருஞ் ஜோதி

தெளிவு செய் தலைவரை திகழும் அண்டங்களை
அளி பெற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
விந்து வாம் சத்தியை விந்தின் அண்டங்களை
அந்திறல் வகுத்த அருட் பெருஞ் ஜோதி
ஓங்கார சத்திகள் உற்ற அண்டங்களை
ஆங்காங்கு அமைத்த அருட் பெருஞ் ஜோதி
சத்தத் தலைவரை சாற்றும் அண்டங்களை
அத்தகை வகுத்த அருட் பெருஞ் ஜோதி
நாதமாம் பிரமமும் நாத அண்டங்களும்
ஆதரம் வகுத்த அருட் பெருஞ் ஜோதி

பகர் பரா சத்தியை பதியும் அண்டங்களை
அகம் அற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
பரசிவ பதியை பரசிவ அண்டங்களை
அரசுர அமைத்த அருட் பெருஞ் ஜோதி
எண்ணில் பல் சத்தியை எண்ணில் அண்டங்களை
அண்ணுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
அளவில் பல் சத்தரை அளவில் அண்டங்களை
அளவற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
உயிர் வகை அண்டம் உலப்பு இல எண் இல
அயர்வு அற வகுத்த அருட் பெருஞ் ஜோதி

களவு இல கடல் வகை கங்கு இல கரை இல
அளவு இல வகுத்த அருட் பெருஞ் ஜோதி
கடல் அவை அனைத்தும் கரை இன்றி நிலையுற
அடல் அனல் வகுத்த அருட் பெருஞ் ஜோதி
கடல்களும் மலைகளும் கதிகளும் நதிகளும்
அடலுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி

கடல் இடைப் பல் வளம் கணித்து அதில் பல் உயிர்
அடல் உற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
மலை இடைப் பல் வளம் வகுத்து அதில் பல் உயிர்
அலைவு அற வகுத்த அருட் பெருஞ் ஜோதி

ஒன்றினில் ஒன்றே ஒன்று இடை ஆயிரம்
அன்று அற வகுத்தே அருட் பெருஞ் ஜோதி
பத்திடை ஆயிரம் பகர் அதில் கோடி
அத்துற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
நூற்றிடை இலக்கம் நுவல் அதில் அனந்தம்
ஆற்றிடை வகுத்த அருட் பெருஞ் ஜோதி
கோடியில் அனந்தங்கோடி பல்கோடி
ஆடுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
வித்து இயல் ஒன்றாய் விளைவு இயல் பலவாய்
அத்தகை அமைத்த அருட் பெருஞ் ஜோதி

விளைவு இயல் அனைத்தும் வித்திடை அடங்க
அளவு செய்து அமைத்த அருட் பெருஞ் ஜோதி
வித்தும் பதமும் விளை உபகரிப்பும்
அத்திறல் அமைத்த அருட் பெருஞ் ஜோதி
வித்திடை முளையும் முளையிடை விளைவும்
அத்தக அமைத்த அருட் பெருஞ் ஜோதி
வித்தினுள் வித்தும் வித்து அதில் வித்தும்
அத்திறம் வகுத்த அருட் பெருஞ் ஜோதி
விளைவினுள் விளையும் விளைவு அதில் விளைவும்
அளையுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி

முளை அதன் முளையும் முளையினுள் முளையும்
அளைதர அமைத்த அருட் பெருஞ் ஜோதி
வித்து இடைப்பதமும் பதத்து இடை வித்தும்
அத்து உற அமைத்த அருட் பெருஞ் ஜோதி
பதம் அதில் பதமும் பதத்தின் உள் பதமும்
அதிர்வு அற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
ஒற்றுமை வேற்றுமை உரிமைகள் அனைத்தும்
அற்றென வகுத்த அருட் பெருஞ் ஜோதி

பொருள் நிலை உறுப்பு இயல் பொது வகை முதலிய
அருள் உற வகுத்த அருட் பெருஞ் ஜோதி

உறவினில் உறவும் உறவினில் பகையும்
அறனுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
பகையினில் பகையும் பகையினில் உறவும்
அகை உற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
பாதியும் முழுதும் பதி செய்யும் அந்தமும்
ஆதியும் வகுத்த அருட் பெருஞ் ஜோதி
துணையும் நிமித்தமும் துலங்கு அதில் அதுவும்
அணைவு உற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
உருவு அதில் உருவும் உருவினுள் உருவும்
அருள் உற அமைத்த அருட் பெருஞ் ஜோதி

அருவினுள் அருவும் அருவதில் அருவும்
அருள் இயல் அமைத்த அருட் பெருஞ் ஜோதி
கரணமும் இடமும் கலை முதல் அணையும் ஓர்
அரண் நிலை வகுத்த அருட் பெருஞ் ஜோதி
உருவு அதில் அருவும் அருவு அதில் உருவும்
அருள் உற அமைத்த அருட் பெருஞ் ஜோதி
வண்ணமும் வடிவும் மயங்கிய வகை பல
அண்ணுற அமைத்த அருட் பெருஞ் ஜோதி
சிறுமையில் சிறுமையும் சிறுமையில் பெருமையும்
அறிதர வகுத்த அருட் பெருஞ் ஜோதி

பெருமையில் பெருமையும் பெருமையில் சிறுமையும்
அருள் நிலை வகுத்த அருட் பெருஞ் ஜோதி
திண்மையில் திண்மையும் திண்மையில் நேர்மையும்
அண்மையில் வகுத்த அருட் பெருஞ் ஜோதி
மென்மையில் மென்மையும் மென்மையில் வன்மையும்
அன்மை அற்று அமைத்த அருட் பெருஞ் ஜோதி
அடியினுள் அடியும் அடி இடை அடியும்
அடியுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
நடுவினுள் நடுவும் நடு அதில் நடுவும்
அடர்வு உற அமைத்த அருட் பெருஞ் ஜோதி

முடியினுள் முடியும் முடியினின் முடியும்
அடர் தர அமைத்த அருட் பெருஞ் ஜோதி
அகப்பூ அக உறுப்பாக்க அதற்கு அவை
அகத்தே வகுத்த அருட் பெருஞ் ஜோதி
புறப்பூ புறத்தில் புனைவு உரு ஆக்கிட
அறத்துடன் வகுத்த அருட் பெருஞ் ஜோதி
அகப் புறப் பூ அகப்புற உறுப்பு இயற்றிட
அகத்து இடை வகுத்த அருட் பெருஞ் ஜோதி
புறப் புறப் பூ அதில் புறப்புற உறுப்பு உற
அறத்திடை வகுத்த அருட் பெருஞ் ஜோதி

பாரிடை வேர்வையில் பைஇடை முட்டையில்
ஆர் உயிர் அமைக்கும் அருட் பெருஞ் ஜோதி
ஊர்வன பறப்பன உறுவன நடப்பன
ஆர்வு உற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
அசைவு இல அசைவு உள ஆருயிர் திறள் பல
அசல் உற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
அறிவு ஒரு வகை முதல் ஐவகை அறுவகை
அறி தர வகுத்த அருட் பெருஞ் ஜோதி
வெவ்வேறு இயலொடு வெவ்வேறு பயனுற
அவ்வாறு அமைத்த அருட் பெருஞ் ஜோதி

சித்திர விசித்திர சிருட்டிகள் பல பல
அத்தகை வகுத்த அருட் பெருஞ் ஜோதி
பெண்ணினுள் ஆணும் ஆணினுள் பெண்ணும்
அண்ணுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
பெண்ணினுள் மூன்றும் ஆணினுள் இரண்டும்
அண்ணுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
பெண்ணிடை நான்கும் ஆணிடை மூன்றும்
அண்ணுற அமைத்த அருட் பெருஞ் ஜோதி
பெண் இயல் ஆணும் ஆண் இயல் பெண்ணும்
அண்ணுற அமைத்த அருட் பெருஞ் ஜோதி

பெண் திறல் புறத்தும் ஆண் திறல் அகத்தும்
அண்டுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
பெண் இயல் மனமும் ஆண் இயல் அறிவும்

அண்ணுற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
தனித்தனி வடிவினும் தக்க ஆண் பெண் இயல்
அனைத்து உற வகுத்த அருட் பெருஞ் ஜோதி
உனற்கு அரும் உயிருள உடலுள உலகுள
அனைத்தையும் வகுத்த அருட் பெருஞ் ஜோதி
ஓவுறா ஏழுவகை உயிர் முதல் அனைத்தும்
ஆவகை வகுத்த அருட் பெருஞ் ஜோதி

பைகளில் முட்டையில் பாரினில் வேர்வினில்
ஐ பெற அமைத்த அருட் பெருஞ் ஜோதி
தாய் கருப்பையினில் தங்கிய உயிர்களை
ஆய்வுறக் காத்தருள் அருட் பெருஞ் ஜோதி
முட்டை வாய்ப் பயிலும் முழு உயிர்த் திரள்களை
அட்டமே காத்தருள் அருட் பெருஞ் ஜோதி
நிலம் பெறும் உயிர்களை நீள் குழு அனைத்தும்
அலம் பெறக் காத்து அருள் அருட் பெருஞ் ஜோதி
வேர்வு உற உதித்த மிகு உயிர்த் திரல்களை
ஆர்வு உற காத்து அருள் அருட் பெருஞ் ஜோதி

உடல் உறு பிணியால் உயிர் உடல் கெடாவகை
அடல் உறக் காத்து அருள் அருட் பெருஞ் ஜோதி
சிசு முதல் பருவ செயல்களின் உயிர்களை
அசை வறக் காத்து அருள் அருட் பெருஞ் ஜோதி
உயிர் உறும் உடலையும் உடல் உறும் உயிரையும்
அயர்வு அறக் காத்து அருள் அருட் பெருஞ் ஜோதி
பாடுறும் அவத்தைகள் பலவினும் உயிர்களை
ஆடுறக் காத்தருள் அருட் பெருஞ் ஜோதி
முச்சுடர் ஆதியால் எச்சக உயிரையும்
அச்சறக் காத்து அருள் அருட் பெருஞ் ஜோதி

வான் முகில் சத்தியால் மழை பொழிவித்து உயிர்
ஆன் அறக் காத்து அருள் அருட் பெருஞ் ஜோதி
இன்புறு சத்தியால் எழின்மழை பொழிவித்து
அன்புறக் காத்து அருள் அருட் பெருஞ் ஜோதி
எண்ணியல் சத்தியால் எல்லா உலகிலும்
அண்ணுயிர் காத்தருள் அருட் பெருஞ் ஜோதி

அண்டப் புறப்புற அமுதம் பொழிந்து உயிர்
அண்டுறக் காத்தருள் அருட் பெருஞ் ஜோதி
தேவரை எல்லாம் திகழ் புற அமுது அளித்து
ஆவகை காத்து அருள் அருட் பெருஞ் ஜோதி

அகப்புற அமுது அளித்து ஐவர் ஆதிகளை
அகப்படக் காத்து அருள் அருட் பெருஞ் ஜோதி
தரும் அக அமுதால் சத்தி சத்தர்களை
அருளினில் காக்கும் அருட் பெருஞ் ஜோதி
காலமும் நியதியும் காட்டி எவ்வுயிரையும்
ஆலுறக் காட்டிய அருட் பெருஞ் ஜோதி
விச்சையை இச்சையை விளைவித்து உயிர்களை
அச்சு அறக் காத்து அருள் அருட் பெருஞ் ஜோதி
போகமும் களிப்பும் பொருந்து வித்து உயிர்களை
ஆகமுள் காத்து அருள் அருட் பெருஞ் ஜோதி

கலை அறிவு அளித்து களிப்பினில் உயிர்களை
அலைவு அறக் காத்து அருள் அருட் பெருஞ் ஜோதி
விடய நிகழ்ச்சியால் மிகும் உயிர் அனைத்தையும்
அடைவு உறக் காத்து அருள் அருட் பெருஞ் ஜோதி
துன்பு அளித்து ஆங்கே சுகம் அளித்து உயிர்களை
அன்பு உறக் காத்து அருள் அருட் பெருஞ் ஜோதி
கரண இந்திரியத்தால் களிப்புற உயிர்களை
அரண் நேர்ந்து அளித்து அருள் அருட் பெருஞ் ஜோதி
எத்தகை எவ்வுயிர் எண்ணின அவ்வுயிர்க்கு
அத்தகை அளித்து அருள் அருட் பெருஞ் ஜோதி

எப்படி எவ்வுயிர் எண்ணின அவ்வுயிர்க்கு
அப்படி அளித்தருள் அருட் பெருஞ் ஜோதி
ஏங்காது உயிர்த்திரள் எங்கு எங்கு இருந்தன
ஆங்கு ஆங்கு அளித்தருள் அருட் பெருஞ் ஜோதி
சொல் உறும் அசுத்த தொல் உயிர்க்கு அவ்வகை
அல்லலில் காத்து அருள் அருட் பெருஞ் ஜோதி
சுத்தமும் அசுத்தமும் தோய் உயிர்க்கு இருமையின்
அத்தகை காத்து அருள் அருட் பெருஞ் ஜோதி

வாய்ந்திடும் சுத்த வகை உயிர்க்கு ஒருமையின்
ஆய்ந்து உறக் காத்து அருள் அருட் பெருஞ் ஜோதி

எவை எலாம் எவை எலாம் ஈண்டின ஈண்டின
அவை எலாம் காத்து அருள் அருட் பெருஞ் ஜோதி
அண்டத் துரிசையும் அகிலத் துரிசையும்
அண்டற அடக்கும் அருட் பெருஞ் ஜோதி
பிண்டத் துரிசையும் பேருயிர்த் துரிசையும்
அண்டற அடக்கும் அருட் பெருஞ் ஜோதி
உயிர் உறும் மாயையின் உறு விரிவு அனைத்தும்
அயிர் அற அடக்கும் அருட் பெருஞ் ஜோதி
உயிர் உறும் இருவினை உறு விரிவு அனைத்தும்
அயர்வு அற அடக்கும் அருட் பெருஞ் ஜோதி

காமப் புடைப்பு உயிர்க் கண் தொடராவகை
ஆமற அடக்கும் அருட் பெருஞ் ஜோதி
பொங்குறு வெகுளிப் புடைப்புகள் எல்லாம்
அங்கு அற அடக்கும் அருட் பெருஞ் ஜோதி
மதம் புரை மோகமும் மற்றவும் ஆங்கு ஆங்கு
அதம் பெற அடக்கும் அருட் பெருஞ் ஜோதி
வடுவுறும் அசுத்த வாதனை அனைத்தையும்
அடர்பு அற அடக்கும் அருட் பெருஞ் ஜோதி
சுத்தமும் அசுத்தமும் தோய்ந்த வாதனைகளை
அத்தகை அடக்கும் அருட் பெருஞ் ஜோதி

நால்வயின் துரிசும் நண்உயிர் ஆதியில்
ஆலற அடக்கும் அருட் பெருஞ் ஜோதி
நால்வயின் படைப்பும் நால்வயின் காப்பும்,
ஆலற அடக்கும் அருட் பெருஞ் ஜோதி
மூவிடத்து இருமையின் முன்னிய தொழிற்கு அரில்
ஆவிடத்து அடக்கும் அருட் பெருஞ் ஜோதி
மூவிட மும்மையின் முன்னிய தொழிற்கு அரில்
ஆவிடம் அடக்கும் அருட் பெருஞ் ஜோதி
தத்துவச் சேட்டையும் தத்துவத் துரிசும்
அத்தகை அடக்கும் அருட் பெருஞ் ஜோதி

சுத்தமா நிலையில் சூழ்உறு விரிவை
அத்தகை அடக்கும் அருட் பெருஞ் ஜோதி
கரைவின் மாமாயை கரும்பெரும் திரையால்
அரைசது மறைக்கும் அருட் பெருஞ் ஜோதி
பேர் உறு நீலப் பெருந்திரை அதனால்
ஆர் உயிர் மறைக்கும் அருட் பெருஞ் ஜோதி
பச்சைத் திரையால் பரவெளி அதனை
அச்சுற மறைக்கும் அருட் பெருஞ் ஜோதி
செம்மைத் திரையால் சித்து உறு வெளியை
அம்மையில் மறைக்கும் அருட் பெருஞ் ஜோதி

பொன்மைத் திரையால் பொருள் உறு வெளியை
அம்மையில் மறைக்கும் அருட் பெருஞ் ஜோதி
வெண்மைத் திரையால் மெய்ப்பதி வெளியை
அண்மையில் மறைக்கும் அருட் பெருஞ் ஜோதி
கலப்புத் திரையால் கருது அனுபவங்களை
அலப்பு உற மறைக்கும் அருட் பெருஞ் ஜோதி
விடய நிலைகளை வெவ்வேறு திரைகளால்
அடர்பு உற மறைக்கும் அருட் பெருஞ் ஜோதி
தத்துவ நிலைகளைத் தனித்தனித் திரையால்
அத்திறம் மறைக்கும் அருட் பெருஞ் ஜோதி

திரை மறைப்பு எல்லாம் தீர்த்து ஆங்கு ஆங்கே
அரசு உறக் காட்டும் அருட் பெருஞ் ஜோதி
தோற்ற மாமாயை தொடர்பு அறுத்து அருளின்
ஆற்றலைக் காட்டும் அருட் பெருஞ் ஜோதி
சுத்த மாமாயை தொடர்பு அறுத்து அருளை
அத்தகை காட்டும் அருட் பெருஞ் ஜோதி
எனைத்தான் ஆணவம் முதல் எல்லாம் தவிர்த்தே
அனுக்கிரகம் புரி அருட் பெருஞ் ஜோதி
விடய மறைப்பு எலாம் விடுவித்து உயிர்களை
அடைவு உறத் தெருட்டும் அருட் பெருஞ் ஜோதி

சொரூப மறைப்பை எலாம் தொலைப்பித்து உயிர்களை
அருளினில் தெருட்டும் அருட் பெருஞ் ஜோதி
மறைப்பின் மறைந்தன வருவித்து ஆங்கே

அறத்தொடு தெருட்டும் அருட் பெருஞ் ஜோதி
எவ்வகை உயிர்களும் இன்புற ஆங்கே
அவ்வகை தெருட்டும் அருட் பெருஞ் ஜோதி
கடவுளர் மறைப்பை கடிந்து அவர்க்கு இன்பம்
அடைவு உறத் தெருட்டும் அருட் பெருஞ் ஜோதி
சத்திகள் மறைப்பை தவிர்த்து அவர்க்கு இன்பம்
அத்து உறத் தெருட்டும் அருட் பெருஞ் ஜோதி **(850)**

சத்தர்கள் மறைப்பை தவிர்த்து அவர்க்கு இன்பம்
அத்தகை தெருட்டும் அருட் பெருஞ் ஜோதி
படைக்கும் தலைவர்கள் பற்பல கோடியை
அடைப்பு உறப் படைக்கும் அருட் பெருஞ் ஜோதி
காக்கும் தலைவர்கள் கணக்கில் பல் கோடியை
ஆக்குறக் காக்கும் அருட் பெருஞ் ஜோதி
அடக்கும் தலைவர்கள் அளவிலர் தம்மையும்
அடர்பு அற அடக்கும் அருட் பெருஞ் ஜோதி
மறைக்கும் தலைவர்கள் வகை பல கோடியை
அறத்தொடு மறைக்கும் அருட் பெருஞ் ஜோதி **(860)**

தெருட்டும் தலைவர்கள் சேர் பல கோடியை
அருள் திறம் தெருட்டும் அருட் பெருஞ் ஜோதி
ஐந்தொழில் ஆதிசெய் ஐவர் ஆதிகளை
ஐந்தொழில் ஆதிசெய் அருட் பெருஞ் ஜோதி
இறந்தவர் எல்லாம் எழுந்திட உலகில்
அறம் தலை அளித்த அருட் பெருஞ் ஜோதி
செத்தவர் எல்லாம் சிரித்து ஆங்கு எழும் திறல்
அத்தகை காட்டிய அருட் பெருஞ் ஜோதி
இறந்தவர் எழுக என்று எண்ணி ஆங்கு எழுப்பிட
அறம் துணை எனக்கு அருள் அருட் பெருஞ் ஜோதி **(870)**

செத்தவர் எழுக என செப்பி ஆங்கு எழுப்பிட
அத்திறல் எனக்கு அருள் அருட் பெருஞ் ஜோதி
சித்து எலாம் வல்ல திறல் அளித்து எனக்கே
அத்தன் என்று ஓங்கும் அருட் பெருஞ் ஜோதி
ஒன்று அது இரண்டு அது ஒன்றின் இரண்டு அது
ஒன்றினுள் ஒன்று அது ஒன்று எனும் ஒன்றே

ஒன்று அல இரண்டு அல ஒன்றின் இரண்டு அல
ஒன்றினில் ஒன்று அல ஒன்று எனும் ஒன்றே
ஒன்றினுள் ஒன்று உள ஒன்றினில் ஒன்று இல
ஒன்று உற ஒன்று இல ஒன்று எனும் ஒன்றே

களங்கம் நீத்து உலகம் களிப்பு உற மெய்ந்நெறி
விளங்க என் உள்ளே விளங்கும் மெய்ப் பொருளே
மூவிரு நிலையின் முடி நடு முடி மேல்
ஓவற விளங்கும் ஒருமை மெய்ப்பொருளே
எழுநிலை மிசையே இன்பு உருவாகி
வழுநிலை நீக்கி வயங்கும் மெய்ப்பொருளே
நவநிலை மிசையே நடுவுறு நடுவே
சிவமயம் ஆகித் திகழ்ந்த மெய்ப்பொருளே
ஏகாதச நிலை யாது அதின் நடுவே
ஏகா தன மிசை இருந்த மெய்ப் பொருளே

திரயோதச நிலை சிவ வெளி நடுவே
வரை ஓதரு சுக வாழ்க்கை மெய்ப் பொருளே
ஈர் எண் நிலை என இயம்பும் மேல் நிலையில்
பூரண சுகமாய்ப் பொருந்தும் மெய்ப் பொருளே
எல்லா நிலைகளும் இசைந்து ஆங்கு ஆங்கே
எல்லாம் ஆகி இலங்கும் மெய்ப் பொருளே
மன ஆதிகள் பொருந்தா வான் நடு வான்ஆய்
அனாதி உண்மை அதாய் அமர்ந்த மெய்ப் பொருளே
தான் ஒரு தானாய் தானே தானாய்
ஊன் உயிர் விளங்கும் ஒரு தனிப் பொருளே

அதுவின் உள் அதுவாய் அதுவே அதுவாய்
பொதுவினுள் நடிக்கும் பூரணப் பொருளே
இயல்பினுள் இயல்பாய் இயல்பே இயல்பாய்
உயல் உற விளங்கும் ஒரு தனிப் பொருளே
அருவினுள் அருவாய் அரு அரு அருவாய்
உருவினுள் விளங்கும் ஒரு பரம் பொருளே
அலகு இலாச் சித்தாய் அது நிலை அதுவாய்
உலகு எலாம் விளங்கும் ஒரு தனிப் பொருளே

பொருளினுள் பொருளாய் பொருளது பொருளாய்
ஒருமையில் விளங்கும் ஒரு தனிப் பொருளே

ஆடுறு சித்திகள் அறுபத்து நான்கு எழு
கோடியும் விளங்க குலவு மெய்ப் பொருளே
கூட்டுறு சித்திகள் கோடி பல் கோடியும்
ஆட்டுற விளங்கும் அரும் பெரும் பொருளே
அறிவுறு சித்திகள் அனந்த கோடிகளும்
பிறிவற விளங்கும் பெரும் தனிப் பொருளே
வீடுகள் எல்லாம் விதிநெறி விளங்க
ஆடல் செய்து அருளும் அரும் பெரும் பொருளே
பற்றுகள் எல்லாம் பதிநெறி விளங்க
உற்று அருள் ஆடல் செய் ஒரு தனிப் பொருளே

பரத்தினில் பரமே பரம் தரும் பதமே
பரம் பதம் பரமே பரம் சிதம்பரமே
பரம் பெறும் பரமே பரம் தரும் பரமே
பரம் பதம் பரமே பரம் சிதம் பரமே
பரம் புகழ் பரமே பரம் பகர் பரமே
பரம் சுக பரமே பரம் சிவ பரமே
பரங் கொள் சிற்பரமே பரம்செய் தற்பரமே
தரங் கொள் பொற் பரமே தனிப் பெரும் பரமே
வரம் பரா பரமே வணம் பரா பரமே
பரம் பரா பரமே பதம் பரா பரமே

சத்திய பதமே சத்துவ பதமே
நித்திய பதமே நிர்க்குண பதமே
தத்துவ பதமே, தற்பத பதமே
சித்துரு பதமே, சிற்சுக பரமே
தம்பரம் பதமே தனிச் சுகம் பதமே
அம்பரம் பதமே அருள் பரம் பதமே
தந்திர பதமே சந்திர பதமே
மந்திர பதமே மந்தண பதமே
நவம் தரு பதமே நடம் தரு பதமே
சிவம் தரு பதமே சிவ சிவ பதமே

பிரம மெய்க் கதியே பிரம மெய்ப் பதியே
பிரம நிற்குணமே, பிரம சிற் குணமே
பிரமமே பிரம பெருநிலை மிசை யுறும்
பரமமே பரமப் பதம் தரு சிவமே
அவனோடு அவளாய் அதுவாய் அலதாய்
நவ மா நிலை மிசை நண்ணிய சிவமே
எம்பொருள் ஆகி எமக்கு அருள் புரியும்
செம்பொருள் ஆகிய சிவமே சிவமே
ஒரு நிலை இதுவே உயர் நிலை எனும் ஒரு
திரு நிலை மேவிய சிவமே சிவமே

மெய் வைத்து அழியா வெறு வெளி நடுவுறு
தெய்வப் பதியாம் சிவமே சிவமே
புரை தவிர்த்து எனக்கே பொன் முடி சூட்டி
சிரம் உற நாட்டிய சிவமே சிவமே
கல்வியும் சாகாக் கல்வியும் அழியாச்
செல்வமும் அளித்த சிவமே சிவமே
அருள் அமுது எனக்கே அளித்து அருள் நெறி வாய்
தெருள் உற வளர்க்கும் சிவமே சிவமே
சத்து எலாம் ஆகியும் தான் ஒரு தானாய்
சித்து எலாம் வல்லது ஓர் திரு அருள் சிவமே

எங்கே கருணை இயற்கையில் உள்ளன
அங்கே விளங்கிய அருட் பெருஞ் சிவமே
யாரே என்னினும் இரங்கு கின்றார்க்கு
சீரே அளிக்கும் சிதம்பர சிவமே
பொய் நெறி அனைத்தினும் புகுத்தாது எனை அருள்
செந் நெறி செலுத்திய சிற் சபை சிவமே
கொல்லா நெறியே குரு அருள் நெறி என
பல் கால் எனக்கு பகர்ந்த மெய்ச் சிவமே
உயிர் எலாம் பொதுவில் உளம்பட நோக்குக
செயிர் எலாம் விடுக என செப்பிய சிவமே

பயிர்ப்பு உறு கரணப் பரிசுகள் பற்பல
உயிர்த் திரள் ஒன்று என உரைத்த மெய்ச் சிவமே
உயிர் உள் யாம் எம் உள் உயிர் இவை உணர்ந்தே

உயிர் நலம் பரவுக என்று உரைத்த மெய்ச் சிவமே
இயல் அருள் ஒளி ஓர் ஏக தேசத்தின் ஆம்
உயிர் ஒளி காண்க என்று உரைத்த மெய்ச் சிவமே
அருள் அலாது அணுவும் அசைந்திடாது அதனால்
அருள் நலம் பரவுக என்று அறைந்த மெய்ச் சிவமே
அருள் உறின் எல்லாம் ஆகும் ஈது உண்மை
அருள் உற முயல்க என்று அருளிய சிவமே

அருள் நெறி ஒன்றே தெருள் நெறி மற்று எலாம்
இருள் நெறி என எனக்கு இயம்பிய சிவமே
அருள் பெறில் துரும்பும் ஓர் ஐந்தொழில் புரியும்
தெருள் இது எனவே செப்பிய சிவமே
அருள் அறிவு ஒன்றே அறிவு மற்று எல்லாம்
மருள் அறிவு என்றே வகுத்த மெய்ச் சிவமே
அருள் சுகம் ஒன்றே அரும் பெறல் பெரும் சுகம்
மருள் சுகம் பிற என வகுத்த மெய்ச் சிவமே
அருள் பேறு அதுவே அரும் பெறல் பெறும்பேறு
இருள் பேறு அறுக்கும் என்று இயம்பிய சிவமே

அருள் தனி வல்லபம் அதுவே எலாம் செய்
பொருள் தனி சித்து எனப் புகன்ற மெய்ச் சிவமே
அருள் அறியார் தமை அறியார் எம்மையும்
பொருள் அறியார் எனப் புகன்ற மெய்ச் சிவமே
அருள் நிலை ஒன்றே அனைத்தும் பெறு நிலை
பொருள் நிலை காண்க எனப் புகன்ற மெய்ச் சிவமே
அருள் வடிவு அதுவே அழியாத் தனி வடிவு
அருள் பெற முயலுக என்று அருளிய சிவமே
அருளே நம் இயல் அருளே நம் உரு
அருளே நம் வடிவாம் என்ற சிவமே

அருளே நம் அடி அருளே நம் முடி
அருளே நம் நடு ஆம் என்ற சிவமே
அருளே நம் அறிவு அருளே நம் மனம்
அருளே நம் குணம் ஆம் என்ற சிவமே
அருளே நம் பதி அருளே நம் பதம்
அருளே நம் இடம் ஆம் என்ற சிவமே

அருளே நம் துணை அருளே நம் தொழில்
அருளே நம் விருப்பு ஆம் என்ற சிவமே
அருளே நம் பொருள் அருளே நம் ஒளி
அருளே நாம் அறிவாம் என்ற சிவமே

அருளே நம் குலம் அருளே நம் இனம்
அருளே நாம் அறிவாய் என்ற சிவமே
அருளே நம் சுகம் அருளே நம் பெயர்
அருளே நாம் அறிவாய் என்ற சிவமே
அருள் ஒளி அடைந்தனை அருள் அமுது உண்டனை
அருள் மதி வாழ்க என்று அருளிய சிவமே
அருள் நிலை பெற்றனை அருள் வடிவு உற்றனை
அருள் அரசு இயற்றுக என்று அருளிய சிவமே
உள் அகத்து அமர்ந்து எனது உயிரில் கலந்து அருள்
வள்ளல் சிற்றம்பலர் வளர் சிவ பதியே

நிகரிலா இன்ப நிலை நடு வைத்து எனை
தகவொடு காக்கும் தனிச் சிவ பதியே
சுத்த சன்மார்க்க சுக நிலை தனில் எனை
சத்தியன ஆக்கிய தனிச் சிவ பதியே
ஐவரும் காண்டற்கு அரும் பெரும் பொருள் என்
கைவரப் புரிந்த கதி சிவ பதியே
துன்பம் தொலைத்து அருள் ஜோதியால் நிறைந்த
இன்பம் எனக்கு அருள் எழில் சிவ பதியே
சித்தமும் வாக்கும் செல்லாப் பெரு நிலை
ஒத்து உறவு ஏற்றிய ஒரு சிவ பதியே

கையறவு அனைத்தும் கடிந்து எனைத் தேற்றி
வையம் மேல் வைத்த மா சிவ பதியே
இன்புறச் சிறியேன் எண்ணு தோறும் எண்ணு தோறும்
அன்புடன் என் கண் உறும் அருள் சிவ பதியே
பிழை எலாம் பொறுத்து என்னுள் பிறங்கிய கருணை
மழை எலாம் பொழிந்து வளர் சிவ பதியே
உளத்தினும் கண்ணினும் உயிரினும் எனது
குளத்தினும் நிரம்பிய குரு சிவ பதியே

பரம் உடன் அபரம் பகர்நிலை இவை என
திரம் உற அருளிய திரு அருள் குருவே (1040)

மதி நிலை இரவியின் வளர் நிலை அனலின்
திதி நிலை அனைத்தும் தெரித்த சற்குருவே
கண நிலை அவற்றின் கரு நிலை அனைத்தும்
குணம் உறத் தெரித்து உள் குலவு சற்குருவே
பதி நிலை பசு நிலை பாச நிலை எலாம்
மதி உறத் தெரித்து உள் வயங்கு சற்குருவே
பிரம ரகசியம் பேசி என் உளத்தே
தரம் உற விளங்கும் சாந்த சற்குருவே
பரம ரகசியம் பகர்ந்து என் உளத்தே
வரம் உற வளர்த்து வயங்கு சற்குருவே (1050)

சிவ ரகசியம் எலாம் தெரிவித்து எனக்கே
நவ நிலை காட்டிய ஞான சற்குருவே
சத்து இயல் அனைத்தும் சித்து இயல் முழுதும்
அத்தகை தெரித்த அருள் சிவ குருவே
அறிபவை எல்லாம் அறிவித்து என் உள்ளே
பிறிவு அற விளங்கும் பெரிய சற்குருவே
கேட்பவை எல்லாம் கேட்பித்து என் உள்ளே
வேட்கையின் விளங்கும் விமல சற்குருவே
காண்பவை எல்லாம் காட்டுவித்து எனக்கே
மாண்பதம் அளித்து வயங்கு சற்குருவே (1060)

செய்பவை எல்லாம் செய்வித்து எனக்கே
உய்பவை அளித்து என்உள் ஓங்கிய சற்குருவே
உண்பவை எல்லாம் உண்ணுவித்து என்உள்
பண்பினில் விளங்கும் பரம சற்குருவே
சாகாக் கல்வியின் தரம் எலாம் கற்பித்து
ஏகா அக்கரப் பொருள் ஈந்த சற்குருவே
சத்தியம் ஆம் சிவ சித்திகள் அனைத்தையும்
மெய்த்தகை அளித்து என் உள் விளங்கு சற்குருவே
எல்லா நிலைகளும் ஏற்றிச் சித்து எலாம்
வல்லான் என எனை வைத்த சற்குருவே (1070)

சீர்உற அருளாம் தேசுற அழியாப்
பேர்உற என்னைப் பெற்ற நல் தாயே
பொருந்திய அருள் பெரும் போகமே உறுக என
பெரும் தயவால் எனைப் பெற்ற நல் தாயே
ஆன்ற சன்மார்க்கம் அணிபெற எனைத்தான்
ஈன்று அமுது அளித்த இனிய நல் தாயே
பசித்திடு தோறும் என்பால் அணைந்து அருளால்
வசித்து அமுது அருள்புரி வாய்மை நல் தாயே
தளர்ந்த தோறும் அடியேன் சார்பு அணைந்து என்னை
உளம் தெளிவித்த ஒருமை நல் தாயே

அருள் அமுதே முதல் ஐவகை அமுதமும்
தெருள் உற எனக்கு அருள் செல்வ நல் தாயே
இயல் அமுதே முதல் எழுவகை அமுதமும்
உயல் உற எனக்கு அருள் செல்வ நற்றாயே
நண்பு உறும் எண்வகை நவவகை அமுதமும்
பண்புற எனக்கு அருள் பண்பு உடை தாயே
மற்றுள அமுத வகை எலாம் எனக்கே
உற்று உணவு அளித்து அருள் ஓங்கு நல் தாயே
கலக்கமும் அச்சமும் கடிந்து எனது உளத்தே
அலக் கணும் தவிர்த்து அருள் அன்பு உடை தாயே

துய்ப்பினில் அனைத்தும் சுகம் பெற அளித்து எனக்கே
எய்ப்பு எலாம் தவிர்த்த இன்புடைத் தாயே
சித்திகள் எல்லாம் தெளிந்திட எனக்கே
சத்தியை அளித்த தயவுடைத் தாயே
சத்திநி பாதம் தனை அளித்து என்னை மேல்
வைத்து அமுது அளித்த மரபு உடைத் தாயே
சத்தி சத்தர்கள் எல்லாம் சார்ந்து எனது ஏவல் செய்
சித்தியை அளித்த தெய்வ நல் தாயே
தன்னிகர் இல்லா தலைவனைக் காட்டியே
என்னை மேல் ஏற்றிய இனிய நல் தாயே

வெளிப்பட விரும்பிய விளைவு எலாம் எனக்கே
அளித்து அளித்து இன்பு செய் அன்பு உடைத் தாயே
எண் அகத்தொடு புறத்து என்னை எஞ்ஞான்றும்

கண் எனக் காக்கும் கருணை நல் தாயே
இன்னருள் அமுது அளித்து இறவாத் திறல் புரிந்து
என்னை வளர்த்திடும் இன்புடைத் தாயே
என் உடல் என் உயிர் என் அறிவு எல்லாம்
தன்னவென்று ஆக்கிய தயவு உடைத் தாயே
தெரியா வகையால் சிறியேன் தளர்ந்திட
தரியாது அணைத்த தயவு உடைத் தாயே

சினம் முதல் அனைத்தையும் தீர்த்து என் நனவிலும்
கனவிலும் பிரியா கருணை நல் தாயே
தூக்கமும் சோம்பும் என் துன்பமும் அச்சமும்
ஏக்கமும் நீக்கிய என் தனித் தாயே
துன்பு எலாம் தவிர்த்து உள்ளே அன்பு எலாம் நிரம்ப
இன்பு எலாம் அளித்த என் தனித் தந்தையே
எல்லா நன்மையும் என் தனக்கு அளித்த
எல்லாம் வல்ல சித்து என் தனித் தந்தையே
நாயில் கடையேன் நலம் பெறக் காட்டிய
தாயில் பெரிதும் தயவுடை தந்தையே

அறிவு இலாப் பருவத்து அறிவு எனக்கு அளித்து
பிறிவு இலாது அமர்ந்த பேரருள் தந்தையே
புன் நிகர் இல்லேன் பொருட்டு இவண் அடைந்த
தன் நிகர் இல்லா தனிப் பெரும் தந்தையே
அகத்திலும் புறத்திலும் அமர்ந்து அருட் ஜோதி
சகத்தினில் எனக்கே தந்த மெய்த்தந்தையே
இணை இலாக் களிப்புற்று இருந்திட எனக்கே
துணை அடி சென்னியில் சூட்டிய தந்தையே
ஆதி ஈறு அறியா அருள் அரசு ஆட்சியில்
ஜோதி மா மகுடம் சூட்டிய தந்தையே

எட்டு இரண்டு அறிவித்து என் தனை ஏற்றி
பட்டி மண்டபத்தில் பதித்த மெய்த் தந்தையே
தம் கோல் அளவு அது தந்து அருள் ஜோதி
செங்கோல் செலுத்து என செப்பிய தந்தையே
தன் பொருள் அனைத்தையும் தன் அரசாட்சியில்
என் பொருள் ஆக்கிய என் தனித் தந்தையே

தன் வடிவு அனைத்தையும் தன் அரசாட்சியில்
என் வடிவு ஆக்கிய என் தனித் தந்தையே
தன் சித்து அனைத்தையும் தன் சமுகத்தினில்
என் சித்து ஆக்கிய என் தனித் தந்தையே

தன் வசம் ஆகிய தத்துவம் அனைத்தையும்
என் வசம் ஆக்கிய என் உயிர்த் தந்தையே
தன் கையில் பிடித்த தனி அருள் ஜோதியை
என் கையில் கொடுத்த என் தனி தந்தையே
தன்னையும் தன் அருள் சத்தியின் வடிவையும்
என்னையும் ஒன்று என இயற்றிய தந்தையே
தன் இயல் என் இயல் தன் செயல் என் செயல்
என்ன இயற்றிய என் தனித் தந்தையே
தன் உரு என் உரு தன் உரை என் உரை
என்ன இயற்றிய என் தனித் தந்தையே

சதுரப் பேர் அருள் தனிப் பெரும் தலைவன் என்று
எதிர் அற்று ஓங்கிய என்னுடை தந்தையே
மனவாக்கு அறியா வரைப்பினில் எனக்கே
இன வாக்கு அருளிய என் உயிர்த் தந்தையே
உணர்ந்து உணர்ந்து உணரினும் உணராப் பெருநிலை
அணைந்திட எனக்கே அருளிய தந்தையே
துரிய வாழ்வுடனே சுக பூரணம் எனும்
பெரிய வாழ்வு அளித்த பெரும் தனித் தந்தையே
ஈறு இலாப் பதங்கள் யாவையும் கடந்த
பேறு அளித்து ஆண்ட பெருந்தகை தந்தையே

எவ்வகை திறத்தினும் எய்துதற்கு அரிதாம்
அவ்வகை நிலை எனக்கு அளித்த நல் தந்தையே
இனிப் பிறவா நெறி எனக்கு அளித்து அருளிய
தனிப் பெரும் தலைமை தந்தையே தந்தையே
பற்று அயர்ந்து அஞ்சிய பரிவு கண்டு அணைந்து எனை
சற்றும் அஞ்சேல் என தாங்கிய துணையே
தளர்ந்த அத்தருணம் என் தளர்வு எலாம் தவிர்த்தே உள்
கிளர்ந்திட எனக்கு கிடைத்த மெய்த் துணையே

துறைஇது வழிஇது துணிவு இது நீ செயும்
முறை இது எனவே மொழிந்த மெய்த் துணையே

எங்குறு தீமையும் எனைத் தொடரா வகை
கங்குலும் பகலும் மெய்க் காவல் செய் துணையே
வேண்டிய வேண்டிய விருப்பு எலாம் எனக்கே
ஈண்டு இருந்து அருள் புரி என் உயிர்த் துணையே
இகத்தினும் பரத்தினும் எனக்கு இடர் சாராது
அகத்தினும் புறத்தினும் அமர்ந்த மெய்த் துணையே
அயர்வு அற எனக்கே அருள் துணை ஆகி என்
உயிரினும் சிறந்த ஒருமை என் நட்பே
அன்பினில் கலந்து எனது அறிவினில் பயின்றே
இன்பினில் அளைந்த என் இன் உயிர் நட்பே

நான் புரிவன எல்லாம் தான் புரிந்து எனக்கே
வான் பதம் அளிக்க வாய்த்த நல் நட்பே
உள்ளமும் உணர்ச்சியும் உயிரும் கலந்து கொண்டு
எள்ளுறு நெய்யில் என் உள்ளுறு நட்பே
செற்றமும் தீமையும் தீர்த்து நான் செய்த
குற்றமும் குணமாக் கொண்ட என் நட்பே
குணம் குறி முதலிய குறித்திடாது எனையே
அணங்கு அறக் கலந்து அன்பு உடை நட்பே
பிணக்கும் பேதமும் பேய் உலகோர் புகல்
கணக்கும் தீர்த்து எனைக் கலந்த நல் நட்பே

சவலை நெஞ்சகத்தின் தளர்ச்சியும் அச்சமும்
கவலையும் தவிர்த்து எனைக் கலந்த நல் நட்பே
களைப்பு அறிந்து எடுத்து கலக்கம் தவிர்த்து எனக்கு
இளைப்பு அறிந்து உதவிய என் உயிர் உறவே
தன்னைத் தழுவுறும் தரம் சிறிது அறியா
என்னைத் தழுவிய என் உயிர் உறவே
மனக்குறை நீக்கி நல் வாழ்வு அளித்து என்றும்
எனக்கு உறவாகிய என் உயிர் உறவே
துன்னும் அனாதியே சூழ்ந்து எனைப் பிரியாது
என் உறவு ஆகிய என் உயிர் உறவே

என்றும் ஓர் நிலையாய் என்றும் ஓர் இயலாய்
என்றும் உள்ள அதுவாம் என் தனி சத்தே
அனைத்து உலகு அவைகளும் ஆங்கு ஆங்கு உணரினும்
இனைத்து என அறியா என் தன் சத்தே
பொது மறை முடிகளும் புகல் அவை முடிகளும்
இது எனற்கு அரிதாம் என் தனி சத்தே
ஆகம முடிகளும் அவை புகல் முடிகளும்
ஏகுதற்கு அரிதாம் என் தனிச் சத்தே
சத்தியம் சத்தியம் சத்தியம் எனவே
இத்தகை வழுத்தும் என் தனிச் சத்தே

துரியமும் கடந்தது ஓர் பெரிய வான் பொருள் என
உரை செய் வேதங்கள் உன்னும் மெய்ச் சத்தே
அன்று அதன் அப்பால் அதன் பரத்து அதுதான்
என்றிட நிறைந்த என் தனிச் சத்தே
என்றும் உள்ளதுவாய் எங்கும் ஓர் நிறைவாய்
என்றும் விளங்கிடும் என் தனி சித்தே
சத்திகள் பலவாய் சத்தர்கள் பலவாய்
இத்தகை விளங்கும் என் தனி சித்தே
தத்துவம் பலவாய் தத்துவி பலவாய்
இத்தகை விளங்கும் என் தனிச் சித்தே

படிநிலை பலவாய் பத நிலை பலவாய்
இடிவு அற விளங்கிடும் என் தனி சித்தே
மூர்த்தர்கள் பலவாய் மூர்த்திகள் பலவாய்
ஏற்பட விளங்கிடும் என் தனி சித்தே
உயிர் வகை பலவாய் உடல் வகை பலவாய்
இயல் உற விளங்கிடும் என் தனிச் சித்தே
அறிவு அவை பலவாய் அறிவன பலவாய்
எறிவு அற விளக்கிடும் என் தனி சித்தே
நினைவு அவை பலவாய் நினைவன பலவாய்
இனைவு அற விளக்கிடும் என் தனி சித்தே

காட்சிகள் பலவாய் காண்பன பலவாய்
ஏட்சியின் விளக்கிடும் என் தனி சித்தே
செய்வினை பலவாய் செய்வன பலவாய்

எய்வு அற விளக்கிடும் என் தனிச் சித்தே
அண்ட சர அசரம் அனைத்தையும் பிறவையும்
எண்டற விளக்கும் என் தனி சித்தே
எல்லாம் வல்ல சித்து என மறை புகன்றிட
எல்லாம் விளக்கிடும் என் தனிச் சித்தே
ஒன்று அதில் ஒன்று என்று உரைக்கவும் படாதாய்
என்றும் ஓர் படித்தாம் என் தனி இன்பே

இது அது என்னா இயல் உடை அதுவாய்
எதிர் அற நிறைந்த என் தனி அன்பே
ஆக்குறும் அவத்தைகள் அனைத்தையும் கடந்து மேல்
ஏக்கற நிறைந்த என் தனி இன்பே
அறிவுக்கு அறிவினில் அது அது அதுவாய்
எறிவு அற்று ஓங்கிய என் தனி இன்பே
விடையம் எவற்றினும் மேல் மேல் விளைந்தவை
இடை இடை ஓங்கிய என் தனி இன்பே
இம்மையும் மறுமையும் இயம்பிடும் ஒருமையும்
எம்மையும் நிரம்பிடும் என் தனி இன்பே

முத்தர்கள் சித்தர்கள் சத்திகள் சத்தர்கள்
எத்திறத்தவர்க்கும் ஆம் என் தனி இன்பே
எல்லா நிலைகளின் எல்லா உயிர் உறும்
எல்லா இன்பும் ஆம் என் தனி இன்பே
கரும்பு உறு சாறும் கனிந்த முக்கனியின்
விரும்பு உறும் இரதமும் மிக்க தீம்பாலும் ...
குணங்கொள் கோல் தேனும் கூட்டி ஒன்று ஆக்கி
மணம் கொளப் பதம் செய் வகை உற இயற்றிய ...
உணவு எனப் பல்கால் உரைக்கினும் நிகரா
வணம் உறும் இன்ப மயமே அதுவாய் ...

கலந்த அறிவு உருவாய் கருதுதற்கு அரிதாம்
நலம் தரு விளக்கமும் நவில அரும் தன்மையும்
உள்ளதாய் என்றும் உள்ளதாய் என்னுள்
உள்ளதாய் என்தன் உயிர் உளம் உடம்புடன்
எல்லாம் இனிப்ப இயல் உறு சுவை அளித்து
எல்லாம் வல்ல சித்து இயற்கை அது ஆகி

சாகா வரமும் தனித்த பேரறிவும்
மா காதலில் சிவ வல்லப சத்தியும்
செயற்கு அரும் அனந்த சித்தியும் இன்பமும்
மயக்கு அறத் தரும் திறல் வன்மையது ஆகி

பூரண வடிவாய்ப் பொங்கு மேல் ததும்பி
ஆரண முடியுடன் ஆகம முடியும்
கடந்து எனது அறிவாம் கனக மேல் சபை நடு
நடம் திகழ்கின்ற மெய்ஞான ஆரமுதே
சத்திய அமுதே தனித்திரு அமுதே
நித்திய அமுதே நிறை சிவ அமுதே
சச்சிதானந்தத் தனி முதல் அமுதே
மெய்ச் சிதாகாச விளைவு அருள் அமுதே
ஆனந்த அமுதே அருள் ஒளி அமுதே
தான் அந்தம் இல்லாத் தத்துவ அமுதே

நவநிலை தரும் ஓர் நல்ல தெள் அமுதே
சிவ நிலைதனிலே திரண்ட உள் அமுதே
பொய்படாக் கருணை புண்ணிய அமுதே
கைபடாப் பெரும் சீர் கடவுள் வான் அமுதே
அகம் புறம் அகப்புறம் ஆகிய புறப்புறம்
உகந்த நான்கு இடத்தும் ஓங்கிய அமுதே
பனி முதல் நீக்கிய பரம்பர அமுதே
தனி முதல் ஆய சிதம்பர அமுதே
உலகு எலாம் கொள்ளினும் உலப்பு இலா அமுதே
அலகு இலாப் பெருந்திறல் அற்புத அமுதே

அண்டமும் அதன்மேல் அண்டமும் அவற்றுள
பண்டமும் காட்டிய பரம்பர மணியே
பிண்டமும் அதில் உறு பிண்டமும் அவற்று உள
பண்டமும் காட்டிய பரம்பர மணியே
நினைத்தவை நினைத்தவை நினைத்து ஆங்கு எய்து உற
அனைத்தையும் தரும் ஓர் அரும் பெறல் மணியே
விண் பதம் அனைத்தும் மேற் பதம் முழுதும்
கண் பெற நடத்தும் ககன மாமணியே

பார் பதம் அனைத்தும் பகர் அடி முழுவதும்
சார்பு உற நடத்தும் சர ஒளி மணியே

அண்ட கோடிகள் எல்லாம் அரைக்கணத்து ஏகி
கண்டு கொண்டிட ஒளிர் கலை நிலை மணியே
சர அசர உயிர்தொறும் சாற்றிய பொருள் தொறும்
விராவி உள் விளங்கும் வித்தக மணியே
மூவரும் முனிவரும் முத்தரும் சித்தரும்
தேவரும் மதிக்கும் சித்தி செய் மணியே
தாழ்வு எலாம் தவிர்த்துச் சகமிசை அழியா
வாழ்வு எனக்கு அளித்த வளர் ஒளி மணியே
நவமணி முதலிய நலம் எலாம் தரும் ஒரு
சிவ மணி எனும் அருள் செல்வ மா மணியே

வான் பெறற்கு அரிய வகை எலாம் விரைந்து
நான் பெற அளித்த நாத மந்திரமே
கற்பம் பல பல கழியினும் அழியா
பொற்பு உறவு அளித்த புனித மந்திரமே
அகரமும் உகரமும் அழியாச் சிகரமும்
வகரமும் ஆகிய வாய்மை மந்திரமே
ஐந்து என எட்டு என ஆறு என நான்கு என
முந்து உறும் மறை முறை மொழியும் மந்திரமே
வேதமும் ஆகம விரிவுகள் அனைத்தும்
ஓத நின்று உலவாது ஓங்கும் மந்திரமே

உடற்பிணி அனைத்தையும் உயிர்ப்பிணி அனைத்தையும்
அடர்ப்பு அற தவிர்த்த அருட் சிவ மருந்தே
சித்திக்கு மூலமாம் சிவமருந்து என உளம்
தித்திக்கும் ஞானத் திருவருள் மருந்தே
இறந்தவர் எல்லாம் எழுந்திடப் புரியும்
சிறந்த வல்லபம் உறு திரு அருள் மருந்தே
மரணப் பெரும்பிணி வாரா வகை மிகு
கரணப் பெருந்திறல் காட்டிய மருந்தே
நரை திரை மூப்பு அவை நண்ணா வகை தரும்
உரை தரு பெருஞ்சீர் உடைய நன் மருந்தே

என்றே எனினும் இளமையோடு இருக்க
நன்றே தரும் ஒரு ஞான மாமருந்தே
மலப்பிணி தவிர்த்து அருள் வளம் தருகின்ற ஓர்
நலத்தகை அது என நாட்டிய மருந்தே
சிற்சபை நடுவே திரு நடம் புரியும்
அற்புத மருந்து எனும் ஆனந்த மருந்தே
இடையுறப் படாத இயற்கை விளக்கமாய்த்
தடை ஒன்றும் இல்லாத் தகவு உடை அதுவாய்
மாற்று இவை என்ன மதித்து அளப்பு அரிதாம்
ஊற்றமும் வண்ணமும் ஒருங்கு உடை அதுவாய் ...

காட்சிக்கு இனிய நற்கலை உடை அதுவாய்
ஆட்சிக்கு உரிய பல் மாட்சியும் உடைத்தாய் ...
கைதவர் கனவினும் காண்டற்கு அரிதாய்
செய்தவப் பயனாம் திருவருள் வலத்தால்
உளம் பெறும் இடமெலாம் உதவுக எனவே
வளம் பட வாய்த்து மன்னிய பொன்னே
புடம் படாத் தரமும் விடம் படாத் திறமும்
வடம் படா நலமும் வாய்த்த செம் பொன்னே
மும்மையும் தரும் ஒரு செம்மையை உடைத்தாய்
இம்மையே கிடைத்து இங்கு இலங்கிய பொன்னே

எடுத்து எடுத்து உதவினும் என்றும் குறையாது
அடுத்து அடுத்து ஓங்கும் மெய் அருளுடைப் பொன்னே
தளர்ந்திடேல் எடுக்கின் வளர்ந்திடுவேம் என
கிளர்ந்திட உரைத்துக் கிடைத்த செம்பொன்னே
எண்ணியதோறும் இயற்றுக என்று எனை
அண்ணி என் கரத்தில் அமர்ந்த பைம்பொன்னே
நீ கேள் மறக்கினும் நின்னையாம் விட்டு
போகேம் என எனைப் பொருந்திய பொன்னே
எண்ணிய எண்ணியாங்கு எய்திட எனக்குப்
பண்ணிய தவத்தால் பழுத்த செம்பொன்னே

விண்ணியல் தலைவரும் வியந்திட எனக்குப்
புண்ணியப் பயனால் பூத்த செம்பொன்னே
நால்வகை நெறியினும் நாட்டுக எனவே

பால்வகை முழுதும் பனித்த பைம்பொன்னே
எழுவகை நெறியினும் இயற்றுக எனவே
முழுவகை காட்டி முயங்கிய பொன்னே
எண்ணியபடி எலாம் இயற்றுக என்று எனைப்
புண்ணிய பலத்தால் பொருந்திய நிதியே
ஊழிதோறும் ஊழி உலப்ப உறாது ஓங்கி
வாழி என்று எனக்கு வாய்த்த நல் நிதியே

இதம் உற ஊழி தோறும் எடுத்து எடுத்து உலகோர்க்கு
உதவினும் உலவு இலாது ஓங்கு நல் நிதியே
இருநிதி எழுநிதி இயல் நவநிதி முதல்
திருநிதி எல்லாம் தரும் ஒரு நிதியே
எவ்வகை நிதிகளும் இந்த மாநிதி இடை
அவ்வகை கிடைக்கும் என்று அருளிய நிதியே
அற்புதம் விளங்கும் அருட் பெரு நிதியே
கற்பனை கடந்த கருணை மாநிதியே
நற்குண நிதியே சற்குண நிதியே
நிற்குண நிதியே சிற்குண நிதியே

பளகு இலாது ஓங்கும் பளிக்கு மாமலையே
வளம் எலாம் நிறைந்த மாணிக்க மலையே
மதியுற விளங்கும் மரகத மலையே
வதிதரு பேரொளி வச்சிர மலையே
உரைமனம் கடந்து ஆங்கு ஓங்கு பொன்மலையே
துரிய மேல் வெளியில் ஜோதி மாமலையே
புற்புதம் திரை நுரை புரை முதல் இலதோர்
அற்புதக் கடலே அமுதத் தண் கடலே
இருள் கலை தவிர்த்து ஒளி எல்லாம் வழங்கிய
அருள் பெரும் கடலே ஆனந்தக் கடலே

பவக்கடல் கடந்து நான் பார்த்தபோது அருகே
உவப்பு உறு வளங்கொண்டு ஓங்கிய கரையே
என்துயர்ச் சோடைகள் எல்லாம் தவிர்த்து உள
நன்று உற விளங்கிய நந்தனக் காவே
சேற்று நீர் இன்றி நல் தீஞ்சுவை தரும் ஒரு
ஊற்று நீர் நிரம்ப உடைய பூந்தடமே

கோடை வாய் விரிந்த குளிர் தரு நிழலே
மேடைவாய் வீசிய மெல்லிய காற்றே
களைப்பு அறக் கிடைத்த கருணை நல் நீரே
இளைப்பு அற வாய்த்த இன்சுவை உணவே

தென்னை வாய் கிடைத்த செவ்விள நீரே
தென்னை வான் பலத்தில் திருகு தீம்பாலே
நீர்நசை தவிர்க்கும் நெல்லி அம்கனியே
வேர்விளை பலவின் மென்சுவை சுளையே
கட்டு மாம்பழமே கதலி வான் பழமே
இட்ட நல் சுவையே இலந்தை அம்கனியே
புனித வான் தருவில் புதுமையாம் பலமே
கனி எலாம் கூட்டி கலந்த தீஞ்சுவையே
இதம் தரு கரும்பில் எடுத்த தீம்சாறே
பதம் தரு வெல்லப் பாகின் இன்சுவையே

சாலவே இனிக்கும் சர்க்கரைத் திரளே
ஏலவே நாவுக்கு இனிய கற்கண்டே
உவப்பு இலாது இனிக்கும் உயர்மலைத் தேனே
கலப்பு உறா மதுரம் கனிந்த கோல் தேனே
நவை இலாது எனக்கு நண்ணிய நறவே
சுவை எலாம் திரட்டிய தூய தீம் பதமே
பதம் பெறக் காய்ச்சிய பசு நறும் பாலே
இதம் பெற உருக்கிய இளம் பசு நெய்யே
உலர்ந்திடாது என்றும் ஒரு படித் தாகி
மலர்ந்து நல் வண்ணம் வயங்கிய மலரே

இகம் தரு புவிமுதல் எவ்வுலகு உயிர்க்கும்
உகந்திட மணக்கும் சுகந்த நல் மணமே
யாழ் உறும் இசையே இனிய இன்னிசையே
ஏழ் உறும் இசையே இயல் அருள் இசையே
திவள் ஒளிப்பருவம் சேர்ந்த நல் அவளே
அவளொடும் கூடி அடைந்தது ஓர் சுகமே
நாத நல் வரைப்பின் நண்ணிய பாட்டே
வேத கீதத்தில் விளை திருப்பாட்டே

நன்மார்க்கர் நாவில் நவிற்றிய பாட்டே
சன்மார்க்க சங்கம் தழுவிய பாட்டே

நம்புறும் ஆகமம் நவிற்றிய பாட்டே
எம்பலம் ஆகிய அம்பலப் பாட்டே
என்மனக் கண்ணே என் அருட் கண்ணே
என் இரு கண்ணே என் கண் உள் மணியே
என் பெருங்களிப்பே என்பெரும் பொருளே
என் பெரும் திறலே என் பெரும் செயலே
என் பெரும் தவமே என் தவப் பலனே
என் பெரும் சுகமே என் பெரும் பேறே
என் பெரு வாழ்வே என் தன் வாழ் முதலே
என் பெரு வழக்கே என் பெரும் கணக்கே

என் பெரு நலமே என் பெரும் குலமே
என் பெரு வலமே என் பெரும் புலமே
என் பெரு வரமே என் பெரும் தரமே
என் பெரு நெறியே என் பெரு நிலையே
என் பெருங்குணமே என் பெருங் கருத்தே
என் பெரும் தயவே என் பெருங் கதியே
என் பெரும் பதியே என் உயிர் இயலே
என் பெரு நிறைவே என் தனி அறிவே
தோல் எலாம் குழைந்திட சூழ் நரம்பு அனைத்தும்
மேல் எலாம் கட்டு அவை விட்டு விட்டு இயங்கிட ...

என்பு எலாம் நெக்கு நெக்கு இயல் இடை நெகிழ்ந்திட
மென்புடைத் தசையெலாம் மெய்உறத் தளர்ந்திட ...
இரத்தம் அனைத்தும் உள் இறுகிட சுக்கிலம்
உரத்து இடை பந்தித்து ஒரு திரள் ஆயிட ...
மடல் எலாம் மூளை மலர்ந்திட அமுதம்
உடல் எலாம் ஊற்று எடுத்து ஓடி நிரம்பிட
ஒண்ணுதல் வியர்த்திட ஒளி முகம் மலர்ந்திட
தண்ணிய உயிர்ப்பினில் சாந்தம் ததும்பிட ...
உள்நகை தோற்றிட உரோமம் பொடித்திட
கண்ணின் நீர் பெருகிட கால் வழிந்து ஓடிட ...

வாய்துடித்து அலறிட வளர்செவித் துளைகளில்
கூஇசைப் பொறி எலாம் கும் எனக் கொட்டிட

மெய் எலாம் குளிர்ந்திட மென்மார்பு அசைந்திட
கை எலாம் குவிந்திட கால் எலாம் சுலவிட
மனம் கனிந்து உருகிட மதி நிறைந்து ஒளிர்ந்திட
இனம் பெறும் சித்தம் இயைந்து களித்திட
அகங்காரம் ஆங்கு ஆங்கு அதிகரிப்பு அடைந்திட
சகங்காண உள்ளம் தழைத்து மலர்ந்திட
அறிவுறும் அனைத்தும் ஆனந்தம் ஆயிட
பொறிஉறு ஆன்ம தற்போதமும் போயிட ...

தத்துவம் அனைத்தும் தாம் ஒருங்கு ஒழிந்திட
சத்துவம் ஒன்றே தனித்து நின்று ஓங்கிட ...
உலகு எலாம் விடயம் உள எலாம் மறைந்திட
அலகு இலா அருளின் ஆசை மேல் பொங்கிட ...
என் உளத்து எழுந்து உயிர் எல்லாம் மலர்ந்திட
என் உளத்து ஓங்கிய என் தனி அன்பே
பொன்னடி கண்டு அருள் புத்தமுது உணவே
என்னுளத்து எழுந்த என்னுடை அன்பே
தன்னையே எனக்கு தந்து அருள் ஒளியால்
என்னை வேதித்த என் தனி அன்பே

என்னுளே அரும்பி என்னுளே மலர்ந்து
என்னுளே விரிந்த என்னுடை அன்பே
என்னுளே விளங்கி என்னுளே பழுத்து
என்னுளே கனிந்த என்னுடை அன்பே
தன்னுளே நிறைவுறு தரம் எலாம் அளித்தே
என்னுளே நிறைந்த என் தனி அன்பே
துன்பு உள அனைத்தும் தொலைத்து எனது உருவை
இன்பு உரு ஆக்கிய என்னுடை அன்பே
பொன்னுடம்பு எனக்கு பொருந்திடும் பொருட்டாய்
என் உளம் கலந்த என் தனி அன்பே

தன்வசம் ஆகி ததும்பி மேல் பொங்கி
என் வசம் கடந்த என்னுடை அன்பே
தன்னுளே பொங்கிய தண் அமுது உணவே
என்னுளே பொங்கிய என் தனி அன்பே
அருள் ஒளி விளங்கிட ஆணவம் எனும் ஓர்
இருள் அற என் உளத்து ஏற்றிய விளக்கே

துன்புறு தத்துவ துரிசு எலாம் நீக்கி நல்
இன்பு உற என் உளத்து ஏற்றிய விளக்கே
மயல் அற அழியா வாழ்வு மேன்மேலும்
இயல் உற என் உளத்து ஏற்றிய விளக்கே

இடுவெளி அனைத்தும் இயல் ஒளி விளங்கிட
நடு வெளி நடுவே நாட்டிய விளக்கே
கருவெளி அனைத்தும் கதிர் ஒளி விளங்கிட
உரு வெளி நடுவே ஒளிர் தரு விளக்கே
தேற்றிய வேதத் திருமுடி விளங்கிட
ஏற்றிய ஞான இயல் ஒளி விளக்கே
ஆகம முடி மேல் அருள் ஒளி விளங்கிட
வேகம் அது அறவே விளங்கு ஒளி விளக்கே
ஆரியர் வழுத்திய அருள் நிலை அனாதி
காரியம் விளக்கும் ஓர் காரண விளக்கே

தண்ணிய அமுதே தந்து எனது உளத்தே
புண்ணியம் பலித்த பூரண மதியே
உய்தர அமுதம் உதவி என் உளத்தே
செய்தவம் பலித்த திருவளர் மதியே
பதி எலாம் தழைக்க பதம் பெறும் அமுத
நிதி எலாம் அளித்த நிறை தருமதியே
பால் எனத் தண்கதிர் பரப்பி எஞ்ஞான்றும்
மேல் வெளி விளங்கி விளங்கிய மதியே
உயங்கிய உள்ளமும் உயிரும் தழைத்திட
வயங்கிய கருணை மழை பொழி மழையே

என்னையும் பணிகொண்டு என்னுளே நிரம்ப
மன்னிய கருணை மழை பொழி மழையே
உளங்கொளும் எனக்கே உவகை மேல் பொங்கி
வளங் கொளக் கருணை மழை பொழி மழையே
நலம் தர உடல் உயிர் நல் அறிவு எனக்கே
மலர்ந்திடக் கருணை மழை பொழி மழையே
தூய்மையால் எனது துரிசு எலாம் நீக்கி நல்
வாய்மையால் கருணை மழை பொழி மழையே
வெம்மல இரவு அது விடி தருணம் தனில்
செம்மையில் உதித்து உளம் திகழ்ந்த செஞ்சுடரே

திரை எலாம் தவிர்த்து செவ்வி உற்று ஆங்கே
வரை எலாம் விளங்க வயங்கு செஞ்சுடரே
அலகு இலாத் தலைவர்கள் அரசு செய் தத்துவ
உலகு எலாம் விளங்க ஓங்கு செஞ்சுடரே
முன்னுறு மல இருள் முழுவதும் நீக்கியே
என் உள வரைமேல் எழுந்த செஞ்சுடரே
ஆதியும் நடுவுடன் அந்தமும் கடந்த
ஜோதி ஆய் என் உளம் சூழ்ந்த மெய்ச்சுடரே
உள்ஒளி ஓங்கிட உயிர்வெளி விளங்கிட
வெள்ஒளி காட்டிய மெய் அருல் கனலே

நலம் கொளப் புரிந்திடு ஞானயாகத்திடை
வலம் சுழித்து எழுந்து வளர்ந்த மெய்க்கனலே
வேதமும் ஆகம விரிவும் பரம்பர
நாதமும் கடந்த ஞான மெய்க்கனலே
எண்ணிய எண்ணிய எல்லாம் தர எனுள்
நண்ணிய புண்ணிய ஞான மெய்க்கனலே
வலம் உறு சுத்த சன்மார்க்க நிலைபெற
நலம் எலாம் அளித்த ஞான மெய்க்கனலே
இரவொடு பகலிலா இயல் பொது நடமிடு
பரம வேதாந்தப் பரம் பரம் சுடரே

வர நிறை பொது இடை வளர்திரு நடம்புரி
பரம சித்தாந்தப் பதி பரம் சுடரே
சமரச சத்திய சபையில் நடம்புரி
சமரச சத்திய தற்சுயம் சுடரே
சபை எனது உளம் எனத் தான் அமர்ந்து எனக்கே
அபயம் அளித்தது ஓர் அருட் பெருஞ் ஜோதி
மருள் எலாம் தவிர்த்து வரம் எலாம் கொடுத்தே
அருள் அமுது அருத்திய அருட் பெருஞ் ஜோதி
வாழி நின் பேர் அருள் வாழி நின் பெரும் சீர்
ஆழி ஒன்று அளித்த அருட் பெருஞ் ஜோதி

என்னையும் பொருள் என எண்ணி என் உளத்தே
அன்னையும் அப்பனும் ஆகி வீற்று இருந்து ...
உலகு இயல் சிறிதும் உளம் பிடியா வகை
அலகு இல் பேர் அருளால் அறிவு அது விளக்கி ...

சிறுநெறி செல்லாத் திறன் அளித்து அழியாது
உறுநெறி உணர்ச்சி தந்து ஒளியுறப் புரிந்து ...
சாகாக் கல்வியின் தரம் எலாம் உணர்த்தி
சாகா வரத்தையும் தந்து மேன் மேலும்
அன்பையும் விளைவித்து அருள் பேர் ஒளியால்
இன்பையும் நிறைவித்து என்னையும் நின்னையும் ...

ஓர் உரு ஆக்கி யான் உன்னிய படி எலாம்
சீர் உறச் செய்து உயிர்த்திறம் பெற அழியா ...
அருள் அமுது அளித்தனை அருள் நிலை ஏற்றினை
அருள் அறிவு அளித்தனை அருட் பெருஞ் ஜோதி
வெல்க நின் பேர் அருள் வெல்க நின் பெரும் சீர்
அல்கல் இன்று ஓங்கிய அருட் பெருஞ் ஜோதி
உலகு உயிர்த் திரள் எலாம் ஒளிநெறி பெற்றிட
இலகும் ஐந்தொழிலையும் யாம் செயத் தந்தனை
போற்றி நின் பேர் அருள் போற்றி நின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட் பெருஞ் ஜோதி

மூவரும் தேவரும் முத்தரும் சித்தரும்
யாவரும் பெற்றிடா இயல் எனக்கு அளித்தனை
போற்றி நின் பேரருள் போற்றி நின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட் பெருஞ் ஜோதி
சித்திகள் அனைத்தையும் தெளிவித்து எனக்கே
சத்திய நிலைதனை தயவினில் தந்தனை
போற்றி நின் பேரருள் போற்றி நின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட் பெருஞ் ஜோதி
உலகினில் உயிர்கட்கு உறும் இடையூறு எலாம்
விலக நீ அடைந்து விலக்குக மகிழ்க

சுத்த சன்மார்க்க சுக நிலை பெறுக
உத்தமன் ஆகுக ஓங்குக என்றனை
போற்றி நின் பேர் அருள் போற்றி நின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட் பெருஞ் ஜோதி
அருட் பெருஞ் ஜோதி அருட் பெருஞ் ஜோதி
அருட் பெருஞ் ஜோதி அருட் பெருஞ் ஜோதி

திருச்சிற்றம்பலம்